

# நபிவழியைப் புரிந்துகொள்ளல்

## இடர்பாடுகளும் தீர்வுகளும்

கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி

அறபியிலிருந்து தமிழில்:

அக்ரம் அப்துஸ் ஸமத்

நபிவழியைப் புரிந்துகொள்ளல்

# நபிவழியைப் புரிந்துகொள்ளல்

## இடர்பாடுகளும் தீர்வுகளும்

கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி

தமிழில்

அக்ரம் அப்துஸ் ஸமத்

செம்மையாக்கம்

ஷாஹுல் ஹமீது (உமரீ)

Fuzin Texts

**NabiVazhiyai PurindhuKollal:**
Idarpaadugalum Theervugalum

Tamil edition of

**Reviving the Balance:**
The Authority of The Qur'an and the Status of The Sunnah
by Taha Jabir alAlwani

ISBN 978-1-56564-619-3

Published by

**The International Institute of Islamic Thought**

P.O. Box 669, Herndon, VA 20172, USA
www.iiit.org

London Office

P.O. Box 126, Richmond, Surrey tw9 2ud, UK
www.iiituk.com

Tamil edition
Translated from Arabic by

**Akram Abdus Samad**
Edited by: Shahul Hameed (Umari)

ISBN 978-624-5832-07-1

Published by

**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090, Sri-Lanka
Cover design by Dynamisigns
Printed by Millennium Graphics, Maharagama

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | 7 |
| | வெளியீட்டுரை | 9 |
| | மொழிபெயர்ப்பாளர் உரை | 11 |
| | முன்னுரை | 13 |
| 1. | தூதுத்துவமும் தூதர்களின் பணிகளும் | 17 |
| 2. | கருத்துக்கும் கலைச் சொல்லுக்கும் மத்தியில் சுன்னா | 51 |
| 3. | திருக்குர்ஆன் சட்ட உருவாக்க மூலாதாரம்; சுன்னா என்பது செயல்முறை விளக்கம் | 78 |
| 4. | அறிவிப்புகளின் மிகை வகிபாகம் எவ்வாறு நடைபெற்றது? | 117 |
| 5. | சுன்னா தொகுக்கப்பட்டதன் வரலாற்றுச் சூழமைவு | 141 |
| 6. | ஹதீஸ் அறிவிப்பை ஆதாரமாகக் கொள்ளுதல் | 179 |

# பதிப்புரை

*'நபிவழியைப் புரிந்துகொள்ளல்: இடர்பாடுகளும் தீர்வுகளும்'* எனும் தலைப்பிலான இந்த நூலை வெளியிடுவதில் நாம் பேருவகை அடைகின்றோம்.

நவீன இஸ்லாமிய உலகின் தலை சிறந்த அறிஞர்களுள் ஒருவராக கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி அவர்கள் ஆற்றியுள்ள பணிகள் ஏராளம். அன்னவரின் எழுத்தாக்கங்களில் *'குர்ஆனும் ஸுன்னாவும்: கால இட பரிமாணங்கள்'*, *'இஸ்லாமிய சட்டவியலில் பெண்களின் சாட்சியம்'*, *'முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்'*, *'இஸ்லாத்தில் மதம் மாறுதல்'*, *'இஸ்லாத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமைகள்'*, *'முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி'*, *'இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தம்: நவீன இஸ்லாமிய சிந்தனையின் உரையாடல் வடிவங்கள்'* ஆகிய நூல்களை நாம் வெளியிட்டிருந்தோம். அனைத்தும் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

இந்த நூலை வெளிக்கொணரும் முனைவில் அரிய பல ஆலோசனைகளை வழங்கியவர் சீர்மை உவைஸ் அஹ்மது. அச்சுக்கான தயாரிப்புகளில் துணை நின்றவர் ஸஹ்லா அஸார். இருவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகள்

எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய அனைத்தும் வல்லானின் அருளை யாசிக்கின்றோம்.

பூஸின் டெக்ஸ்ட்ஸ்
15 ஆகஸ்ட் 2023

# வெளியீட்டுரை

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் சில காலம் தொட்டு தனது வெளியீடுகளில் சிலவற்றை சுருக்க நூல்களாக மாற்றியமைக்கும் பணியை செய்து வருகின்றது. காரணம் நாம் வாழும் காலம் ஓர் அவசர யுகம். உற்பத்தி, வாழ்க்கை முறை அனைத்திலும் இந்த அவசரம் பிரதிபலிக்கின்றது. இந்த நூற்றாண்டின் ஒரு சிறப்பம்சம் என்றும் இதனைக் கூறலாம். நூலாக்கமும் சந்தைப் படுத்தலும் கூட இந்த அதீத அவசரத்திலிருந்து தப்பவில்லை. ஏனெனில் இன்று அறிவியல் பண்பாட்டு உற்பத்திகளின் பெருக்கம் அபரிமிதமாகவுள்ளது. பொது வாழ்வினதும் தனிப்பட்ட வாழ்வினதும் ஒவ்வொரு அம்சம் தொடர்பிலும் அறிவியல் உற்பத்திகள் அணி அணியாக வந்து கொண்டிருக்கின்றன. இதனால் வெளியீட்டகங்களுக்கும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் நடுவில் தமது சிந்தனைகளையும் வெளியீடுகளையும் சந்தைப்படுத்துவதில் கடுமையான போட்டி நிலவுகின்றது. அதிலும் குறிப்பாக தகவல் களின் அசல் தன்மை, சூழல் பொருத்தப்பாடு, காலத்தின் அவசரம் ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதிலும் தகவல்களை இலகுவாகவும் பயனுறுதியுடனும் மக்கள் பெற்றுக் கொள்ளும் ஆற்றலை அதிகரிப்பதிலும் அவை மிகுந்த பிரயத்தனம் எடுக்கின்றன. குறிப்பாக இன்று நாம் ஒரு அறிவு சமூகத்திலும் அறிவுப் பொருளாதாரத்திலும் வாழ்கின்றோம். இதனால் 'புத்தாக்க இயைபாக்கம்' என்றழைக்கப்படும் அறிவியல் தொழிநுட்பம் ஒன்றிற்குள் சமூகங்கள் தள்ளப்பட்டுள்ளன. அத்தொழிநுட்பம் மக்களின் கல்வி, பண்பாட்டு, அறிவியல் தேவைகளை இனம் கண்டு, அவற்றை மானுட சமூகத்தின் ஒவ்வொரு தொகுதியுடனும் இயைபாக்கம் அடையச் செய்து, பின்னர் சமூகத்தின் உள்கட் டமைப்புடன் பொருந்திச் செல்லும் உற்பத்திகளை வெளிக் கொண்டு வரும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் காலம், சிந்தனை, கல்வித் தேவைகளுக்கிடையில் ஒத்திசைவைப் பேணு

வதன் அவசியத்தை இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் உணர்ந்து கொண்டது. அதனால் சிறு நூல்கள், சுருக்க நூல்களை வெளியிடத் தீர்மானித்தது. அதிலும் குறிப்பாக முஸ்லிம் சிந்தனையில் விமர்சன ஆற்றலை வளர்த்து விடுவதில் கூடுதல் பங்களிப்புச் செய்கின்ற நூல்களுக்கு முதலிடம் வழங்கப்படுகின்றது. அதன்மூலம், மானுடத்தை வளர்த்து எழுச்சியுறச் செய்வதில் பங்களிக்கக் கூடிய இஸ்லாமிய ஆளுமைகள் தயார்படுத்தப்பட முடியும்.

புத்தகங்களைத் தெரிவு செய்வதிலும் அதன் பருமன், அட்டை வடிவமைப்பு, சுருக்க முறைமை போன்றவற்றில் அறிவியல் பூர்வமான ஓர் அணுகுமுறையையே வெளியீட்டு நிர்வாகம் கடைபிடித்திருக்கின்றது. மூல நூலின் உள்ளடக்கத்தையும் நூலாசிரியரின் மொழியையும் அவ்வாறே பேணியுள்ளது. சில இடங்களில் மாத்திரம், மேற்கோள்களுக்கும் அவற்றின் பொருளுக்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்தும் வண்ணம் சில மொழியுருபுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூல நூலுடன் ஒப்பிடுகையில் சுருக்க நூலில் அடிக்குறிப்புக்கள் மிகவும் குறைவாக இருப்பதை வாசகர்கள் அவதானிப்பீர்கள். விளக்கக் குறிப்புகள் அவசியப்படுமிடத்தோ அல்லது கருத்தை உறுதிப்படுத்தவோ மாத்திரமே நாம் அடிக்குறிப்புக்களைக் கொண்டு வந்திருக்கிறோம். மூல நூலின் அடிக்குறிப்புக்களை அவ்வாறே கொண்டு வருவது சுருக்க நூலின் பருமனை அதிகரித்து விடுவது மாத்திரமன்றி சுருக்கத்தின் நோக்கத்துக்கும் முரணாக அமைந்து விடுகின்றது. அடிப்படைச் சிந்தனையை குறுகிய நேரத்துக்குள் பெற்றுக் கொள்ள இடமளிப்பதுதான் முக்கியமானது. அறிவாதார நோக்கில் மேலதிகத் தகவல்கள் தேவைப்படுகின்ற ஆய்வாளர்கள், முழுமையான அடிக் குறிப்புக்களுடன் உள்ள மூல நூலைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அல்லாஹ்வே போதுமானவன்!

வெளியீட்டு நிர்வாகம்,
இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்

# மொழிபெயர்ப்பாளர் உரை

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும், சாந்தியும் சமாதானமும் சத்தியத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களைப் பின்பற்றிய ஸஹாபாக்கள், தாபிஈன்கள் மறுமை வரையில் அவரைப் பின்பற்று கின்ற அனைவர் மீதும் உண்டாவதாக.

கலாநிதி தாஹா ஜாபிர் அல்வானியுடன் மற்றுமொரு சிந்தனைப் பயணம், இந்தப் பயணம் முந்தையதை விடவும் சுவாரஸ்யமானது. எனக்கு அதிகம் ஈடுபாடுள்ள, நான் தொடர்ந்தும் கற்பித்துக் கொண்டிருக்கின்ற ஹதீஸ் கலைகளுடன் இது சம்பந்தப்பட்டிருப் பதுதான் அதற்கான காரணம் என்று நினைக்கின்றேன். மாத்திரமன்றி இந்தக் கலையின் நீண்டகால மரபுகளை அப்படியே கலைத்துப் போட்டு மீண்டும் வேறு வடிவில் அவற்றை மீளிணைக்க முற்படும் இவரது பார்வை அதன் சுவாரஸ்யத்தை இன்னும் கூட்டி விடுகிறது.

இந்த நூல் முக்கியமான சில கேள்விகளுக்கு விடை தேட முற்படு கின்றது. சுன்னாவின் சட்ட மூலாதாரத் தன்மை என்பதன் பொருள் என்ன? ஒரு ஹதீஸின் ஆதாரப்பூர்வத் தன்மையை உறுதிப்படுத்த அறிவிப்பாளர் வரிசைத் திறனாய்வு மாத்திரம் போதுமானதா? போன்ற வினாக்களின் அடிப்படையில் அல்குர்ஆனை மையப்படுத்திய திறானய்வுப் பொறிமுறை ஒன்றிற்கான பரிந்துரை இங்கு முன் வைக்கப்படுகின்றது. அதனூடாக முக்கியமாக சட்டவாக்கத்தில் சுன்னாவின் பங்கு என்ன என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

இங்கு ஒருவகையில் ஹதீஸ் கலைகள் குறித்த புத்தாக்கப் பார்வை யொன்று முன்வைக்கப்படுகின்றது. அது, குறித்த கலைகளின் ஆழ அகலங்களை அலசி ஆராய்ந்து, அவற்றின் தோற்ற வரலாற்றுப் பின்புலங்களை பகுப்பாய்வு செய்து, வஹியையும் மனித இஜ்தி ஹாதையும் வேறுபடுத்தி, சரியையும் பிழையையும் அடை யாளம் கண்டு முன்னெடுக்கப்பட்டுள்ள ஒரு முயற்சியாகும். அந்த வகையில் இது பொதுஜன வாசிப்புக்குரியது அல்ல. தீவிர வாசிப்பாளர்களுக்கு உரியது. அல்லது ஆய்வு மாணவர்களுக்கு

உரியது. இதன் உள்ளடக்கம் சற்று கனதியானது என்பதையே இதனூடாகச் சொல்ல வருகின்றேன். அந்தக் கனதியை இன்னும் அதிகரிக்கக் கூடிய ஒரு விசயம் என்னவெனில், இது ஒரு சுருக்க நூல். அதாவது இதே தலைப்பில் சுமார் நானூற்றி இருபத்தியொரு (421) பக்கங்களில் எழுதப்பட்ட நூலை, மக்கள் வாசிப்பை இலகுபடுத்தும் நோக்கில், இருநூற்றி நாற்பத்தி மூன்று (243) பக்கங்களில் சுருக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. மூலநூலில் சற்று விரிவாகப் பேசப்பட்டுள்ள பல தலைப்புக்கள் மிகவும் சுருக்கமாக ஆனால் அதன் செறிவு குறையாத விதத்தில் தரப்பட்டுள்ளன. எனவே நீண்ட விளக்கம் தேவைப்படுகின்ற பல கலைச் சொற்களின் விளக்கங்கள் தவிர்க்கப்பட்டு, சம்பந்தப்பட்ட கலைச் சொற்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளன. சொற் சுருக்கத்தையும் பொருட் செறிவையும் அதிகமான இடங்களில் காணலாம். இது பொதுஜன வாசிப்புக்குரியதல்ல, துறைசார்ந்த மனிதர்களின் வாசிப்பக்குரியது என்பதை இதுவும் உறுதிப்படுத்துகின்றது.

இறுதியாக, இங்கு நான் பல்வேறு ஷரீஆக் கலைச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியிருக்கின்றேன். முடிந்தவரை அவற்றின் அசலான பொருள் தொனிக்கக் கூடிய ஒரு தமிழ் சொல்லைக் கண்டுபிடிக்க முயற்சி செய்திருக்கின்றேன். அது மிகச் சரியானது என்று நான் ஒருபோதும் சொல்ல மாட்டேன். என்னுடைய இன்றைய நாள் முயற்சியின் அறுவடை அவை, நாளை நானே அவற்றை மாற்றி யமைக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே ஆலோசனைகளுக்கும் மேம்படுத்தல்களுக்குமான வாசல் தாராளமாக திறந்திருக்கிறது. சில உதாரணங்களைச் சொல்கிறேன். இல்முல் ஜரஹ் வத்தஃதீலை குறைகாணல் சரிகாணல் கலை என்றும் இல்முர் ரிஜாலை அறி விப்பாளர்கள் கலை என்றும் உஸூலுல் பிக்ஹை சட்டக் கோட் பாட்டியல் என்றும் தமிழ்ப்படுத்தியிருக்கின்றேன். இவை உதா ரணங்கள் மாத்திரமே, நூலின் உள்ளே இன்னும் சுவாரஸ்யமான சொல்லாடல்கள் இருக்கின்றன.

என்னுடைய இந்த சிறிய முயற்சிக்கு உதவியளித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். அல்லாஹ்வே போதுமானவன்.

அக்ரம் அப்துல் ஸமத்
கஹட்டோவிட்ட
17 ஏப்ரல் 2023

# முன்னுரை

அல்குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான தொடர்பின் நுணுக்கமான வரையறையை ஆய்வுக்குட்படுத்துவதுதான் இந்த நூலின் பிரதான பணி. பல்வேறு வரலாற்றுச் சூழல்களின் விளைவாக இத்தொடர்பு பற்றிய எமது அதிகமான புரிதல்கள் பல வடிவங்களில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இது, பல புதிய அறிவனுபவங்களை கொண்டு வந்து சேர்த்திருக்கின்றது. சுன்னா பற்றிய எமது அறிவுக் கலைகளில் அதன் சுவடுகளை ஆழமாக விட்டுச் சென்றிருக்கின்றது. முந்தைய, பிந்தைய இமாம்களுக்கு மத்தியில் நிலவிய பல்வேறு கருத்து வேறுபாடுகளும் இதற்குத் துணை செய்திருக்கின்றன. அதாவது, சட்டவியல் மத்ஹபுகளும் சட்டக் கோட்பாட்டியல், இறையியல் சிந்தனைப் பள்ளிகளும் சுன்னாவின் சில வகைகள் தொடர்பில் தமக்கு மத்தியில் தனித்தனியான கருத்துக்களுக்கும் நிலைப்பாடுகளுக்கும் வந்திருக்கின்றன. ஒரு ஹதீஸைப் பெற்று அதனைப் பிறருக்கு அறிவிக்கும் தொழிற்பாடு நிகழும் சூழ்நிலைகளையும், ஒரு அறிவிப்பாளரைக் குறைகாண்பதற்கும் சரிகாண்பதற்குமான வரையறைகளையும் அடிப்படையாகக் கொண்டே இந்தக் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவர்கள் ஒவ்வொருவரும் தாம் பின்பற்றிய சட்டவிதிகள் அல்லது சட்டக் கோட்பாடுகள் மற்றும் இறையியல் விதிகள் போன்றவற்றின் காரணமாகவே ஒரு ஹதீஸை ஏற்பதும் மறுப்பதும் நிகழ்ந்திருக்கின்றது, அல்லது தமது கருத்துடன் முரண்படும் ஒரு ஹதீஸுக்கு மாற்று விளக்கம் வழங்குவதும் இதன் காரணமாகவே நடைபெற்றிருக்கிறது, அல்லது ஹதீஸ் அறிவிப்பாளர்கள் தொடர்பிலும் ஹதீஸின் உள்ளடக்க விமர்சன அளவுகோல்கள் தொடர்பிலும் வேறுபட்ட நிலைப்பாடுகள் அவர்கள் மத்தியில் தோன்றுவதற்கும் இதுவே காரணமாக அமைந் திருக்கின்றது.

சுன்னாவைக் கையாள்வதில் குழப்பமான ஒரு நிலை நபியவர்களது காலத்தில் காணப்படவில்லை, ஏனெனில் பின்பற்றப்படுவதற்

குரிய தனித்த சட்டவதிகாரத்தைக் கொண்டது திருக்குர்ஆன் மாத்திரமே என்பது அன்று தெள்ளத் தெளிவான ஒன்றாக இருந்தது. முஸ்லிம் சமூகத்தை இந்த எல்லைக்குள் வைத்திருப்பதில் நபியவர்கள் மிகவும் உறுதியாக இருந்தார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இதில் கவனக்குறைவு ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொண்டார்கள். மட்டுமல்ல, திருக்குர்ஆனையே அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று கட்டளை இட்டிருந்ததுடன் தாமும் அதனைப் பின்பற்றி, மக்கள் எவ்வாறு அதனைத் தமது சூழலில் நடத்தைகளாகவும் ஒழுங்குகளாகவும் மாற்றியமைப்பது என்றும் அதனைக் கொண்டு வாழ்வை எவ்வாறு வழிநடத்துவது என்றும் காட்டிக் கொடுத்திருந்தார்கள். சுன்னா ஒரு செயல்முறை வழிகாட்டி என்ற தம்முடைய பாத்திரத்தை மிகச் சரியாக அவர்கள் உள்வாங்கிக் கொள்ளும் நோக்கில் அவர்களிடம் அந்த உணர்வைப் பயிற்றுவித்தார்கள். திருக்குர்ஆனுடன் வேறுஎதுவும் கலந்து விடக்கூடாது என்பதிலும் முஸ்லிம்கள் திருக்குர்ஆன் அல்லாத வேறு ஒன்றில் தங்களின் கவனத்தை செலுத்திவிடக் கூடாது என்பதிலும் திருக்குர்ஆனை விட்டு எந்தவொன்றும், அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தாலும், அது அவர்களைத் திசை திருப்பி விடக் கூடாது என்பதிலும் நபியவர்கள் மிகவும் உறுதியாக இருந்தார்கள். திருக்குர்ஆன் முழு தீனையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை, அதில் எந்தக் குறைபாட்டையும் அல்லாஹ் வைக்கவில்லை, அது அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடியது. சுன்னா ஒரு செயல்முறை வழிகாட்டி, அல்குர்ஆனில் வந்துள்ள ஒவ்வொன்றுக்குமான முழுமையான செயல்முறை விளக்கம்.

திருக்குர்ஆனுடன் போட்டி போடக்கூடிய ஒன்று அல்லது திருக் குர்ஆனை விடவும் முக்கியமானது என்று கருதப்படக்கூடிய ஒன்று, நம்பிக்கையாளர்களின் உள்ளத்தையும் அறிவையும் ஆக்கிரமிப்பதை நபியவர்கள் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. முந்தைய நபிமார்கள், தூதர்களுக்கு தங்களுடைய சமூகங்களுடன் இருந்த அனுபவங்கள், அவர்கள் செய்த அதே தவறை தம்முடைய சமூகமும் செய்து விடக்கூடாது என்ற அச்சத்தை நபியவர்களிடம் ஏற்படுத்தியிருந்தன. உதாரணமாக யூதர்கள் தவ்ராத்தை விடவும் ‘மிஸ்னாத்’ என்னும் நூலுக்கு அதிமுக்கியத்துவத்தை வழங்கியிருந்தார்கள். அதனால் தான் திருக்குர்ஆன் அல்லாத பிறிதொன்றைப் பதிவு செய்வது குறித்தும் திருக்குர்ஆன் அல்லாத வேறு ஒன்றில் அதிக ஈடுபாடு காட்டுவது குறித்தும் நபியவர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

சுன்னா தொகுக்கப்பட்டதற்குப் பிறகு சுன்னாவில் திருக்குர்ஆனும் உள்ளடங்கியிருக்கிறது என்ற நியாயத்தைச் சொல்லிக் கொண்டு, மக்கள் திருக்குர்ஆனை விட்டு விட்டு சுன்னாவின் பக்கம் சென்று விட்டார்கள். பின்னர் சுன்னாவையும் விட்டு விட்டு இஸ்லாமிய பிக்ஹின் பக்கம் சென்று விட்டார்கள், காரணம் இஸ்லாமிய பிக்ஹ், திருக்குர்ஆன், சுன்னா இரண்டையும் உள்ளடக்கியிருக்கிறது என்றார்கள். இந்த நூல், சுன்னாவையும் மரபார்ந்த அறிவுகளையும் சுமந்தவர்கள் மத்தியில் விவாதங்களையும் கருத்து வேறுபாடுகளை யும் தோற்றுவித்த பல கேள்விகளுக்கு விடையளிக்கும் என்று நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்.

தாஹா ஜாபிர் அல்-அல்வானி

பகுதி ஒன்று:

# தூதுத்துவமும் தூதர்களின் பணிகளும்

## முதலாவது: தூதுத்துவமும் இறைத்தூதர்களின் பணிகளும்

### 1. தூதுத்துவ பண்புக்கும் மானுடப் பண்புக்கும் மத்தியில் நபியவர்கள்

*இறுதித் தூது,முந்தைய தூதுத்துவங்கள் அனைத்தின் அனுபவங் களையும் உள்ளடக்கி இருக்கிறது. இறைத்தூதர்களின் வரலாறுகள் அவர்களுடைய சமூகங்களின் வரலாறுகள், மக்களுடைய ஏற்பிற்கும் மறுப்பிற்கும் ஏற்ப அவர்களுக்கான வழிகாட்டல்கள் எவ்வாறு பன்முகப்பட்டமைந்தன போன்ற அனைத்து அம்சங்களையும் முன்வைத்திருக்கிறது. இத்தகைய பல்வேறு அனுபவங்கள் குறித்து திருக்குர்ஆன் பேசியுள்ளதுடன், இறைத்துவ பண்பு, தூதுத்துவம் ஆகிய இரண்டும் ஒரே மறையுலக மூலத்தைக் கொண்டிருந்த போதிலும் இரண்டுக்கும் மத்தியில் இருக்கின்ற நுணுக்கமான, வெளிப்படையான வேறுபாடுகளையும் எடுத்துக் காட்டியுள்ளது. காரணம், முந்தைய சமூகங்கள் செய்த தவறுகள் மீண்டும் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காகும். அவர்கள், நபித்துவத்திற்கும் தூதுத் துவத்திற்கும், இறைவனே வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதற்கும் அவனே படைப்புகள் அனைத்தையும் படைத்த படைப் பாளன் என்பதற்கும் இறைவிருப்பத்திற்கும் மத்தியிலுள்ள வேறு பாடுகளை துல்லியமாக அறிந்து கொள்ளத் தவறினார்கள். இதன் காரணமாகவே திருக்குர்ஆன் நபியவர்களின் மானுடத் தன்மையை உறுதிப்படுத்திய அதே வேளை நபியவர்கள் அல்லாஹ்விடமிருந்து கொண்டு வந்துள்ளவற்றிற்கு கட்டுப்படுவது கடமை என்பதையும் வலியுறுத்தியது. இந்தப் புள்ளியில் இருந்துதான், நபியவர்கள் எவ்வாறு தம்மை அளவுக்கு மீறி புகழக் கூடாது என மக்களை*

எச்சரித்த அதே சமயம் தம் குரலுக்கு மேலாக மனிதர்களின் குரல் உயரக் கூடாது என தடுத்துள்ளமையின் நியாயத்தையும் எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. நபியவர்கள் "நான் உங்களைப் போன்ற மறதியுள்ள ஒரு மனிதன் தான்" என்றார்கள். இன்னொரு இடத்தில் "பதப்படுத்தப்பட்ட இறைச்சியை உண்டு வாழ்ந்த ஒரு பெண்ணின் மகன்தான் நான்" என்றார்கள். இன்னோர் இடத்தில் "எனது அடக்கஸ்தலத்தை தரிசிப்பதை ஒரு கொண்டாட்டமாக ஆக்கிவிடாதீர்கள்" என்றார்கள்.

ஒரு காலப்பகுதியில் சமூகத்தில் தோன்றிய குழப்ப நிலைகள், உம்மத்தினர் மத்தியில் பிரிவினைக்கான காரணங்களை அதிகப் படுத்தியிருந்தது. சில கிராமப் புறத்தவர்கள் நபியவர்களை ஒரு கோத்திரத் தலைவராக மாத்திரமே நோக்கினர், அவரது பெயரைக் குறிப்பிட்டு அவரை அழைப்பதற்கு அவர்கள் தயங்கவில்லை. அவரது பெயருடன் நபி அல்லது தூதர் என்ற பண்பை இணைத்துக் கூறவோ அல்லது இறுதியில் அவர் மீதான ஸலவாத்தைக் குறிப் பிடவோ அவர்கள் முற்படவில்லை. மறுபுறம் சிலர் அவருடன் இறைவனுடைய பண்புகளையும் இணைத்து விட்டிருந்தார்கள்.

## 2. நபி என்பதன் பொருள்

நபி, நுபுவ்வா என்ற பதங்கள் அறபு மொழியில் உயரமான இடத்தை அல்லது ஒரு கல் தனித்து வெளித் தெரிவதைக் குறிக்கின்றன. வழிகாட்டக்கூடிய ஓர் அடையாளத்தைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்த வகையான பிரயோகங்களில் இருந்துதான் அல்லாஹ்வின் படைப்புக்களில் உயர்ந்தவர் என்ற கருத்தில் நபி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. நபி என்பவர் அல்லாஹ்விடமிருந்து செய்தி அறிவிப்பவர், 'அந்நபஉ' என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒருவரின் பயனுள்ள செய்தி என்று பொருள்படுகின்றது. இமாம் அல்இஸ்பஹானி கூறுகிறார்: "நுபுவ்வா என்பது பூமியில் உயர்ந்த இடத்தைக் குறிக்கிறது, இது எழுவாய், செயப்படுபொருள் ஆகிய இரு கருத்துக்களிலும் பயன்படுத்தப் படுகின்றது, அதாவது அல்லாஹ்விடமிருந்து செய்தி அறிவிப்பவர், அல்லாஹ்விடமிருந்து செய்தி பெறுபவர் என்ற இரு கருத்தையும் நபி என்ற சொல் தருகிறது". வேதம் வழங்கப்பட்டவர்களிடத்தில் நபி என்பது மறைவான விசயங்களை அறிவிப்பவரைக் குறிக்கிறது. பழைய ஹீப்ரு மொழியில் சட்ட விவகாரங்களைப் பேசுபவர் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. அல்லாஹ்விடமிருந்து வஹி அறிவிக்கப்படுபவருக்கு நாம் நபி என்கின்றோம். அந்த

வஹியை எடுத்துரைக்குமாறு கட்டளை இடப்பட்டிருந்ததால் அவர் ரஸூல் என்றழைக்கப்படுவார், ஒவ்வொரு ரஸூலும் நபியாக இருப்பார். திருக்குர்ஆன் கூறுகிறது "யாரெல்லாம் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் அவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள்" (அல்அஃராப்: 157).

### 3. ரஸூல் என்பதன் பொருள்

'அர்ஸல' என்பது ஒன்றை அனுப்பிவைத்தலைக் குறிக்கிறது. திருக்குர்ஆன் கூறுகிறது: "நிராகரிப்பாளர்களை தூண்டிக் கொண்டிருப்பதற்காகவே நாம் ஷெய்த்தான்களை அனுப்பியிருக்கின்றோம் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா?" (மர்யம்: 83). 'இர்ஸால்' என்ற சொல் ஒன்றன் மீது ஆதிக்கம் செலுத்துதல் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. அல்லாஹ் தனது தூதர்களை அனுப்பி வைத்தல் என்பதற்கும் தனது எதிரிகள் மீது ஷெய்த்தானை அனுப்பி வைத்தல் என்பதற்கும் இடையில் ஒரு வேறுபாடு இருக்கின்றது. தன் அடியார்களை எச்சரிப்பதற்காக அவன் தூதர்களுக்கு வஹி அறிவிக்கிறான். ஷெய்த்தானை அனுப்புதல் என்பது அவர்களைக் கைவிடுதல் என்பதாகும். 'ரஸூல்' என்ற சொல் ஒருமையிலும் பன்மையிலும் பயன்படுத்தப்படுகிறது. திருக்குர்ஆன் கூறுகிறது: "உங்களில் இருந்தே உங்களுக்கு ஒரு தூதர் வந்து விட்டார்" (தவ்பா: 128). மற்றோர் இடத்தில் "நாங்கள் படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் இறைவனிடமிருந்து வந்த தூதர்கள் என்று நீங்கள் இருவரும் சொல்லுங்கள்" (ஷுஅராஃ: 16). ரஸூல் என்ற சொல்லின் பன்மை வடிவம் 'ருஸுல்' என்பதாகும். இந்தப் பிரயோகத்தின் மூலம் நபிமார்களும் வானவர்களுமே குறிக்கப்படுகிறார்கள். திருக்குர்ஆன் கூறுகிறது, "நாங்கள் உம் இறைவனின் தூதர்கள். அவர்கள் ஒருபோதும் உம்மை வந்தடைய முடியாது" (ஹூத்: 81) இங்கு தூதர்கள் என்பது வானவர்ளைக் குறிக்கிறது. மற்றோர் இடத்தில், "முஹம்மதுஒரு தூதரே அன்றி வேறில்லை. அவருக்கு முன்னரும் பல தூதர்கள் வந்து சென்றிருக்கிறார்கள்" (ஆலஇம்ரான்: 144). இங்கு தூதர்கள் என்பது நபிமார்களைக் குறிக்கின்றது. ஆனால் திருக்குர்ஆனில் வந்துள்ள "நற்செய்தி கூறுபவர்களாகவும் எச்சரிக்கை செய்பவர்களாகவும் அன்றி நாம் தூதர்களை அனுப்பவில்லை" (அன்ஆம்: 48) என்ற வசனத்தில் தூதர்கள் என்ற பிரயோகம் வானவர்களையும் மனிதர்களையுமே குறிக்கின்றது. 'அனுப்பி வைத்தல்' என்ற சொல் திருக்குர்ஆனில்

நல்ல விசயங்களை அனுப்புதல், தீய விசயங்களை அனுப்புதல் என இரண்டிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் கூறுகிறது: "அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான்" (நூஹ்: 11). இன்னோரிடத்தில், "அவர்கள் மீது களிமண் கற்களை அனுப்புவதற்காக" (தாரியாத்: 33).

## 4. தூதுத்துவத்திற்கும் நபித்துவத்திற்கும் இடையிலான வேறுபாடு

திருக்குர்ஆன் நபியையும் ரஸூலையும் வேறுபடுத்தியுள்ளது. இருவருக்கும் வஹி அறிவிக்கப்படுகின்றது. ஆனால் ரஸூலுக்கு அறிவிக்கப்படும் வஹி புதியதொரு ஷரீஆவிற்கான தூதுச் செய்தி ஆகும். நபிக்கு அறிவிக்கப்படும் வஹி புதியதொரு ஷரிஆவிற்கான ஒன்று அல்ல. அவர் தமக்கு முந்தைய ரஸூலின் ஷரீஆவையே பின்பற்றுவார். தமக்கு அறிவிக்கப்பட்ட வஹியை மக்களிடம் எடுத்துரைத்து, தம் சமூகத்தை அதன் பக்கம் அழைக்க வேண்டிய கடமை இருவருக்கும் உரியது. இந்த அடிப்படையில் தமக்கு அருளப்பட்ட புதிய ஷரீஆவை மக்களுக்கு எடுத்துரைப்பது ஒரு ரஸூலின் பணியாக அமைகின்றது. இதனால் ஒரு தூதுத்துவத்தின் சொந்தக்காரராக அவர் கருதப்படுகிறார். திருக்குர்ஆன் கூறுகிறது "தூதுச் செய்தியை தெளிவாக எடுத்துரைப்பதுதான் தூதர் மீதான கடமையாகும்" (நூர்: 54).

ஒரு நபியின் பணி, அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது, அவர்களுக்கு மார்க்கத்தை கற்பிப்பது, அவர்களை வழிநடத்துவது ஆகியவையாகும். நபித்துவம் ஒரு அறிவுசார் அந்தஸ்து எனலாம். இந்த வகையில் நபி என்பவர் இன்னொருவரைப் பின்பற்றுகின்ற ரஸூலாக இருப்பார். மூஸா, ஹாரூன் (அலை) ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட நபித்துவத்தில் இந்த வேறுபாட்டை நாம் தெளிவாக அவதானிக்கலாம். திருக்குர்ஆன் கூறுகிறது: "நம் அருளினால் அவரது சகோதரர் ஹாரூனையும் நபியாக அருளினோம்" (மர்யம்: 53). ஹாரூன் (அலை) அடிப்படையில் ஒரு நபி, அதே சமயம் அவரை அல்லாஹ் மூஸா (அலை) உடன் இணைத்து பிர்அவ்னிடம் அனுப்பி வைத்தான். மூஸாவைப் பலப்படுத்தும் ஒரு அமைச்சராக அவரை ஆக்கியிருந்தான். இதனால் அவர் ஒரு தூதராகவும் மாறுகிறார். ஆனால் ஒரு வித்தியாசம், மூஸாவுக்கு தூதுத்துவம் வழங்கப்பட்டது. ஹாரூனுக்கு தூதுத்துவம் வழங்கப்படவில்லை. அவர் மூஸாவின் தூதுத்துவத்தையே பின்பற்றினார். இந்த வேறுபாடு தொடர்ந்து வந்த இஸ்ராயீலின் மக்களுக்கான நபிமார்களிடம் தெளிவாகக் காணப்பட்டது. ஒவ்வொருவரும் மூஸாவின் தூதுத்துவத்தையே

பின்பற்றினர். யாருக்கும் தனித்து புதிய ஒரு தூது வழங்கப்பட வில்லை. மூஸாவின் தூதை மக்களுக்கு சரியாக கொண்டு சேர்க்கும் பணியை மேற்கொள்வதற்கான சில அறிவுரைகளும் கட்டளை களுமே அவர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் ஈஸா (அலை) தனித்த ஒரு தூதைச் சுமந்த ரஸூலாகக் காணப்பட்ட போதிலும் கொலையில் இருந்து பாதுகாக்கப்படாமையினால் அவரும் நபிமார் களின் அணியில் உள்ளடங்கி விடுகிறார்.

நபித்துவத்திற்கும் தூதுத்துவத்திற்கும் இடையிலான மற்றொரு வேறுபாடு திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இறை பாதுகாப்பு என்னும் அம்சத்துடன் தொடர்புடையது. நபிமார்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இறை பாதுகாப்பு இல்லை. இந்த விசயத்தில் அவர்களும் மற்ற மனிதர்களைப் போன்றவர்களே. அவர்களில் பலர் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். தவறு, மறதி, பாவங்களில் விழுதல் போன்ற மனிதப் பலவீனங்களில் இருந்தும் அவர்கள் பாதுகாக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் தெரிவு செய்யும் சுதந்திரம் உடையவர்களாக இருக்கிறார்கள். நபியைப் பொறுத்தவரையில் அவர் அல்லாஹ்வை அறிந்து கொண்ட ஒருவர் என்ற வகையில், அவர் பொய் மற்றும் பாவங்களை விட்டும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வார். அது சுய தெரிவுடன் கூடிய எல்லா மனிதர்களிடமும் வேண்டப்படும் ஒன்றுதான். திருக்குர்ஆன் கூறுகிறது: ''நீங்கள் அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றி பாதுகாப்புப் பெறுங்கள்; பிரிந்து விடாதீர்கள்'' (ஆலஇம்ரான்: 103). ஆனால் தூதைச் சுமந்த ஒரு ரஸூலின் இறை பாதுகாப்பைப் பொறுத்தவரை, அதனை இரண்டு வகையில் நோக்கலாம்.

முதலாவது: கொலை செய்யப்படாமல் பாதுகாக்கப்படுதல், காரணம் அவருக்கு தம் தூதை நிறைவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். நபிமார்களுக்கு இந்தப் பாதுகாப்பு இல்லை.

இரண்டாவது: தூதுத்துவ செய்தியை எடுத்துரைக்கும் செயல்பாடு பாதுகாக்கப்படுதல். இதற்காக வஹி முழுவதும் நபியவர்களின் நினைவில் இருப்பது அவசியமாகிறது. அதேபோன்று தூதைத் தெளிவாக மொழிதலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. தூதை எடுத் துரைக்கும்போது தவறு தோன்றாமல் இருப்பதையும் இது உறுதிப் படுத்துகிறது. தூதை எடுத்துரைத்து கொண்டு சேர்க்கும் பணியை தூதர் நிறைவு செய்யும்போது ரஸூல் என்ற முறையில் அவரது பணி முடிவடைந்து, நபி என்ற முறையில் அவரது பணி தொடங்குகிறது. அதாவது அல்லாஹ் அவருக்கு அருளிய தூதைப் பின்பற்றுவது

முதலில் அவருக்கு கடமையாகிறது என்ற வகையில் அதனை அவரது வாழ்வில் செயல்படுத்துவதுடன் அதனை நோக்கி மக்களை அழைத்து, அவர்களுக்கு வேதத்தைக் கற்பிக்கும் பணியையும் அவர் மேற்கொள்வார்.

நபித்துவம், நபியின் மானுடத் தன்மையை இல்லாமல் ஆக்கி விடாது. மேலதிகமாக அவருக்கு ஓர் அறிவுசார் அந்தஸ்த்து வழங்கப்படுகிறது. இந்த நபி ஒரு ரஸூலாக மாறுகின்ற சமயம் அவரது மானுடத் தன்மையும் நபித்துவமும் அவ்வாறே பாது காக்கப்பட்டு, மேலதிகமாக அவருக்கு ஒரு தூதுத்துவ அந்தஸ்த்தும் வழங்கப்படுகிறது. திருக்குர்ஆன் கூறுகிறது: "நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். உங்களுடைய இறைவன் ஒரே இறைவன் என்று எனக்கு வஹி அறிவிக்கப்பட்டுள்ளது என்று நபியே நீங்கள் கூறுங்கள்" (கஹ்ப்: 110). நபித்துவத்திற்கு ஓர் அறிவுசார் அந்தஸ்து இருப்பதாலும் நபிமார்கள் அறிஞர்களின் தலைவர்கள் என்பதாலும் அறிஞர்களை விடவும் இஜ்திஹாத் செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. எனவே ஒரு நபி மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தல், அவர்களுக்குக் கற்பித்தல், முந்தைய தூதுத்துவத்திலிருந்து இஜ்திஹாத் செய்து புதிய சட்டங்களை உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவார். ஆனால் அவர் ஒரு ரஸூலாக இருந்தால் தமக்கு அருளப்பட்ட தூதையே பயன்படுத்துவார். தூதுத்துவம், இறை பாதுகாப்பு, இஜ்திஹாத் போன்ற விவகாரங்களில் காணப்படும் இந்த வேறுபாடுகளினால் பிறிதொருவரைப் பின்பற்றும் ரஸூல், நபி என்றும் தூதுத்துவத்தைச் சுமந்த நபி, ரஸூல் என்றும் அழைக்கப்படுவர். இந்த அடிப்படையிலேயே பின்வரும் பிரபல்ய மான கருத்து உருவாகியுள்ளது: "ஒவ்வொரு ரஸூலும் நபியாவார், ஆனால் ஒவ்வொரு நபியும் ரஸூல் அல்ல".

நபித்துவம் என்பது இறைவனின் தெரிவாகும். அது சுய தேடலினால் கிடைக்கும் ஒன்று அல்ல. அது அறிவு, மக்களை அழைத்தல், அவர்களை வழிநடத்துதல் தொடர்பான ஒரு படித்தரம். ஒரு சராசரி மனிதனுக்கு அனுமதிக்கப்பட்ட அனைத்தும் ஒரு நபிக்கும் அனுமதிக்கப்படுகிறது. அவரது பாதுகாப்பு, இறைவனைச் சார்ந்தது அல்ல. அது அவருக்கு வழங்கப்பட்ட தெரிவு செய்யும் சுதந்திரம் சார்ந்ததாகும். அவர் ஓர் அறிஞர் என்ற வகையில் சுயமாக இஜ்திஹாத் செய்யும் உரிமை அவருக்கு இருக்கிறது. தூதுத்துவம் என்பது அல்லாஹ்வின் தூதை மக்களிடம் கொண்டு செல்லும்

ஒரு பொறுப்பு. அதனை ஓதிக்காட்டுவதும் எடுத்துரைப்பதும்தான் அவரது முதன்மையான பணி. அந்த வகையில் தூதுத்துவ செய்தியில் சுயமாக இஜ்திஹாத் செய்யும் அதிகாரம் அவருக்கு இல்லை. அவரது தூதும் அதனை எடுத்துரைப்பதும் இறை பாதுகாப்புக்கு உட்பட்டது என்பது போல் தம் தூதுத்துவத்தை நிறைவு செய்யும்பொருட்டு அவரும் கொலை செய்யப்படாமல் பாதுகாக்கப்படுகிறார். நபித்துவம், தூதுத்துவம் ஆகிய இரண்டிற்கும் இடையிலான இந்த வேறுபாட்டிலிருந்து நாம் புரிந்து கொள்வது ஒரு விசயம்: நபித்துவம், நபி என்ற குறிப்பிட்ட மனிதருடன் தொடர்பானது. ஆகவே நபியின் மரணத்துடன் தூதுத்துவத்தின் செயல்பாடு நின்று விடுகிறது. உதாரணமாக நபி ஹாரூன் (அலை) அவர்களைக் குறிப்பிடலாம். அதுபோல் தூதுத்துவம், ரஸூல் என்ற மனிதரைவிடவும் குறித்த தூதுத்துவத்துடன் தொடர்பானது. அந்த வகையில் ரஸூலுடைய மரணம் தூதுத்துவத்தின் தொடர் இருப்பில் பாதிப்பு ஏற்படுத்தாது. உதாரணமாக மூஸாவையும் (அலை) தவ்ராத்தையும் குறிப்பிடலாம். ஆகவே நபித்துவம் குறிப்பானது, குறித்த காலத்துடனும் இடத்துடனும் சம்பந்தப்பட்டது. ஆனால் தூதுத்துவம் பொதுவானது, தூதைச் சுமந்த நபியின் மரணத்தின் பின்னரும் தொடர்ந்து இருக்கும். இந்த வேறுபாட்டை முன்வைத்து நாம் மற்றொரு உண்மையையும் புரிந்து கொள்ள முடியும். அதாவது முஹம்மது (ஸல்) அவர்களுடைய நபித்துவம் அறபுகளுக்கானது மட்டுமல்ல, மனிதர்கள் அனைவருக்குமானது. திருக்குர்ஆன் கூறுகிறது: “மனிதர்களே! நான் உங்கள் அனைவருக்குமான தூதராக இருக்கிறேன்” (அஃராப்: 157). உண்மையில் இதுதான் நடைமுறையிலும் இருக்கிறது. தூதுத்துவம் திருக்குர்ஆனின் வடிவில் மனிதர்கள் அனைவருக்கும் மத்தியிலும் பரவியிருக்கின்ற ஒன்றாகும். அதே சமயம் ஹதீஸ் தொடர்பாக மக்களுக்கு மத்தியில் ஏற்பு, மறுப்பு விவாதங்கள் இருப்பதைக் காணலாம். நூஹ் (அலை) உடைய காலத்தில் அருளப்பட தொடங்கிய இஸ்லாமிய மார்க்கம் தொடர்ந்து இப்ராஹீம், மூஸா, ஈஸா (அலை) ஆகியோர் வழியாக வந்து இறுதியாக முஹம்மது (ஸல்) அவர்களுடன் நிறைவு பெற்றபோது, தொடர்ந்து நபிமார்கள் வரவேண்டிய தேவையும் இல்லாது போனது. ஆனால் முழுமை பெற்ற இறுதித் தூதை தூதருக்குப் பிறகு அறிஞர்கள் சுமந்து நபிமார்களின் பணியை மேற்கொள்வார்கள். ஒவ்வொரு அறிஞரும் தம் காலத்தில் தம் அறிவுத் திறன்களுக்கு ஏற்ப மக்களுக்குக் கற்பித்து அவர்களை சத்தியத்தின் பக்கம், நீதியின் பக்கம் அழைப்பார்கள். சமூக

வாழ்வில் தோன்றும் புதிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் சட்டங்களையும் அந்த தூதிலிருந்தே பெற்று வழங்குவார்கள்.

நேடியாகவோ மறைமுகமாகவோ நபியை நோக்கிப் பேசப்படும் ஒவ்வொரு இறை வார்த்தையும் குறித்த சூழலுக்குரிய மிகச் சிறந்த தீர்வைப் பரிந்துரை செய்யும் வழிகாட்டல்களாக இருக்குமே யன்றி அவை சட்டவாக்கமாகக் கருதப்பட மாட்டாது. நீர் கூறும் ('குல்') என்ற கட்டளை வினையுடன் தொடங்கும் இறை வார்த்தைகளைப் பொறுத்தவரை, அவற்றின் உள்ளடக்கத்தை வைத்து அவை யாரை நோக்கிப் பேசப்படுகின்றன என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். அந்த வார்த்தைகள் சட்டங்களைப் பற்றிப் பேசுகின்றன என்றிருப்பின், உதாரணமாக "மாதவிடாய் பற்றி உங்களிடம் வினவுகிறார்கள், நபியே! நீங்கள் கூறுங்கள் அது தீங்கானதாகும்" (பகரா: 222), அவை தூதரை (ரஸூல்) நோக்கியே பேசப்படுகின்றன. இறை வார்த்தையின் உள்ளடக்கம் கற்பித்தலாக அல்லது ஒரு வழிகாட்டலாக உள்ளபோது, உதாரணமாக, "அல்லாஹ் ஒருவன் என்று நீங்கள் சொல்லுங்கள்" அவை நபியை நோக்கியே பேசப்படுகின்றன. தூதர் (ரஸூல்) என்ற சொல்லைப் பயன்படுத்தி இறைவார்த்தைகள் வருகின்றபோது, அவை சட்டங்களைப் பற்றி அல்லது அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதுடன் இணைந்த ஒரு கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசுகின்றன என்றிருப்பின், அவை தூதரை (ரஸூல்) நோக்கிப் பேசப்படுபவையாக இருக்கும். மாறாக பொதுவான வழிகாட்டல்களாகவோ அல்லது அல்லாஹ்வுக்கு தொடராகக் கட்டுப்படுவதை வலியுறுத்தக்கூடியவையாக அமைந் திருப்பின் அவை நபியை நோக்கிப் பேசப்பட்டவையாகும்.

ஒருவரை நபி என்று அல்லது ரஸூல் என்று அல்லாஹ் தெரிவு செய்வதற்கு முன்னால் தாம் ஒரு நபியாக இருக்கப் போகின்றோமா? அல்லது ரஸூலாக இருக்கப் போகிறோமா? என்பதை அவர் அறிய மாட்டார். அவர் அதனைக் கேட்கவோ எதிர்பார்க்கவோ மாட்டார். மாறாக, "வானவர்களில் இருந்தும் மனிதர்களில் இருந்தும் தூதர்களை அல்லாஹ்வே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான்" (ஹஜ்: 75), "தன் தூதை எங்கு அமைக்க வேண்டும் என்பதை அல்லாஹ் நன்கறிவான்" (அன்ஆம்: 124). ஆகவே நபித்துவம், தூதுத்துவம் என்றால் என்ன என்பதை திருக்குர்ஆன் குறிப்பிடுவது போல் புரிந்துகொள்வது அவசியமாகிறது. அதனை திரித்துக் கூறுபவர்களின் விளக்கங்களில் இருந்து நாம் புரிந்துகொள்ளக்கூடாது.

## இரண்டாவது: திருக்குர்ஆனில் நபிமார்கள்

நபிமார்கள் மீது முன்வைக்கப்பட்ட போலியான குற்றச்சாட்டுக்களை திருக்குர்ஆன் மறுத்துள்ளதுடன் அவர்களின் மானுடத் தன்மையையும் உறுதிப்படுத்தியுள்ளது. திருக்குர்ஆன் கூறுகிறது: "உமக்கு முன்னரும் மனிதர்களே அன்றி வேறு யாரையும் நாம் தூதர்களாக அனுப்பவில்லை, அவர்களுக்கு நாம் வஹி அறிவித்தோம், இதனை நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேளுங்கள். உணவு உட்கொள்ள அவசியமில்லாத உடலை நாம் அவர்களுக்கு வழங்கவில்லை; அவர்கள் நிரந்தரமாக வாழ்பவர்களும் அல்ல" (அன்பியா: 7-8). உண்மையில் திருக்குர்ஆன் நபிமார்களுடன் உறவாடுவதற்கான பிரதான கோட்பாட்டுச் சட்டகத்தை வரையறை செய்துள்ளது. திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நபிமார்களின் சம்பவங்களைப் பார்க்கும்போது வெவ்வேறு காலகட்டங்களில் நபிமார்கள் உறவாடிய மானுட சமூகங்களின் வளர்ச்சிப் படிகளைப் புரிந்து கொள்வதற்கான கோட்பாட்டு அடிப்படைகளே பிரதிபலிப்பதைக் காணலாம். இந்த நபித்துவக் கட்டடத்தைப் பற்றித்தான் நபியவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்: இமாம் புகாரீ தம்முடைய நூலில் இந்த அறிவிப்பை பதிவு செய்திருக்கிறார்: "எனக்கும் எனக்கு முன்னர் வாழ்ந்த தூதர்களுக்குமான உதாரணம், ஒருவர் அழகிய வடிவில் கட்டடம் ஒன்றைக் கட்டியிருக்கிறார். ஆனால் அதன் ஒரு ஓரத்தில் ஒரு செங்கல்லை மட்டும் வைக்காமல் விட்டு வைக்கிறார். அதனைச் சுற்றிப் பார்க்க வரக்கூடிய மக்கள் அதன் அழகை ரசித்தபோதும் இந்த ஒரு கல்லையும் வைத்திருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருக்கும் என்பார்கள். அந்தக் கல் நான்தான். நான் தான் இறுதித் தூதர் ஆவேன்".

தூதர்கள் பெரும் பாவங்களில் ஈடுபடாமல் இறைவனின் பாதுகாப்பில் இருப்பதாக திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. அவர்கள் இறைத்தூதர்களாக அனுப்பப்பட்டதற்கான நோக்கத்தை அடைந்து கொள்ளும் வண்ணம் இது போன்ற சோதனைகளிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். மக்கள் அவர்களைப் பின்பற்றும் வண்ணம் அவர்களின் செயல்பாடுகள் முன்மாதிரியானவையாகத் திகழ வேண்டும். அவர்களின் ஆளுமையிலும் தூதுத்துவத்திலும் சிறிய அளவுகூட களங்கம் ஏற்படாதவண்ணம் அவர்களின் வாழ்வு தூய்மையானதாக இருக்க வேண்டும். அவர்களுக்கு அருளப்பட்ட தூதுத்துவங்களுக்கு மாற்றமாக பாவம் செய்யாமல் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

## 1. முந்தைய இறைத்தூதர்களுடன் நபியவர்களின் தொடர்பு

*திருக்குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன்னர் வாழ்ந்த இறைத்தூதர்களுடனான அவர்களின் தொடர்பை சுருக்கமாக பின்வருமாறு குறிப்பிடுகிறது: "உங்களுடைய இந்த சமூகம் ஒரே சமூகம்தான். நானே உங்களின் இறைவன்; என்னையே வணங்குங்கள்" (அன்பியா: 92). இந்த வசனம் தூதர்கள் அனைவரும் அவர்களின் தூதுத்துவங்கள், அவை இறைவனிட மிருந்து வந்திருப்பது, உயர் விழுமியங்களை நிலைநாட்டுவது, உள்ளங்களைத் தூய்மைப்படுத்துதல், பூமியை வளப்படுத்து வதற்கான அடித்தளங்களை நிறுவுதல் ஆகியவற்றை நோக்கிய அவற்றின் அழைப்பு ஆகியவை அவர்கள் அடிப்படையில் ஒரே சமூகம் என்கிறது. நபிமார்கள், ரஸூல்மார்களின் தூதுத்துவங்களுக்கு இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை திருக்குர்ஆன் தெளிவு படுத்தியதுபோன்று, அவற்றின் நிலையான தன்மைகளையும் மாறக்கூடிய தன்மைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. ஒவ்வொரு தூதுத்துவமும் நம்பிக்கை, மானுட ஒழுக்க நெறிகள், சட்டங்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஆகிய நான்கு முதன்மையான அடித் தளங்களைக் கொண்டிருக்கின்றன. இந்த அடித்தளங்களில் நம்பிக்கை, மானுட ஒழுக்க நெறிகள் ஆகிய இரண்டிலும் தூதுத் துவங்கள் அனைத்தும் ஒன்றுபடுகின்றன. ஆனால் விரிவான சட்ட விவகாரங்களைப் பொருத்தவரை கால, இட, சூழல் வேறுபாடு களுக்கு ஏற்ப அவற்றுக்கு இடையே வேறுபாடுகள் காணப் படுகின்றன.*

## 2. நபித்துவத்திற்கு முன்னர் நபியவர்கள் வணக்க வழிபாட்டில் ஈடுபட்டது முந்தைய நபிமார்களுடைய வேத சட்டங்களின்படி நிகழ்ந்ததா?

*நபித்துவத்திற்கு முன்னரும் பின்னரும் நபியவர்கள் முந்தைய நபிமார்களின் வேத சட்டங்களை செயல்படுத்தியது தொடர்பாக சட்டவல்லுனர்களிடையே மூன்று வகையான கருத்துகள் காணப் படுகின்றன. நபியவர்கள் அதனை அனுமதித்திருக்கிறார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். நபியவர்கள் அதனை அனுமதிக்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள். ஒரு தரப்பினர், அது குறித்து எந்த நிலைப்பாட்டையும் முன்வைக்கவில்லை. நபியவர்கள் இதனை அனுமதித்துள்ளதாக கூறியவர்கள் தங்களின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக சில குர்ஆனிய வசனங்களை முன்வைக்கிறார்கள்.*

உண்மையில் அவர்களின் புரிதலில்தான் சிக்கல் இருக்கிறது. "அவர்களுடைய நேர்வழியை நீங்கள் பின்பற்றுங்கள்" (அன்ஆம்: 90), "பின்னர் எல்லாவற்றையும்விட்டு விலகி ஒரு மனப்பட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்பிய இப்ராஹீமின் மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நாம் உமக்கு வஹி அறிவித்தோம். அவர் இணைவைப்பவராக இருக்கவில்லை" (நஹ்ல்: 123) இவை போன்ற இன்னும் பல வசனங்கள் வேதங்களின் மையக்கருத்துகள் ஒத்திசைவானவை என்பதை வலியுறுத்தக்கூடியவை. அதாவது அல்லாஹ்வை நம்புதல், அவனை வணங்குதல், ஒழுக்க நெறிகள் போன்ற அடிப்படையான அம்சங்களில் வேதங்கள் ஒத்திசைவான கருத்துகளையே கொண்டிருக்கின்றன. இந்த உண்மையை முன் னிறுத்தியே திருக்குர்ஆன் வேதம் வழங்கப்பட்டவர்களிடம் அது கொண்டு வந்துள்ள நேர்வழியைப் பின்பற்றுமாறு கூறியது. இந்த விசயங்கள்தாம் முந்தைய வேதங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன. நீங்கள் அவற்றை உண்மையாகவே நம்புபவர்களாக இருந்தால் இந்த மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றது. ஆனால் சட்ட விவகாரங்களைப் பொருத்தவரை, ஒவ்வொரு நபிக்கும் தனித்துவமான சட்ட ஒழுங்குகள் காணப்பட்டன. இவற்றுள் இறுதித் தூதானது அனைவருக்குமான அருளாகவும் நெகிழ்ந்து கொடுக்கும் சட்ட முறையாகவும் அமைந்துள்ளது. திருக்குர்ஆன் கூறுகிறது "மனிதர்களே! நான் உங்கள் அனைவருக்குமான தூதராக இருக்கின்றேன் என்று கூறுங்கள்" (அஃராப்: 158). அந்த வகையில் முந்தைய வேதங்களின் சட்டங்களைப் பின்பற்றுதல் என்றதொரு சிந்தனையைக் கொண்டிருப்பதில் ஓர் அபாயம் இருப்பதை உணர முடிகிறது. அதாவது இஸ்லாமிய ஷரீஅத்தில் அல்லாஹ் இல்லாமல் செய்த சிரமங்கள், கஷ்டங்களை மீண்டும் நம்முடைய ஷரீஅத்தினுள் கொண்டு வந்து சேர்க்கும் நிலை இதனால் ஏற்படலாம்.

ஆகவே ஒவ்வொரு நபிக்கும் ரஸூலுக்கும் அருளப்பட்ட வஹியானது, சில பொது அடிப்படைகளைக் கொண்டுள்ளன. அல்லாஹ்வின் ஒருமைத் தன்மையை உறுதிப்படுத்துவது, இறைத் தூதர்களின் மானுடத் தன்மையையும் அவர்களுடைய தூதுத் துவங்களின் உண்மைத் தன்மையையும் உறுதிப்படுத்துவது, தமக்கு அறிவிக்கப்பட்ட வஹியைப் பின்பற்றுமாறு தூதர்களுக்கு கட்டளை இடப்படுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## மூன்றாவது: நபிமார்களின் பணிகள்

நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உரிய பணிகளை அல்லாஹ்வே நிர்ணயம் செய்துள்ளான். அவற்றில் எதையும் கூட்டுவதற்கோ குறைப்பதற்கோ அவர்கள் அதிகாரம் பெற்றவர்கள் அல்ல. திருக்குர்ஆன் அவர்களின் பணிகளை மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளதுடன் நபிமார்கள் பற்றிய திரிக்கப்பட்ட பார்வைகளுடன் இருந்த சமூகங்களின் உதாரணங்களையும் எடுத்துரைக்கிறது. அவர்கள் வீழ்ந்த அதே தவறில் நாமும் வீழ்ந்து விடாதிருக்க நம்மை எச்சரிக்கை செய்கின்றது. தூதர்களின் மானுடத்தன்மையையும் அவர்களுக்கான இறைபாதுகாப்பையும் உறுதிப்படுத்தியதுபோன்று அவர்களால் நிகழ்த்தப்படும் அற்புதங்களின் நோக்கங்கள் குறித்தும் அவர்களின் வரம்புக்குட்பட்ட மனித ஆற்றல்கள் குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளது. அவர்களால் நிகழ்த்தப்படும் அற்புதங்கள் அனைத்தும் இணையில்லா இறைவனின் செயல்பாடுகளேயாகும். அவர்களுடைய பணியின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் அவர்களின் கைகளால் அல்லாஹ்வே அவற்றை நிகழ்த்து கிறான். “நபியே! நீர் கூறும்: ‘நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான். ஆனால் எனக்கு வஹி அறிவிக்கப்படுகிறது, நிச்சயமாக உங்களின் இறைவன் ஒருவனே, அவனை நோக்கியே உங்கள் வாழ்வை நிலைப்படுத்துங்கள், அவனிடமே பாவ மன்னிப்புக் கேளுங்கள், இணை வைப்பவர்களுக்குக் கேடுதான்’” (புஸ்ஸிலத்: 6).

முந்தைய நபிமார்களின் வேத நூல்களைப் பொறுத்தவரை அவை நடைமுறை வாழ்வுக்கான உபதேசங்களாகவே காணப்பட்டன. அவர்கள் அவற்றை மக்களுக்குப் போதித்தார்கள். அன்றாட வாழ்வில் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள் அல்லது சமயத்தைக் கடைப்பிடித்தல் என்று இன்று குறிப்பிடப்படும் விசயத்தை அவர்கள் அமுல்படுத்தினார்கள் எனலாம். நபிமார்களின் செயல்கள், அவர்களுடைய வேத நூல்களை விட்டு விலகிய ஒன்றாகக் கருதப் படவில்லை அல்லது அவை தனித்து இலக்காகக் கொள்ளப்பட வில்லை. மூஸா (அலை) ஹாரூன் (அலை) ஆகியோருடைய வாழ்விலும் சரி, இஸ்ராயீலின் மக்களுக்கு அனுப்பப்பட்ட ஏனைய தூதர்களின் வரலாற்றிலும் சரி, தெள்ளத் தெளிவாக இந்த விசயம் தெரிய வருகிறது. அவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட தவ்ராத்தையே மக்களுக்குப் போதித்தார்கள். அதனைச் செயல்படுத்துவதற்கு மக்களை ஆர்வமூட்டினார்கள். அதன் கட்டளைகளுக்கு மாறாகச் செயல்படக்கூடாது என்றும் அவர்கள் எச்சரித்தார்கள்.

## நான்காவது: இறுதித்தூதரின் பணிகள்

### முதலாவது பணி: ஓதிக் காண்பித்தல்

திருக்குர்ஆனை ஓதிக் காட்டுமாறு அல்லாஹ் நபியவர்களுக்குக் கட்டளை இடுகிறான்: "அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் மீது அருள்புரிந்திருக்கிறான். அவன் அவர்களுக்கு அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பியுள்ளான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காட்டுகிறார்; அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார்; அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்" (ஆலஇம்ரான்: 164). ஓதுதல் என்பதற்கு அறபு மொழியில் சொல்லப்படும் 'அத்திலாவா' என்ற சொல் 'பின்பற்றுதல்' என்ற கருத்தையும் தருகிறது. "சூரியனைப் பின்பற்றி வரும் சந்திரன் மீது சத்தியமாக" (ஷம்ஸ்: 2) என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. இங்கு சந்திரன், சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று வழங்குகிறது, சூரியனின் பிரதிநிதி என்ற இடத்தில் சந்திரன் இருக்கின்றது. இன்னொரு இடத்தில், "அதனைத் தொடர்ந்து அவனிடமிருந்து ஒரு சாட்சியாளர் வருகின்றார்" (ஹூத்: 17) என்கிறது. இந்த இடத்திலும் ஒன்றைப் பின்தொடர்தல், அதன்படி செயல்படுதல் என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே அல்லாஹ்வின் வசனங்களை ஓதுதல் என்பது, அவற்றைப் பின்பற்றுதல், அவற்றிலுள்ள கட்டளை, விலக்கல்களைச் செயல்படுத்துதல் என்றே பொருள் கொள்ளப்படுகிறது. அத்திலாவா என்பது வாசித்தல் என்ற கருத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "இவை நாம் உங்களுக்கு ஓதிக்காட்டிய வசனங்களாகவும் ஞானம் நிரம்பிய நற்செய்திகளாகவும் இருக்கின்றன" (ஆலஇம்ரான்: 58).

### இரண்டாவது பணி: எடுத்துரைத்தல்

எடுத்துரைத்தல் என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள அறபுச் சொல் 'அல்பலாக்' என்பதாகும். இது மொழிரீதியாக நோக்கத்தை, இலக்கை அடைதல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. அது காலமாக அல்லது இடமாக அல்லது பொருளாக இருக்கலாம். "தெளிவாக எடுத்துரைப்பதே தூதர்களின் பணியாகும்" (நூர்: 54) என்று திருக்குர்ஆன் கூறுகிறது. மொழிரீதியான இந்தக் கருத்திலேயே திருக்குர்ஆனும் பயன்படுத்தியுள்ளது. அதாவது, இறைத்தூதர்கள் தங்களின் தூதுத்துவத்தை அதன் முழுமையான நோக்கம் அடையப் பெறும்வரை எடுத்துரைப்பார்கள். ஒட்டுமொத்த மனித சமூகத்தை நோக்கியே அவர்களின் பணி அமையும். அதன் செயல்பாட்டு வடிவமும் அவ்வாறே அமையும்.

மூன்றாவது பணி: தெளிவுபடுத்துதல்

*திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதில் மக்களுக்கு மத்தியில் காணப்படும் முரண்பாடுகளைக் குறைக்கும் நோக்கில் அல்லது அவற்றை இல்லாமல் ஆக்கும் வகையில் இந்த தெளிவுபடுத்துதல் என்ற பணி அமைக்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் கூறுகிறது: "தூதரே! மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இந்த வேதத்தை உமக்கு அருளினோம்" (நஹ்ல்: 44). தெளிவுபடுத்தும் பணி சொல், செயல், அங்கீகாரம் ஆகிய மூன்று வடிவங்களிலும் அமையும். திருக்குர்ஆன் கூறுகிறது, "வேதக்காரர்களே! உங்களிடம் நம்முடைய தூதர் வந்திருக்கின்றார், வேதத்தில் நீங்கள் மறைத்துக் கொண்டிருக்கும் பல விசயங்களை அவர் உங்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். இன்னும் பலவற்றை அவர் தவிர்த்து விடுகிறார்" (மாயிதா: 15). இங்கு தெளிவுபடுத்துதல் என்பது பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவதாக, பொதுவான முறையில் தெளிவுபடுத்துதல். உதாரணமாக, அல்லாஹ்வின் இறைத்துவம், அவனுடைய வணக்க வழிபாட்டுக்குரிய தன்மை, அவனுடைய பண்புகள் ஆகியவற்றை தெளிவுபடுத்துவதைக் குறிக்கும். இரண்டாவதாக, குறிப்பான முறையில் தெளிவுபடுத்துவது. இது மனித சமூகத்திற்குத் தேவையானவற்றைத் தெளிவுபடுத்துவதைக் குறிக்கும். உதாரணமாக, நம்பிக்கை கொள்ள வேண்டிய அம்சங்கள், வணக்க வழிபாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அனைத்துத் தூதுத்துவப் பாரம்பரியங்கள் மீதும் திருக்குர்ஆனின் மேலாண்மையை தெளிவுபடுத்துவதையும் அதை உண்மைப்படுத்துவதையும் தெளிவு படுத்துதல் என்ற சொல் குறிக்கின்றது. நபியவர்களின் வாழ்வு, இந்தப் பாரம்பரியங்கள் நடைமுறையில் பாதுகாக்கப்பட்டமைக்கான சிறந்ததொரு முன்மாதிரியாக இருக்கின்றது.*

*இதன் காரணமாகவே, அல்லாஹ் தன்னுடைய இறுதி வேதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை தன்னிடமே வைத்துக் கொண்டான். திருக்குர்ஆன் கூறுகிறது: "குர்ஆனை ஒன்றுதிரட்டுவதும் அதனை ஓதிக் காட்டுவதும் நம்முடைய பொறுப்பாகும். நாம் அதனை ஓதிக் காட்டும்போது அதனை நீங்கள் பின்பற்றுங்கள், பின்னர் அதனைத் தெளிவுபடுத்துவதும் நம்முடைய பொறுப்பேயாகும்" (கியாமா: 17,18,19). இன்னொரு இடத்தில், "நினைவூட்டும் இந்த வேதத்தை நாம்தாம் உங்களுக்கு அருளினோம். அதனை நாமே பாதுகாப்போம்" (ஹிஜ்ர்: 9) என்று கூறுகிறது. திருக்குர்ஆனை இறக்கிவைப்பதில்*

*எவ்வாறு அல்லாஹ்வுடன் வேறு யாரும் பங்கு கொள்ளவில்லையோ அதே போன்று அதனைப் பாதுகாப்பதிலும் நபியவர்களுக்கு ஓதிக் காட்டுவதிலும் மக்களுக்கு அதன் வசனங்களை தெளிவுபடுத்து வதிலும் அவனுடன் வேறு எவரும் பங்கு கொள்ளவில்லை. நபியவர்களுக்கு திருக்குர்ஆனை ஓதிக் காட்டுவதிலும் அதனைத் தொகுப்பதிலும் தெளிவுபடுத்துவதிலும் அல்லாஹ் எதையும் மறந்து விடவும் இல்லை, தவறுதலாக விட்டுவிடவும் இல்லை. இதனால் தான் அது அனைத்தையும் தெளிவுபடுத்தக்கூடியதாக இருக்கின்றது. மட்டுமல்ல, திருக்குர்ஆனின் மூலாதாரத்தன்மை மீது முழு மனித சமூகமும் ஒத்த கருத்து கொண்டிருப்பதற்கு இதுவே காரணமாகும். இதுவே இறுதித் தூதருக்கு புனிதமான நகரத்தில் அருளப்பட்ட இறுதியான வேதமாகும். திருக்குர்ஆனின் மேலாண்மையும் அதன் அதிகாரமும் வரம்புகள் அற்றவை. அது சுன்னாவின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது, அதனை உண்மைப்படுத்துகிறது. இங்கு தூதுத்துவங்கள் மீதான திருக்குர்ஆனின் மேலாண்மை என்பது அவற்றின் சட்டவாக்கவதிகாரம் அல்லாஹ்விடமே இருக்கின்றது என்பதாகும். உண்மைப்படுத்துதல் என்பது தூதுத் துவங்கள் எதிர்கொள்கின்ற திரிபுகள், தவறான விளக்கங்கள் போன்றவற்றை திருத்தியமைத்து அவற்றின் உண்மை வடிவத்தை மீள முன்வைப்பதைக் குறிக்கும்.*

## நான்காவது பணி: உபதேசம் செய்தல்

*அல்லாஹ் கூறுகிறான்: "நான் என் இறைவனுடைய தூதையே உங்களுக்கு எடுத்துரைக்கிறேன். நான் உங்களுக்கு நம்பிக்கையான உபதேசியாக இருக்கிறேன்" (அஃராப்: 68).*

*எடுத்துரைத்தலைத் தொடர்ந்து உபதேசம் குறிப்பிடப்பட்டுள்ள திலிருந்து எடுத்துரைத்தல் என்பதே உபதேசம்தான் என்பதைப் புரிந்து கொள்ளலாம். திருக்குர்ஆன் உபதேசத்தை பல கருத்துக்களில் பயன்படுத்தியுள்ளது. அவற்றுள் ஒன்று, உபதேசிப்பவர், உப தேசிக்கப்படுகின்றவரின் நலனை நோக்கமாகக் கொண்டு, அவர் தேர்வு செய்த வார்த்தைகளையும் செயல்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளும் ஒரு செயல்பாடு. அதனை உபதேசிக்கப்படுபவர் பின்பற்றுகின்றபோது அது அவருக்கு நன்மையானதாக அமை கின்றது.*

## ஐந்தாவது பணி: அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுப்பது

*திருக்குர்ஆன் கூறுகிறது: "அவர் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தார்கள்" (ஜும்ஆ: 2). இங்கு ஞானம் என்ற கருத்தைக் கொடுக்கும் அறபு வார்த்தை 'ஹிக்மா'. இது இந்தப் பிரபஞ்சம் உள்ளடக்கியிருக்கும் நியதிகள், அறிதல்கள், கலைகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு கருத்தையே தருகின்றது. திருக்குர்ஆனுடன் இவற்றையும் இணைத்து மனிதன் கற்றுக் கொள்கின்றபோன்று அவன் திருக்குர்ஆனையும் இந்தப் பிரபஞ்சத்தையும் ஒருசேர வாசிப்பவனாக மாறுகிறான். இந்தப் பிரபஞ்சத்தில் அல்லாஹ் வைத்துள்ள இரகசியங்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் அவற்றுடன் எவ்வாறு இயைந்து பயணிக்க வேண்டும் அவற்றை மிகைக்கவோ அலட்சியப்படுத்தவோ கூடாது என்பதையும் நபியவர்கள் தம் தோழர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.*

### ஆறாவது பணி: மக்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தல்

*திருக்குர்ஆன் கூறுகிறது: "அவர் அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார். அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். அவர்கள் அதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில்தான் இருந் தார்கள்" (ஜும்ஆ: 2).*

### ஏழாவது பணி: பின்பற்றுதலைக் கற்றுக் கொடுத்தல்

*பின்பற்றுதல் என்பது மொழியில், ஒருவருடைய அடிச்சுவடில் செல்லுதல் என்ற கருத்தைத் தருகிறது. திருக்குர்ஆன் கூறுகிறது "யார் என்னுடைய வழியைப் பின்பற்றுகின்றார்களோ, அவர்கள் அச்சப்படவோ கவலைப்படவோ மாட்டார்கள்" (பகரா: 38). பின்பற்றுதல், தக்லீத் இரு வார்த்தைகளும் யாரேனும் ஒரு மனிதனைப் பின்தொடர்தல் என்ற வகையில் ஒரே கருத்தைத் தருகின்றன. ஆனால் பின்பற்றுதல் ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்தது. அந்த வகையில் தக்லீதை விட்டும் அது வேறுபடுகிறது. அறிஞர்களைப் பின்பற்றுதல் என்பது அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களின் ஆதாரங்களைப் பின்பற்றுவதாகும்.*

திருக்குர்ஆன் கூறுகிறது: "யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவர்களின் வழியை நீங்கள் பின்பற்றாதவரை திருப்தியடைய மாட்டார்கள். அல்லாஹ்வின் வழியே நேரான வழி என்று நீர் சொல்வீராக. உமக்கு அறிவு கிடைக்கப் பெற்ற பின்னரும் அவர்களின் மனஇச்சைகளை நீர் பின்பற்றினால் அல்லாஹ்விடமிருந்து உங்களைக் காப்பாற்றவும் உதவி செய்யவும் யாரும் இருக்கமாட்டார்கள்" (பகரா: 120). இந்த வசனத்திலும் இது போன்ற இன்னும் பல வசனங்களிலும் பல்வேறு வழிகளும் அவற்றின் விளைவுகளும் எடுத்துரைக்கப்பட்டு சரியானதைச் தேர்வு செய்யும் வழிமுறை இலகுபடுத்திக் காட்டப் படுகிறது. பின்பற்றுதல் என்னும் செயல்பாடு, அறிவார்ந்த செயல்பாடாக அமைதல் வேண்டும். அது மன இச்சையின் அடிப்படையிலோ அனுமானங்களின் அடிப்படையிலோ அமையக் கூடாது. இப்ராஹீமுடைய (அலை) வார்த்தைகளின் ஊடாக அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்: "என் தந்தையே! உங்களுக்குக் கிடைக்காத அறிவு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே என்னைப் பின்பற்றுங்கள் நான் உங்களுக்குச் சீரான வழியைக் காட்டு கிறேன்" (மர்யம்: 43). அல்லாஹ் தன் தூதருக்கும் அவருக்கு அருளப்பட்டவற்றைப் பின்பற்றுமாறுதான் கட்டளையிடுகிறான்: "உமக்கு உம் இறைவனிடமிருந்து வஹியாக அறிவிக்கப்பட்ட வற்றைப் பின்பற்றுவீராக. அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. இணைவைப்பவர்களைப் புறக்கணித்து விடுவீராக" (அன்ஆம்: 106). தன்னைப் பின்பற்றுமாறுதான் நம்பிக்கையாளர்களுக்கும் அவன் கட்டளையிடுகின்றான்: "தூதரே! நீர் கூறும்: "நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் எனில், என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களையும் மன்னிப்பான். அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபை யாளனாகவும் இருக்கின்றான்" (ஆலஇம்ரான்: 31).

## எட்டாவது பணி: நேர்வழியடைய அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தல்

திருக்குர்ஆன் கூறுகிறது "அவர்களுக்குத்தான் அல்லாஹ் நேர்வழி காட்டினான். அவர்களின் வழியையே நீங்களும் வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்" (அன்ஆம்: 90). வழிகாட்டியாகக் கொள்ளுதல் என்ற செயல்பாடு பின்பற்றுதல் என்ற செயல்பாட்டைப் போலவே, நாம் யாரை வழிகாட்டியாகக் கொள்கின்றோமோ அவருடைய செயல்பாடுகள் அறிவார்ந்த ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்திருப்பது அவசியமாகும். அவர் ஒரு நபியாக இருந்தாலும்

அல்லது நன்மைகளின் பக்கம் அழைக்கின்ற ஓர் அழைப்பாளராக இருந்தாலும் சரியே.

**ஒன்பதாவது பணி: நேர்வழி அடைதலைக் கற்றுக் கொடுத்தல்.**

நேர்வழி அடைதல் என்பது ஒரு மனிதன் உலகியல், மறுமை விவகாரங்களில் தெரிவு செய்வதன்மூலம் மிகச் சரியானதைப் பெற்றுக் கொள்வதையே உணர்த்துகின்றது. திருக்குர்ஆன் கூறுகிறது: "நீங்கள் வழியறிந்து கொள்வதற்காக அவனே உங்களுக்காக நட்சத்திரங்களை ஏற்படுத்தினான்" (அன்ஆம்: 97). இன்னொரு இடத்தில் "யார் நேர்வழி அடைகிறாரோ அவர் தமக்கான சரியான வழியை அடைந்து கொண்டவராவார். யார் வழிதவறிச் செல்கிறாரோ அவர் தமக்குப் பாதகமானதையே தெரிவு செய்கிறார்" (யூனுஸ்: 108).

அல்லாஹ் மனிதனுக்கு வழங்குகின்ற நேர்வழியை நான்கு வகைகளில் உள்ளடக்கலாம். முதலாவது, எல்லா மனிதர்களுக்குமான நேர்வழி, இது அவர்களுக்குக் வழங்கப்பட்டுள்ள பகுத்தறிவு மற்றும் ஏனைய அடிப்படை அறிவுகளைக் குறிக்கிறது. "எங்களின் இறைவன் எப்படிப்பட்டவன் என்றால் அவன் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய படைப்பமைப்பை வழங்கி அவற்றுக்கான வழியையும் காட்டியுள்ளான்" (தாஹா: 50). இரண்டாவது, அல்லாஹ் தூதர்களின் வழியாக விடுக்கும் அழைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற நேர்வழி. "நம்முடைய கட்டளைப்படி வழிகாட்டும் தலைவர்களை நாம் அவர்களிடையே ஏற்படுத்தினோம்" (ஸஜ்தா: 24). மூன்றாவது, அவனுடைய பாதையில் செயல்படுவதற்கான பாக்கியம் வழங்குதல், "யார் நேர்வழியில் செல்கின்றாரோ அவர்களின் நேர்வழியை அவன் இன்னும் அதிகப்படுத்திக் கொடுப்பான்" (முஹம்மது: 17). "யார் நம் விசயத்தில் முயற்சி செய்கின்றாரோ அவருக்கு முன்னால் நம்முடைய வழிகளை நாம் இலகுபடுத்திக் கொடுப்போம்." நான்காவது, மறுமையில் சுவனத்தை நோக்கிச் செல்வதற்கான வழி, இதனையே திருக்குர்ஆன் பின்வரும் வசனம் குறிப்பிடுகிறது: "தான் நாடியவர்களை அவன் நேரான வழியில் செலுத்துகிறான்" (நூர்: 46). இந்த நான்கு வகையான வழிகாட்டல்களும் ஒன்றன் விளைவாக அடுத்தடுத்து வருகின்றது. முதலாவது நேர்வழி கிடைக்கப் பெறாதபோது இரண்டாவதும் கிடைக்க மாட்டாது. நான்காவது வழி கிடைக்கப் பெற்ற ஒருவருக்கு அதற்கு முந்தைய மூன்றாவது வழியும் நிச்சயம் கிடைக்கப் பெற்றிருக்கும். ஒரு மனிதன்

இன்னொரு மனிதனுக்கு வழிகாட்டுதல் என்பது இறைவனின் பக்கம் அழைத்தல், சரியான பாதையை காட்டிக் கொடுத்தல் என்னும் பொருளில் மட்டுமே சாத்தியமாகிறது. இவை தவிர பிற வழிகாட்டல்களை மனிதனால் வழங்க முடியாது. இதனையே திருக்குர்ஆன், "நீர் நேரான வழியைக் காட்டுகின்றீர்" (ஷூரா: 52) என்று கூறியுள்ளது. ஏனைய நேர்வழிகள் குறித்து குர்ஆன் கூறுகிறது: "நீர் விரும்பியவர்களை உம்மால் நேர்வழியில் செலுத்த முடியாது. அல்லாஹ்வே தான் விரும்பியவர்களை நேர்வழியில் செலுத்துகிறான்" (கஸஸ்: 56).

அல்லாஹ் குறிப்பிட்டுள்ள இந்த வழிகாட்டல்களுள் சிலவற்றை அவன் நிராகரிப்பாளர்களுக்கும் அநியாயக்காரர்களுக்கும் தடை செய்துள்ளான். அவற்றுள் ஒன்று, மூன்றாவது வகையான வழி காட்டல். நற்செயல்கள் செய்வதற்கான பாக்கியம் அளித்தல். காரணம், இது ஏற்கனவே நேரான வழியில் தனித்துவமாக அவன் வழங்குகின்ற ஒரு வெகுமதி. அடுத்தது, நான்காவது வகையான வழிகாட்டலான, மறுமையில் நன்மைகளைப் பெற்று சுவனம் செல்வது, திருக்குர்ஆன் கூறுகிறது: "நம்பிக்கை கொண்டு, தூதர் உண்மையானவர் என்பதற்கு சாட்சியும் கூறி அவரிடம் தெளிவான ஆதாரங்கள் வந்த பிறகும் நிராகரிப்பவர்களுக்கு அல்லாஹ் எப்படி வழிகாட்டுவான்? அல்லாஹ் அநியாயக்காரர்களுக்கு நேர்வழி காட்ட மாட்டான்" (ஆலஇம்ரான்: 86).

அல்லாஹ் தூதர்களின் வழியாக விடுக்கும் அழைப்பு, சரியான பாதையை காட்டிக் கொடுத்தல் ஆகியவற்றின்மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நேர்வழியைத் தவிர ஏனைய அனைத்து நேர் வழிகளும், அதாவது பகுத்தறிவு வழங்கப்படுவது, ஒரு விசயத்தை இலகுபடுத்தித் தருவது, சுவனம் வழங்குவது ஆகியவை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவையாகும். நபியவர்களாலும் இவற்றை வழங்க முடியாது. திருக்குர்ஆன் கூறுகிறது: "அவர்களை நேர் வழியில் செலுத்துவது உம்முடைய கடமையல்ல. அல்லாஹ்வே தான் விரும்பியவர்களை நேரான வழியில் செலுத்துகிறான்" (2:282). "யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டினானோ அவரே நேர்வழி பெற்றவர் ஆவார்" (17:97). இந்த வசனங்களிலிருந்து தெரிய வருவது, உண்மையாக நேர்வழியைத் தேடுகின்ற ஒருவனுக்கு, அவனது முயற்சியை அல்லாஹ் சாத்தியப்படுத்தித் தருவதுடன் அவனை சுவனம் நோக்கியும் செலுத்துகிறான். ஆனால் இதற்கு மாறாக செயல்படுவபவனுக்கு இது கிடைக்காது என்ற கருத்தையே

இது தருகிறது. "அவனுக்கு நாம் வழிகாட்டினோம். அவன் நன்றியுள்ளவனாக இருக்கின்றான் அல்லது நன்றி கெட்டவனாக இருக்கின்றான்" (இன்ஸான்: 3) என்ற வசனமும் "அவனுக்கு இரு வழிகளையும் காட்டினோம்" (பலத்: 10) என்ற வசனமும் அறிவின்மூலம் அல்லது ஷரீஅத்தின்மூலம் பொதுவாக அறிந்து கொள்ள முடியுமான நல்ல, தீய வழிகளையே குறிக்கின்றன. திருக்குர்ஆன் கூறுகிறது: "ஒரு பிரிவினருக்கு அவன் வழிகாட்டினான். மற்றொரு பிரிவினருக்கு வழிகேடு விதியாகிவிட்டது" (அஃராப்: 30).

"யார் அல்லாஹ்வை நம்புகிறாரோ அவரது உள்ளத்தை அவன் நேர்வழியில் செலுத்துகின்றான்" (தகாபுன்: 11). இங்கு நேர்வழி என்பது ஒருவர் ஆர்வத்துடன் முயற்சிக்கும் ஒரு விசயம் பற்றிய தெளிவை அல்லாஹ் அவனது உள்ளத்தில் ஏற்படுத்தி விடுவான் என்ற கருத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. குர்ஆனில் நேர்வழி என்ற கருத்தைத் தரும் ஹிதாயா என்ற வார்த்தை சில சமயங்களில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு விசயத்தை நோக்கி வழிகாட்டுதல் என்ற பொருளிலும் — உதாரணமாக "அவர்களில் பலரை நாம் தேர்ந்தெடுத்து நேர்வழியில் செலுத்தினோம்" (அன்ஆம்: 87) — சில இடங்களில் பொதுவாக நேர்வழி காட்டுதல் என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது, "அவர்களுக்கு நாம் நேரான வழியைக் காட்டினோம்" (4: 67)

## பத்தாவது பணி: தம்மை முன்மாதிரியாகக் கொள்வதை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல்

முன்மாதிரியாகக் கொள்வதும் ஒருவரை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்வதைப் போன்றதுதான். இன்னொருவரைப் பின்பற்றுகின்ற நிலை இங்கேயும் இருக்கிறது. முன்மாதிரி என்ற பதம் குர்ஆனில் மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "அல்லாஹ்வின் தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது" (அஹ்ஸாப்: 21), "இப்ராஹீமிடமும் அவருடன் இருப்பவர்களிடமும் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருந்தது" (மும்தஹினா: 4). "அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புவர்களுக்கு அவர்களிடம் அழகிய முன்மாதிரி இருந்தது" (மும்தஹினா: 6).

நபியவர்களை முன்மாதிரியாகக் கொள்வது என்பது குர்ஆனின் போதனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்த நபியவர்களின் வாழ்வைப் பின்பற்றுவதாகும் என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது.

*இதனால்தான் அன்னை ஆயிஷாவிடம் (ரழி) நபியவர்களின் பண்பு குறித்து வினவப்பட்ட போது, "நீங்கள் குர்ஆனைக் கற்கவில்லையா? அவர்களின் பண்பு குர்ஆனாகவே இருந்தது" என்றார்கள்.*

*முன்மாதிரி என்பதில் புரிந்து கொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான விசயம், நாம் யாரை முன்மாதிரியாகக் கொள்கின்றோமோ அவரது வார்த்தைகளையும் நடத்தைகளையும் நாம் தனித்தனிச் செயல்பாடுகளாக இல்லாமல் மொத்தமான கோட்பாடுகளாகவும் விதிகளாகவுமே நோக்க வேண்டும். அவரது ஒவ்வொரு செயலுக்கும் காரணங்களும் நியாயங்களும் நோக்கங்களும் இருக்கின்றன. அவற்றின் மீதான பகுப்பாய்வின் அடிப்படையில்தான் செயல்கள் மீதான முன்மாதிரி அமைய வேண்டும்.*

### பதினொன்றாவது பணி: ஆதிக்கம்

*இங்கு ஆதிக்கம் என்பது, இறைத்தூதர்களின் தூதுத்துவங்கள் எதிர்கொண்ட திரிபுகள், சதிகள், தவறான விளக்கங்கள் போன்றவற்றை அகற்றி அவற்றை அவற்றின் தூய வடிவத்திற்கு மீளவும் கொண்டு வருகின்ற அதிகாரப்பூர்வமான பணியைக் குறிக்கிறது. உண்மையில் இது குர்ஆனுக்குரிய அதிகாரமாகும். குர்ஆனின் ஊடாகவே நபியவர்கள் இந்தப் பணியை மேற்கொள்கிறார்கள். இந்தப் பணியின் காரணமாகவே மனித சமூகத்தின் அறிவு மூலம் ஒருமுகப்படுத்தப்படுகின்றது.*

## ஐந்தாவது: இறுதித் தூதுத்துவத்திற்கும் ஏனைய தூதுத்துவங்களுக்கும் மத்தியில் 'சான்று'

*நபிமார்கள், மனிதர்களுக்கான வழிகாட்டலை கொண்டு வருகின்றவர்கள் என்ற வகையில், அவர்களின் தெரிவு அல்லாஹ்வின் தனித்துவமான ஏற்பாட்டில் நடைபெறும் ஒன்றாகும். "உங்களுக்கு முன்னரும் நாம் தூதர்களை அனுப்பினோம். அவர்களுக்கும் மனைவியரும் பிள்ளைகளும் இருந்தார்கள். எந்தத் தூதரும் அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த சான்றையும் கொண்டு வர முடியாது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஒரு வேதம் இருக்கிறது" (ரஃது: 38). உடலளவில் அவர்கள் மனிதர்களே. ஆனால் ஆன்ம ரீதியாக அவர்கள் இறை ஏற்பாட்டின் ஒரு பகுதி. தனித்துவமான ஆன்ம பலத்தாலும் இறை உதவியினாலும் வஹியைச் சுமப்பதற்கு அவர்கள் தயார்படுத்தப்படுகிறார்கள். ஈஸாவைக் (அலை) குறித்து திருக்குர்ஆன் கூறுகிறது: "பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு நாம்*

அவருக்கு உதவி செய்தோம்" (பகரா: 253) முஹம்மது (ஸல்) அவர்கள் குறித்து அது கூறுகிறது: "நீங்கள் எச்சரிக்கை செய்பவராக இருக்க வேண்டும் என்பதற்காக நம்பிக்கையான ஆன்மா, இதனை உங்கள் இதயத்தில் இறக்கி வைத்தார்" (ஷுஅரா: 193) வானவர்களின் வழியாக அவர்கள் வஹியைப் பெற்றுக் கொள்வதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நபிமார்களுக்கும் மக்களுக்கும் இடையில் இருக்கின்ற மனிதத் தொடர்பின் அடிப்படையில் அவர்கள் தாம் பெற்றுக்கொண்ட வஹியை மக்களுக்கு எடுத்துரைப்பார்கள். "தூதரை ஒரு வானவராக அனுப்புவதாக இருந்தாலும் அவரை நாம் மனித உருவத்திலேயே அனுப்பியிருப்போம். அங்கு அவர்கள் குழம்பிக் கொள்ளும் விவகாரங்களில் நாமும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்போம்" (அன்ஆம்: 9). ஒவ்வொரு காலகட்டத்திலும் இறைத்தூதர்களிடம் மக்கள் சான்றுகளைக் கேட்ட நிகழ்வுகளை திருக்குர்ஆன் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. இவற்றுள் சத்தியத்தை அறிந்துகொள்ளும் நோக்கத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை இறைத்தூதர்கள் நேர்மறையாக அணுகியிருக்கிறார்கள். இவை தவிர வேறு நோக்கங்களுக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

"என் அடியான் என்னைப் பற்றி உங்களிடம் சொல்லக்கூடிய விசயங்கள் உண்மையானவையே" என்ற இறைவார்த்தையை உறுதிப்படுத்தும் வகையிலேயே சான்று அல்லது அற்புதம் அமைந்துள்ளது. ஏனெனில் இறைவனின் அனுமதி இன்றி எந்த மனிதனாலும் ஒரு சான்றையோ அற்புதத்தையோ கொண்டுவர முடியாது. இந்த சான்றுகள் அல்லது அற்புதங்கள், இறைத்தூதர்களை மனித நிலையில் இருந்து வெளியேற்றி விடுகின்றனவா? இவை பௌதீக விதிகளின் வகிபாகத்தை இல்லாது செய்து விடுகின்றனவா? இவை மனித அறிவின் செயல்பாட்டை நீக்கி முழுமையான அடிபணிதலை வலியுறுத்துகின்றனவா?

## 1. சான்று, அற்புதம் ஆகிய பதங்களின் பொருள் வேறுபாடு குறித்த திருக்குர்ஆனின் கண்ணோட்டம்

நபிமார்களின் சான்று என்ற குர்ஆனிய பிரயோகத்தை விடவும் நபிமார்களின் அற்புதம் என்ற கலைச்சொல்தான் மக்களுக்கு மத்தியில் அதிகம் பயன்பாட்டில் உள்ளது. இந்த பிரயோகக் குளறுபடியால் சிந்தனைத் தளத்தில் சார்பாகவோ எதிராகவோ என்ன விளைவுகள் ஏற்பட்டுள்ளன? உண்மையில் இந்த பிரயோகக் குளறுபடியால் சவால் விடுதல் என்ற பண்பு புனிதத்தன்மையுடன் நோக்கப்பட்டு,

மனித அறிவு மீது ஓர் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. ஆனால் உண்மையில் இவை, அல்லாஹ் இவற்றை யார்மூலம் வெளிப்படுத்துகின்றானோ அவர்களின் உண்மைத் தன்மைக்கு ஆதாரமாகவும் சாட்சியாகவும் அமைக்கப்பட்டனவாகும். இந்த இரு பயன்பாடுகளுக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருக்கின்றது. அதாவது, அற்புதம் என்ற கருத்தைத் தரக்கூடிய அறபுப் பதமான 'அல்இஃஜாஸ்' என்ற சொல்லின் மூலச் சொல் 'அல்அஜ்ஸ்' என்பதாகும். இது 'இயலாமை' என்ற கருத்தைத் தருகின்றது. இந்த சொல் மனிதனிடம் ஒருவித எதிர் மனப்பான்மையைத் தூண்டி விடுகிறது. ஆனால் சான்று என்ற சொல்லிலும் இயலாமை என்ற கருத்து கலந்திருந்தாலும் அது உண்மைத்தன்மைக்கான ஆதாரம் என்ற கருத்தையே வெளிப்படுத்துகிறது. ஏனெனில், தூதை சிறந்த முறையில் செவிமடுத்து அதனை வரவேற்பதற்கு மனிதனைத் தயார்படுத்துவதே சான்றினுடைய பணி. அதன் வழியாக தூதை ஏற்றுக் கொள்வதும் தூதரை உண்மைப்படுத்துவதும் நிகழ்கின்றன.

## 2. 'அற்புதம்' என்ற பதம் மொழியிலும் திருக்குர்ஆனிலும்

'அல்அஜ்ஸ்' என்னும் அறபுச் சொல், ஒன்றைவிட்டு பின்தங்குதல், ஒன்றை அதன் தாமதமான நேரத்தில் பெற்றுக் கொள்ளுதல், ஆற்றல் என்ற சொல்லின் எதிர்ப்பதம் ஆகிய கருத்துக்களில் பயன்படுத்தப்படுகிறது. திருக்குர்ஆன் கூறுகின்றது: "அந்தோ! இந்தக் காகத்தைப் போல் செய்வதற்கும் நான் இயலாதவனாகி விட்டேனே" (மாஇதா: 31). இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்ட 'அஃஜஸ' என்ற சொல் ஒருவனை இயலாதவனாக மாற்றுதல் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. இன்னோரிடத்தில், 'அதனை இயலாமலாக்குவதற்கு உங்களால் முடியாது" (அன்ஆம்: 134) என்று வருகிறது. அதாவது, மக்கள் இறைத்தூதர்களை பின்பற்றக்கூடாது என்பதற்காக அவர்கள் முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் அவ்வாறு செய்ய முடியாது என்பதை இந்த வசனம் கூறுகிறது. மற்றோர் இடத்தில், "யார் நம்முடைய சான்றுகளை தோற்கடிக்க முயற்சிக்கின்றாரோ அவர்களுக்கு வேதனை தரும் தண்டனையுண்டு" (ஸபா: 5) என்று வருகின்றது. இதன் பொருள், அவர்கள் நம்மை இயலாமையில் ஆழ்த்த முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். காரணம், மறுமையில் தாங்கள் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட மாட்டோம் என்றும் தங்களின் செயல்களுக்கு நன்மைகளும் தண்டனைகளும் வழங்கப்பட மாட்டாது என்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

“இந்தப் பூமியில் உங்களால் அல்லாஹ்வை இயலாமையில் ஆழ்த்த முடியாது” (ஷூரா: 31) இந்த வசனமும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தின் கருத்தையே தருகிறது.

இதிலிருந்து திருக்குர்ஆன் பயன்படுத்திய அற்புதம் என்ற கருத்தைத் தரக்கூடிய முஃஜிஸா என்ற பதத்திற்கும் இறைத்தூதர்கள் தங்களின் தூதுத்துவங்களை ஆதாரப்படுத்தும் நோக்கில் முன்வைத்துள்ள சான்றுகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது தெளிவாகிறது. மட்டுமின்றி, இரண்டு சொற்களும் ஒரே கருத்தையே தருகின்றன என்பதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை. இங்கு கலைச்சொல் குளறுபடி ஒன்று நிகழ்ந்துள்ளது. இந்தச் சொல்லுக்கு மனித அறிவு வழங்கிய கலைச்சொல் விளக்கம், திருக்குர்ஆனின் சொல்லாடலுக்கு ஒப்பானது என்று புரிந்துகொள்ளப்பட்டது மட்டுமின்றி மனிதர்களால் வழங்கப்பட்ட கலைச்சொல் விளக்கம் தவறுகள் அற்றது என்றும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இங்குதான் திருக்குர்ஆனின் சொல்லாடல்கள் தனித்து வரையறை செய்யப்பட்டு, அவை மனிதக் கலைச்சொற்களில் இருந்து வேறு படுத்தப்படுவதன் முக்கியத்துவம் தெளிவாகிறது. ஏனெனில் குர்ஆனுடைய சொல்லாடல்களின் மூலம் அல்லாஹ் என்பதனால் அவற்றில் முழுமையும் சமநிலையும் காணப்படும். ஒவ்வொரு சொல்லாடலின் தனித்தன்மையும் பாதுகாக்கப்பட்டிருக்கும். அதாவது குர்ஆனியப் சொல்லாடல்கள் முறையானதொரு வலையமைப்பில் அமைந்திருக்கும், அவற்றுள் எந்தவொன்றைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் ஏனையவற்றைத் தவிர்த்து அதனை மேற்கொள்ள முடியாதிருக்கும். இருந்த போதிலும் அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடனும் தன்னில் முழுமையாகவும் காணப்படும். அந்த வகையில் குர்ஆனிய சொல்லாடல்கள் கொண்டிருக்கும் இந்த தத்துவார்த்தப் பின்புலத்துக்குப் புறம்பான வேறு ஒரு சொல்லாடலை அது ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. ஆகவே வெளியில் இருந்து ஒரு சொல்லாடலை குர்ஆனில் விதைக்க முனைந்தால், அது குர்ஆனுடைய சொல்லாடலின் வலையமைப்பை சிதைத்து விடுகிறது. விளைவாக, அதன் எடுத்தாளும் பொருளும் சிதைந்து விடுகிறது. இமாம் பாகில்லானி, ஒரு விசயம் அற்புதமாகக் கருதப்படுவதற்கு நான்கு நிபந்தனைகளை முன்வைத்துள்ளார். அவை: 1) அல்லாஹ்வின் ஆற்றலுக்கு மட்டுமே உட்பட்ட ஒன்றாக இருத்தல், 2) உலக வழக்கங்களுக்கு அப்பாற்பட்டதாக இருத்தல், 3) ஒரு நபியைத் தவிர வேறு யாராலும் அதனைப் போன்ற ஒன்றை வெளிப்படுத்த முடியாமல் இருத்தல், 4) தூதர்

*ஒருவர் தம் தூதுத்துவத்தின் உண்மைத் தன்மை குறித்த சவாலை மக்களிடமிருந்து எதிர்கொள்கின்றபோது, அதனை நிரூபிப்பதற்காக வெளிப்படுத்தக்கூடிய ஒன்றாக இருத்தல்.*

## 3. 'அல்ஆயத்' என்பதன் மொழிக் கருத்து

*ஆயத் என்ற வார்த்தை மொழியில் அடையாளம் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகிறது. குர்ஆனின் வசனம், குர்ஆனின் சான்று என்ற பொருள்களிலும் பயன்படுத்தப்படுகிறது. இமாம் அபூபக்ர் அல்பாகிலானி குர்ஆனிய வசனங்களுக்கு ஆயத் என்ற பெயர் வழங்கப்பட்டதற்கான காரணம், வார்த்தைகள் நிறைவடைவதற்கான அடையாளமாக அவை இருக்கின்றன என்பதனால்தான் என்கின்றார். இதற்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது: ஆயத் என்பது குர்ஆனிய எழுத்துக்களின் ஒரு தொகுப்பு, இந்த எழுத்துக்கள் அல்லாஹ்வின் அற்புதங்கள். இதனைக் குறிப்பதற்காகவும் ஆயத் என்று பயன்படுத்தப்படுகிறது. ஆயத் என்பது படிப்பினை என்ற கருத்திலும் குர்ஆனில் பயன்படுத்தப்பட்டுள்ளது. "நிச்சயமாக யூசுஃபிடத்திலும் அவரது சகோதரர்களிடத்திலும் கேட்பவர்களுக்கு படிப்பினைகள் இருக்கின்றன" (யூசுஃப்: 7).*

## 4. நபியவர்களின் வார்த்தைகளில் ஆயத் என்பதன் பொருள்

*நபியவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்: "இறைத்தூதர்களில் ஒவ்வொருவருக்கும் மக்கள் அவர்களை நம்பும் அளவுக்கு சான்றுகள் வழங்கப்பட்டிருந்தன. எனக்கு வழங்கப் பட்டது, அல்லாஹ் எனக்கு அறிவித்த வஹியாகும். மறுமை நாளில் நான் அதிகம் பின்பற்றாளர்களைக் கொண்டவனாக இருக்க வேண்டும் என நான் ஆதரவு வைக்கிறேன்." இங்கு நபியவர்கள் அற்புதம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. மாறாக திருக்குர்ஆனின் சொல்லாடலான சான்று என்ற வார்த்தையையே பயன்படுத்தியுள்ளார்கள்.*

## 5. திருக்குர்ஆனில் ஆயத் என்ற சொல்லாடல்

*இமாம் அல்இஸ்பஹானி கூறுகிறார்: ஆயத் என்பதன் பொருள் வெளிப்படையான அடையாளம் என்பதாகும். உயரமான ஒரு கட்டடத்திற்கும் ஆயத் என்பார்கள். "நீங்கள் ஒவ்வோர் உயரமான இடத்திலும் வீணாக சின்னங்களை உருவாக்குகிறீர்களா?" (ஷுஅரா: 128). இது 'தஅய்யி' என்ற அடிப்படைச் சொல்லில் இருந்து பிறந்த ஒரு வார்த்தை. தஅய்யி என்பது ஒன்றை உறுதிப்படுத்திக்*

கொள்ளுதல், ஏதேனும் ஒன்றில் தங்கியிருத்தல் போன்ற பொருள் களைத் தருகிறது. இணைத்தல் என்ற பொருளையும் தருவதாக சிலர் கூறுகிறார்கள்.

## 6. ஆயத், ஆயாத் ஆகிய வார்த்தைகள் குர்ஆனில் என்னென்ன பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன?

ஆயத் என்பதை அது திருக்குர்ஆனின் அடிப்படையான ஓர் அம்சம் என்ற ரீதியிலும் அது உணர்த்துகின்ற அறிவுசார் பொருள்கோடல் ரீதியிலும் நாம் வேறுபடுத்திப் புரிந்து கொள்வது அவசியமாகும். முதல் வடிவத்தின் அடிப்படையில் ஒரு சட்டத்தையோ கருத்தையோ குறித்து நிற்கும் குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் ஆயத் எனப்படும். அது ஒரு அத்தியாயமாகவோ அத்தியாயத்தின் ஒரு பகுதியாகவோ இருக்கலாம். ஒவ்வொரு செய்தியும் முடிவடையும் மொழி வடிவத்துக்கும் ஆயத் என்று சொல்லப்படுகிறது. இதன் அடிப் படையிலேயே அத்தியாயங்களின் ஆயத்கள் கணக்கிடப்படுகின்றன.

- பிரபஞ்சத்தின் சான்றுகளும் அதன் நிலையான விதிகளும்: "அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதும் நீங்கள் மனிதர்களாக பூமியில் பரவியிருப்பதும் அவனுடைய சான்று களில் ஒன்றாகும்" (ரூம்: 20).
- இறைத்தூதர்களின் சம்பவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சமூகவியல் விதிகள்: "நாம் நூஹை அவரது சமூகத்தாரிடம் அனுப்பினோம். அவர் அவர்களிடையே தொள்ளாயிரத்து ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்தார். அவர்கள் அநியாயக்காரர்களாக இருந்ததனால் வெள்ளம் அவர்களை மூழ்கடித்தது. அவரையும் கப்பலில் இருந்தவர்களையும் நாம் காப்பாற்றினோம். உலகத் தாருக்கு அதனை ஒரு சான்றாக ஆக்கினோம்" (அன்கபூத் 14-15).
- திருக்குர்ஆனின் வசனங்கள், "தா ஸீன் இவை தெளிவான வேதத்தின் வசனங்களாகும்" (நம்ல்: 1).

## 7. இறைத்தூதர்களின் சான்றுகள்

குர்ஆனில் சில இடங்களில் ஆயத் என்று ஒருமையிலும், சில இடங்களில் ஆயாத் என்று பன்மையிலும் வந்துள்ளது. "மர்யமின் மகனையும் அவரது தாயாரையும் நாம் சான்றாக ஆக்கினோம்" (முஃமினூன்: 50). இங்கு இரு சான்றுகள் என்று குறிப்பிட வில்லை. காரணம், ஒவ்வொருவரும் அடுத்தவருக்கு சான்றாக

*இருக்கின்றனர் என்றுதான் குறிப்பிடப்படுகிறது. "நாம் மூஸாவுக்கு தெளிவான ஒன்பது சான்றுகளை வழங்கியிருந்தோம்" (இஸ்ரா: 101). "அல்லாஹ்வுடைய இந்த ஒட்டகம் உங்களுக்கு சான்றாக இருக்கின்றது" (அஃராப்: 73). இந்த வசனங்களில் ஆயத் என்பது தூதுத்துவத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் ஆதாரமாகவும் மக்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பாகவும் அமையக் கூடிய ஒன்றையே குறிக்கிறது. திருக்குர்ஆன் கூறுகிறது: "அவர்களுடைய இறைவனின் சான்றுகளில் எந்தவொரு சான்று அவர்களிடம் வந்தாலும் அவர்களை அதனைப் புறக்கணிக்கவே செய்கிறார்கள்" (அன்ஆம்: 4). "நம்பிக்கை கொள்ளாத மக்களுக்கு சான்றுகளும் எச்சரிக்கைகளும் பயனளிக்க மாட்டா" (யூனுஸ்: 101).*

### 8. அச்சமூட்டும், அறைகூவல் விடுக்கும் சான்றுகள்

*திருக்குர்ஆன் கூறுகிறது "அச்சமூட்டுவதற்காக அன்றி நாம் சான்றுகளை அனுப்புவதில்லை" (இஸ்ரா: 59). இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயத் என்பது முந்தைய சமூகங்களுக்கு வழங்கப்பட்டவற்றையே குறிக்கிறது. இவை யாரை நோக்கி அனுப்பப்படுகின்றனவோ அவர்களை அச்சமூட்டும் நோக்கம் இங்கு உள்ளது. ஆனால் சிறந்தததொரு சமூகமாக அவர்கள் உள்ள போது "நீங்கள் மனிதர்களுக்காக அனுப்பப்பட்ட சிறந்த சமூகமாக இருக்கிறீர்கள்" (ஆல இம்ரான்: 110) அவர்களின் அந்தஸ்து உயர்வடைகிறது. அல்லாஹ்வின் தண்டனை அவர்கள் அனைவரின் மீதும் இறங்காது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வசனத்தில் ஆயத் என்பது ஆதாரம் என்ற கருத்தைக் கொண்டிருப்பதாக சிலர் கருதுகிறார்கள். அதாவது குறிப்பிட்ட மக்களுக்கான ஆதாரங்களாக மட்டுமே அவை இருக்கும். அந்த வகையில் அவர்கள் அவசரப்பட்டு எதிர்பார்க்கின்ற தண்டனையில் இருந்து அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்கிறார்கள். "தண்டனை விரைவில் வரவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்" (அன்கபூத்: 54).*

### 9. இறுதித் தூதுத்துவ சான்றின் சிறப்பம்சங்கள்

*அற்புதம் பற்றிய தத்துவத்தில், மனித சமூகத்திற்கான இறுதித்தூது சற்று வேறுபடுகிறது. அதன் புறத்தோற்றம், உள்ளடக்கம், அணுகுமுறைகள் என அனைத்திலும் இந்த வேறுபாடு காணப் படுகிறது. முஹம்மது (ஸல்) அவர்களின் இறுதித் தூதை அல்லாஹ் அறிவின் மீதே கட்டமைத்திருக்கின்றான். அதாவது*

மனித சமூகம் இறைவனிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற தூதை உள்வாங்கிக் கொள்வதற்குரிய ஆற்றலைக் கொண்டிருக்கிறது என்பது இதன் பொருள். அந்த வகையில் இறுதித்தூது கிடைக்கப் பெற்ற பிறகு அதில் உள்ளடங்கியிருக்கும் இறைத்தூதர்களின் அற்புதத் தத்துவத்தின் ஒவ்வொரு தனித்தனி அம்சமும் மனித ஆற்றலுடன் சம்பந்தப்படுவது, பிரபஞ்சத்தின் சான்றுகளையும் திருக்குர்ஆன் என்னும் சான்றையும் இணைத்துப் புரிந்து கொள்வதில் இருக்கிறது. அதுவே அல்லாஹ் அறிவித்த மறைவானவற்றை நம்பிக்கை கொள்வதற்குரிய இடத்திற்கு மனிதனை இட்டுச் செல்லும். அல்லாஹ் கூறுகிறான்: “யார் ஈமானுக்குப் பகரமாக நிராகரிப்பை மாற்றிக் கொள்ள நினைக்கின்றாரோ அவர் நிச்சயமாக நேரான வழியிலிருந்து பிறழ்ந்து விட்டார்” (பகரா: 108). அந்த வகையில் பிரபஞ்சத்தின் விதிகள், பிரபஞ்சத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய ஆழ்ந்த தேடலும் நுண்ணிய பார்வையும் அவசியம். அதற்குரிய வகையில் நம்முடைய ஆய்வியல் வழிமுறையும் வளர்ச்சியடைய வேண்டும். இந்தப் பிரபஞ்சம் மனிதனுக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் ஓர் அற்புதம், அதன் உட்பொருளையும் வெளிப் பொருளையும் ஆழ்ந்து புரிந்து கொண்டு இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்திற்கும் பயனளிக்கும் விதத்தில் இதனை வளப்படுத்துவது நம்முடைய கடமையாகும்.

அல்லாஹ் தன் இறுதித் தூதரான முஹம்மது (ஸல்) அவர்களின் சான்றாக குர்ஆனை ஆக்கியிருப்பதன் நோக்கம், ஒவ்வொரு காலகட்டத்திலும் உண்மைகளைக் கண்டறிவதற்குரிய ஆய்வுப் பொறுப்பினை மனித சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்பதாகும். திருக்குர்ஆன் கூறுகிறது: “உறுதியாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு பூமியில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. உங்களுக்குள்ளேயும் பல சான்றுகள் இருக்கின்றன. அவற்றைக் குறித்து நீங்கள் சிந்திக்க மாட்டீர்களா? வானத்தில் உங்களுக்குரிய உணவும் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டவையும் இருக்கின்றன” (தாரியாத்: 20-22). இங்குதான் பிரபஞ்சத்தின் மீதான வாசிப்பு, வஹியின் மீதான வாசிப்பு ஆகிய இரண்டும் ஒன்றுசேர்ந்திருப்பது தெரிய வருகிறது. திருக்குர்ஆனின் பல வசனங்களில் இந்த இரு வாசிப்புகளும் மனித சிந்தனையை இறுதித் தூதின் கட்டமைப்பிற்குள் செலுத்துகின்றன. ஏனெனில் இறுதித் தூது தன்னுடைய சிந்தனைச் சட்டகத்தை இவ்விரு வாசிப்புகளின் மீதே கட்டமைத்திருக்கிறது. இந்த சிந்தனைச் சட்டகம் மனிதப் பிரதிநிதித்துவத்தின் நோக்கங்களை சரியாக அடையச் செய்வதுடன் அவனை சிந்தித்தல், ஆய்வு

செய்தல், அறிதல், புரிந்து கொள்ளுதல், விளக்கம் அளித்தல், புதிதாக உருவாக்குதல் போன்ற ஆற்றல்கள் கொண்டவனாகவும் மாற்றுகின்றது. இந்த ஒவ்வொரு மனித ஆற்றலும் ஆரோக்கியமான சுதந்திரமான ஓர் அறிவை வேண்டி நிற்கிறது. ஆகவே குர்ஆனிய வசனங்கள் மறைவானவற்றைப் பேசுகின்றன எனில், அவை மனித அறிவைச் செயலிழக்கச் செய்வதில்லை, மாறாக அவை அதனைத் தூண்டிவிடுகின்றன. ஒவ்வொரு மறைவான விசயமும் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அல்லாஹ்வுடனான அவற்றின் தொடர்பு மிக நுண்ணிய வடிவில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே மனிதன் இயற்கைக்கு அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. அதனைக் கண்டு விரண்டோடவோ அதற்கு முன்னால் மண்டியிட்டு வணக்கம் செலுத்தவோ தேவையில்லை. மாறாக அதனைக் கண்டறிந்து புரிந்துகொள்ள வேண்டும் என்பதே அவனிடம் எதிர்பார்க்கப்படுகிறது. பிரபஞ்சம் என்பது வெறுமனே பிரமிப்புக்கும் மண்டியிடுவதற்கும் உரிய ஒன்று அல்ல. மாறாக அது அபிவிருத்திச் செயல்பாடுகளுக்கான களம். இதுதான் இறைபிரதிநிதித்துவத்தின் அடிநாதம்.

திருக்குர்ஆனுடைய சிந்தனைக் கட்டமைப்புக்கு உட்படாத மனிதன் உருவாக்கிய கலைச்சொற்களை திருக்குர்ஆனின் கலைச்சொற்களுடன் கலந்துவிடும்போது, அது குர்ஆனிய சிந்தனையுடனான உறவாடலில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறது. குர்ஆனிய சிந்தனையின் மூலமாக இருப்பது ‘அல்லாஹ்’ என்பதனால், அது வரையறை களுக்கு உட்படாத பொதுப் பண்பைக் கொண்டது. ஆகவே இறை மூலத்திலிருந்து உருவாகாத எந்தவொரு சிந்தனை அதில் நுழைந்தாலும், அதன் அடிப்படைகளுடன் முரண்படுகின்ற காரணிகள் அதன் மீது சுமத்தப்படுகின்ற ஒரு நிலையே அங்கு ஏற்படுகின்றது. இது குர்ஆனுடைய சிந்தனையில் ஒரு சிதைவை அல்லது குழப்பத்தை ஏற்படுத்துவது மட்டுமின்றி சில சமயங்களில் அதற்கு முழுமையான தடையாகவும் மாறிவிடுகிறது. அதற்கு அந்நியமான ஒரு சிந்தனை ஏதேனும் ஓரிடத்தில் அமர்ந்து விட்டாலும், அது குர்ஆனிய சிந்தனைக் கட்டமைப்பின் முழுமைத் தன்மையை இழக்கச் செய்து விடுகிறது. அதனுடைய சுயத்தைப் பிரதிபலிக்காத ஒன்று அங்கு உருவாகி விடுகிறது. இதுதான் அற்புதம், சான்று ஆகிய தலைப்புகளில் நிகழ்ந்துள்ளது. இறையியல் துறை மற்றும் மெய்யியல் துறையின் முஸ்லிம் அறிஞர்கள், ‘இறைத்தூதர்களின் சான்றுகள்’ என்ற குர்ஆனியப் பிரயோகத்துக்குப் பதிலாக ‘இறைத்தூதர்களின் அற்புதங்கள்’

என்ற கலைச் சொல்லைப் பயன்படுத்தியதனால், சான்றுகள் என்ற குர்ஆனிய பிரயோகத்தின் நோக்கங்களுடன் முரண்படக்கூடிய வேறு பல தலைப்புக்களும் இதனுள்ளே ஈர்க்கப்படும் நிலை உருவானது. ஆனால் குர்ஆனுடைய சான்று என்ற சொல்லாடல் இயற்கை நியதிகளையும் குர்ஆனிய வசனங்களையும் இணைத்து நோக்குவதில், ஒரு சுதந்திர ஆய்வு மனநிலைக்கு மனிதனை உயர்த்துகின்ற தன்மையைக் கொண்டிருக்கிறது. இதன் மூலமாகவே இறுதித் தூது என்பதன் தத்துவம் நிறைவேற்றப்படுகிறது. அதாவது, ஒரு நபியின் இருப்பு இன்றி, பிரபஞ்சத்தின் சான்றுகளையும் குர்ஆனிய கருத்தியல் சான்றுகளையும் இணைத்துப் பார்க்கும் ஆற்றலை மனிதன் அடைகிறான்.

அதேபோன்று நபியவர்களின் சான்றான குர்ஆனையும் மூஸா, ஈஸா (அலை) ஆகியோரின் அற்புதங்களையும் குழப்பிக் கொண்டுள்ள ஒரு நிலையும் கவனிக்கத்தக்கது. முந்தைய இறைத்தூதர்களின் சான்றுகள், குறிப்பாக மூஸா, ஈஸா (அலை) ஆகியோருடைய அற்புதங்கள் அனைத்தும் பௌதீக ரீதியானவை. அவை அந்த காலகட்டங்களுக்கு மட்டுமே உரியவை. இப்படியான அற்புதங்களைப் பொறுத்தவரை, மக்கள் அவற்றைக் காட்டுமாறு கேட்டுவிட்டு அவர்களே அவற்றை பொய்யெனக் கூறி நிராகரித்ததற்கும் அவர்கள் கூண்டோடு அழிக்கப் படாமல் வெறுமனே எச்சரிக்கை செய்யப்பட்டதற்கும் மத்தியில் ஒரு தொடர்பை அல்லாஹ் வைத்திருக்கின்றான். “அவர்களை அச்சமூட்டுவதற்காகவே நாம் சான்றுகளை அனுப்புகின்றோம்” (இஸ்ரா: 59). ஆனால் திருக்குர்ஆன் அச்சமூட்டுவதில்லை. அது நற்செய்தி கூறக்கூடியதாகவும் எச்சரிக்கை செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது. ஏனெனில் அச்சமூட்டுதல், சிந்தனைத் திறனை இழக்கச் செய்து விடுகிறது. அதே போல் மூஸாவின் (அலை) ஒன்பது அற்புதங்களுக்கும் ஈஸாவின் (அலை) அற்புதங்களுக்கும் ஷரீஅத் கடினமானதாக ஆக்கப்பட்டதற்கும் மத்தியில் தொடர்பிருக்கிறது. அதாவது, இஸ்ரவேலர்கள் கடுமையான சட்டங்கள் வழங்கப்பட்டதும் அவர்கள் இறை சட்டத்துக்கு நிர்ப்பந்தமாக கட்டுப்பட வைக்கப்பட்டதும் அவர்கள் ஒட்டுமொத்தமாக அழிக்கப் படாததற்குப் பகரமாக நிகழ்ந்த ஒன்றாகவே கருத முடிகிறது. இதன் காரணமாகவே, நியாயமின்றி ஒருவரைக் கொலை செய்வது முழு மனித சமூகத்தையும் கொலை செய்வதற்கு ஒப்பானது என்ற வகையில் கொலையாளியும் கொலை செய்யப்பட வேண்டும் என்ற சட்டம் அவர்கள் மீது சுமத்தப்பட்டது. இதுவன்றி ஈட்டுத்தொகை கொடுத்து விடுபடுதல் அல்லது மன்னிப்பு வழங்கப்படல் போன்ற வாய்ப்புக்கள்

அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனை திருக்குர்ஆன் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. இந்தப் பின்புலத்தில்தான், பௌதீக ரீதியான சான்றுகள் இந்த சமூகத்திற்கு மறுக்கப்பட்டன என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. "முன்பு வாழ்ந்தவர்கள் சான்றுகளை பொய்ப்படுத்தியதன் காரணமாகவே நாம் இவர்களுக்கு சான்றுகளைக் கொடுக்காமல் தவிர்ந்து கொண்டோம், ஸமூத் குலத்தாருக்கு தெளிவான சான்றாக நாம் ஒரு ஒட்டகத்தை வழங்கியிருந்தோம், அவர்கள் அதற்கு அநியாயம் இழைத்து விட்டார்கள். அச்ச மூட்டுவதற்காகவே நாம் சான்றுகளை வழங்குகின்றோம்" (இஸ்ரா: 59). முஹம்மது நபியவர்களை நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கும் அவரது தூதுத்துவத்தை ஏற்காமல் இருப்பதற்கும் மறுமை நாளை பொய்யெனக் கூறி நிராகரிப்பதற்கும் ஏதாவது காரணம் சொல்ல வேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. திருக்குர்ஆன் கூறுகிறது: "உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்கள் அனைவரும் உணவு உண்பவர்களாகவும் கடைவீதிகளில் உலவுபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். உங்களில் சிலரை சிலருக்கு நாம் சோதனையாக ஆக்கியுள்ளோம், ஆகவே நீங்கள் பொறுமையுடன் இருப்பீர்களா? உங்கள் இறைவன் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான்" (புர்கான்: 20). திருக்குர்ஆன் அவர்களின் எந்த சந்தேகத்திற்கும் பதில் சொல்லாமல் விட்டதில்லை. திருக்குர்ஆன் கொஞ்சம் கொஞ்சமாக அருளப் பட்டதை அவர்கள் மறுத்த போது, அது பின்வருமாறு பதிலளித்தது: "இவருக்கு இந்தக் குர்ஆன் ஏன் ஒரே தடவையில் முழுவதுமாக இறக்கப்படவில்லை என்று நிராகரிப்பாளர்கள் கேட்கிறார்கள். இதன்மூலம் உம் உள்ளத்தை உறுதிப்படுத்துவதற்காகவே நாம் இதனைப் படிப்படியாக இறக்கினோம். அவர்கள் உங்களிடம் எந்த வகையான உவமானத்தைக் கொண்டு வந்தாலும் அதனை விடவும் உண்மையானதும் அழகானதுமான ஒரு விளக்கத்தை நாம் உங்களுக்குத் தந்திருக்கின்றோம்" (புர்கான்: 32,33).

இவ்வாறு குர்ஆனிய வசனங்கள் ஒன்றிணைந்து, தன் ஆதாரங்களை அவர்களிடம் உரக்க சொன்னது. சற்று திரும்புவதற்கும் கூட அவர்களுக்கு அவகாசம் அளிக்காமல், தான் ஒரு மிகப் பெரிய சான்று என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது. திருக்குர்ஆனின் அதே தரத்தில் அல்லது அதனைப் போன்றதொரு சான்று எந்தவொரு நபிக்கும் அல்லது தூதருக்கும் வழங்கப்படவில்லை. அவ்வாறிருந்தும் சிலர் தங்களுக்குக் கிடைத்த சில அறிவிப்புகளை வைத்துக்கொண்டு, நபியவர்களுக்குப் பௌதீக ரீதியான அற்புதங்கள் கிடைக்கப்

பெறாதது ஒரு குறைபாடு என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் வழங்கப்பட்ட வெட்டுக்கிளி, இரத்தம், பேன், தவளை, மரணித்தோரை உயிர்ப்பித்தல், நோயாளிகளைக் குணப்படுத்துதல், கடல் பிளக்கப்பட்டு எதிரிகள் மூழ்கடிக்கப்படுதல் ஆகியவை அனைத்தும் பௌதீக ரீதியான அற்புதங்களே. ஆனால் இவற்றுள் எந்தவொரு அற்புதமும் இஸ்ரவேலர்கள் செங்கடலைக் கடந்து சென்ற பிறகு தங்கத்தினால் செய்யப்பட்ட காளைக்கன்றை வணங்குவதைவிட்டும் அவர்களைத் தடுக்கவில்லை. சிலைகளை வணங்கிக் கொண்டிருந்த ஒரு சமூகத்தைக் கண்டவுடன் அவற்றைப் போன்ற சிலைகள் தங்களுக்கும் வேண்டும் என்று அவர்கள் மூஸாவிடம் (அலை) கோரிக்கை வைப்பதை விட்டும் அவை அவர்களைத் தடுத்துவிடவில்லை. ஏனெனில் அந்த அற்புதங்கள் அவர்களின் அறிவுடனும் உள்ளத்துடனும் உறவாடவில்லை.

இவை, நபியவர்களுக்கும் சில பௌதீக அற்புதங்கள் வழங்கப் பட்டுள்ளன என்று கூறும் நிலைக்குச் சிலரை தள்ளிவிட்டது. மக்கள் அவற்றின் பக்கம் ஈர்க்கப்பட்டு, திருக்குர்ஆனை விட்டும் அவர்கள் தூரமாக்கப்பட்டார்கள். அறிவையும் சிந்தனையையும் மையப்படுத்திய குர்ஆனிய தூது, குறித்த சில சமூகங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட ஏனைய தூதுத்துவங்களுக்கு சமமானதாகக் கருதப்பட்டது. முஸ்லிம் சிந்தனையை நபியவர்களின் அற்புதங்கள் தொடர்பான அறிவிப்புகள் ஆக்கிரமித்து விட்டன. தவிர, அந்த அறிவிப்புகளுக்கும் திருக்குர்ஆன்தான் இந்த தூதுத்துவத்தின் ஒரே சான்று என்பதைத் தெள்ளத் தெளிவாகப் பேசும் குர்ஆனிய வசனங்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்படுத்த அது முற்பட்டது. திருக்குர்ஆன் என்றும் தனித்துவமானது. நபியவர்களுடன் தொடர்பு படுத்தி அறிவிக்கப்படும் எந்த செய்தியும் திருக்குர்ஆனின் மேலாண்மைக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் முஸ்லிம் சிந்தனை மூடநம்பிக்கைகள் வளரக்கூடிய ஒரு தளமாக அமைந்துவிட வாய்ப்பிருக்கின்றது. இந்த இடத்தில் திருக்குர்ஆனின் நிலைப்பாடு தீர்க்கமானதாக இருக்கிறது. இந்த சமூகத்தின் அறிஞர்களும் திருக்குர்ஆனின் நிலைப்பாட்டிலேயே நிற்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு செய்தியையும் அறிவிப்பையும் திருக்குர்ஆனை அளவுகோலாகக் கொண்டே சரிகாண வேண்டும். நபியவர்களுக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் என்றும் நிலையான இந்த ஒரு சான்றே போதுமானது.

## 10. இறுதித் தூதுத்துவமும் அதன் தனித்தன்மைகளும்

*திருக்குர்ஆனைப் பொறுத்தவரை, அதன் மொழியமைப்பு, உள்ளடக்கம், அற்புதத்தன்மை அனைத்தும் இறைபாதுகாப்பில்தான் இருக்கின்றது. ஆனால் ஏனைய வேதநூல்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவற்றின் மார்க்க அறிஞர்களுக்கே வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் தம்முடைய பொறுப்பை மறந்து அவற்றை திரிபுக்கு உட்படுத்தி வீணாக்கி விட்டார்கள். நபியவர்களின் சுன்னாவைப் பொறுத்தவரை அதனுடைய சிந்தனையும் செயற்பாடும் திருக் குர்ஆனுடன் இணைந்த பயணத்தின் ஊடாகவே முழுமை யடைகிறது. சுன்னாவுக்கான ஒப்புதலும் மேலாண்மையும் திருக் குர்ஆனிடமே இருக்கின்றது. சட்டவாக்கச் செயல்பாட்டில் சுன்னா திருக்குர்ஆனுடன் இணைந்து பங்கேற்கிறது. அந்தப் பங்கேற்பை நெறிப்படுத்துவதற்கு சில வரையறைகள் இருக்கின்றன. அவற்றையே நாங்கள் அறிவுரீதியான துணை மூலாதாரங்களாக அடையாளப் படுத்துகின்றோம். இதன் மூலமே எல்லாக் காலத்துக்கும் உகந்த நிரந்தரத் தன்மையை சுன்னா பெற்றுக் கொள்கிறது.*

## முடிவுரை: முஹம்மது நபியவர்களின் சுன்னா ஏனைய தூதர்களுடைய வழிமுறைகளின், அனுபவங்களின் சாராம்சமாகும்

*முஹம்மது நபியவர்களின் சுன்னா, முழு மனித சமூகத்திற்குரிய ஒளிவிளக்காகக் கருதப்படுகின்றது. காரணம், அது நபிமார்கள், தூதர்கள் அனைவரின் அனுபவங்களையும் உள்ளடக்கிய ஒரு மாபெரும் அனுபவத் தொகுப்பாகும். இது முந்தைய இறைத் தூதர்களின் வழிமுறைகளையும் வரலாற்றையும் முழுமையாகப் பிரதிபலிக்கிறது. நபியவர்களிடத்தில் நூஹ் நபியின் (அலை) பொறுமையையும் விடாமுயற்சியையும் இப்ராஹீம் (அலை) நபியின் ஓயாத போராட்டத்தையும் அல்லாஹ்வுக்காக முழுமையாக அர்ப்பணிக்கும் தன்மையையும் ஈஸா (அலை) நபியின் பற்றற்ற வாழ்வையும் மக்களை மார்க்கத்தின் சடங்குகளுடன் அல்லாமல் அதன் ஆன்மாவுடன் தொடர்புபடுத்துவதற்கு அவர் எடுத்த முயற்சியையும் காணலாம். திருக்குர்ஆன் இறை வஹியின் சாராம்சம். சுன்னா என்பது நபிமார்களின் வழிமுறைகள் மற்றும் அனுபவங்களின் சாராம்சம். பின்வரும் திருக்குர்ஆனின் வசனம் இதைத்தான் கூறுகிறது: "தூதர்களில் நான் புதிதாக வந்தவன் அல்ல. எனக்கும் உங்களுக்கும் என்ன நடைபெறப் போகிறது என்பது எனக்குத்*

தெரியாது, எனக்கு வஹியாக அறிவிக்கப்படுகின்றவற்றையே நான் பின்பற்றுகின்றேன், நான் பகிரங்மாக எச்சரிக்கை செய்பவனே" (அஹ்காப்: 9).

இந்த அடிப்படையில் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படக் கூடியவர்களை பலப்படுத்தவும் அவனை நிராகரிக்கும் கூட்டத்தோடு அவர்களை இணைப்பதற்கு ஷைத்தானும் அவனது கூட்டாளிகளும் செய்யும் முயற்சிகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் குர்ஆனும் சுன்னாவும் ஆற்றல் பெற்றவை என்பது தெளிவாகிறது. இந்த இடத்தில்தான் திருக்குர்ஆன், சுன்னாவின் மீதான பகுதி பகுதியான வாசிப்பின் அபாயம் புலப்படுகிறது. ஒவ்வொரு பகுதியும் உயர் விழுமியங்கள் மற்றும் குர்ஆனிய நோக்கங்களுடன் தொடர்புபடுத்தி பார்க்கப்பட வேண்டும். அதேபோன்று சுன்னாவைப் பொறுத்த வரை குர்ஆனுடன் எந்த முரண்பாடும் தோன்றாத வண்ணம் அதனுடன் நுணுக்கமாகத் தொடர்புபடுத்தி வாசிக்கப்பட வேண்டும். அவையிரண்டும் ஒரே அடித்தளமாகவே நோக்கப்பட வேண்டும். திருக்குர்ஆன் சுன்னாவைப் பாதுகாக்கிறது என்பது இந்த அடிப்படையில்தான் நிகழ்கிறது. சுன்னாவின் உண்மையான பாதுகாப்பு குர்ஆனில்தான் இருக்கிறது. இந்தக் கருத்துக்கு மாறாக நம்முடைய முந்தைய அறிஞர்கள் வழியாக முன்வைக்கப்பட்டவை யாவும் விவாதத்துக்குரியவையே.

பகுதி இரண்டு

# கருத்துக்கும் கலைச் சொல்லுக்கும் மத்தியில் சுன்னா

## முதலாவது: சுன்னாவின் கருத்தும் அதன் போக்கும்

*என் பார்வையில் சுன்னா என்ற சொல் ஒரு கருத்தே அன்றி கலைச் சொல் அல்ல. ஆனால் அது நம்முடைய சிந்தனை மற்றும் சமயப் பாரம்பரியத்தில் மிகப் பெரிய அளவில் தாக்கம் ஏற்படுத்திய நுணுக்கமான ஒரு கருத்தாகும். அதே சமயம் சுன்னா என்பது, கருத்துகளுக்குரிய பொது இயல்பைத் தாண்டிய ஒன்றாகவும் இருக்கின்றது. அதாவது அது, வழிமுறை, வழக்கம் சமூகவியல் சட்டம், இயற்கை நியதி போன்ற பல்வேறு கிளை கருத்துகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அந்த வகையில் சுன்னா என்ற சொல்லுக்குரிய, திருக்குர்ஆன் இறங்குவதற்கு முன்பிருந்த அறபு மொழி வழக்கையும், குர்ஆனுடைய பிரயோகத்தையும் பின்னர் நபியவர்களின் பிரயோகத்தையும், தொடர்ந்து நபித்தோழர்கள் ஆரம்ப கால சட்ட அறிஞர்கள், ஹதீஸ் துறையாளர்கள், இறையியலாளர்கள் என அனைவரின் பிரயோகங்களையும் பார்க்கும்போது, பல்வேறு கருத்துகளின் தனித்தன்மைகளையும் பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு கருத்துடன் நாம் உறவாடுகின்றோம் என்பதை உணர முடிகிறது. ஏதேனும் ஒரு கலை சார்ந்த கருத்தாக மட்டுமே அதனை வரையறுத்துவிட முடியாது. அதனால் சுன்னா என்ற கருத்து பற்றிய புரிதல்கள் எந்தளவு பிறழ்வுகளுக்கு உட்பட்டுள்ளது என்பதைப் பார்க்க முடிகின்றது. வெறுமனே ஒரு கலைச் சொல்லாக மட்டுமே அதனை ஆக்கிக் கொண்டு ஒவ்வொரு தரப்பினரும் தாம் விரும்பியவாறு அதனைப் பயன்படுத்தியது மிகுந்த குழப்பத்தையும் தெளிவற்ற தன்மையையும் அதில் ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் முஸ்லிம் சிந்தனை இத்தகையை குழப்பங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை .*

ஆகவே சுன்னா என்ற கருத்தின் யதார்த்த தன்மையை வெளிக்கொண்டு வருவதும் அதனை மீள ஒழுங்கமைப்பதும் மிகவும் அவசியமானது. அது ஒரு கலைச்சொல்லாக மாற்றப்பட்டதனால் விளைந்த குழப்பங்களும் மயக்கங்களும் நீக்கப்பட்ட ஒரு கருத்து தோற்றம் பெறவேண்டும். இங்கு புத்தி ஜீவிகள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஏற்கனவே இருக்கின்ற கலைச் சொற்களுடன் புதிதாக ஒன்றை இணைப்பதற்கு நாம் முயற்சிக்கவில்லை, மாறாக அவற்றுக்கிடையிலான தொடர்பையும் ஒத்த தன்மைகளையும் புரிய வைப்பதே நம்முடைய நோக்கம். அதன்மூலம், சுன்னா என்பது ஒரே ஷரீஆ பெறுமானத்தைப் பிரதிபலிக்கின்ற ஒரு கருத்து என்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் "கலைச் சொல் விளக்கம் எப்படியும் இருக்கலாம்" என்ற கோஷத்தின் அடிப்படையில், ஒவ்வொருவரும் தாம் விரும்பியவாறு விளக்கமளிக்க முற்படுகின்ற ஒரு கலைச் சொல் பிரயோகமாக மாத்திரம் அது அடையாளப்படுத்தப்பட மாட்டாது.

### 1. கருத்து உருவாக்கம்

கருத்து என்பதை தர்க்கவியலாளர்கள் "அறிந்து கொள்ளப்பட்ட ஒன்று" என்பார்கள். அதாவது, நேரடியாக அல்லது பிறிதொன்றின் உதவியுடன் வார்த்தை அல்லது செயல்மூலம் பெற்றுக் கொள்ளப் படும் அறிவுசார்ந்த ஒரு விசயம். சட்டவியலாளர்கள் கருத்தை, "வார்த்தைகளில் மொழியப்படும் கருத்துக்கு மாற்றமான ஒன்று" என்று கருதினார்கள். மொழியப்படும் கருத்து என்பது, மொழியப்படும் சமயத்தில் குறித்த வார்த்தை உணர்த்தும் கருத்தைக் குறிக்கிறது. அது அந்த வார்த்தையில் குறிப்பிடப்படாத ஒன்றைப் பற்றிய தீர்ப்பாக அல்லது அதன் ஒரு நிலையாக இருக்க முடியும். இது இருவகைப்படும். முதலாவது, நேர்மறையான பொருள், அதாவது ஒரு வார்த்தையை மொழியும் சமயத்தில் உடன்பாடான வடிவில் பெற்றுக் கொள்ளப்படும் கருத்து. இரண்டாவது, மறைபொருள், அதாவது ஒரு வார்த்தையின் நேரடியாக மொழியப்படும் கருத்துக்கு மாற்றமாக மொழியப்படாததொரு கருத்து புலப்படுதல்.

சுன்னா என்பது, பல்வேறு பொருள்கள் கலந்த ஒரு வார்த்தையாகும். இந்த வார்த்தை பல்வேறு கருத்துக்களை வெவ்வேறு அளவீடுகளில் இணைத்திருக்கிறது. ஒவ்வொரு கருத்தும் அந்த வார்த்தையுடன் கொண்டிருக்கும் தொடர்பு ஏற்றத்தாழ்வு மிக்கது. இதனால் இந்த வார்த்தை அறபு மொழியில் 'அல்முஷக்கிக்' என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகைச் சொற்கூட்டத்தினுள்ளேயே சேர்க்கப்படுகின்றது.

ஆனால் சம்பந்தப்பட்ட பல்வேறு பொருள்களை உள்ளடக்கிய வார்த்தையின் வேறுபட்ட கருத்துக்கள் ஏற்றத் தாழ்வு அற்ற வடிவில் காணப்படுமாயின் அதனை உடன்பாட்டு வகைச் சொல்லாகக் கருதுவதில் அனைத்து சட்டவியலாளர்களும் தர்க்கவியலாளர்களும் ஒத்த கருத்து கொண்டுள்ளார்கள்.

சுன்னா என்ற சொல்லுக்கு மொழியியலாளர்கள் வழங்கும் — இவர்களிடமிருந்தே சட்டவியலாளர்களும் இந்தக் கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளனர் — முதன்மையான நான்கு கருத்துக்களான வழிமுறை, வழக்கம், சரிதை, இயல்பு என்பன ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்கள் என்ற வகையில் சுன்னா என்ற வார்த்தை முஷ்க்கிக் என்னும் சந்தேக வகை சார்ந்ததாகவே அதிகம் பார்க்கப் படுகின்றது. ஆனால் அதனை உடன்பாட்டு வகைச் சொல்லாகக் கருதுவதே பொருத்தமானது என்று நாம் கருதுகிறோம். ஏனெனில் அந்த நான்கு கருத்துக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற தொடர்புகள் அவற்றின் முரண்பாடுகளை இல்லாமல் ஆக்கி விடுகின்றன. வழிமுறை, சரிதை ஆகிய இரு வார்த்தைகளும் மிகவும் நெருக்கமானவை, அதுபோல் வழிமுறை, சரிதை, வழக்கம் ஆகிய வார்த்தைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நாம் ஒரு வழிமுறையைக் கடைப்பிடிக்காவிட்டால் ஒரு சரிதையைப் பின்பற்ற முடியாது, ஒரு சரிதையைப் பின்பற்றாவிட்டால் அது வழக்கமாக மாறாது. இயல்பு என்பது அதனுடைய தொடரான நிலைத்த பண்பின் அடிப்படையில் 'நியதி' என்ற கருத்து அதில் பொதிந்திருக்கின்றது. எனவே சுன்னா என்ற வார்த்தை அதனுடைய மொழிக் கருத்துக்களின் அடிப்படையில் உடன்பாட்டு வகைச் சொல் ஒன்றாகக் கருதப்படுவதில் எந்தத் தடையும் இல்லை என்றே நாம் கருதுகின்றோம்.

அடுத்து, சட்டவியலாளர்கள், ஹதீஸ் துறையாளர்கள் மற்றும் ஏனைய துறையாளர்கள் சுன்னா என்ற வார்த்தையை எவ்வாறு பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை ஆராயும்போது, குறிப்பிட்ட ஒவ்வொரு துறை சார்ந்தவர்களின் சிந்தனைக் கட்டமைப்பை நாம் அறிந்துகொள்வது அவசியமானது. முதலில் சுன்னா என்ற சொல்லுக்குரிய குர்ஆனின் பயன்பாடு குறித்து கவனம் செலுத்து வோம்.

## 2. திருக்குர்ஆனில் சுன்னா என்ற கருத்து

குர்ஆனில் சுன்னா என்ற வார்த்தை மக்காவில் அருளப்பட்ட அத்தியாயங்களில் ஒன்பது முறையும் மதீனாவில் அருளப்பட்ட

அத்தியாயங்களில் பத்து முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைப் பார்க்கும்போது குர்ஆன் இயற்கை நியதிகள், சமூக நியதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடவே இந்த வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளது. இந்தச் சொல், ஒரே வகையான தொடராகப் பயன்படுத்தப்பட்டிருப்பது அதனை தனி ஒரு நியதியாகவே அடையாளப்படுத்துகிறது. அதுதான் திருக்குர்ஆன் பேசும் சமூகவியல் விதி. இதன்மூலம் அல்லாஹ் நிராகரிப்பாளர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறான். அதாவது, அவர்கள் இறைவழியில் இருந்து விலகிச் செல்கின்றபோது இந்த நியதிகளில் இருந்து அவர்கள் ஒருபோதும் தப்ப முடியாது. ஏனெனில் இயற்கை நியதிகளைப் போலவே இவையும் நிலையான மாறாத தன்மை கொண்டவையாகும். திருக்குர்ஆன் கூறுகிறது: "தூதரே! நிராகரிப்பாளர்களிடம் கூறுவீராக: அவர்கள் தவிர்ந்து கொண்டால் அவர்கள் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும், மீண்டும் அதே விசயத்தை செய்ய முற்பட்டால், அறிந்து கொள்ளுங்கள் முன்னர் வாழ்ந்தவர்கள் மீது நியதிகள் நடந்தேறியிருக்கின்றன" (அன்பால்: 38). தொடர்ந்து கூறுகிறது: "முன்னர் வாழ்ந்தவர்களுக்கு நிகழ்ந்த நியதியைத்தான் இவர்கள் எதிர்பார்க்கிறார்களா? அல்லாஹ்வின் நியதியில் எந்த மாற்றத்தையும் நீர் காண மாட்டீர். அல்லாஹ்வின் நியதியில் எந்த திருப்பத்தையும் நீர் காண மாட்டீர்" (பாதிர்: 43).

சுன்னா என்ற வார்த்தை குர்ஆனில் வழிமுறை என்ற கருத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இமாம் அர்ராகிப் அல்இஸ்பஹானி குறிப்பிடுகிறார்: "அல்லாஹ்வின் சுன்னா என்பது, அவனுடைய ஏற்பாட்டு வழிமுறையையும் குறிக்கும், அவனுக்குக் கட்டுப் பட்டு நடக்கும் வழிமுறையையும் குறிக்கும், திருக்குர்ஆன் கூறுகிறது:"இதற்கு முன்னரும் நிறைவேறிய அல்லாஹ்வின் நியதி இதுதான். அதில் எந்த மாற்றத்தையும் அதில் நீர் காண மாட்டீர்" (பத்ஹ்: 24) "அல்லாஹ்வின் நியதியில் எந்த மாற்றத்தையும் நீங்கள் காண மாட்டீர்கள்" (பாதிர்: 43). ஷரீஆக்களின் கிளை வடிவங்களில் வேறுபாடுகள் காணப்பட்டாலும், மனித உள்ளங்களைத் தூய்மைப் படுத்தி அல்லாஹ்வின் கூலியையும் நெருக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கு அவற்றைத் தயார்படுத்துதல் என்ற அவற்றின் நோக்கத்தில் எந்த வேறுபாடும் இல்லை என்பதை இந்த வசனங்கள் உணர்த்துகின்றன".

## 3. மொழியில் சுன்னா என்ற வார்த்தையின் பயன்பாடு

சுன்னா என்பது மொழியில் சரிதை, வழிமுறை ஆகிய கருத்துக்களில் பயன்படுத்தப்படுகிறது. அவை நல்லவையாகவும் இருக்கலாம் தீயவையாகவும் இருக்கலாம். இதனைத்தான் நபியவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்: "யார் இஸ்லாத்தில் ஒரு நல்ல வழிமுறையை ஏற்படுத்தி, பிறகு மக்கள் அந்த வழிமுறையைப் பின்பற்றினால் அவ்வாறு பின்பற்றியவர்களின் நன்மைகளும் அவருக்கு எழுதப்படும். அவர்களின் நன்மைகளில் எந்தக் குறைவும் செய்யப்பட மாட்டாது. அதேபோன்று யார் இஸ்லாத்தில் ஒரு தீய வழிமுறையை ஏற்படுத்தி அந்த வழிமுறையை மக்கள் பின்பற்றினால் அவ்வாறு பின்பற்றுகின்றவர்களின் பாவங்களும் அவருக்கு எழுதப்படும். அவர்களின் பாவங்களில் எந்தக் குறைவும் செய்யப்பட மாட்டாது". இங்கு நபியவர்கள் சுன்னா என்ற வார்த்தையை நல்ல அல்லது தீய வழிமுறை அல்லது சரிதை ஒன்றை தொடக்கி வைத்தல் என்ற கருத்திலேயே பயன்படுத்தியிருக்கிறார்கள். இமாம் கத்தாபி கூறுகிறார்: "நல்ல வழிமுறை என்பதே சுன்னா என்பதன் அடிப்படைப் பொருளாகும், அடைமொழிகள் எதுவுமின்றி இந்தச் சொல் தனித்து பயன்படுத்தப்படும் எனில், அது நல்ல வழிமுறை அல்லது நல்ல சரிதை என்ற கருத்தையே தருகின்றது. வேறு அடைமொழிகளுடனும் இது பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக நபியவர்கள் "யார் ஒரு தீய வழிமுறையை ஏற்படுத்துகின்றாரோ" என்று கூறியது இதற்கான உதாரணமாகும்". இமாம் சௌகானி, இமாம் அல்கிஸாஇயை மேற்கோள் காட்டி "சுன்னா என்பது மொழியில், தொடர்ந்த செயல் என்ற கருத்தைத் தருகிறது. சில சமயங்களில் தொடராக செய்து வரும் ஒரு செயல் என்ற கருத்தும் இதன் மூலம் சொல்லப்பட்டிருக்க முடியும் அல்லது கடந்த நூற்றாண்டுகள் என்ற கருத்தும் சொல்லப்பட்டிருக்க முடியும்" என்கின்றார். சுன்னா என்பது மொழியில், இயல்பு என்ற கருத்திலும் முகத்தின் மென்மையைக் குறிக்கவும் ஒரு காட்சியைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

### சுன்னா என்ற வார்த்தையின் மொழி வழித்தோன்றல்

இமாம் பக்ருத்தீன் அர்ராஸி சுன்னா என்ற வார்த்தையின் மூவகை மொழி வழித்தோன்றல்களைக் குறிப்பிட்டுள்ளார். முதலாவது: சுன்னா என்பது 'புஃலா' என்ற அடிப்படை மொழி வடிவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் அதன் பொருள் 'மப்ஊலா' என்ற வடிவில் அதாவது 'செய்யப்பட்ட ஒன்று' என்றே வழங்கப்

படுகின்றது. உதாரணமாக, நீரைத் தொடராக ஊற்றுதல் என்ற கருத்தைக் குறிக்க 'ஸன்னல் மாஅ' என்று அறபு மொழியில் குறிப்பிடுவார்கள். அறேபியர்கள் சீரானதொரு வழிமுறையை ஊற்றப்பட்ட நீருக்கு ஒப்பிடுவார்கள், ஏனெனில் நீர் தொடராக ஊற்றப்படும் போது அது ஓரே ஒழுங்கில் ஒரே பாதையிலேயே ஓடுவதைக் காணலாம். இரண்டாவது, 'ஸனன்துந் நஸ்ல' என்பது கத்தியைத் தீட்டினான் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் தீட்டப்பட்ட ஒன்றை 'மஸ்னூன்' என்பர். நபியவர்களுடன் சம்பந்தப்படுத்தப்படும் வரையறுக்கப்பட்ட செயலுக்கு சுன்னா என்றார்கள். இங்கு சுன்னா என்பது மஸ்னூன் என்ற கருத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது, மூன்றாவது, 'ஸன்னல் இப்ல' என்பது ஒட்டகத்தை முறையாகப் பராமரித்தல் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது. நபியவர்கள் தொடராக செய்து வந்த செயலுக்கு சுன்னா என்பர். அதாவது அந்த செயல் முறையான பராமரிப்புடன் நிறைவேற்றப்படுகின்றது என்பது இதன் பொருளாகும்.

சுன்னா என்பது வழக்கம் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகின்றதா?

இமாம் அழ்துத்தீன் அல்ஈஜி மற்றும் பெரும்பாலான சட்ட வியலாளர்களின் கருத்துப்படி, சுன்னா என்பது மொழியில் வழிமுறை, வழக்கம் ஆகிய பொருள்களையே தருகின்றது. இமாம் ஷமக்ஷரி தம்முடைய தப்ஸீரில் "முன்பு வாழ்ந்தவர்களில் நடந்தேறிய நியதியைத்தான் இவர்கள் எதிர்பார்க்கின்றனரா? அல்லாஹ்வின் நியதியில் எந்தவொரு மாற்றத்தையும் நீர் காண மாட்டீர். அல்லாஹ்வின் நியதியில் எந்த ஒரு திருப்பத்தையும் நீர் காண மாட்டீர்" (பாதிர்: 43) என்ற வசனத்திற்கு விளக்கம் அளிக்கையில், "முன்பு வாழ்ந்தவர்களில் நடந்தேறிய நியதி" என்பது, முன்பு வாழ்ந்த சமூகங்களில் தங்கள் தூதர்களைப் பொய்ப்படுத்தியவர்கள் மீது தண்டனை இறங்கியதைக் குறிக்கின்றது என்கின்றார். அவர்கள் அதனை எதிர்நோக்கியிருக்கிறார்கள் என்பதுதான் அவர்கள் அதனை எதிர்பார்த்து இருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று பொய்ப்படுத்துபவர்களைத் தண்டித்தல் என்ற அல்லாஹ்வின் வழக்கத்தை அவன் மாற்றவோ அல்லது அதற்குப் பகரமாக வேறு ஒன்றைத் தரவோ மாட்டான் என்றும் கூறுகின்றார். இங்கு இமாம் ஸமக்ஷரீ சுன்னா என்பதை வழக்கம் என்ற கருத்தில் கூறியுள்ளார். இன்னும் சில அறிஞர்களும் இதே விளக்கத்தை வழங்கியுள்ளார்கள்.

வழக்கம் என்ற சொல்லை மனிதர்களுடன் தொடர்புபடுத்திச் சொல்வதில் தவறில்லை என்றாலும் அதனை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்திச் சொல்வது அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை. சில சமயம் சுன்னா என்ற சொல்லை அல்லாஹ் வுடன் தொடர்புபடுத்தி விளக்கமளிக்கும்போது நியதி அல்லது விதி என்று விளக்கமளிப்பது பொருத்தமானதாக இருக்கலாம். நிராகரிப்பாளர்களுக்கு எதிராகக் கேட்கப்பட்ட ஒரு பிரார்த்தனையில் "இறைவனே!, உனது வழமையை அவர்களின் மீது பிரயோகிப் பாயாக" என்று பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த சொல்லின் பொருத்தப்பாடு குறித்து ஒரு நெருடல் இருக்கிறது. அதுபோல் தாம் பின்பற்றும் அறிவு மரபுடன் உடன்பட்டு வருகின்றது என்ற ஒரே காரணத்துக்காக குறிப்பிட்ட ஒரு சொல்லின் பல்வேறு கருத்துக்களில் ஒன்றை மட்டுமே தேர்வு செய்து அதற்குத் துணை ஆதாரங்களையும் கொண்டு வந்து அதனைப் பரவலாக்குவதும் அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

அறபு அகராதிகளில் சுன்னா என்பதற்கு வழக்கம் என்று எங்கும் வெளிப்படையான விளக்கம் எதுவும் கிடையாது. அதேபோன்று வழக்கம் என்பது வழிமுறை அல்லது சரிதை என்றும் விளக்க மளிக்கப்படவில்லை. வழக்கம் என்பதற்கு அறபு அகராதிகளில் மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்ற ஒரு செயல் என்றுதான் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. சிலர் வழக்கம் என்பது, ஒரு செயலை தொடர்ந்தும் அல்லது பெரும்பாலான சமயங்களில் அறிவுக்கு சம்பந்தமின்றி ஒரே வடிவில் மீண்டும் மீண்டும் செய்வதைக் குறிக்கும் என்று கூறியுள்ளார்கள். சிலர் வழக்கம் என்பது, சீரிய இயல்பு நிலையில் இருப்பவர்களின் உள்ளத்தில் நிலை கொண்டுள்ள தொடர் நடத்தைகள் என்கிறார்கள். எங்களின் ஆசான் அப்துல் கனி வழக்கம் என்பதும் வழக்காறு என்பதும் ஒரே கருத்தையே தருகின்றன என்கிறார். சிலர், வழக்கம் என்பது செயல்களுடன் சம்பந்தப்பட்டவை, வழக்காறு என்பது வார்த்தைகளுடன் சம்பந்தப் பட்டவை என்கிறார்கள். மேற்கூறப்பட்டவற்றிலிருந்து வழக்கம் என்ற சொல்லின் மொழியியல் பிரயோகமும் சுன்னா என்ற சொல்லின் மொழியியல் பிரயோகமும் வெவ்வேறானவை என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் சுன்னா என்ற வார்த்தையின் கருத்துக்களில் ஒன்றாக சிலர் வழக்கம் என்ற கருத்தையும் கொண்டு வந்து இரண்டும் ஒத்த கருத்தில் அமைந்த சொற்கள் என்பது போல் விளக்கமளிக்க முற்பட்டுள்ளதையும் காணலாம். உண்மையில் இரண்டும் ஒத்த கருத்தில் அமைந்த சொற்கள் அல்ல.

வழக்கம் என்ற சொல்லுக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தையும் பார்க்கும் போது, அது தொடர்ச்சியான ஒரு செயலைக் குறிக்கின்றது. சுன்னா என்ற சொல்லுக்கு வழக்கம் என்ற விளக்கத்தை வழங்கியவர்கள் இமாம் அல்கிஸாயியின் சுன்னா என்பது தொடர் செயல் என்று கூறியதை வைத்துச் சொல்லியிருக்க வாய்ப்பிருக்கின்றது.

வழக்கம் என்ற பதத்திற்கு ஷரஹுல் காமூஸில் 'உள்ளத்தில் நிலைகொண்ட ஒன்று' என்று வழங்கப்பட்டுள்ள விளக்கத்தையும் 'முஃஜமுல் அய்ன்' என்ற நூலின் ஆசிரியர் 'ஒரு விசயத்தில் நிலைத்திருத்தல்' என்று கூறியுள்ளதையும் இமாம் அர்ராகிப், இயல்பு என்பதற்கு வழங்கியுள்ள விளக்கத்தையும் சற்று உற்று நோக்கினால், வழக்கம் என்ற வார்த்தை இயல்பு என்ற கருத்திலும் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் இரண்டும் ஒத்த கருத்துள்ள சொற்கள் அல்ல. அதேபோன்று வழக்கம் என்ற வார்த்தைக்கு வழங்கப்பட்டுள்ள, ஒரு செயலை எப்பொழுதும் அல்லது பெரும்பாலான சமயங்களில் மீண்டும் மீண்டும் செய்தல் என்ற விளக்கத்தையும் வழக்காறு என்ற விளக்கத்தையும் வைத்து பார்க்கும்போது, அது வழிமுறை என்ற கருத்தைத் தருவதைக் காணலாம். ஏனெனில் வழிமுறை என்ற சொல், ஒரு செயலை தொடர்ந்து மீண்டும் மீண்டும் செய்தல் என்ற கருத்தையும் உள்ளடக்கியிருக்கின்றது. இமாம் அபூ ஹிலால் அல்அஸ்கரி தம்முடைய 'அல்புரூக் அல்லுகவிய்யா' என்ற நூலில் வழக்கம் என்ற வார்த்தைக்கும் சுன்னா என்ற வார்த்தைக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிட்டுள்ளார். வழக்கம் என்பது ஒரு மனிதன் தானாகவே ஒரு செயலை தொடர்ந்து செய்வதாகும், சுன்னா என்பது, முந்தைய ஒரு மாதிரியின் அடிப்படையில் செயல்படுவதாகும் என்கிறார் அவர். அந்த வகையில் வழக்கம், இயல்பு, வழிமுறை, தொடர் செயல் ஆகிய சொற்கள் ஒரு வகையில் நெருக்கமான கருத்தைக் கொண்டிருக்கின்றன. அதாவது, தொடர் பண்பு அல்லது தேவைக்கு ஏற்ப மீண்டும் மீண்டும் நிகழுதல் என்பது இவையனைத்திலும் காணப்படுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் இவை நெருக்கமானவை என்றாலும் இவை ஒத்த கருத்துடைய சொற்கள் அல்ல. ஆகவே வழக்கம், இயல்பு, வழிமுறை, தொடர் செயல் ஆகிய கருத்துகளுக்கிடையே ஓர் ஒற்றுமை இருக்கின்றது. அவை ஒத்த கருத்துடையவை அல்ல என்றாலும் உடன்பாட்டு வகைச் சொற்கள் என்ற வகையிலோ அல்லது உடன்பாடற்ற வகைச் சொற்கள் என்ற வகையிலோ ஒன்றுபடுகின்றன.

4. நபியவர்களின் சுன்னாவில் சுன்னா என்ற கருத்து

*நபியவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் (ரழி) கூறுகிறார்: என் மகனே, உன் உள்ளத்தில் யாரைக் குறித்தும் தப்பெண்ணம் கொள்ளாமல் காலைப்பொழுதையும் மாலைப்பொழுதையும் உன்னால் அடையும் முடியும் எனில் அவ்வாறே இருந்துகொள்." தொடர்ந்து கூறினார், "என் மகனே, இது என்னுடைய சுன்னா, என் சுன்னாவை உயிர்ப்பிக்கின்றவர் என்னை நேசிக்கின்றார். என்னை நேசிப்பவர் என்னுடன் சுவனத்தில் இருப்பார்". அபூ முஸா அல்அஷ்அரி (ரழி) கூறுகின்றார்: நபியவர்கள் எங்களுக்கு உரையாற்றினார்கள். அதில் நம்முடைய சுன்னாவை நமக்குத் தெளிவுபடுத்தினார்கள். நம்முடைய தொழுகையை நமக்குக் கற்பித்தார்கள். "நீங்கள் தொழுகைக்காக நின்றால் உங்கள் அணியை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். பிறகு உங்களில் ஒருவர் தொழுகை நடத்தட்டும்" என்று கூறினார்கள்.*

5. சுன்னா என்ற வார்த்தையை நபித்தோழர்கள் என்ன பொருளில் பயன்படுத்தினார்கள்?

*கபீஸா இப்னு துகைப் கூறுகின்றார்: அபூபக்கரிடம் (ரழி) ஒரு பாட்டி வந்து தம் பேரப் பிள்ளையின் சொத்தில் தமக்குரிய பங்கைப் பெற்றுத் தருமாறு கேட்டார். அல்லாஹ்வின் வேதத்தில் உங்களுக்கான பங்கு குறிப்பிடப்படவில்லை; நபியவர்களின் சுன்னாவிலும் சொல்லப்பட்டிருப்பதாக நான் அறியவில்லை; நான் மற்றவர்களிடம் இது பற்றி ஆலோசித்து சொல்கின்றேன்; அதுவரை நீங்கள் போய் வாருங்கள் என்றார்கள். நபித்தோழர்களை அழைத்து இது பற்றி ஆலோசித்த போது, முகீரத் இப்னு சுஃபா, நான் இருந்த ஒரு சபையில் நபியவர்கள் பாட்டிக்கு ஆறில் ஒரு பங்கு வழங்கினார்கள் என்றார். வேறு எவரும் இதே கருத்தைக் கூறுகின்றீர்களா? என அபூபக்ர் (ரழி) கேட்டார். முஹம்மதுஇப்னு மஸ்லமா அல்அன்ஸாரி எழுந்து முகீரா கூறியதைப் போலவே கூறினார். அதனை அபூபக்ர் (ரழி) செயல்படுத்தினார். ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் கூறியுள்ளார்: அறுக்கப்படக் கூடிய ஒட்டகம், மாடு ஆகியவற்றில் ஏழு பேர் இணைந்து அறுப்பதை நபியவர்கள் சுன்னாவாக்கினார்கள்".*

*அலி ஹஸன் அப்துல் காதர் தம்முடைய 'நழ்ரா ஆம்மா பீ தாரீகில் பிக்ஹில் இஸ்லாமி' என்ற நூலில் கூறுகிறார்: சுன்னா என்ற வார்த்தை, தனிமனித, சமூக வாழ்வுக்கான சரியான வழி*

என்ற கருத்தில் அறபு சமூகங்கள் மத்தியில் தொன்று தொட்டு பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. இஸ்லாமிய காலப்பகுதி யிலும் ஹிஜாஸ், இராக் ஆகிய பகுதிகளில் காணப்பட்ட பழமையான சிந்தனைப் பள்ளிகளுக்கு மத்தியில் இதே கருத்து நிலவியிருக்கிறது. அவர்கள் சுன்னா என்பதை நடைமுறையில் இருக்கின்ற செயல், இஸ்லாமிய சமூகத்தின் மத்தியில் உடன்பாடான அம்சங்கள், மிகச் சரியான நடத்தைக்கான மாதிரி ஆகிய கருத்துக்களிலேயே பயன்படுத்தினார்கள். குறிப்பாக, நபியவர்களின் சுன்னாவுக்கு மட்டுமே அந்த சொல்லைப் பயன்படுத்தவில்லை. ஆனால் பிற்பாடு இந்தச் சொல் வரையறுக்கப்பட்டு நபியவர்களின் சுன்னாவுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இந்த வரையறை இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலேயே தோற்றம் பெற்றது. இமாம் ஷாஃபியின் சட்ட அணுகுமுறை ஊடாகவே முந்தைய பயன் பாட்டிற்கு மாற்றமான இந்தப் பயன்பாடு வழக்கத்தில் வந்தது.

## இரண்டாவது: சுன்னா பற்றிய பிற்கால கலைச்சொல் பிரயோகங்கள்

முதலாம் நூற்றாண்டில் சுன்னா என்ற வார்த்தைக்கு பல்வேறு கருத்துக்கள் வழங்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இமாம் தபரியுடைய ‘தாரீக்’ என்ற நூலில் இருந்து மார்க்கோலியோஸ் அந்தக் கருத்துகளை தொகுத்து வழங்கியுள்ளார்.

1. பித்அத் என்ற வார்த்தைக்கு எதிர்க்கருத்தில், வழக்கத்தில் உள்ள ஷரீஅத்திற்கு உட்பட்ட செயல் என்ற கருத்தில் இது பயன்படுத்தப்பட்டது. ஹிஜ்ரீ 34ஆம் ஆண்டு அலீக்கும் உஸ்மானுக்கும் மத்தியில் நடைபெற்ற ஒரு உரையாடலில் இடம்பெற்ற, “அறியப்பட்ட ஒரு சுன்னாவை நிலைநாட்டி னார்கள், கைவிடப்பட வேண்டிய ஒரு பித்அத்தை செயலிழக்கச் செய்தார்கள்” என்ற வாசகத்தில் சுன்னா என்பது இந்தக் கருத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோல் தல்ஹா (ரழி), ஹிஜ்ரீ 36 ஆம் ஆண்டு அலீயுடனான (ரழி) யுத்தத்தின் போது, “இது இதற்கு முன்னர் நடைமுறையில் இருக்காத ஒரு விசயம். இது தொடர்பாக திருக்குர்ஆனில் எந்த வசனமும் இறங்கவுமில்லை. நபியவர்களின் சுன்னாவிலும் எதுவும் இல்லை” என்று கூறினார்.
2. மோசமான செயல் என்பதன் எதிர்ப்பதமான நற்செயல் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உஸ்மான் (ரழி) ஹிஜ்ரீ

35 ஆம் ஆண்டு மக்காவாசிகளுக்கு உரையாற்றும்போது, "நான் பின்பற்றும் இந்த நல்ல சுன்னா நபியவர்களிடமிருந்தும் அவர்களுக்குப் பின் இரண்டு கலீபாக்களிடமிருந்தும் நான் பெற்றுக் கொண்டதாகும்" என்றார்கள்.

3. ஒழுங்கீனம் என்ற சொல்லுக்கு எதிர்ப்பதமான ஒழுங்கு அல்லது முறைமை என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஹிஜ்ரீ 64ஆம் ஆண்டு சொல்லப்பட்ட "சுன்னாவைச் செய்யுமாறும் பித்னாவை விட்டுவிடுமாறும் மக்களை ஏவுகின்றார்" என்ற வாசகத்தில் சுன்னா என்பது ஒழுங்கு என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

4. வேறு எந்தப் பொருளும் இன்றி செயல் என்ற கருத்தில் மட்டும் சுன்னா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஹிஜ்ரீ 38 ஆம் ஆண்டு ஸிப்பீன் யுத்தத்தில் அலீயுடன் (ரழி) இணைந்து செயல்பட்ட அல்கிர்ரீத் இப்னு ராஷித் என்பவர், ஸிப்பீன் யுத்தத் தீர்ப்பில் உடன்படாததன் காரணமாக அலீயை (ரழி) விட்டு ஒதுங்கும் நோக்கில் அவருடன் விவாதிக்க முற்பட்டபோது அலி(ரழி) கூறிய வார்த்தைகளில் இந்தக் கருத்து புலப்படுகின்றது. "வாருங்கள் திருக்குர்ஆனைப் படிப்போம், சுன்னாவைப் பற்றி விவாதிப்போம்" என்றார்கள். ஹிஜ்ரீ 82ஆம் ஆண்டில் அல்முஹல்லப் என்பவர் தம் பிள்ளைகளுக்கு வழங்கிய உபதேசத்திலும் இந்தக் கருத்து புலப்படுகின்றது. "நீங்கள் குர்ஆனைப் பற்றிக் கொள்ளுங்கள், சுன்னாவையும் ஸாலிஹான மனிதர்களின் பண்புகளையும் கற்பியுங்கள்" என்று அவர் கூறினார்.

5. வெவ்வேறு சொற்களுடன் இணைத்தும் சுன்னா என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஹிஜ்ரீ 34ஆம் ஆண்டு இஸ்லாத்தின் சுன்னா, ஹிஜ்ரீ 36 ஆம் ஆண்டு முஸ்லிம்களின் சுன்னா, ஹிஜ்ரீ 38ஆம் ஆண்டு அல்லாஹ்வின் சுன்னா.

6. ஹிஜ்ரீ 35ஆம் ஆண்டு நபியவர்களின், அவர்களுக்குப் பின் வந்த இரண்டு கலீபாக்களின் செயல் என்ற கருத்திலும் சுன்னா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஏற்கனவே குறிப்பிடப்பட்ட உஸ்மானின் (ரழி) வாசகம் ஆதாரமாக அமைகின்றது. "நான் கடைபிடிக்கும் இந்த நல்ல சுன்னா நபியவர்களிடமிருந்தும் அவர்களுக்குப் பிறகு இரு கலீபாக்களிடமிருந்தும் நான் பெற்றுக் கொண்டதாகும்".

7. நபியவர்களின் செயலைவிட மேம்பட்ட விசயங்களுக்கும் சுன்னா என்று பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஹிஜ்ரீ 122ஆம் ஆண்டு ஸைத் இப்னு அலி அவர்களின் ஒரு வாசகம் இதனைத் தெளிவுபடுத்துகிறது: "அல்லாஹ்வுடைய வேதத்தை நோக்கியும் நபியவர்களின் சுன்னாவை நோக்கியும் சுன்னாக்கள் உயிர்ப் பிக்கப்படுவதையும் பித்ஆக்கள் இல்லாமல் செய்யப்படுவதையும் நோக்கியுமே நாம் உங்களை அழைக்கின்றோம்" என்றார்.

8. செயல்படுவதன் பக்கம் வழிகாட்டியவர் முஹம்மது (ஸல்) அவர்கள் என்ற கருத்திலும் சுன்னா என்பது பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதனை ஹிஜ்ரீ 36ஆம் ஆண்டு அலீயின் (ரழி) ஒரு கூற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவர் கூறினார்: "அவர்களுக்கு அவர் வேதத்தையும் ஞானத்தையும் சட்டங்களை யும் சுன்னாவையும் கற்பித்தார். பின்னர் முஸ்லிம்கள் இரண்டு நல்ல தலைவர்களை நியமித்துக் கொண்டார்கள். அவர்கள் சுன்னாவை மீறிச் செயற்படவில்லை, அறிந்து கொள்ளுங்கள் உங்களை நிர்வகிப்பதில் நாங்கள் அல்லாஹ்வின் வேதத்தையும் நபியவர்களின் சுன்னாவையும் அடிப்படையாக வைத்துச் செயல்படுவது கடமையாகும்."

9. திருக்குர்ஆன் உள்ளடக்கியுள்ள செயல்பாடுகளைக் குறிக்கவும் சுன்னா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்பாஸிய ஆட்சியின் நிறுவனரான அப்துல்லாஹ் அஸ்ஸப்பாஹ் ஹிஜ்ரீ 129ஆம் ஆண்டு பேசிய வார்த்தைகள் இதற்குச் சான்றாக இருக்கின்றன. அவர் கூறினார்: "அல்லாஹ் அவர் மீது தன் வேதத்தை அருளினான். அதில், தான் அனுமதிக்க வேண்டிய வற்றை அனுமதித்தான்; தான் தடுக்க வேண்டியவற்றைத் தடுத்தான். அதில் தன் சட்டங்களை உருவாக்கினான். தனது சுன்னாக்களை வடிவமைத்தான்.

பொருள்கோடல் சிக்கல்

*சில மத்ஹபுகளின் இமாம்களிடத்தில் சுன்னா என்ற சொல்லுக்கான பொருள்கோடலில் ஒரு சிக்கல் இருக்கின்றது. அவர்கள் நபியவர் களின் வார்த்தைகளில் அல்லது நபித்தோழர்களின் வார்த்தைகளில் அல்லது தாபியீன்களின் வார்த்தைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சுன்னா என்ற சொல்லை, நன்மை தரும் செயல் என்ற பிற்பட்ட கால கலைச்சொல் பயன்பாட்டிற்கு ஆதாரமாகக் கொள்கிறார்கள். இது தவறானது. உண்மையில் அவர்களின் வார்த்தைகளில் பயன்*

படுத்தப்பட்டுள்ள சுன்னா என்ற சொல் ஷரீஅத் ரீதியான ஒரு பொதுக் கருத்தையே உணர்த்துகிறது. அதாவது நம்பிக்கைகள், வணக்க வழிபாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், விழுமியங்கள், ஒழுக்கநெறிகள் போன்ற அனைத்தையும் அது உள்ளடக்கியது. ஹதீஸ்களிலிருந்தும் நபித்தோழர்களின் பிரயோகங்களில் இருந்தும் சுன்னா என்பது அறிஞர்கள், புத்திஜீவிகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விசயத்தையே குறித்து நிற்கின்றது என்பது தெளிவாகிறது. ஏனெனில் அது அவர்களின் முன்னோர், அறிஞர்கள், அறிவு ஜீவிகளால் காலம் காலமாக கடைபிடிக்கப்பட்டு வந்த ஒன்றாக இருக்க முடியும் அல்லது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்பட்டு வந்த வழக்காறுகளாகவும் நடைமுறைகளாகவும் இருக்க முடியும். அவை யாராலும் மறுக்கப்படவில்லை என்பது அவற்றின் பொருத்தப்பாடு மற்றும் அவற்றைக் கைக்கொள்வது தவறில்லை என்பதற்கும் ஆதாரமாக அமைகின்றது. இவ்வாறான ஒன்றையே சுன்னா என்ற வார்த்தை உணர்த்துகிறது.

## 1. முதலாம் நூற்றாண்டின் இறுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் சுன்னா என்ற வார்த்தை

உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது கூறினார்: மக்களே, நீங்கள் எழுந்து நின்றால் நாங்களும் எழுந்து நிற்போம். நீங்கள் அமர்ந்து விட்டால் நாங்களும் அமர்ந்து விடுவோம். மக்கள் தங்கள் இறைவனுக்காகவே எழுந்து நிற்பார்கள். அல்லாஹ் எங்களுக்கு கடமைகளை விதித்துள்ளான், சுன்னாக்களைத் தந்துள்ளான். அவற்றைப் பின்பற்றியவர் அல்லாஹ்வைப் பின்பற்றி நடந்தவராவார். அவற்றை விட்டுவிட்டவர் தம்மை அழிவில் ஆழ்த்தியவர் ஆவார்.

உமர் இப்னு அப்துல் அஸீசுக்கும் அவரது கவர்னர்கள், பொறுப் பாளர்கள் ஆகியோருக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் களை கவனிப்பவர் சுன்னா என்பதற்கான பொருளை அவர் மதீனாவாசிகளும் அறிஞர்களும் விளங்கியிருந்தது போலவே விளங்கியிருந்தார் என்பதைப் புரிந்து கொள்வார். ஏனெனில் அவர் மதீனாவின் கவர்னராக செயல்பட்டபோது, அவரது சிந்தனையைக் கட்டமைப்பதில் மதீனா அறிஞர்களுக்குப் பெரும் பங்கிருந்தது. அவர்கள் அனைவரும் சுன்னா என்பதை, நபியவர்களின், நபித் தோழர்களின் வழியில் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வந்த செயல்

என்றே விளங்கியிருந்தனர். இந்த விளக்கத்தின் அடிப்படையில்தான் இமாம் மாலிக்கும் 'முவத்தா' என்ற நூலைத் தொகுத்துள்ளார். அதில் அவர் நபியவர்களிடமிருந்து பெற்று மதீனாவாசிகளிடம் நடைமுறையில் இருந்தவற்றை மட்டுமே தம்முடைய நூலில் பதிவு செய்ய வேண்டும் என்பதில் அதிக கவனம் எடுத்துக் கொண்டார். மதீனாவாசிகளிடம் நடைமுறையில் இல்லாத ஆனால் ஆதாரபூர்வமான ஒரு செய்தி எனில் அதனை தம்முடைய நூலில் பதிவு செய்து விட்டு, இது மதீனாவாசிகளின் நடைமுறைக்கு மாற்றமானது, இது பிரயோகத்தில் இல்லை என்றும் குறிப்பிடுவார். வெறுமனே அறிவிக்கப்படும் ஒரு செய்தி அந்தக் காலத்தில் சுன்னா என்ற வட்டத்திற்குள் உள்ளடக்கப்படவில்லை. மாறாக தங்களுக்கு மத்தியில் பரவலான, நீண்டகால செயல்பாடாக இருக்கும் ஒன்றையே அவர்கள் சுன்னா என்றார்கள். இந்த வடிவத்தில் அமையும் ஒரு செயலுக்கு நிச்சயமாக இறைவேதத்தில் ஆதாரம் இருக்கின்றது.

## 2. சுன்னாவும் ஹதீஸும்

அல்லாஹ் குர்ஆனில் பல்வேறு இடங்களில் சுன்னா என்ற சொல்லை தன்னுடன் சம்பந்தப்படுத்திக் கூறியுள்ளான். "முன்பு வாழ்ந்தவர்களின் விசயத்தில் நடந்தேறிய அல்லாஹ்வின் நியதி, அல்லாஹ்வின் நியதியில் எந்த மாற்றத்தையும் நீர் காண மாட்டீர்" (அஹ்ஸாப்: 62). பிரபஞ்சத்திலும் சமூக வாழ்விலும் அல்லாஹ் வைத்துள்ள நியதிகளை அவன் சுன்னா என்கிறான். அவற்றில் மாற்றங்களோ பகரங்களோ என்றும் இருக்க மாட்டா. அதேபோன்று சுன்னா என்ற சொல்லை மனிதர்களுடன் சம்பந்தப்படுத்தியும் திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. "உங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்களின் வழிகளில் உங்களை வழிநடத்தவும் அவற்றை உங்களுக்குத் தெளிவுபடுத்தவும் உங்களுக்குப் பாவ மன்னிப்பு வழங்கவுமே அல்லாஹ் நாடு கிறான். அவன் நன்கறிந்தவனாகவும் ஞானம் மிக்கவனாகவும் இருக்கின்றான்" (நிஸா: 26). இங்கு, முன்பு வாழ்ந்தவர்களின் வழி என்பது நபிமார்களுடைய வழிகாட்டலின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட, நீண்ட காலமாக மாற்றமின்றி அவர்களால் பின்பற்றப்படும் அவர்களின் நடைமுறையையும் வாழ்வு முறையையும் குறிக்கின்றது. இதனை சுன்னா என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றது. சுன்னா என்ற வார்த்தை நபியவர்களுடன் இணைத்துப் பயன்படுத்தப்படுகின்றபோது, அது, நபியவர்கள் குர்ஆனைத் தொடராகப் பின்பற்றியதன் அடிப்படையில் தோற்றம் பெற்ற அவர்களின் நிலையான வாழ்வு முறையையே குறிக்கின்றது.

இந்தக் கருத்தை தெளிவுபடுத்தக்கூடிய மிகச்சிறந்த பிரயோகமாக “அவர்களின் பண்பு குர்ஆனாகவே இருந்தது” என்ற வாசகத்தைக் கருதலாம். அதாவது திருக்குர்ஆன் அவரது ஒழுக்கமாகவும் நடைமுறையாகவும் வணக்கமாகவும் அன்றாட வாழ்வாகவும் இருந்தது. அவர் ஒரு மனிதர் என்ற நிலைக்கு அப்பால் அவர் ஒரு தூதர் என்ற அடிப்படையில் அவரால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு விசயமும் பின்பற்றப்பட வேண்டிய சுன்னா என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதனைப் பின்பற்றுமாறும் நாம் கட்டளை இடப்பட்டிருக்கிறோம். இங்கு சுன்னா என்பது குர்ஆனை மூலமாகவும் நபியவர்களின் வாழ்வை பிரயோகமாகவும் கொண்ட ஒன்றாகும்.

ஹதீஸ் என்பது வேறு ஒன்றாகும். அது, மக்கள் நபியவர்களின் சுன்னாவை பிறருக்கு எடுத்துரைக்கும்போது தோன்றியதாகும். இதனை சுன்னாவை எடுத்துச் சொல்லுதல் எனலாம். நபியவர்களின் சுன்னாவை நேரடியாகக் காணாதவர்களுக்கு அதனைப் புரிய வைப்பதே இதன் நோக்கமாகும். அந்த வகையில் சுன்னாவை அறிவிப்புச் செய்தலையே ஹதீஸ் என்போம். மாறாக நேரடியாக சுன்னாவை அல்ல. ஹதீஸை உறுதிப்படுத்தும் நோக்கிலும் மக்கள் மனங்களில் அதன் உண்மைத்தன்மை பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் அது அறிவிப்பாளர் வரிசைகளுடன் அறிவிக்கப்படுகின்றது. ஹதீஸின் உள்ளடக்கத்தைப் பொருத்தவரை, அதன் நேரடி வார்த்தைகளை இல்லாமல், நபியவர்களின் சுன்னாவில் இருந்து ஒருவர் புரிந்து கொள்கின்ற கருத்தையும் அவர் அறிவிப்புச் செய்யலாம்.

இங்கு ஒரு கேள்வி எழுகிறது. நபியவர்களின் வார்த்தைகளும் செயல்களும் சம அளவில் சுன்னா என்று கருதப்படுகின்றனவா? அல்லது சுன்னா என்பது பிரதானமாக நபியவர்களின் செயல் பாடுகள்தாம்; அவர்களின் வார்த்தைகள் அடுத்த தரத்தில் கருதப்படும் என்பதுவா? அல்லது சுன்னா என்பது நபியவர்களின் வார்த்தைகளே; செயல்பாடுகள் அடுத்த தரத்தில் உள்ளவையாக கருதப்படும் என்பதுவா? இந்தக் கேள்விகளுக்கு விடை தேடுவதில் மற்றவர்களைவிட சட்டக் கோட்பாட்டாளர்களே அதிகம் கவனம் செலுத்தினார்கள். ஏனெனில் சட்ட மூலாதாரங்களை வரையறை செய்வதும் அவற்றைத் தரப்படுத்துவதும் அவர்களின் விவகாரமாகவே இருந்தது. நபியவர்களின் செயலுக்கு சட்டக் கோட்பாட்டாளர்கள் வழங்கியுள்ள இடத்தை விடவும் கூடுதல் முக்கியத்துவத்தை

வழங்கியிருந்தால் அது இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். இதனால்தான் நாம் வார்த்தையுடன் இணைந்த செயலுக்கு முதன்மையான படித்தரத்தை வழங்குகிறோம். உதாரணமாக, "நான் தொழுவது போன்று நீங்களும் தொழுங்கள்", "ஹஜ்ஜின் கிரியைகளை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்" போன்ற ஹதீஸ்களைக் குறிப்பிடலாம். பிறகு நம்மிடத்தில் வார்த்தைகளுடன் சம்பந்தப்படாத செயல், அடுத்த தரத்தில் வருகின்றது. இதுதான் சுன்னா என்ற கருத்துக்கு மிகவும் நெருக்கமானது. அதற்கு அடுத்துதான் வார்த்தை வருகின்றது. சுன்னா தொடர்பில் அறிஞர்கள் மத்தியில் தோன்றிய சர்ச்சைகள் அனைத்தும் சுன்னாவை அறிவிப்புச் செய்தல் என்ற தளத்தில்தான் நிகழ்ந்திருக்கின்றன. ஏனெனில் அல்லாஹ்வையும் தூதரையும் நம்பிக்கை கொண்ட எந்த மனிதரும் திருக்குர்ஆனின் சான்றாக உள்ள அல்லது பாதுகாப்பான, நுணுக்கமான வடிவில் நகர்த்தப்பட்டுள்ள நபியவர்களின் சுன்னா என்று உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றை மறுக்க முடியாது. எனவே சுன்னாவை அறிவிப்புச் செய்தல் என்ற எல்லையில்தான் சர்ச்சை மட்டுப்பட்டிருக்கிறது என்று கூறலாம்.

3. வேறுபட்ட துறைசார்ந்தவர்களின் கலைச்சொல் பிரயோகங்களில் சுன்னா.

ஒவ்வொரு துறைசார்ந்தவர்களும் தம் துறைப் பின்புலத்திலிருந்து சுன்னாவுக்கு ஒரு கலைச்சொல் விளக்கத்தை வழங்கியுள்ளனர். அவற்றை பின்வருமாறு குறிப்பிடலாம்:

1.**கோட்பாட்டாளர்கள்:** இவர்களின் அறிவுச் சட்டகம், சட்டங்களுக்கான ஆதாரமாக அமையக் கூடியவற்றை உறுதிப்படுத்துவதையே மூலப்பணியாகக் கொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் இவர்கள் சுன்னாவை சட்டவாக்கத்துக்கான இரண்டாவது மூலாதாரம் என்கிறார்கள். இவர்கள் சுன்னாவுக்கு இந்த விளக்கத்தை வழங்கியதற்கான பின்புலத்தில் சுன்னாவுக்கான மொழிக் கருத்துக்களில் ஒன்றான வழிமுறை என்பது பிரதான பங்கு வகித்துள்ளது. ஏனையவர்கள் சுன்னாவுக்கு வழங்கிய விளக்கங்கள் குறித்து இவர்கள் எதுவும் குறிப்பிடவில்லை. ஏனெனில் "கலைச் சொற்களில் சர்ச்சைப்படுவதற்கு எதுவுமில்லை".

2.**சட்டவியலாளர்கள்:** சட்ட வசனங்கள் சொல்லும் கடமை என்ன என்பதில் இருந்துதான் இவர்களின் அறிவுச் சட்டகம் எழுகின்றது. அந்த வகையில் சட்ட வசனங்களின் அடிப்படையில் மனித

செயல்களை மதிப்படும் பணி இவர்களுக்கு உரியதாகும். சுன்னாவை சட்ட வசனங்கள் என்ற அடிப்படையில் அணுகுகின்றபோது, அது உறுதியற்ற ஒரு ஆதாரம்; ஆகவே சட்ட வாசகங்களுக்கும் மனித செயல்களுக்கும் இடையிலான தொடர்பை, "நிறைவேற்றினால் நன்மை கிடைக்கும் நிறைவேற்றா விட்டால் பாவம் இல்லை அல்லது நிறைவேற்றுகின்றவர் பாராட்டைப் பெறுவார் நிறைவேற்றாதவர் கண்டிக்கப்பட மாட்டார்" என்ற அடிப்படையில்தான் அணுக வேண்டும் என்கிறார்கள். அதாவது, திட்டவட்டமற்ற ஒரு ஆதாரத்தின் அடிப்படையில் எழும் ஒரு செயல் வாஜிப் அல்லது பர்ள் என்ற தரத்தில் நோக்கப்பட மாட்டாது என்கிறார்கள்.

3. **ஹதீஸ் துறையாளர்கள்:** இவர்களின் அறிவுச் சட்டகம், அறிவிப்புகள், அறிவிப்பாளர் வரிசைகள் என்ற எல்லையிலேயே சுழல்கின்றது. இவர்கள் நபியவர்களுடன் சம்பந்தப்பட்ட வார்த்தைகள், செயற்பாடுகள், அங்கீகாரங்கள் அனைத்திற்கும் சுன்னா என்ற சொல்லை வழங்கியுள்ளார்கள். சுன்னா என்ற சொல்லுக்குரிய மற்றவர்களின் விளக்கங்களையும் பார்க்கும்போது, ஒவ்வொருவருடைய சிந்தனை எழுகின்ற அறிவுச் சட்டகம் வேறுபடுவதன் காரணமாக, அவற்றுக்கிடையில் உடன்பாட்டுப் புள்ளிகளைக் காண்பது சிரமமாக இருக்கிறது. அதாவது கோட்பாட் டாளர்கள் சுன்னாவை இரண்டாவது சட்ட மூலாதாரமாக முன் வைக்கின்றபோது, ஒரு செயலைச் செய்தல் அல்லது விடுதல் ஊடாக அதற்கு நன்மையோ தண்டனையோ கிடைப்பது குறித்து அவர்கள் பேசுவதில்லை. அதுபோல் அறிவிப்பாளர்கள் நபியவர்களுடன் தொடர்புபடுத்திக் கூறிய அனைத்தையும் சுன்னா என்று கருதுவதும் மீள்பரிசீலனைக்குரியது. இங்கு சுன்னாவுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு கருத்தும் எழுகின்ற சிந்தனைப் பின்புலம் மற்றைய கருத்தின் சிந்தனைப் பின்புலத்துடன் தொடர்பற்றதாக இருக்கின்றது. எனவே இந்தக் கலைச் சொல் என்ற வட்டத்தில் இருந்து வெளியில் வருவது கட்டாயமானது. அவ்வாறு வெளியில் வரும்போதுதான் சுன்னா என்ற சொல்லுக்கு முழுமையான ஒரு கருத்து கிடைக்க முடியும். மொழியிலும் குர்ஆனிலும் நபியவர்களிடத்திலும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் பிரயோகங்களையும் உள்ளடக்கிய ஒரு கோட்பாடாக அது அமைதல் வேண்டும். குறித்த சில கலைச் சொற்களுக்குள் மட்டுமே சுன்னா என்ற கருத்து காணாமல் போய் விடாமல், முந்தைய அனைத்துக் கருத்துக்களுக்கும் புதிதாக இன்னும் தோன்ற முடியுமான கருத்துக்களுக்கும் திறந்து கொடுப்பதாக அது அமைதல் வேண்டும்.

## மூன்றாவது: சுன்னாவின் கருத்துடன் தொடர்பான பிற கருத்துகளின் பொருள்கோடல் வளர்ச்சி

### 1. ஃபிக்ஹின் பொருள்கோடல் வளர்ச்சி

'பிக்ஹ்' என்பது மொழியில் புரிந்து கொள்ளுதல், அறிதல் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. ஒருவர் பிறிதொருவரைப் பார்த்து "அபகிஹ்த அன்னி?" என்று கேட்டால், நான் சொல்வதை நீ புரிந்து கொண்டாயா? என்று பொருள். ஒரு விசயத்தைப் பார்த்து அறிந்து கொள்வதையும் பிக்ஹ் என்பர். ஏனெனில் அறிதலுக்கான மிக வலுவான வழிமுறை பார்வையாகும்.

திருக்குர்ஆனில் ஃபிக்ஹ் என்ற சொல் சுமார் இருபது தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் அதிகமானவை நிகழ்கால வினையாக, புரிந்து கொள்ளுதல் என்ற கருத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. குர்ஆனிய பிரயோகத்தில் புரிந்து கொள்ளுதல் என்பது அதன் நுணுக்கமான எல்லை வரை செல்கிறது. அதாவது மனதைப் புரிந்து கொள்வதையும் அது உள்ளடக்குகிறது. நபியவர்களுடைய காலத்தின் இறுதி வரை பிக்ஹ் என்பது புரிந்து கொள்ளுதல் என்ற கருத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் சமூகம் வளர்ச்சியடைந்த போது மனித உறவாடல்களில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. எனவே சட்ட வசனங்களைப் புரிந்து கொள்வதில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதை தலைவர்கள் உணரத் தொடங்கினார்கள். இந்தப் பின்புலத்தில்தான் அபூ மூஸா அல்அஷ்அரியை நோக்கிய உமருடைய பின்வரும் வார்த்தைகள் அமைந்தன: "உம்மிடத்தில் ஒரு வழக்கு வந்தால் அதனை நன்கு புரிந்து கொள்வீராக" என்றார். இந்த வார்த்தைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள புரிந்து கொள்ளுதல் என்பதற்கு வழமைக்கு மாற்றமான விளக்கத்தை விரிவுரையாளர்கள் வழங்கினார்கள். புரிந்து கொள்ளுதல் என்பது அல்லாஹ் ஒரு மனிதனுடைய உள்ளத்தில் போடுகின்ற ஓர் ஒளி என்றார்கள். இரு வகையான விளக்கங்கள் இன்றி யாரும் ஒரு சட்டத் தீர்ப்பை வழங்க முடியாது. முதலாவது, நடைமுறையை விளங்கிக் கொள்ளுதல், அதாவது நிகழ்ந்துள்ள பிரச்சினை என்ன? அதன் பரிமாணம், சாதக பாதகங்கள் போன்றவற்றை அறிவதை இது குறிக்கின்றது. இரண்டாவது, நிகழ்வுக்கான சட்டத்தை விளங்கிக் கொள்ளுதல், அதாவது திருக்குர்ஆனிலோ சுன்னாவிலோ இந்த நிகழ்வு குறித்த இறைவனின் தீர்ப்பு என்னவென்பதை விளங்கிக் கொள்ளுதல்.

பின்னர் ஒன்று மற்றொன்றில் பயன்படுத்தப்பட வேண்டும். அறிஞன் என்பவன் நடைமுறையை விளங்கிக் கொள்வதன் ஊடாக இறை சட்டத்தை அடைந்து கொள்பவனாவான் என்றார்கள்.

பிக்ஹின் (புரிந்துகொள்வதன்) படித்தரங்கள் பின்வருமாறு அமையும்: முதலில் வாசிப்பு பிறகு அறிதல் பிறகு அறிந்ததன் பின்னர் புரிந்துகொள்ளுதல் அல்லது அறிதலோடு புரிந்துகொள்ளுதல். இமாம் தபரி பின்வரும் குர்ஆன் வசனத்துக்கான விளக்கத்தில் இந்த படிமுறை ஒழுங்கை தெளிவுபடுத்தியுள்ளார்: "தான் நாடியவர்களுக்கு அவன் ஞானம் வழங்குகின்றான். ஞானம் கொடுக்கப்பட்டவர் ஏராளமான நன்மைகள் கொடுக்கப்பட்டவராவார். இதனை அறிவுடையவர்கள் தவிர வேறு எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை" (பகரா: 269). ஞானம் என்ற சொல்லை தெளிவுபடுத்துவதற்காக அவர் அதில் பல்வேறு கருத்துகளைக் கொண்டு வந்துள்ளார். அவற்றுள், ஹிக்மத் என்பது குர்ஆனும் அதனை விளங்கிக் கொள்ளு தலும் அல்லது குர்ஆனுடைய விளக்கம் அல்லது வேதமும் அதனை விளங்குதலும் அல்லது திருக்குர்ஆனும் அறிதலும் புரிந்து கொள்ளுதலும் போன்ற விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு இறுதியாகப் பயன்படுத்தப்பட்ட அறிதல் (இல்ம்) என்ற சொல் குர்ஆனுடன் இணைத்துப் பயன்படுத்தப்படும்போது ஹதீஸ் என்ற கருத்தைத் தருகின்றது. எனவே பிக்ஹ் என்பது திருக்குர்ஆனையும் சுன்னாவையும் புரிந்துகொள்வதாகும்.

ஃபிக்ஹ் என்ற சொல்லுக்குரிய மேற்குறித்த விளக்கங்களை அதன் மொழிக் கருத்துக்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இரண்டும் ஒரே திசையில் பயணிப்பதைக் காணலாம். மொழிக் கருத்தின் வளர்ச்சிக்கு சமமானதாக சமூகப் பொருள்கோடலின் வளர்ச்சியையும் அவதானிக்க முடிகின்றது. பிக்ஹ் என்பது புத்தி சாதுரியம், ஒன்றை திறன்பட நிறைவேற்றுதல் போன்ற எல்லை வரை அதன் பொருள்கோடல் வளர்ந்திருக்கிறது. மக்களின் செயல்பாடுகளுக்கு மார்க்க விளக்கம் வழங்கியவர்களையும் வரலாற்றில் பல்வேறு படித்தரங்களில் அடையாளப்படுத்தியிருக்கின்றார்கள்.

- 'அல்குர்ராஃ' என்று அழைக்கப்பட்டவர்கள்: இவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இறை வசனங்களை புரிந்து வாசிப் பவர்கள்.

- 'அல்உலமா' என்று அழைக்கப்பட்டவர்கள்: இவர்கள் அறிவிப்பு களை அதிகமாக அறிந்து கொண்டவர்கள். திருக்குர்ஆனை அறிவிப்புகளைக் கொண்டு புரிந்து கொள்பவர்கள்.

- ‘அல்புகஹாஃ’ என்று அழைக்கப்பட்டவர்கள்: இவர்கள் இறை வசனங்களை ஆழ்ந்து நோக்குபவர்கள், அவற்றை பகுத்தறிவுடன் விளங்கிக் கொண்டவர்கள்.

பிக்ஹ் என்ற பிரயோகம் ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டு வரை இன்று நம்முடைய பிரயோகத்தில் இருக்கும் கருத்தில் பயன் படுத்தப்படவில்லை. இமாம் அபூ ஹனீபா (மரணம் ஹி.150), ஒரு விசயத்தின் சாதகமான, எதிரான பக்கங்களுடன் அதனைப் பற்றிய முழுமையான அறிவைப் பெற்றுக் கொள்வதை பிக்ஹ் என்றார். அதாவது அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கு வழங்கும் ஞானம். இது நம்பிக்கை, ஒழுக்கம், செயல்பாடு ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய முழுமையான அறிவு என்றார். இமாம் மாலிக்குடைய காலத்திலும் இன்று நாம் நோக்குவது போன்று செயல்பாட்டுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக மட்டுமே பிக்ஹ் நோக்கப்படவில்லை. அதனை விடவும் விசாலமான பொருளிலேயே அவரும் ஃபிக்ஹைப் பார்த்திருக்கிறார். ஃபிக்ஹை செயற்பாட்டுப் பகுதியுடன் மாத்திரம் சுருக்கி நோக்குவது அடுத்த கட்டமாகவே நிகழ்ந்திருக்கின்றது. அதாவது, கலைச் சொல்லாக்கம், கலைகளை வேறுபடுத்தல் போன்ற விவகாரங்களில் கவனம் செலுத்திய ஒரு பரம்பரையினரிடத்திலேயே இது நடைபெற்றிருக்கின்றது. இவை போன்ற விவகாரங்களில் ஹிஜாஸ் பிரதேசத்தவர்கள் ஈடுபாடு காட்டியது குறைவு. ஈராக் பிரதேசமே இதற்கான மிகவும் பொருத்தமான சூழலாகக் காணப் பட்டது. பிக்ஹ் என்பது செயல்பாட்டுப் பகுதி தொடர்பான இறைச்சட்டங்கள் என்ற கருத்தில் நபித்தோழர்கள் காலத்தில் பயன்படுத்தப்படவில்லை. தாபிஈன்கள் காலகட்டத்தில், வேறுபட்ட பல கருத்துக்களில் ஃபிக்ஹின் பிரயோகம் இருந்திருக்கிறது. இமாம் மாலிக் வாழ்ந்த காலத்தினுடைய அறிவுப் பாரம்பரியத்தில் பிக்ஹ் என்பது வரையறுக்கப்பட்ட ஒரு கலைச் சொல்லாக இருக்கவில்லை. சுன்னாவை ஆழ்ந்து அறிதல் என்பதே அக்கால அறிஞர்களின் முக்கிய கவனமாக இருந்தது. இவை எவையும் இன்று நம்முடைய பிரயோகத்தில் இருக்கின்ற பிக்ஹ் என்ற கலைச் சொல்லின் கருத்தைப் பெறவில்லை.

## 2. அர்ரஃயி என்பதன் பொருள்கோடல் வளர்ச்சி

ரஃயி என்பது மொழியில் பௌதீக ரீதியாக கண்களால் பார்த்தல் என்ற கருத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. இதிலிருந்தே வேறு கருத்துக்களை நோக்கி நகர்கின்றது. ரஃயி என்பதன் பிரபல்யமான கருத்தான பகுத்தறிதல் என்பதும் கண்களால் பார்ப்பது போல் அறிவால்

பார்ப்பதாகும். கண்களால் பார்த்தல் எவ்வாறு தெளிவாக உள்ளதோ அதே போன்று தெளிவான ஒன்றைக் குறிக்கும் வகையில் பல்வேறு கருத்துக்களில் ரஃயி என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. கனவை ருஃயா என்பார்கள். இதுவும் ஒரு வகைப் பார்த்தல்தான். உள்ளத்தின் பார்வையைத்தான் நம்பிக்கை என்பார்கள். ரஃயி என்ற சொல் பல்வேறு மொழி வடிவங்களில் கையாளப்படுகின்றது. பெரும்பாலும் வினை வடிவத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. "நாம் உமக்குக் காட்டிய காட்சியை மக்களுக்கு சோதனையாகவே ஆக்கினோம்" (இஸ்ரா: 60) என்ற வசனம் விழிப்பு நிலையில் ஒன்றைப் பார்ப்பதைக் குறிக்கின்றது. திருக்குர்ஆன் ரஃயி என்ற சொல்லை கண்களால் பார்ப்பதைக் குறிக்கவே அதிகம் பயன்படுத்தியுள்ளது. மிகவும் அரிதாகவே நம்பிக்கையைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளது. "அல்லாஹ் உமக்குக் காட்டியதை வைத்து நீங்கள் மக்கள் மத்தியில் தீர்ப்பு வழங்குவதற்காக" (நிஸா: 105). இந்த வசனத்தில் ரஃயி என்பது நம்பிக்கையைக் குறிக்கலாம் என்பது ஓர் இடம்பாடான விளக்கமாகும். ரஃயி என்பதை திருக்குர்ஆன் பார்த்தல் அல்லது புரிந்துகொள்ளுதல் என்ற பொதுக் கருத்தில்தான் பயன்படுத்தியுள்ளது. இச்சொல் குர்ஆனில் குறைவாகவே கையாளப் பட்டுள்ளது.

ரஃயி என்பது ஒன்றை விளங்கிக் கொள்ளுதல், அதாவது, ஒரு விவகாரத்தின் சட்ட நிலைப்பாடு என்ன என்ற கேள்வியின்போது இது அவசியமாகிறது அல்லது ஒரு ஹதீஸின்மூலம் நாடப்படும் கருத்தை அறிய முற்படும்போது இது அவசியமாகின்றது. மக்களின் விவகாரங்களுக்கு மார்க்க விளக்கம் வழங்கியவர்கள் — வரலாற்று ஓட்டத்தில் தாம் கடந்து வந்த குர்ரா, உலமா, புகஹா என்ற எந்த நிலையில் இருந்தாலும் அவர்களின் அறிவுப் பின்புலம் எத்தகையதாக இருப்பினும் — அனைவருக்கும் இந்த ரஃயி தேவைப்பட்டிருக்கிறது. அவர்களின் அறிவுப் பின்புலம் வெறுமனே விளங்கி வாசித்தலாக இருப்பினும் அல்லது அறிவிப்புகளை அறிந்திருத்தலாக இருப்பினும் அல்லது அறிவிப்புகளைத் தர்க்க ரீதியாக விளங்கிக் கொள்வதாக இருப்பினும், எந்த நிலையிலும் இந்த ரஃயின் தேவை அங்கு இருக்கின்றது. அந்த வகையில் ரஃயி என்ற சொல்லின் சமூகப் பொருள்கோடல் வளர்ச்சியானது, மக்களின் விவகாரங்களுக்கு மார்க்க விளக்கம் வழங்குகின்றவர்களின் படிமுறை வளர்ச்சிக்கு ஏற்பவே நிகழ்ந்திருக்கின்றது. அதாவது குர்ரா, உலமா, ஃபுகஹா என்ற படிநிலைக்கு ஏற்ப ரஃயின் பொருள்கோடலும் வளர்ச்சியடைந்திருக்கிறது.

வரலாற்றில் குர்ராக்களைப் பற்றி நாம் அறிவோம். நபியவர்கள் விளக்கம் கூறாமல் மௌனம் சாதித்த இடங்களில் எல்லாம் அவர்கள் சுயமாய் விளங்க முற்பட்டார்கள். அதாவது ரஃயைப் பயன்படுத்தினார்கள். அவர்களே ஸகீபா பனீ ஸாஈதாவில் கருத்துப் பரிமாறினார்கள்; வாதிட்டார்கள்; அவர்களுடைய வாதங்களின் முடிவில் அபூபக்ர் (ரழி) கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டார். இதே போன்றுதான் மதமாற்ற விவகாரத்தின் போதும், அதற்கு என்ன செய்யலாம் என்று கருத்துப் பரிமாறினார்கள்; வாதிட்டார்கள். இவை ஒவ்வொன்றும் ஒரு நிகழ்வை, அது என்ன என்று புரிந்து கொள்ள முற்பட்டதுதானே? ஒரு இறை வசனத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்ற தேடல் அல்லவா? இவை போன்ற நிகழ்வுகளில் அவர்கள் ரஃயி (கருத்து) உள்ளவர்களிடம் கருத்து கேட்டார்கள். ஒரு மனிதனுடன் ரஃயீ என்ற வார்த்தையை இணைத்துக் கூறுவார்கள் எனில் அவரைக் கண்ணியப்படுத்துவதற்காகவே அவ்வாறு சொல்வார்கள். இதனால்தான் இப்னு அப்பாஸ் (ரழி) 'தூரஃயி' கருத்துடையவர் என்று அழைக்கப்பட்டார். சிலரது பெயர்கள் ரஃயுடன் இணைத்துக் கூறப்பட்டது, உதாரணமாக முகீரதுர் ரஃயி, ரபீஅதுர் ரஃயி. இந்த இணைப்பைப் பார்க்கும் போது, இங்கு ரஃயி என்பது சிக்கலான ஒரு விவகாரத்தில் சரியான விளக்கத்தைக் கண்டு கொள்வது என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கருதலாம். அதேபோன்று பிறகு வந்த காலங்களில் சில சட்ட அறிஞர்களின் பெயர்களுடன் ஹிலாலுர் ரஃயி, அதாவது கருத்தின் பிறை என்று இணைத்துக் கூறப்பட்டுள்ளது. இங்கேயும் சரியானதைப் பகுத்தறிதல் என்ற கருத்தே நாடப்பட்டுள்ளது. இந்தக் கருத்தில் நபித்தோழர்களிடமும் பிறகு வந்த தாபிஈன்களிடமும் ரஃயின் பிரயோகம் இருந்திருக்கின்றது. அதாவது ஒரு பிரச்சினையை அடையாளம் காண்பதையும் அதன் சட்டத்துக்கான மூலாதாரத்தை அறிந்து கொள்வதையும் அந்த சட்டத்தின் பிரயோக வடிவத்தைத் தெரிந்து கொள்வதையுமே ரஃயி என்ற சொல் உணர்த்துகிறது.

நபியவர்களுடைய சுன்னாவின் இருப்பிடமாக மதீனா இருந்தது. அங்கு வாழ்ந்த அறிஞர்கள் நபியவர்களின் சுன்னாவை ரஃயுடன் அணுகியே தீர்ப்பளித்திருக்கிறார்கள். ரஃயி என்பதற்கான மேற்குறித்த விளக்கத்தை வைத்துப் பார்க்கும்போது, இஸ்லாமிய உலகின் வேறு எந்த நகரத்துக்கும் முன்னரே ரஃயைப் பிரயோகித்த நகரமாக மதீனாவையே கருத முடிகின்றது. அங்கு ரஃயி என்பதை வைத்து எந்த ஒரு சட்ட அறிஞரும் ஏனையவர்களை விடவும் வேறுபட்டவர் என்று பார்க்கப்படவில்லை. இந்தப் பின்புலத்தில்தான் இமாம்

மாலிக் ரஃயி பற்றிக் கூறும்போது, ரஃயி, ஒரு ரஃயி மாத்திரமே (கருத்து, ஒரு கருத்து மாத்திரமே) என்றார்கள். இதன் காரணமாகவே இமாம் மாலிக்கும் ரஃயைப் பயன்படுத்திய ஒருவராகவே கருதப்படுகின்றார். இமாம் இப்னு குதைபா, இமாம் மாலிக்கை இந்த வகை இமாம்களுள் ஒருவராகவே வகைப்படுத்துகின்றார். இமாம் இப்னு ருஷ்தும் இமாம் மாலிக்கை ரஃயின், கியாஸின் அமீருல் முஃமினீன் என்று கருதியது இந்தப் பின்னணியில் இருந்துதான்.

குழுவாதங்களையும் மத்ஹப் வாதங்களையும் பிரிவினைகளையும் தவிர்த்து அறிவுபூர்வமாக நோக்கினால் ரஃயி என்பது இதுதான். இந்தக் கருத்திலான ரஃயி நபியவர்களிடமிருந்தும் நபித்தோழர் களிடமிருந்தும் தாபியீன்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்றது. இந்த ரஃயி மனிதர்களின் அறிவாளுமை வேறுபாட்டிற்கு ஏற்ப வேறுபடுகின்றது. ஒருவனுடைய அறிவு, கலாச்சார மரபுகள் வேறுபடுவதற்கு ஏற்ப வேறுபடுகின்றது, ஏனெனில் அந்த மரபு களின் பின்புலத்திலேயே அவனது புரிதல் மட்டமும் போக்கும் அமைகின்றன. இவையனைத்தும் சூழலில் பெரிய அளவில் தாக்கம் செலுத்துகின்றன.

### 3. நஸ் [இறைவசனம்] என்பதன் பொருள்கோடல் வளர்ச்சி

'நஸ்' என்பதன் மொழிக்கருத்து: 'நஸ்ஸ' என்ற சொல்லின் வினையடியாகவே 'நஸ்' என்ற சொல் வருகிறது. அறபுகளிடத்தில் இது பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்தப்படுகிறது.

1. உயர்ந்தது, இது பௌதீக, கருத்து ரீதியான இரு வகை உயர்வுகளையும் குறிக்கின்றது. ஹதீஸ் துறையாளர்கள், நபியவர்களுடன் ஒரு ஹதீஸைத் தொடர்புபடுத்துவதனைக் குறிக்க நஸ் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்கள். அவர்கள் நஸ்ஸுல் ஹதீஸ் என்று பயன்படுத்தினால், அது இந்தக் கருத்தையே தருகின்றது. இமாம் அம்ர் இப்னு தீனார், இமாம் ஸுஹ்ரியைப் புகழ்ந்து பேசியபோது, இமாம் ஸுஹ்ரியை விட ஹதீஸ்களை அறிவிப்புச் செய்த சிறந்த மனிதர் யாரையும் நான் காணவில்லை என்றார். இங்கு அதற்கு அவர் பயன்படுத்திய வார்த்தை 'அனஸ்ஸுல் ஹதீஸ்' என்பதாகும்.

2. ஒன்றை பிரிதொன்றின் மீது வைத்தல்.

3. ஒரு விசயத்தின் எல்லை அல்லது முடிவு என்ற கருத்திலும் பயன்படுத்தியுள்ளார்கள்.

4. சிரமமான கேள்வி, நஸ்ஸர் ரஜுலு நஸ்ஸன் என்ற வசனம், கேள்வி கேட்பவர், கேட்கப்படுகின்றவரை கடுமையான சிரமத்திற்குள்ளாக்கினார் என்ற கருத்தைத் தருகின்றது.
5. ஒரு விசயத்தைக் குறிப்பிட்டுக் கூறுதல்.
6. இடை நிறுத்தம் செய்து அறிந்துகொள்ளுதல்
7. ஒரு விசயத்தை வெளிப்படுத்துதல்.
8. இவை, அறபுகள் நஸ் என்ற சொல்லை பயன்படுத்திய வேறுபட்ட கருத்துக்களாகும். இவற்றை மொத்தமாகத் தொகுத்து நோக்கினால் உயர்வு, மேலாண்மை என்று கூறலாம்.

## 2. இமாம் ஷாபியிடத்தில் நஸ் என்பதன் பொருள்

இமாம் ஷாஃபிஈ தம்முடைய 'ரிஸாலா' என்ற நூலில் ஐம்பத்து ஆறாவது பத்தியில் கூறுகின்றார்: "நஸ் இல்லாத விவகாரம் ஒன்றில் நபியவர்கள் சட்டம் உருவாக்கவில்லை." இங்கு நஸ் என்பது குர்ஆனில் குறிப்பிடப்பட்ட ஒன்றைக் குறிக்கின்றது. தொன்னூற்றி ஏழாவது பத்தியில் "குர்ஆனில் குறிப்பிடப்பட்ட வாரிசுரிமைச் சட்டங்கள்..." என்கிறார். நூறாவது பத்தியில் "குர்ஆனில் குறிப்பிடப்படாத ஆனால் நபியவர்களின் சுன்னாவில் குறிப்பிடப்பட்டவை..." என்கிறார். இங்கு குறித்த ஒரு வகை தொடர்பாகப் பேசுகிறார். அது, குர்ஆனில் குறிப்பிடப்படவில்லை, ஆனால் சுன்னாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருநூற்றி தொன்னூற்றி ஏழாவது பத்தியில், "நபியவர்களின் சுன்னாக்கள் இரு வடிவங்களில் காணப்படும். ஒன்று, குர்ஆனில் குறிப்பிடப்பட்ட ஒரு விவகாரத்தை அவ்வாறே நபியவர்கள் செயல்படுத்தியது. இரண்டு, குர்ஆனில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட ஒன்றை நபியவர்கள் தெளிவுபடுத்தியது. இந்த இரண்டு வடிவங்களிலும் குர்ஆனே அவர்களின் செயலாக இருந்துள்ளது. இங்கு சுருக்கமாகச் சொல்லப்பட்டவை என்பது தெளிவற்றவை என்ற பொருளைத் தருவதில்லை. மாறாக கிளை அம்சங்கள், நடைமுறைகள் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட முடியுமான ஒரு பொது விதி என்ற கருத்தே நாடப்படுகிறது. அதாவது சுருக்கமாகச் சொல்லப்பட்டவை என்பது விரிவான கிளைப்பகுதிகள், நடைமுறைகளைத் தவிர்த்துச் சொல்லப்பட்ட ஒன்றைக் குறிக்கின்றது. இந்த வகையான அம்சங்களை சுன்னா தெளிவுபடுத்தியுள்ளது. சுன்னாவின் இந்த தெளிவுபடுத்தலை நஸ் என்பதில்லை. மாறாக அது நஸ்ஸைத் தெளிவுபடுத்தக்கூடியதாகும்.

நஸ் என்பதன் பொருள்கோடலைப் பேசும்போது, குறிப்பாக இமாம் ஷாபியின் பொருள்கோடலை இந்த இடத்தில் கொண்டு வருவதற்கான காரணம், இமாம் ஷாஃபிஈமொழியில் ஒரு மூலாதாரமாகப் பார்க்கப்பட்டவர். அதே சமயம் அவர்தான் உஸூலுல் பிக்ஹின் நிறுவனராகவும் இருக்கிறார். ஆஹாதான ஹதீஸ்களின் ஆதாரபூர்வத் தன்மையை உறுதிப்படுத்திய இமாம் இவர்தாம் என்பது ஆரம்ப கால, நவீன அறிஞர்கள் அனைவரும் உடன்படும் ஒரு கருத்தாகும். தவிர, சட்டவாக்கத்தில் சுன்னாவுக்கு குர்ஆனுக்குச் சமானமான அங்கீகாரத்தையும் வழங்கினார். இங்கு நாம் குறிப்பிட்டுள்ள அவரது வார்த்தைகள் அனைத்தும் நஸ் என்பது குர்ஆனை மட்டுமே குறிக்கும் என்பதனை சந்தேகமின்றி தெளிவுபடுத்துகிறது. அதே போன்று ஆதாரபூர்வமான சுன்னா என்பது, அதற்கு கண்டிப்பாக குர்ஆனில் ஒரு ஆதாரம் இருக்க வேண்டும் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சுன்னா என்பது எந்த சமயத்திலும் குர்ஆனைப் பின்பற்றக்கூடியதும் அதன் திசையில் பயணிக்கக்கூடியதும் ஆகும் என்பது அவரது வார்த்தைகளில் புலப்படும் உண்மையாகும்.

## 3. பொது வழக்கிலும் சட்டவியல், கோட்பாட்டுவியல் மொழியிலும் நஸ் என்பதன் பொருள்

இமாம்கள் பொருள் புரியக் கூடிய ஒவ்வொரு வார்த்தைக்கும் நஸ் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். ஏனெனில் நஸ்ஸின் பொருளைப் புரிவது கட்டாயமானது. உண்மையில் நஸ் என்பது பொருள் புரியக்கூடியது என்பது தவிர அதனைத் தாண்டிய மற்றொரு விசயத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. அதாவது, சம்பந்தப்பட்ட ஒரு பொருளையே அந்த வார்த்தை உணர்த்தக்கூடியதாக இருக்க வேண்டும்; வேறு ஒரு கருத்துக்கு வாய்ப்புடையதாக அது இருக்கக் கூடாது. சட்டவியலாளர்களின் மொழியில், "இது நஸ்ஸின் ஊடாக நிறுவப்பட்ட சட்டம்" என்று அவர்கள் சொன்னால், குறித்த சட்டத்துக்கான ஆதாரம் குர்ஆனில் அல்லது சுன்னாவில் அதிலும் குறிப்பாக நபியவர்களுடன் சம்பந்தப்பட்ட சுன்னாவில் காணப்படுகின்றது என்று பொருளாகும். அவர்கள் குர்ஆனுடைய நஸ்ஸையும் சுன்னாவின் விளக்கவுரையையும் நஸ் என்ற படித்தரத்தில் இணைத்து நோக்கும்போது, நடைமுறைப்படுத்தும் செயல்பாடுகளை தெளிவுபடுத்தும் நஸ்ஸாகவே சுன்னாவைக் கையாளுவார்கள். அந்த வகையில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஒன்று என்ற அடிப்படையிலேயே அவர்கள் சுன்னாவை நஸ் என்று அழைத்தார்கள்.

சட்டக் கோட்பாட்டாளர்களின் மொழியின்படி, குறிப்பாக அவர்களில் அதிகம் கோட்பாட்டுவாதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட ஷாஃபி மரபினர், நஸ் என்பதை, சம்பந்தப்பட்ட ஒரு சட்டத்தை, மாற்று நிலைப்பாடுகளுக்கு எந்த வழியும் இன்றி தெளிவாக எடுத்துக்காட்டக் கூடிய ஒரு சொல் என்று வரையறுத்தனர். உதாரணமாக, "முஹம்மதுஅல்லாஹ்வின் தூதர்" (பத்ஹ்: 29) என்ற வசனம், முஹம்மது (ஸல்) நபியவர்களுக்குத் தூதுத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்பதை, வேறு எந்த பொருளும் இன்றி உறுதியாக முன்வைக்கிறது. சட்டக் கோட்பாட்டாளர்களில் அதிகம் நடைமுறைவாதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட ஹனஃபி மரபினர், நஸ் என்பதை குறித்ததொரு சொல்லுடன் இணைந்து வரக்கூடிய மேலதிகக் காரணியின் மூலம் கிடைக்கப் பெறும் போதிய தெளிவு என்கிறார்கள். அந்த மேலதிகக் காரணியின்றி தனித்து அந்த சொல்லின் ஊடாக மாத்திரம் அந்தத் தெளிவு கிடைக்கப் பெற மாட்டாது. உதாரணமாக, "அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கினான் வட்டியை ஹராமாக்கினான்" (பகரா: 275). இந்த வசனத்தில் நஸ் என்பது வியாபாரத்தை அனுமதித்து வட்டியைத் தடை செய்து இரண்டையும் வேறுபடுத்திக் காட்டியதாகும். வேறுபடுத்திக் காட்டுவதே இந்த வசனத்தின் பிரதான பொருள் என்பதை, இதே வசனத் தொடரில் வந்துள்ள மற்றொரு வசனத்தில் இருந்து புரிந்து கொள்ளலாம். "ஏனெனில் அவர்கள் கூறினார்கள், வியாபாரம் வட்டியைப் போன்றதாகும்" (பகரா: 275). இந்த வசனத்திலிருந்து, வியாபாரமும் வட்டியும் ஒன்றல்ல, வெவ்வேறானவை என்பதை உறுதிப்படுத்துவதே மேற்கூறப்பட்ட வசனத்தின் நோக்கம் என்பது உறுதியாகிறது. குறித்த வசனம் வெளிப்படையாக வியாபாரத்தை அனுமதிக்கிறது, வட்டியைத் தடை செய்கிறது. ஆனால் அந்த மேலதிகக் காரணி, ஒரு கூடுதல் தெளிவைத் தருகிறது. அதாவது, குறித்த வசனத்தின் நோக்கம், வியாபாரத்தையும் வட்டியையும் அனுமதித்தல், தடுத்தல் என்பதைவிட இரண்டும் வெவ்வேறானவை என்பதை உறுதிப்படுத்துவதாகும் என்கின்றார்கள்.

இங்கு இரண்டு மத்ஹபினரும் தங்களின் நிலைப்பாட்டை நியாயப் படுத்தவே முற்பட்டுள்ளனர். ஆனால் நஸ் என்பது அதன் மொழிக் கருத்தின் அடிப்படையில் நோக்கினாலும் இமாம் ஷாபியுடைய பிரயோகத்தின் அடிப்படையில் நோக்கினாலும் அது குர்ஆனை மட்டுமே குறிக்கிறது. அதுதான் மிக உயர்வானதும் தெளிவானதும் ஆகும். அதுதான் இறுதி இலக்கு. நஸ் என்ற பெயரை குர்ஆனுடன் வேறு எதுவும் பங்கு போட்டுக் கொள்ள முடியாது. சட்டக்

*கோட்பாட்டாளர்கள், நஸ் என்ற கலைச்சொல்லை குர்ஆனுக்கு மட்டுமின்றி ஏனையவற்றுக்கும் வழங்கும் நடைமுறையைத் தவிர்த்து அவற்றுக்கு வேறு கலைச் சொற்களை வழங்குவதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு இருந்தது. அந்த இடத்தில் அவர்கள் செய்த தவறு பிற்காலத்தில் பல்வேறு சிந்தனைச் சிக்கல்களையும் குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான தொடர்பில் பல தெளிவின்மைகளையும் ஏற்படுத்தியது. தற்காலத்தில் Text என்ற சொல்லின் மொழிபெயர்ப்பாக நஸ்ஸை மாற்றிவிட்டார்கள். அதன் மூலம் எந்தவொரு வார்த்தையும் வசனமும் நஸ்ஸாகக் கருதப்பட முடியும் என்ற நிலைக்கு வந்து விட்டது.*

*மேற்கண்டவற்றின் சாராம்சம் இதுதான்: நஸ் என்ற சொல்லாடல் குர்ஆனுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். இதில் வேறு எதுவும் பங்கு போடக் கூடாது. சுன்னாவைப் பொருத்தவரை, அது, அவசியப்படும் அளவுக்கு நஸ்ஸைத் தெளிவுபடுத்தக்கூடியது. நஸ்ஸுக்குக் கட்டுப்பட்டது, நஸ்ஸின் எல்லையில் சுழலக் கூடியது. நஸ்ஸைவிட்டு ஒரு போதும் விலகிச் செல்லாது. அவ்வாறு விலகிச் செல்ல முடியும் என்பதற்கு குர்ஆனிலோ சுன்னாவிலோ எந்த ஆதாரமும் இல்லை. சுன்னா என்ற பதத்தை அல்லாஹ்வின் தூதரும் நபித்தோழர்களும் புரிந்துகொண்ட கருத்துக்கு மாற்றமாக ஒவ்வொரு மத்ஹபுக்கும், சிந்தனைப் பிரிவுக்கும் ஏற்றவாறு வெவ்வேறு கருத்துக்களில் பிற்காலங்களில் மாற்றிக் கொண்டதனால் தான் சுன்னா என்பது நமக்கு வழிகாட்டி ஒற்றுமைப்படுத்தும் நபிவழி மரபாக எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பதிலாக நம்மைப் பிளவுபடுத்தும் குறுங்குழுவாதங்களுக்குத் தள்ளிவிடும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.*

பகுதி மூன்று

# திருக்குர்ஆன் சட்ட உருவாக்க மூலாதாரம்; சுன்னா என்பது செயல்முறை விளக்கம்

நபியவர்கள் தம் சமூகத்தின் மீது மிகுந்த அக்கறையும் அன்பும் கொண்டிருந்தார்கள். அதனால்தான் திருக்குர்ஆனுடன் தம்முடைய வார்த்தைகள் ஒன்று கலப்பதைத் தடுத்தார்கள். அவர்களுக்குப் பின்னர் நல்லாட்சி புரிந்த கலீபாக்கள் அனைவரும் இந்தக் கட்டளையைத் தவறாமல் கடைபிடித்தார்கள். குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான தொடர்பை அல்லாஹ் மிக நுணுக்க மாக வரைந்திருக்கின்றான். நபியவர்களும் அதனைத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். சட்ட உருவாக்க மூலாதாரம் அல்லது அவற்றை வெளிப்படுத்தும் மூலம் திருக்குர்ஆன் மட்டுமே. திருக்குர்ஆன் அனைத்தையும் தெளிவுபடுத்தக்கூடியது என்பது இந்தக் கருத்தை வலியுறுத்துகின்றது. திருக்குர்ஆன் பொதுவான அடிப்படைகளை உருவாக்குகின்றது. தூதர்கள் அனைவரும் கொண்டு வந்த மார்க்கத்தின் மாறா தன்மைகளை, கிளை அம்சங்களையும் விரிவான அம்சங்களை உள்ளடக்கிய பொதுவான அடித்தளங்களை தெளிவு படுத்துகிறது. அவை மனித வாழ்வுக்கு அவசியமானவை, அதன் தேவைகள், அதனை முழுமைப்படுத்தக்கூடியவை என அனைத்துடனும் சம்பந்தப்பட்டவை.

திருக்குர்ஆன் சட்ட உருவாக்க மூலாதாரம் என்பதில் முஸ்லிம்களில் யாரும் மாற்றுக் கருத்து கொள்ளவில்லை. சுன்னாவும் தனித்ததொரு சட்ட உருவாக்க மூலாதாரமாக இருக்க முடியும் என்றவர்களும் இதில் உள்ளடக்கம். ஏனெனில் அவர்கள் சொல்லும் விசயங்களும் முடிவில் குர்ஆனின் பொது விதிகளுக்குள் அடங்கி விடுகின்றன. அதே சமயம் குர்ஆனே சட்டங்களை வெளிப்படுத்தும் மூலம். சட்ட உருவாக்கம், சட்ட வெளிப்பாடு ஆகிய இரு வரையறுக்கப்பட்ட செயல்முறைகளும் “சட்டமியற்றும்

அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது" என்ற திருக்குர்ஆன் வசனத்தின் செயல் வடிவமாகவே காணப்படுகின்றன. மறுபுறத்தில் திருக்குர்ஆன் தன்னை அனைத்தையும் தெளிவுபடுத்தக்கூடியது என்றும் அறிமுகப்படுத்தியுள்ளது. "ஒவ்வொரு விசயத்தையும் தெளிவுபடுத்தக்கூடியதாகவே நாம் உங்களுக்கு வேதத்தை இறக்கி வைத்தோம்" (நஹ்ல்: 89).

நபியவர்கள் குர்ஆனை ஓதுகிறார்கள், அதனைப் பின்பற்றுகிறார்கள், அதனை மக்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள், அதன் போதனை களை அவர்களுக்கு எடுத்துரைக்கிறார்கள், குர்ஆனை ஒரு வாழ்வு முறையாக மாற்றுவது எவ்வாறு, நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நடவடிக்கையையும் சிந்தனையையும் பண்பாட்டையும் உறவையும் ஒழுங்கமைக்கும் ஒரு முறையாக அதனை ஆக்கிக் கொள்வது எவ்வாறு என்பதை கற்றுக் கொடுக்கிறார்கள். எனவே நபியவர்களின் சுன்னா என்று நாம் எதனைச் சொல்வோம் எனில் உண்மையில், அது ஒரு பின்பற்றுதல்; தெளிவுபடுத்துதல்; செயல்படுத்துதல்; குர்ஆனுக்கான நபியவர்களின் செயல்பாட்டு வடிவம். இதனைத்தான் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: "உங்கள் இறைவன் மீது சத்தியமாக, அவர்கள் தங்களுக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உங்களை நடுவராக ஏற்று, பின்னர் நீங்கள் வழங்கிய தீர்ப்பில் மனதில் எந்த சங்கடமும் இல்லாமல் முழுமையாகக் கட்டுப்படாத வரை அவர்கள் நம்பிக்கையாளர்களாக மாட்டார்கள்" (நிஸா: 65). ஏனெனில் நபியவர்களின் தீர்ப்பு, குர்ஆனின் தீர்ப்பாகும். இந்தக் கருத்தை திருக்குர்ஆன் இன்னொரு இடத்திலும் உறுதிப்படுத்தியுள்ளது: "அல்லாஹ் இறக்கியவற்றைக் கொண்டு அவர்களுக்கு மத்தியில் தீர்ப்புக் கூறுவீராக. உம்மிடம் வந்துள்ள சத்தியத்தை விட்டுவிட்டு அவர்களின் மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம். உங்களில் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒரு சட்ட ஒழுங்கையும் வாழ்வு முறையையும் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அல்லாஹ் நாடியிருந்தால் உங்களை ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான்" (மாயிதா: 48).

## முதலாவது: வஹியின் பொருள்

வஹியின் பொருளை வரையறை செய்வது, சுன்னாவின் பொருளையும் குர்ஆனுடனான அதன் தொடர்பையும் வரையறை செய்வதில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. எனவே வஹியை மிக நுணுக்கமாக வரையறுப்பது முக்கியம். அப்போதுதான்

வஹியை வரையறை செய்வதில் சிலர் மிகவும் நெகிழ்வாக நடந்து கொண்டதனால் உருவான தவறுகளில் இருந்து நாம் மீண்டு வர முடியும். உதாரணமாக, சிலர் வஹி என்ற எண்ணக்கருவுக்குள் நபியவர்களிடமிருந்து வந்த குர்ஆன், சுன்னா நபியவர்களுக்குப் பின்னால் வந்தவர்களின் செய்திகள் உட்பட பலவற்றை இணைத்தார்கள். ஆனால் அவர்கள் அதில், நபியவர்கள்கூட அல்லாஹ் ஓதிக்காட்டியதை அவ்வாறே பின்பற்றி மக்களுக்கும் அவ்வாறே ஓதிக் காட்டுவதைத் தவிர வேறு எந்த மாற்றங்களும் செய்ய அதிகாரம் பெற்றவர் அல்ல என்ற பகுதியை தெளிவாக வேறுபடுத்தி வரையறை செய்யவில்லை. இந்தப் பகுதியையே சட்டக் கோட்பாட்டாளர்கள் பின்வருமாறு வரையறுத்தார்கள்: “ஓதுவது வணக்கமாகக் கருதப்படும் அல்லாஹ்வின் வார்த்தைகள், அதன் மிகச் சிறிய சூராகூட மனிதர்களுக்கான நிலையான சவாலாகவே இருக்கும்”.

நாம் அதனை பின்வருமாறு வரையறுக்கிறோம்: அல்லாஹ் தன் அடியாரான தூதரின் உள்ளத்தில் அருளிய வேதம் அது ஃபாத்திஹா என்ற அத்தியாயத்துடன் ஆரம்பித்து அந்நாஸ் என்ற அத்தியாயத்துடன் நிறைவடைகிறது. மொத்தமாக அவை 114 அத்தியாயங்களாகும். அவை தவிர நபியவர்களிடமிருந்து வந்துள்ள வார்த்தைகள், செயல்பாடுகள், அங்கீகாரங்கள் ஆகியவை வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப வெளிப்பட்டவை என்பதில் அனைவரும் உடன்படுகிறார்கள். அவர்களின் செயல்பாடுகளில் சில மனித இயல்பு சார்ந்தவை; சில குர்அனுக்கான விளக்கமாக அமைந்தவை; சில நபியவர்கள் வகித்த பாத்திரங்களுக்கு ஏற்ப வெளிப்பட்டவை. உதாரணமாக, தலைமைத்துவம், நீதித்துறை, ஃபத்வா, கற்பித்தல், சட்டவாக்கம் போன்றவை. நபியவர்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஒரே வகையானவை அல்ல. அவற்றுள் சில சூழல் சார்ந்தவை; சில நபியவர்களுக்கும் துறைசார்ந்தவர்களுக்கும் உரியவை; இன்னும் சில குர்ஆனை மையப்படுத்திய எல்லாக் காலத்துக்குமான சட்டவாக்கமாக அமைபவை. இந்த வேறுபாடு சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை எனில் விவாதங்கள் என்றும் ஓயாது; சிக்கல்கள் என்றும் தீராது. குர்ஆனிலும் சுன்னாவிலும் இறையியல் கலையிலும் வஹி என்ற எண்ணக்கரு எவ்வாறு வரையறை செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் இங்கு தெளிவுபடுத்தி விட்டோம் எனில் இந்த சிக்கலின் பெரியதொரு பகுதியை நாம் தீர்த்து விடுகின்றோம். பின்னர் அதனையொட்டி ஏனைய சிக்கல்களும் தீர்க்கப்பட முடியும்.

1. வஹி என்றால் என்ன?

*இமாம் ராகிப் அல்இஸ்பஹானி கூறுகின்றார்: வஹி என்பது மொழியில் வேகமானதொரு சைகையைக் குறிக்கிறது. வேகம் என்ற கருத்து அதனுள் உள்ளடங்கியிருப்பதாலேயே, குறியீடுகளால் சொல்லப்படும் ஒரு செய்திக்கு 'வஹியின் விசயம்' என்பார்கள், அது வார்த்தைகள் அற்ற ஒரு சப்தமாக மட்டும் இருக்கலாம் அல்லது எழுத்துக்களாலோ உடல் உறுப்புக்களாலோ வெளிப்படுத்தப்படும் ஒரு சைகையாகவும் இருக்கலாம். இந்தக் கருத்தை குர்ஆனின் பின்வரும் வசனம் உணர்த்துகின்றது: "அவர் மிஹ்ராபிலிருந்து மக்களிடம் வந்தார். காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வைத் துதிக்குமாறு அவர்களுக்கு சைகை செய்தார்" (மர்யம்: 11). வஹி என்பது குறியீடுகளால் உணர்த்துதல் என்றும் பொருள் வழங்கப்படுகின்றது. "இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும் மனித, ஜின் இனங்களின் ஷைத்தான்களை எதிரிகளாக ஆக்கியிருந்தோம். அவர்களில் சிலர் சிலரை ஏமாற்றும் நோக்கில் அழகிய வார்த்தைகளை வஹியாகச் சொல்கின்றார்கள்" (அன்ஆம்: 112). "நிச்சயமாக ஷைத்தான்கள் தமது நண்பர்களுக்கு வஹி சொல்கின்றனர்" (அன்ஆம்: 121) இந்த இரு வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள வஹி என்ற வார்த்தை ஷைத்தானின் ஊசலாட்டம் என்ற கருத்திலேயே விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்து "பதுங்கியிருந்து ஊசலாட்டம் புரிபவனின் தீங்கிலிருந்து" (நாஸ்: 4) என்ற வசனத்திலிருந்து புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது.*

*அல்லாஹ்வின் தூதர்கள், நபிமார்களின் உள்ளத்தில் போடப்படும் வார்த்தைக்கும் வஹி எனப்படுகிறது. இது பல வடிவங்களில் நடைபெறுகிறது. கண்களால் பார்க்க முடியுமான, பேசுவதைக் கேட்க முடியுமான ஒரு தூதரின் வழியாக, கண்களால் பார்க்க முடியாத ஓர் ஓசை மட்டுமே கேட்கப்படுவதன் வழியாக, தேனீக்களுக்கு வழங்கப்பட்டதுபோன்று வசப்படுத்தித் தருவதன் ஊடாக, கனவின் ஊடாக, உள்ளுணர்வின் வழியாக இப்படி பல வடிவங்களில் இது நிகழ்கிறது.*

இல்ஹாம் என்பதன் மொழிக் கருத்து

*அல்லாஹ்விடமிருந்து அல்லது ஜிப்ரீலிடமிருந்து ஓர் உதிப்பின் ஊடாக சிந்தையில் போடப்படும் ஒரு விசயம். சிலர், அது உள்ளத்தில் போடப்படும் ஒரு விசயம் என்றனர். அதன்மூலம் உள்ளம் அமைதி பெறும். அல்லாஹ் அதனை தான் தெரிவு*

செய்தவர்களுக்கு மட்டுமே வழங்குவான். அவர்கள் அந்த விசயத்தை அல்லாஹ்விடம் கேட்பார்கள். அவன் அதனை அவர்களுக்கு வழங்குவான். இதனையே குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: "எனவே, அவன் அதற்கு அதன் நன்மையையும் தீமையையும் உணர்த்தினான்" (ஷம்ஸ்: 8). நபியவர்கள், "ஜிப்ரீல் என்னுடைய சிந்தையில் ஊதினார்" என்றார்கள்.

இமாம் இப்னு ஸீனா இதனை பின்வருமாறு வரையறுக்கிறார்: "தூய்மையும் அறிவியல் கோட்பாடுகளுடன் உறவும் கொண்ட ஒரு மனிதனது உள்ளத்தில், ஓர் அறிவு மூலத்திலிருந்து கிடைக்கப் பெறும் ஒரு விசயம்." 'ஜம்உல் ஜவாமிஃ' என்னும் நூலின் ஆசிரியர் இதனை பின்வருமாறு வரையறுக்கிறார்: "உள்ளத்தைக் குளிர்விக்கக் கூடிய ஒரு விசயம் அதில் போடப்படுதல். அதனை தான் தெரிவு செய்கின்றவர்களுக்கு மட்டுமே அல்லாஹ் வழங்குவான். இது ஓர் ஆதாரமாகக் கருதப்பட மாட்டாது, ஏனெனில் குறையுடைய எந்த எண்ணங்களும் நம்பத்தகுந்தவை அல்ல". சூஃபியாக்கள் இதனை, "சிந்தையில் ஊதப்படும் ஓர் அறிவு, அது ஆய்வின் அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடியாதது" என்று வரையறுக்கிறார்கள். இமாம் முஹம்மதுஅப்துஹு கூறுகிறார்: "உள்ளம் உறுதியாக நம்பக்கூடிய ஓர் உணர்வு. அது நம்மை வழிநடத்தி வேண்டிய இடத்திற்கு எடுத்துச் செல்லும். ஆனால் அது எங்கிருந்து வந்தது என்பதை உணர முடியாதிருக்கும். பசி, தாகம், கவலை, சந்தோசம் போன்ற ஓர் உணர்வு அது." இமாம் ரஷீத் ரிழா, வஹியையும் இல்ஹாமையும் வேறுபடுத்திப் பார்க்கின்றார். "அதனை சிலர் சுய வஹி என்பார்கள். இதனையே தத்துவவியலாளர்கள், "உயர் மன நிலையொன்றிலிருந்து ஊற்றெடுக்கும் உணர்வு" என்றார்கள். அவர்களும் நாங்களும் வேறுபடும் இடம் எதுவெனில் ஷரீஆவில் வஹி என்பது உள்ளத்தின் உள்ளிருந்து தோன்றும் ஒரு விசயமல்ல, அது வானத்திலிருந்து நபியின் உள்ளத்தில் இறங்கும் ஒரு விசயம். ஒரு வானவரின் ஊடாகவும் அது நடைபெறுகிறது. திருக்குர்ஆன் கூறுகிறது: "நிச்சயமாக இது அகிலங்களின் இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதாகும். ஜிப்ரீல் இதனைக் கொண்டு வந்தார். நீங்கள் எச்சரிக்கை செய்பவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக தெளிவான அறபு மொழியில் இது இறக்கப்பட்டுள்ளது" (ஷுஅரா: 192-195). ஆனால் இல்ஹாம், வசப்படுத்தல், கனவு போன்றவற்றைப் பற்றிப் பேசும் போது, "அல்லது திரைக்குப் பின்னால் இருந்து" (ஷுரா: 51) என்றே திருக்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. ஏதேனும் ஒரு தோற்றத்தில் ஜிப்ரீல் தோன்றி எடுத்துரைத்ததை "அல்லது

ஒரு தூதரை அனுப்பி தான் நாடியோருக்கு தன் நாட்டப்படி வஹி அறிவிப்பான்" (ஷூரா: 51) என்று குறிப்பிட்டுள்ளது.

"உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு நபிக்கும், என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை, என்னையே வணங்குங்கள் என்று வஹி அறிவித்திருக்கிறோம்" (அன்பியா: 25). இந்த வசனத்தில் வஹி என்பது அதன் அனைத்து வகைகளையும் உள்ளடக்கிய பொதுக் கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ஏகத்துவம், இறைவணக்கம் போன்றவற்றை அறிந்துகொள்வது, உலுல் அஸ்ம் என்னும் சிறப்புவாய்ந்த தூதர்களுக்கு அறிவிக்கப்படும் வஹியின் ஊடாக மட்டுமே நடைபெறும் விசயங்களன்று. மாறாக அவற்றை பகுத்தறிவு மற்றும் இல்ஹாமின் ஊடாகவும் அறிந்து கொள்ள முடியும். இந்த வசனம் குறித்துக் காட்டும் ஒரு முக்கிய உண்மை, ஏகத்துவத்தையும் இறை வணக்கத்தையும் எந்தவொரு தூதரும் அறியாமல் இருப்பது சாத்தியமற்றது. "சீடர்களுக்கு நான் வஹி அறிவித்த போது" (மாயிதா: 111) என்ற வசனம் ஈஸாவின் வழியாக அவரது சீடர்களுக்கு அறிவிக்கப்பட்டது என்ற கருத்தையே தருகிறது. "மூஸாவுக்கும் அவரது சகோதரருக்கும் நீங்கள் இருவரும் உங்கள் சமூகத்தினருக்கும் நகரத்தில் வீடுகளை அமைத்துக் கொடுங்கள் என்று வஹி அறிவித்தோம்" (யூனுஸ்: 87), "பொய்ப்பித்துப் புறக்கணித்துச் செல்பவனுக்கு நிச்சயமாக தண்டனை இருக்கின்றது என்று எங்களுக்கு வஹி அறிவிக்கப்பட்டுள்ளது" (தாஹா: 48), இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வஹி, மூஸாவுக்கு ஜிப்ரீல் வழியாகவும் ஹாரூனுக்கு ஜிப்ரீல் மற்றும் மூஸாவின் வழியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்ற கருத்துக்களையே தருகின்றது.

"உம் இறைவனிடமிருந்து உமக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவற்றைப் பின்பற்றுங்கள். அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை. இணைவைப்பவர்களைப் புறக்கணித்து விடுங்கள்" (அன்ஆம்: 106), "தூய்மையான இப்ராஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றுமாறு நாம் உங்களுக்கு வஹி அறிவித்தோம். அவர் இணைவைப்பவராக இருக்கவில்லை" (நஹ்ல்: 123). இந்த இரு வசனங்களும் குறிப்பாக முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட வஹியைப் பற்றிப் பேசுகின்றன. அதுபோல், வானவர்களுக்கு தனித்துவமாக அறிவிக்கப்பட்ட வஹியை, "நான் உங்களுடன் இருக்கின்றேன். நீங்கள் நம்பிக்கையாளர்களை உறுதிப்படுத்துங்கள் என்று உம் இறைவன் வானவர்களுக்கு வஹி அறிவித்தபோது..." (அன்பால்: 12) என்ற வசனம் குறிப்பிடுகின்றது. எழுதுகோல்,

எழுதுபலகை ஊடாகவே இந்த வஹி அறிவிக்கப்பட்டுள்ளது. “ஒவ்வொரு வானத்திற்கும் அதற்குரிய கடமையை அவன் வஹியாக அறிவித்தான்” (புஸ்ஸிலத்: 12). வஹி அறிவிக்கப்படுவது, வானத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் எனில் வஹி, யாருக்கு அறிவிக்கப்படுகிறது என்பது வசனத்தில் குறிப்பிடப்படாது. ஏனெனில் வானத்தில் உள்ளவர்கள் வானவர்களாவர். வானத்தில் உள்ளவர்களுக்கு அன்றி வானத்துக்கு வஹி அறிவிக்கப்படுகின்றது எனில் வானத்தை உயிரற்ற பொருளாகக் கருதியவர்கள், அதற்கு வசப்படுத்தல் என்று விளக்கம் அளித்தனர். வானத்தை உயிருள்ள பொருளாகக் கருதியவர்கள், அதற்கு மொழிதல் என்று விளக்கம் அளித்தனர். “உம் இறைவன் அதற்கு வஹி அறிவித்தான்” (ஸல்ஸலா: 5) என்ற வசனமும் மேலுள்ள வசனத்தின் கருத்தையே தருகிறது. “நபியே! உங்களுக்கு குர்ஆனின் வஹி அறிவிப்பு நிறைவுறும் முன்னரே அதனை நீங்கள் ஓத அவசரப்படாதீர்கள்” (தாஹா: 114), இங்கு அவசரப்பட்டு மனனமிடுவதை விடவும் முறையாக செவிமடுப்பது முக்கியம் என்பது வலியுறுத்தப்படுகிறது.

நபியவர்களின் காலத்தில் அபூஜஹ்லின் தலைமையில் நுபுவ்வத்தை மறுக்கும் கூட்டத்தினர் உருவாகினர். அதே காலத்தில் வலீத் பின் முகீராவின் தலைமையில் வஹியையும் மற்றதையும் சமமாக்கும் முயற்சியும் நடைபெற்றது. நூலாக்கம், மொழிபெயர்ப்புக்கள் ஆகியவை உருவான பிறகு இறை நிராகரிப்பு வஹி மறுப்பு ஆகியவை வெளிப்படத் துவங்கின, அதுபோல் பல்வேறு வடிவங்களிலான தத்துவ சிந்தனைகளும் உருவாயின. மனிதன், மிருகங்கள், பறவைகள், மரங்கள், சடப்பொருட்கள் அனைத்தையும் சிலர் வெறுமனே தோற்றங்கள் மட்டுமே, உண்மை அல்ல என்றனர். அவற்றின் இருப்பு ஒரு கற்பனை வடிவமே என்றார்கள். புற உலகை வெறும் தோற்றங்களாக மட்டுமே நோக்கியவர்கள், நபிமார்களின் அத்தாட்சிகளுக்கும் சூனியக்காரர்களின் செயல்பாடுகளுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாகக் கருதவில்லை.

வஹியையும் அதன் அடிப்படையில் தூதுத்துவத்தையும், இந்த உம்மத்தின் முதல் சமூகம் நம்பிக்கை கொண்டிருந்தது. ஏனெனில் அவை மறைவான விசயங்களை நம்புவதன் ஒரு பகுதி. அந்த மறைவான நம்பிக்கைகள் அந்த சமூகத்தினரால் முழுமையாக ஏற்கப்பட்டிருந்தன. ஏனெனில் அவை மனித சக்திக்கு அப்பாற்பட்டவை என்பது அவர்களிடத்தில் நிரூபனமாகியிருந்த்து. மனிதனால் குர்ஆனைப் போன்ற ஒரு ஆக்கத்தை உருவாக்க

*அல்லது அதில் உள்ள பத்து அத்தியாயங்களையேனும் உருவாக்க அல்லது ஒரு குறைந்த பட்சம் ஒரு அத்தியாத்தையேனும் உருவாக்க முடியாது என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தார்கள். எனவே வஹியை மனித அறிவு ஏற்றுக் கொள்ளும் வகையிலான தத்துவ விளக்கமோ அல்லது இன்றைய நாட்களைப் போல் சோதனை முடிவோ அவர்களுக்கு அவசியப்படவில்லை.*

## 2. ஓதப்படும் வஹியும் ஓதப்படாத வஹியும்

*அல்லாஹ் மனிதர்களுடன் உரையாடுவது வஹியின் ஊடாக அல்லது ஒரு திரைக்குப் பின்னால் இருந்து அல்லது ஒரு வானவரின் வழியாக என்று குர்ஆனில் அவன் குறிப்பிட்டுள்ளான். "எந்தவொரு மனிதரும், வஹியின் ஊடாகவோ அல்லது திரைக்கு அப்பால் இருந்தோ அல்லது அல்லாஹ்வின் அனுமதிப்படி அவன் விரும்பியதை வஹியாக அறிவிக்கும் ஒரு தூதரை அனுப்புவதன்மூலமோ அன்றி அல்லாஹ்வுடன் பேச முடியாது. நிச்சயமாக அவன் உயர்ந்தவன், ஞானமுடையவன்" (ஷூரா: 51). அந்தத் தூதர் நம்பிக்கையான ஆன்மாவான ஜிப்ரீல் என்று திருக்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.*

*அல்லாஹ் பல்வேறு வழிகள் ஊடாக அறிவிக்கின்ற வஹியைப் பெற்றுக்கொள்வதற்கு மனரீதியாகவும் அறிவுரீதியாகவும் நபியவர்கள் தயார்படுத்தப்பட்டிருந்தார்கள் என்பது தெளிவானது. பல வசனங்களில் இவை குறித்த பல குறிப்புக்களைக் காணலாம். நபியவர்கள் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்ட ஒரு கேள்வியாக அல்லது அவர்களின் சிந்தனையில் உதித்த ஒரு விசயமாக அல்லது அவர்கள் விடை தேடிக் கொண்டிருந்த ஒரு விவகாரத்திற்கு திருக்குர்ஆன் வழங்கிய தீர்க்கமான முடிவாக இத்தகைய குறிப்புகள் இருக்கின்றன. திருக்குர்ஆன் கூறுகிறது: "உங்கள் முகம் அடிக்கடி வானத்தை நோக்குவதை நாம் காண்கிறோம். எனவே நீங்கள் விரும்புகின்ற கிப்லாவின் பக்கம் உங்களைத் திருப்பி விடுகின்றோம்" (பகரா: 144). அதேபோன்று நபியவர்களுக்கும் அவரது மனைவியர் ஒருவருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் ஒன்றை அவரது மனைவி மற்றொருவரிடத்தில் வெளிப்படுத்தியது குறித்து திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. அதுதொடர்பாக திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: "நபியவர்கள் தம் மனைவியர் ஒருவரிடம் இரகசியமாகத் தெரிவித்த விசயத்தை, அவர் மற்றொருவருக்கு தெரிவித்தபோது, அதனை நபியவர்களுக்கு அல்லாஹ் வெளிப்படுத்தினான். அவர்கள் பேசியவற்றில் சிலவற்றை கூறினான்; சிலவற்றை தவிர்த்து விட்டான். இதனை நபியவர்கள்*

தம்முடைய மனைவியிடம் கூறியபோது அவர், "யார் உங்களுக்கு இதனைக் கூறியது" என்று கேட்டார். அதற்கு அவர், "அனைத்தையும் அறிந்தவனும் நிபுணத்துவம் வாய்ந்தவனுமே இதனை எனக்கு அறிவித்தான்" என்றார்" *(தஹ்ரீம்: 3).*

நபியவர்கள் அல்லாஹ்வின் தூதை எடுத்துரைப்பவர். அல்லாஹ்வின் கட்டளையாக அமையாத எந்தவொன்றையும் அனுமதிக்கவோ தடை செய்யவோ அவரால் முடியாது. வஹியாக இறங்கிய திருக்குர்ஆனைப் பொருத்தவரை, அதன் உள்ளடக்கத்தில் உள்ள நிகழ்வுகள், சம்பவங்கள், விளக்கங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படி முன்வைக்கப்பட்டவையே. திருக்குர்ஆன் இறங்கிய காலத்தின் நிகழ்வுகள், சம்பவங்கள், தீன் முழுமைப்படுத்தப்பட்டது, மக்கள் கட்டாயமாக அறிந்து கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கருதிய உண்மைகள் என அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் ஏற்பவே நமக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை சீரிய முறையில் எடுத்துரைக்கப்பட்டிருப்பதுடன் அவற்றை ஒன்று திரட்டி விளக்கமளித்து மறுமை வரை பாதுகாப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டும் இருக்கின்றன. முந்தைய சமூகங்களின் வரலாறுகளிலும் வேதங்களிலும் நடைபெற்றது போன்ற திரிபுகளோ முரண்பாடுகளோ இதில் என்றும் நடைபெறவில்லை. திருக்குர்ஆன் கூறுகிறது: "விழுகின்ற நட்சத்திரத்தின் மீது சத்தியமாக, உங்கள் தோழர் வழிதவறிவிடவில்லை, மன இச்சைப்படி வேறு வழியில் செல்லவுமில்லை, அவர் தம் மன இச்சைப்படி எதையும் பேசுவதில்லை. அவை அவருக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவையன்றி வேறில்லை. மிகவும் வல்லமையுள்ளவர் அவருக்குக் கற்றுக் கொடுத்தார்" *(நஜ்ம்: 1-5).* நபியவர்கள் வழி தவறிவிட்டதாக எப்போது குற்றம் சாட்டப்படுகின்றார்? அதற்கு முன்னர் அனைவராலும் நல்லவர் என்று அறியப்பட்டவர்தானே? அவர் திருக்குர்ஆனை முன்வைக்கத் தொடங்கியபோது, தம்மை அல்லாஹ்வின் தூதர் என்று பிரகடனப்படுத்திய போது அவர் மீது அவ்வாறு குற்றம் சாட்டப்படுகிறது. அல்லாஹ் தன் தூதருக்காக வாதாட முன்வருகின்றான். அவர் வழிதவறியவர் என்ற கருத்தை மறுக்கிறான். அவர் முன்வைக்கின்ற திருக்குர்ஆன் தன்னால் வழங்கப்பட்ட வஹி என்பதைத் தெளிவுபடுத்துகிறான். முஹம்மது (ஸல்) அவர்களின் வார்த்தைகளையும் உரையாடல்களையும் நன்கு அறிந்து வைத்திருந்த அந்த மக்கள்தாம் அவர் குர்ஆனை முன்வைக்கத் துவங்கிய போது வழி தவறியவர் என்று அவரைக் குற்றஞ்சாட்டினர். அதனால்தான் திருக்குர்ஆன் "உங்கள் தோழர் வழிதவறிவிடவில்லை.

அவர் தம் மனவிருப்பத்தின் அடிப்படையில் பேசுவதில்லை. அவர் தனது மன இச்சைப்படி எதையும் பேசுவதில்லை'' என்றது. "அல்லாஹ் அறிவித்த வஹியைத்தான் அவர் பேசுகிறார் அவை அவருக்கு அறிவிக்கப்பட்ட வஹியே அன்றி வேறில்லை'' என்றது.

"அவர் தம் மன இச்சைப்படி எதையும் பேசுவதில்லை, அவை அவருக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவையன்றி வேறில்லை'' என்ற வசனத்துக்கு சிலர், நபியவர்களின் நாவிலிருந்து வரும் அனைத்து வார்த்தைகளும் என்று பொதுப்படையாக அர்த்தம் கொண்டனர். ஆனால் இந்த வசனம் எந்தக் கருத்துத் தொடரில் சொல்லப்பட்டது என்பதை அவர்கள் மறந்து விட்டனர். ஏனெனில் இவை, நபியவர்களின் வார்த்தைகளைப் பின்பற்றுவது கட்டாயமானது என்ற கருத்தை நிறுவுவதற்காக நம்பிக்கையாளர்களை நோக்கி பேசப்பட்ட வார்த்தைகள் அல்ல. மாறாக நபியவர்களின் வார்த்தைகளை மறுப்பவர்களை நோக்கியே இங்கு பேசப்படுகின்றது. இதனால், இந்த வசனம் சுன்னாவின் சட்டபூர்வ தன்மைக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. மாறாக சுன்னாவின் சட்டபூர்வ தன்மைக்கு இதனை விட பலமான வசனங்கள் இருக்கின்றன. "யார் தூதருக்குக் கட்டுப்படுகின்றாரோ அவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவராவார்'' (நிஸா: 80).

ஓதப்படும் வஹி தவிர்த்து நபியவர்களது வாழ்வின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும், மனித நடவடிக்கைகள் என்ற வட்டத்தினுள் அடங்குபவையாகும், ஆனால் அவை உயர் தரத்திலான நடத்தைகளாக இருந்தன. இதனை திருக்குர்ஆன் பல்வேறு வசனங்களில் சுட்டிக் காட்டியுள்ளது. அதாவது, அவரை ஒரு மனிதத் தூதராக அன்றி ஒரு மனித நபியாக அடையாளப்படுத்தியதை பல இடங்களில் காணலாம். "எந்தவொரு நபியும் மோசடி செய்யக் கூடாது. யாரேனும் மோசடி செய்வார் எனில், அவர் செய்த மோசடியை மறுமை நாளில் கொண்டு வருவார். பின்னர் ஒவ்வொரு ஆன்மாவும் தான் செய்தவற்றுக்கான கூலியை முழுமையாகப் பெற்றுக் கொள்ளும். அவர்கள் அநீதியிழைக்கப்பட மாட்டார்கள்'' (ஆலஇம்ரான்: 161).

நபியவர்களுக்கும் அவரது சமூகத்துக்கும் இடையிலான சமூக உறவாடல், நபியவர்களிடத்தில் பல்வேறு மனித நடத்தைகளைக் கொண்டு வருகின்றது. திருக்குர்ஆன் இத்தகைய மனித நடத்தைகளைக் குறித்துக் காட்டி அவற்றை சீரமைக்கும் பணியைச் செய்கின்றது. "யாருக்கு அல்லாஹ் அருள் புரிந்து,

நீரும் அருள் புரிந்துள்ளீரோ அவரது மனைவியைக் கைவிட வேண்டாம் என்றும் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுமாறும் அவருக்குச் சொல்வீராக. அல்லாஹ் வெளிப்படுத்த நினைத்ததை நீர் மனிதர்களுக்குப் பயந்து உமக்குள்ளேயே மறைத்து வைத்தீர். அல்லாஹ்வே நீங்கள் பயப்படுவதற்கு மிகவும் தகுதியானவன்" *(அஹ்ஸாப்: 37)*. "இவர்களை விடுத்து வேறு பெண்கள் உமக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் அல்ல. இவர்களுக்குப் பதிலாக வேறு மனையரையும் நீர் மாற்றிக்கொள்ளக்கூடாது. அவர்களின் அழகு உம்மைக் கவர்ந்தபோதிலும். ஆயினும் உம் அடிமைப் பெண்களைத் தவிர. அல்லாஹ் அனைத்தையும் அவதானித்துக் கொண்டிருக்கின்றான்" *(அஹ்ஸாப்: 52)*.

திருக்குர்ஆன் இந்த வஹியை தெளிவாக வரையறை செய்துள்ளது. அதனையே பதிவு செய்யுமாறும் மக்களுக்கு எடுத்துரைக்குமாறும் அல்லாஹ் தன் தூதருக்குக் கட்டளையிட்டுள்ளான். அது தனித்து ஓதப்படும் வஹி மாத்திரம்தானா அல்லது அதனுடன் வேறு வஹிகளும் இருக்கின்றனவா? திருக்குர்ஆன் கூறுகிறது: "நபியே! சாட்சியத்தில் மிகவும் பெரியது எது என்று கேட்பீராக, எனக்கும் உங்களுக்கும் இடையே அல்லாஹ்வே சாட்சியாக இருக்கின்றான். உங்களையும் இது அடைகின்றவர்களையும் எச்சரிப்பதற்காக இந்தக் குர்ஆன் எனக்கு வஹியாக அறிவிக்கப்பட்டுள்ளது, அல்லாஹ்வுடன் வேறு இறைவன் இருப்பதாக நீங்கள் சாட்சி கூறுகின்றீர்களா? நான் சாட்சி கூற மாட்டேன். நிச்சயமாக அவன் ஒரே இறைவனே. உங்கள் இணைவைப்புகளிலிருந்து நான் தூய்மையானவன்" *(அன்ஆம்: 19)*. உண்மையில் தூதுத்துவம் என்பது ஓதப்படும் வஹியே. அதை எடுத்துரைக்குமாறே அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்பதற்கு அல்லாஹ்வுடைய, அவனுடைய தூதருடைய சாட்சியே இது.

ஓதப்படும் வஹியே அறிவின் முதன்மையான மூலம்: "நாம் உமக்கு வஹி மூலம் அறிவித்துள்ள இந்த வேதமே சத்தியமானது. அது தனக்கு முன்னால் உள்ளவற்றை உண்மைப்படுத்துகிறது. நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களை நன்கறிந்தவன்; அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பவன். பின்னர் நம்முடைய அடியார்களில் நாம் தேர்ந்தெடுத்தவர்களை நாம் இந்த வேதத்துக்கு வாரிசாக்கினோம். ஆனால் அவர்களில் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டவர்களும் உண்டு. கடமைகளுடன் மாத்திரம் நின்று கொண்டவர்களும் உண்டு. அல்லாஹ்வின் அனுமதியுடன் நற்செயல்களை முந்திக் கொண்டு செய்தவர்களும் உண்டு. இதுவே

பெரும் பாக்கியமாகும்'' (பாதிர்: 31-32). இந்த வசனம் இறைவேதம் எது என்பதை தெளிவாக வரையறை செய்கிறது. திருக்குர்ஆன் கூறுகிறது: ''அவ்வாறே நாம் உங்களுக்கு அறபு மொழியிலான குர்ஆனை வஹியாக அறிவித்தோம், நகரங்களின் தாயான மக்காவிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ளவர்களையும் சந்தேகமின்றி மக்கள் ஒன்று திரட்டப்படும் நாளைப் பற்றி எச்சரிப்பதற்காக. அவர்களில் ஒரு கூட்டத்தினர் சுவனத்திலும் மற்றொரு கூட்டத்தினர் நரகத்திலும் இருப்பர்'' (ஷூரா: 7), இந்த வசனம், இந்த தூதுத்துவத்தின் இயல்பையும் நபியவர்களின் பணியையும் தெளிவாக வரையறை செய்கின்றது. திருக்குர்ஆன் கூறுகிறது: ''உங்களை ஒரு சமூகத்திடம் நாம் அனுப்பி வைத்தோம். அதற்கு முன்னரும் பல சமூகங்கள் வந்து போயிருக்கின்றன, உங்களுக்கு நாம் வஹியாக அறிவித்ததை அந்த சமூகத்தாருக்கு எடுத்துரைப்பதற்காக. அவர்கள் அளவிலாக் கருணையாளனை நிராகரிக்கிறார்கள். அவன்தான் என் இறைவன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனையே நான் முழுமையாக நம்பியுள்ளேன். அவனிடமே எனக்கு மீளுதல் இருக்கிறது'' (ரஃது: 30). மற்றோர் இடத்தில் கூறுகிறது: ''உமக்கு அறிவிக்கப்பட்ட வஹியில் சிலவற்றை நீர் விட்டுவிடலாம். அவருக்கு ஒரு பொக்கிஷம் இறக்கப்பட வேண்டாமா? அல்லது அவருடன் ஒரு வானவர் வரவேண்டாமா? என்று அவர்கள் கூறுவதனால் நீங்கள் மன நெருக்கடிக்கு ஆளாகலாம். நீங்கள் எச்சரிக்கை செய்பவர் மட்டுமே. அல்லாஹ்வே அனைத்திற்கும் பொறுப்பானவன்'' (ஹூத்: 12). இந்த வசனங்கள் நபியவர்கள் மீது இறக்கப்பட்ட வஹியின் இயல்பை அதன் அளவு உள்ளடக்கத்துடன் சேர்த்து தெளிவாக வரையறை செய்கின்றன. இதன்மூலம் நபியவர்களால் வஹியின் மொத்த சிந்தனையில் இருந்து அதன் கிளைப் பகுதிகளைக் கிரகித்துக் கொள்ள முடிகிறது. இந்த நிலையை வேறு வேதங்களில் காண முடியாது. இந்த வேதத்தில் மட்டுமே இதனைக் காணலாம். இது தொகுக்கப்பட்டதும் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டதும் திருத்தப்பட்டதும் நபியவர்கள் காலத்தில் அவரது மேற்பார்வையிலேயே நடைபெற்றிருக்கிறது.

திருக்குர்ஆன் கூறுகிறது: ''அவர்கள் ஆன்மாவைப் பற்றி உம்மிடம் கேட்கின்றார்கள். ஆன்மா என்பது எனது இறைவனின் விவகாரங்களில் ஒன்று. உங்களுக்கு மிகவும் சொற்பமான அறிவே தரப்பட்டுள்ளது என்று நீர் கூறுவீராக. நாம் நாடினால் உங்களுக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவற்றை இல்லாமல் ஆக்கி விடுவோம்.

பிறகு நமக்கு எதிராக உமக்குப் பொறுப்பேற்பவர் எவரையும் நீர் காண மாட்டீர், உம் இறைவனின் அருளைத் தவிர. அவனது அருள் உங்கள் மீது அதிகமாகவே இருக்கிறது. நீர் கூறுவீராக: இந்தக் குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்றிணைந்து அவர்கள் பரஸ்பரம் தங்களுக்கு மத்தியில் ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டாலும் அவர்களால் இதனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வர முடியாது" (இஸ்ரா: 85-88). இந்த வசனம், ஒரு முஸ்லிம் தம்முடைய மார்க்க அறிவையும் சட்டங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டிய அறிவு மூலம் எது என்பதை வரையறுக்கிறது. அந்த அறிவு மூலம் அல்லாஹ்வின் ஏற்பாட்டில் ஒரு போதும் இல்லாது போய்விடாது. அது அவனுடைய பாதுகாப்பில் என்றும் நிலைத்திருக்கும். அதுதான் நபியவர்களின் தூதுத்துவத்தை உண்மைப்படுத்தும் ஆதாரமாகும். இதனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வருமாறுதான் அறபு மொழிப் புலமையாளர்களிடம் அல்லாஹ் தன்னுடைய சவாலை முன்வைத்தான். அவர்களால் அவ்வாறு கொண்டுவர முடியவில்லை, நபியவர்களுக்கு வஹியாக அறிவிக்கப்பட்ட திருக்குர்ஆன் குறித்து மட்டுமே இந்த சவால் அமைந்திருக்கிறது. அதுதான் இறுதித் தூது, அதனையே மக்களுக்கு எடுத்துரைக்குமாறு நபியவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மறைவான செய்திகளின் உண்மை நிலையை இறைவனுடைய அறிவின்மூலம் மட்டுமே நாம் அறிந்து கொள்ள முடியும் என்பதை அல்லாஹ் பல்வேறு திருக்குர்ஆன் வசனங்களின் மூலம் தெளிவுபடுத்தியிருக்கின்றான். இந்த அறிவு முழுமையாக அல்லாஹ்வுடன் மாத்திரமே சம்பந்தப்பட்டது. "இவை நாம் உங்களுக்கு வஹியாக அறிவிக்கின்ற மறைவான செய்திகளாகும், மர்யம் அவர்களை பராமரிப்பது யார் என்பதை அறிய அவர்கள் தமது எழுதுகோல்களை போட்ட போது நீங்கள் அங்கிருக்கவில்லை. இது பற்றி அவர்கள் முரண்பட்டுக் கொண்ட போதும் நீங்கள் அவர்களுடன் இருக்கவில்லை" (ஆலஇம்ரான்: 44). அல்லாஹ் மீது பொய்யுரைப்பதையும் அல்லாஹ் அனுமதிக்காத சட்ட மூலங்களை ஏற்பதையும் அவன் கண்டிக்கின்றான் "அல்லாஹ் மீது பொய்யுரைப்பவன் அல்லது தனக்கு எந்த வஹியும் அறிவிக்கப்படாத நிலையிலும் தனக்கு வஹி அறிவிக்கப்பட்டது என்று சொல்பவன் அல்லது அல்லாஹ் வேதத்தை இறக்கி வைத்தது போல் நானும் இறக்கி வைப்பேன் என்று சொல்பவன் இவர்களை விட மிகப்பெரிய அநியாயக்காரன் யார் இருக்க முடியும்?" (அன்ஆம்:

93). அதுபோல் தான் இறக்கிவைக்காத வஹியைப் பின்பற்றுவது குறித்தும் எச்சரிக்கை செய்கின்றான்: "உம் இறைவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவான ஆதாரங்கள் வந்துள்ளன. அவற்றை யார் ஆழ்ந்து பார்க்கின்றாரோ அது அவருக்கே நல்லதாகும். யார் அவற்றைப் பார்க்காது விடுகின்றாரோ அவரது பாதுகாப்பிற்கு நாம் பொறுப்பல்ல. நீங்கள் படித்திருக்கின்றீர்கள் என்று அவர்கள் சொல்வதற்காகவும், அறிந்து கொள்ளக் கூடிய மக்களுக்குத் தெளிவுடுத்துவதற்காகவும் இவ்வாறே நாம் நம்முடைய வசனங்களை இறக்கிவைக்கின்றோம், உம் இரட்சகனிடமிருந்து உமக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவற்றையே பின்பற்றுவீராக. அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. இணைவைப்பவர்களைப் புறக்கணித்து விடுவீராக" (அன்ஆம்: 104-106).

இந்த குர்ஆனிய வஹிதான் ஷரீஅத்தாகும். இதனைப் பின்பற்றுமாறே அல்லாஹ் நபியவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கட்டளை இட்டுள்ளான். இந்த ஷரீஅத்தில் மேற்கொள்ளப்படும் இஜ்திஹாதுகள் வஹியின் அடியாகவும் அதனை ஆதாரமாகக் கொண்டும் மட்டுமே அமைய முடியும். இஜ்திஹாதில் ஈடுபடுகின்றவர் இறைவன் விரும்பும் பண்பைப் பெற்றுக் கொள்ளாதவரை இஜ்திஹாதில் ஈடுபட முடியாது. அதுதான் தக்வா என்னும் இறையுணர்வு. அதனைப் பேணுமாறுதான் நபிமார்களும் தூதர்களும் மக்களுக்குப் போதித்தார்கள். திருக்குர்ஆன் கூறுகிறது: "ஒரு மனிதருக்கு அல்லாஹ் வேதத்தையும் அதிகாரத்தையும் நபித்துவத்தையும் வழங்கியிருக்க அவர் மக்களிடம் நீங்கள் என் அடியார்களாக இருங்கள் என்று சொல்ல முடியாது. மாறாக நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொடுப்பதன் ஊடாகவும் அதனைக் கற்றுக் கொள்வதன் ஊடாகவும் இறைவனைச் சார்ந்தவர்களாக இருங்கள் என்றுதான் சொல்ல வேண்டும்" (ஆலஇம்ரான்: 79). இந்த வசனம், மறுமை நாள்வரை அல்லாஹ் மனிதர்கள் அனைவருக்கும் எடுத்துரைக்க நினைக்கின்ற அனைத்து விசயங்களையும் உள்ளடக்கியதாகவே இந்த வேதம் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துகிறது. அதேபோன்று எச்சரிக்கை செய்தல், நபியவர்களது பணி என்ற வகையில் வஹியின் மூலமாகவே எச்சரிக்கை செய்தல் என்ற பணி நடைபெற வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது. "அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கின்றன என்று நான் கூற மாட்டேன். நான் மறைவான விசயங்களை அறிந்தவனும் அல்ல. நான் ஒரு மலக்கு என்றும் சொல்ல மாட்டேன். எனக்கு வஹியாக அறிவிக்கப்படுவதையே நான் பின்பற்றுகிறேன் என்று நீர் கூறுவீராக" (அன்ஆம்: 50).

திருக்குர்ஆன் நபியவர்களுடைய தூதுத்துவத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் ஆதாரமாகும். "அவர்களிடம் தெளிவான நம்முடைய வசனங்கள எடுத்துரைக்கப்பட்டால் நம்முடைய சந்திப்பை நம்பாதவர்கள் இதுவல்லாத வேறு ஒரு குர்ஆனைக் கொண்டு வாரும் அல்லது இதனை மாற்றி விடும் என்று கூறுகிறார்கள். நீர் கூறும்: என் புறத்திலிருந்து அதனை மாற்றுவதற்கு எனக்கு அதிகாரமில்லை. எனக்கு வஹியாக அறிவிக்கப்படுவதையே நான் பின்பற்றுகிறேன். நான் என் இறைவனுக்கு மாறுசெய்தால் மகத்தான நாளின் வேதனைக்கு ஆளாகிவிடுவேன் என்று நான் அஞ்சுகிறேன்" (யூனுஸ்: 15). இந்த வசனம், வஹியாக அறிவிக்கப்பட்டவை தவிர வேறு எதனையும் நபியவர்கள் எடுத்துரைக்கவோ ஓதிக் காட்டவோ முடியாது என்பதை மிகவும் திட்டவட்டமாகக் கூறுகிறது. அதுவே அவரது இறுதித் தூதுத்துவத்தின் உள்ளடக்கமாகும்.

நபியவர்களின் காலத்தில் அவர்களின் மேற்பார்வையில் ஒன்றுதிரட்டப்பட்ட ஓதப்படும் வஹியின் வசனங்களை அன்றி வேறு வசனங்களை சட்டவாக்கத்துக்குரிய வசனங்களாகக் கொள்ளக் கூடாது என்று அல்லாஹ் முஸ்லிம்களை நோக்கி மட்டுமல்ல முழு மனித சமூகத்தையும் நோக்கி எச்சரிக்கை விடுத்துள்ளான். "அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பதற்காக இது ஹலாலானது இது ஹராமானது என்று உங்கள் நாவுகள் பொய்யை வர்ணிப்பது போல் கூறாதீர்கள். அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பவர்கள் வெற்றி பெறமாட்டார்கள்" (நஹ்ல்: 116). "உமக்கு வஹியாக அறிவிக்கப்பட்டதை நீர் பற்றிக் கொள்வீராக. நீர் நேர்வழியில்தான் இருக்கின்றீர். நிச்சயமாக இது உமக்கும் உம்முடைய சமூகத்தாருக்குமான நினைவூட்டலாகும். இது பற்றி விசாரிக்கப்படுவீர்கள்" (ஸுக்ருப்: 43-44).

மேற்சொன்னவற்றின் சாராம்சம் என்னவெனில், தூதருடைய செயல்பாட்டு வழிமுறை குர்ஆனுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டது. திருக்குர்ஆன் அதனை உண்மைப்படுத்துகிறது. இதனையே பிற்காலத்தில் சுன்னா என்று அழைத்தார்கள். ஏனைய நபிமார்களுடைய செயல்பாட்டு வழிமுறையைக் கையாள்வது போன்றே திருக்குர்ஆன் இதனையும் கையாள்கின்றது. இதனால்தான் திருக்குர்ஆன் நபியவர்களின் செயல்பாடுகளுக்கு விமர்சனம் வழங்கியுள்ளதுடன் அவற்றைப் பல இடங்களில் சீர்செய்தும் இருக்கின்றது. திருக்குர்ஆன் கூறுகின்றது: "பூமியில் இரத்தம் ஓட்டாதவரை ஒரு நபி யாரையும் சிறைப்பிடிக்க முடியாது, நீங்கள் உலக இலாபங்களை விரும்புகின்றீர்கள். அல்லாஹ் மறுமை நலனையே நாடுகின்றான். அல்லாஹ் பேராற்றலுடையவனாகவும்

ஞானம் மிக்கவனாகவும் இருக்கின்றான். ஏற்கனவே அல்லாஹ்வின் ஏட்டில் எழுதப்படாமல் இருந்தால், நீங்கள் செய்தவற்றிற்கு பெரும் தண்டனை கிடைத்திருக்கும்'' (அன்பால்: 67-68). ''அல்லாஹ் உங்களை மன்னிக்கட்டும், அவர்களில் உண்மையாளர்கள் யார் பொய்யர்கள் யார் என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும் முன்னர் நீங்கள் ஏன் அவர்களுக்கு அனுமதியளித்தீர்கள்'' (தௌபா: 43). இவை போன்ற பல வசனங்கள், திருக்குர்ஆன் நபியவர்களது செயல்மாதிரியை நெறிப்படுத்திக் கட்டுப்படுத்துகிறது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இது அல்லாஹ் தன் தூதரை தவறுகளில் இருந்து பாதுகாத்து அவர் பற்றிய சந்தேகங்களை இல்லாமல் ஆக்கும் ஒரு வழிமுறையாகும். இதனையே இமாம் ஷாபியின் பின்வரும் கருத்து உணர்த்துகிறது: ''அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பின்பற்றுகின்றவர்களின் வாழ்வில் நிகழும் எந்த நிகழ்வுக்கும் வழிகாட்டும் ஓர் ஆதாரம் அல்குர்ஆனில் இருக்கின்றது.'' பின்னர் இந்தக் கருத்துக்கு ஆதாரமாக சில திருக்குர்ஆன் வசனங்களைக் குறிப்பிட்டுள்ளார். ''அலிப் லாம் ரா, அல்லாஹ்வின் அனுமதி கொண்டு மக்களை இருள்களில் இருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருவதற்காகவும் புகழும் வல்லமையும் உள்ளவனின் பாதைக்கு அவர்களைக் கொண்டு வருவதற்காகவும் அவன் உமக்கு வேதத்தை அருளினான்'' (இப்ராஹீம்: 1). அதேபோன்று அந்நஹ்ல் என்ற அத்தியாயத்தின் நான்கு மற்றும் எண்பத்து ஒன்பது ஆகிய வசனங்களையும் ஷூரா என்ற அத்தியாயத்தின் ஐம்பத்து இரண்டாவது வசனத்தையும் இதற்கு ஆதாரமாக முன்வைக்கின்றார்கள்.

அந்தவகையில் வஹியாகக் கருதப்படக் கூடிய சுன்னா என்பது குர்ஆனில் மூல ஆதாரத்தைக் கொண்டுள்ளவை மட்டுமேயாகும். குர்ஆனில் மூல ஆதாரம் இல்லாத ஒன்றை நாம் வாழ்வுக்குப் பயனுள்ள ஓர் அம்சம் என்ற வகையில் கடைபிடிப்பதில் தவறில்லை. ஆனால் சட்டவாக்க அந்தஸ்த்தை அவை பெற்றுக் கொள்ள முடியாது.

## இரண்டாவது: சுன்னாவும் விளக்கக் கோட்பாடும்

சுன்னா பற்றிய எண்ணக்கருவுக்கு அடித்தளமாக அமையவும் குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான உறவை தெளிவாக வரையறை செய்யவும் முடியுமான ஒரு கோட்பாடு இருக்கிறது. இந்தக் கோட்பாடுதான் சுன்னாவை குர்ஆனின் எல்லையில் தக்கவைக்கிறது. அதுதான் விளக்கக் கோட்பாடு. இங்கு

குர்ஆனின் கண்ணோட்டத்தில் அமைந்த விளக்கக் கோட்பாடே நாடப்படுகிறது, மாறாக விளக்கக் கோட்பாடு பற்றிய குர்ஆனுடைய விளக்கத்தையும் தாண்டிய பிற்பட்ட கால கலைச்சொல் பிரயோகம் இங்கு நாடப்படவில்லை. சுன்னா குர்ஆனுக்கான செயல்பாட்டு விளக்கவுரையாகும். அது குர்ஆனின் மையத்தை விட்டு விலகிச் செல்லாது. அதனைவிட்டு தனித்து நிற்கவும் செய்யாது. அதனைச் சுற்றியே சுழலும். அதனுடன் இணைந்தே பயணிக்கும். இந்தத் விளக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் நாம் கட்டமைக்க முனையும் சுன்னா பற்றிய எண்ணக்கருவானது, உண்மையில் சுன்னாவுக்கான இறைவனின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகுக்கின்றது.

நபியவர்களது சுன்னாவும் வாழ்வு முறையும் நபிமார்கள் அனைவருடைய சுன்னாக்களின் மொத்தத் தொகுப்பு. திருக்குர்ஆன் கூறுகிறது, “அவர்கள்தாம் அல்லாஹ் நேர்வழியில் செலுத்தியவர்கள். அவர்களின் வழியை நீர் பின்பற்றுவீராக” *(அன்ஆம்: 90)*. “இறைத் தூதர்களில் நான் புதிதாக வந்தவனல்ல. நீங்களோ நானோ என்ன செய்யப்படுவோம் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு வஹியாக அறிவிக்கப்படுவதையே நான் பின்பற்றுகிறேன். நான் தெளிவாக எச்சரிக்கை செய்பவனே” *(அஹ்காப்: 9)*. நபிமார்களுடைய சுன்னாக்கள் என்பது உண்மையில் அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட வஹியின் செயல்பாட்டுப் பகுதியாகும். அதனூடாகவே அவர்களைப் பின்பற்றுகின்றவர்கள் அவர்களுக்குக் கட்டுப்படவும் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளவும் முடிகின்றது. திருக்குர்ஆன் கூறுகிறது: “வேதம் வழங்கப்பட்டவர்களே! தூதர்கள் வராத காலத்தில், எங்களை எச்சரிக்கவும் எங்களுக்கு நற்செய்தி கூறவும் யாரும் வரவில்லை என்று நீங்கள் சொல்லாதிருப்பதற்காகவும் உங்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவும் ஒரு தூதர் வந்திருக்கின்றார். ஆகவே எச்சரிக்கை செய்பவரும் நற்செய்தி கூறுபவரும உங்களிடம் வந்து விட்டார். அல்லாஹ் ஒவ்வொன்றின் மீதும் பேராற்றலுடையவன்” *(மாயிதா: 19)*.

தெளிவுபடுத்துதல் அல்லது புரிய வைத்தல் என்னும் நபியவர்களின் பணியைப் பேசும் சில திருக்குர்ஆன் வசனங்கள், விளக்கக் கோட்பாட்டை முன்வைக்கின்றன. உதாரணமாக, “அவர் தமக்கு முன்னால் உள்ள வேதங்களை உண்மைப்படுத்தி அவற்றைப் பாதுகாப்பவர்” *(மாயிதா: 48)* என்று நபியவர்களைப் பற்றிக் கூறுகிறது. நபியவர்களது இந்தப் பணியை அவர்கள் சரியாகக்

கடைபிடிக்கின்றபோதுதான், மக்களுக்கு அது முறையான பலனைத் தருகின்றது. "உம் இறைவன் மீது சத்தியமாக, அவர்கள் தமக்கு மத்தியிலான பிணக்குகளில் உங்களைத் தீர்ப்பு சொல்பவராக ஏற்று பின்னர் நீங்கள் வழங்கும் தீர்ப்பு குறித்து தம் உள்ளத்தில் எந்த நெருடலும் இன்றி ஏற்று முழுமையாகக் கடைபிடிக்காதவரை அவர்கள் நம்பிக்கையாளர்களாக மாட்டார்கள்" (நிஸா: 65). சுன்னா என்பது தெளிவுபடுத்தும் மூலாதாரம். அது கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் இஜ்திஹாத் மற்றும் அதன் கிளைகளாக உள்ள ஏனைய மூலாதாரங்கள் அவ்வாறானவை அல்ல. அவற்றை கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்ற அவசியம் இல்லை. "அலிப் லாம் ரா, அல்லாஹ்வின் அனுமதி கொண்டு மக்களை இருள்களில் இருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருவதற்காகவும் புகழும் வல்லமையும் உள்ளவனின் பாதைக்கு அவர்களைக் கொண்டு வருவதற்காகவும் அவன் உமக்கு வேதத்தை அருளினான்" (இப்ராஹீம்: 1), "தெளிவான அத்தாட்சிகளையும் வேதங்களையும் தூதர்களுக்கு நாம் கொடுத்து அனுப்பினோம். நாம் உமக்கு வேதத்தை அருளினோம், மக்களுக்கு அருளப்பட்டவற்றை நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்தும்பொருட்டு. இதன்மூலம் அவர்கள் சிந்திக்கக்கூடும்" (நஹ்ல்: 44).

### 1. விளக்கக் கோட்பாடு பற்றி இமாம் ஷாஃபி

இமாம் ஷாஃபி விளக்கக் கோட்பாட்டை வடிவமைத்த சமயம், குர்ஆனில் விளக்குவதற்கு அவசியமற்ற வசனங்கள் உள்ளன என்பதை அவர் இனங்கண்டதுபோல நபியவர்களது விளக்கப்பணி, செயல் சார்ந்தது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால் விளக்கக்கோட்பாடு பற்றிய அவரது விளக்கத்தின்போது, குர்ஆனில் கருத்து தெளிவற்ற வசனங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது. கருத்துத் தெளிவற்ற ஒரு விசயம் குர்ஆனில் கிடையாது என்பது நாம் அறிந்த விசயம். இமாம் ஷாஃபி, சட்ட வசனங்களுக்கு பகுத்தறிவுசார் விளக்கமளிக்கும் அணுகுமுறையை மறுத்து நேரடி விளக்கம் அளிக்கும் அணுகுமுறையை ஆதரித்து செயல்பட்டதன் காரணமாக, விளக்கக் கோட்பாட்டை தெளிவுபடுத்தும்போது பெரும்பாலான அறிஞர்கள் கூறுவதுபோன்று, குர்ஆனில் கருத்துத் தெளிவற்ற, மயக்கமான, சிலேடையான வசனங்களும் காணப்படுகின்றன என்றும் அவற்றை தெளிவுபடுத்தும் வகையில்தான் விளக்கக் கோட்பாடு அவசியப்படுகிறது என்றும் வலியுறுத்துவதைக் காணலாம்.

இமாம் ஷாஃபி தம்முடைய 'ரிஸாலா' என்னும் நூலில் விளக்கக் கோட்பாட்டை தனியான ஒரு தலைப்பில் தெளிவுபடுத்துகிறார். அதில் தெளிவுபடுத்தும் பணி என்றால் என்ன? அதனை எவ்வாறு மேற்கொள்வது? அதன் படித்தரங்கள் எவை? போன்ற பல விசயங்களைத் தெளிவுபடுத்துகின்றார். விளக்கக் கோட்பாட்டை அவர் ஐந்து படித்தரங்களில் அமைத்துள்ளார். அவற்றுள் முதலாவது, இரண்டாவது படித்தரமாக, குர்ஆனை குர்ஆனின் மூலமே தெளிவுபடுத்துவதைக் குறிப்பிடுகின்றார். மூன்றாவது, குர்ஆனில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட ஒரு விசயத்தை நபியவர்கள் விரிவாக கூறியுள்ளதைக் குறிப்பிடுகின்றார், உதாரணமாக, திருக்குர்ஆன், "தொழுகையை நிலைநாட்டுங்கள், ஸகாத்தைக் கொடுங்கள்" என்று சுருக்கமாகக் குறிப்பிட்டது. நபியவர்கள் அவற்றின் எண்ணிக்கை, காலம், அளவுகள் என்பவற்றை விரிவாக தெளிவுபடுத்தியுள்ளார்கள். நான்காவது படித்தரம், சுன்னாவின் விளக்கங்கள், அதாவது அல்லாஹ் நபியவர்களிடம் தெளிவுபடுத்துமாறு பொறுப்பளித்த விசயங்களைக் குறிக்கின்றன. இவ்வகை விளக்கங்களைப் பொருத்தவரையில், இமாம் ஷாஃபி பல இடங்களில் வலியுறுத்தியுள்ளது போல், கண்டிப்பாக இவை குர்ஆனில் ஓர் அடிப்படையைக் கொண்டவையாகும். ஏனெனில், அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பின்பற்றுகின்றவர்களது வாழ்வில் நிகழும் எந்த நிகழ்வுக்கும் வழிகாட்டும் ஓர் ஆதாரம் குர்ஆனில் இருக்கின்றது. நேரடியான ஓர் ஆதாரம் காணப்படாத போதும் நிச்சயம் அது குர்ஆனின் பொதுச் சிந்தனைக்கு உட்பட்டதாகவே இருக்கும். இறுதியாக இமாம் ஷாஃபி ஐந்தாவது படித்தரமாக மொழி மற்றும் பௌதீகக் காரணிகளின் அடிப்படையில் தெளிவுபடுத்துதல் என்பதைக் குறிப்பிட்டு அதனை விரிவாகப் பேசியுள்ளார்.

## கட்டாயமாய்ப் பின்பற்றப்பட வேண்டிய விளக்கங்கள்

திருக்குர்ஆன் தன்னைத் தானே தெளிவுபடுத்துவது முதல் தரத்தில் வைத்து நோக்கப்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை. அந்த வகையில் அதனை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானது. அடுத்து இரண்டாவது நிலையில் நபியவர்களின் விளக்கங்கள் அமைகின்றன. இதற்கு அடுத்த படிநிலைகளில் உள்ள விளக் கங்களைவிடவும் நபியவர்களின் விளக்கங்கள் ஒரு வகையில் தனித்துவமானவை. ஏனெனில், நபியவர்களின் விளக்கங்களைப் பின்பற்றுவது கட்டாயமானது. ஏனெனில் நபியவர்களைப் பின்பற்றுதல் என்பது அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்ற இறைபாதுகாப்பின் அடிப்படையில் தோன்றுவதாகும். அவர்களுக்கு

இறைபாதுகாப்பு இல்லாதிருப்பின் நபியவர்களைப் பின்பற்றுதல் அல்லது முன்மாதிரியாகக் கொள்ளுதல் என்ற இறைகட்டளை தவறுகள் அல்லது பாவங்களையும் பின்பற்றச் சொல்வதாக இருந்திருக்கும். அல்லாஹ்விடமிருந்து இது போன்ற ஒரு கட்டளை வருவது சாத்தியமற்றது. உண்மையில், நபியவர்களைப் பின்பற்றுமாறு வருகின்ற குர்ஆன் வசனங்களை, திருக்குர்ஆன் தனக்குத் தானே அளிக்கும் விளக்கங்களையும் நபியவர்களின் விளக்கங்களையும் பின்பற்றுமாறு வலியுறுத்துகின்ற ஒருமித்த சட்டகத்திற்குள் வைத்துதான் நோக்க வேண்டும். இவை தவிர ஏனைய விளக்க முறைகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற வரையறைக்குள் அடங்காது.

## 2. விளக்கக் கோட்பாடு பற்றி சட்டக் கோட்பாட்டாளர்கள்

இமாம் ராஸி விளக்கக் கோட்பாட்டின் வகைகள் மற்றும் படித் தரங்களை தனித்தனி தலைப்புக்களில் ஆராய்கின்றார். அவரது ஆய்வைப் பார்க்கும்போது இமாம் ஷாஃபி முன்வைத்த எல்லையை விடவும் புதிய பல விசயங்களுடன் விரிவான அளவில் அவரது ஆய்வு அமைந்திருப்பதைக் காணலாம். இருந்தபோதிலும் தெளிவு படுத்தப்படும் குர்ஆனுக்கும் தெளிவுபடுத்தும் சுன்னாவுக்கும் இடையில் ஓர் இடைவெளியை அவரது விளக்கங்களில் அவதானிக்க முடிகின்றது. உண்மையில் அது நிகழ்ந்திருக்கக் கூடாது. சட்டக் கோட்பாட்டுக் கலையில் தர்க்கவியல் அணுகுமுறை பெரிய அளவில் தாக்கம் செலுத்தியதே இதற்குக் காரணம். ஆனால் சட்டக் கோட்பாட்டாளர்களில் அதிகமானோர், நபியவர்களின் செயலை மட்டும் அதனுடன் வார்த்தை இணைந்து வராதபோதும் அதனை ஒரு தெளிவுரையாகக் கருதியிருக்கிறார்கள். அதனால் செயல் மட்டுமே மனிதர்களுக்கு ஒரு சட்டநிலைப்பாடாக அமைய முடியுமா என்பதில் அவர்களிடையே நான்கு வகையான நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இவை பற்றிய விளக்கங்களை இமாம் ராஸியின் *'அல்மஹ்ஸூல் பீ இல்மில் உஸூல்'* என்ற நூலில் காணலாம்.

இதன் காரணமாக சுன்னாவின் எண்ணக்கருவில் எவ்வளவு தெளிவற்ற ஒரு நிலை உருவாகியிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். முந்தைய அறிஞரான இமாம் மாலிக் சுன்னா என்பது செயல்தான் என்று கருதியது மிகவும் முக்கியமான ஒரு விசயம். ஏனெனில் அவரது காலத்தில் தர்க்கவியல் அணுகுமுறையின் செல்வாக்கு இருக்கவில்லை. இதனால் அவரது காலத்தில் சிந்தனையில் சுன்னா என்பது குர்ஆனைச் சுற்றிச்

சூழலும் ஒன்றாகவே கருதப்பட்டது. ஆகவே சுன்னா குர்ஆனை தெளிவுபடுத்தக்கூடியது என்று சொல்லும்போது தெளிவுபடுத்தும் ஒன்று தெளிவுபடுத்தப்படக்கூடிய மூலத்தின் எல்லையைத் தாண்டக் கூடாது; அதனை மிகைத்தும் விடக்கூடாது, மூலத்திலிருந்தே சாதனத்தின் பலம் பெற்றுக் கொள்ளப்படுகிறது என்ற கருத்தும் புரிந்து கொள்ளத்தக்கதுதான்.

### 3. வழக்கு மொழியில் விளக்கக் கோட்பாடு

இதன்மூலம் நாம் நாடுவது, குர்ஆனைப் புரிந்து கொள்வதில் மக்களிடமுள்ள வேறுபட்ட நிலைப்பாடுகள் நீங்கி அல்லது குறைந்து, அவர்கள் தெளிவுடன் அதனை செயல்படுத்தும்வகையில் குர்ஆனை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதாகும். திருக்குர்ஆன் கூறுகிறது: "தெளிவான அத்தாட்சிகளையும் வேதங்களையும் தூதர்களுக்குக் கொடுத்தனுப்பினோம். நாம் உமக்கு வேதத்தை அருளினோம், நீர் மக்களுக்கு அருளப்பட்டவற்றை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காக. இதனால் அவர்கள் சிந்திக்கக்கூடும்" *(நஹ்ல்: 44)*. இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட தெளிவுபடுத்துதல் என்பது நபியவர்கள் தம்முடைய வார்த்தை, செயல், அங்கீகாரம் ஆகியவற்றின்மூலம் மேற்கொள்ளக்கூடியதாகும். திருக்குர்ஆன் கூறுகிறது: "வேதம் வழங்கப்பட்டவர்களே! உங்களிடத்தில் நம்முடைய தூதர் வந்திருக்கின்றார். வேதத்தில் நீங்கள் மறைத்துக் கொண்டிருந்த பல விசயங்களை அவர் தெளிவுபடுத்துவார். பலவற்றை அவர் மன்னித்தும் விடுவார். அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு ஓர் ஒளியும் தெளிவான வேதமும் வந்துள்ளது" *(மாயிதா: 15)*.

இந்த தெளிவுபடுத்தும் பணிக்கு சில வரையறைகள் இருக்கின்றன.

- தெளிவுபடுத்தப்படும் மூலத்தின் மையக் கருத்தை மாற்றிவிடும் அளவுக்கு விளக்கம் அதிகரித்துச் செல்லக் கூடாது.
- தெளிவுபடுத்தப்படும் மூலத்தின் வகையைத் தாண்டிய ஒரு விசயம் சேர்க்கப்படக் கூடாது.
- எழுதப்பட்ட மூலத்திற்கு வாய்மொழிமூலம் வழங்கப்படும் விளக்கத்துக்கும் ஏனையவற்றுக்கும் இடையில் உள்ள வேறுபாடு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

முந்தைய நபிமார்களின் மரபுகள் குர்ஆனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டே இருக்கின்றன என்பதன் பொருள், நபியவர்களுக்கு இரு

பணிகள் இருந்திருக்கின்றன என்பதாகும். ஒன்று, படிப்பறிவற்ற சமூகத்தை வேதமுள்ள சமூகமாக மாற்றியமைத்தல். இரண்டு, முந்தைய நபிமார்களுடைய வேதநூல்களின் உண்மைத் தன்மையை வெளிக் கொண்டுவரும் வகையில், அவை மனித சமூகத்திற்கு எவற்றை முன்வைத்தன என்பதை திருக்குர்ஆனின் பார்வையில் நின்று மீள்வாசிப்புச் செய்வது. முந்தைய வேதநூல்களைப் பாதுகாப்பதில் நபியவர்களின் வாழ்வு ஒரு நடைமுறை உதாரணமாக இருக்கின்றது. ஏனெனில் எந்த வகையான மனித சூழலுக்கு அவை இறக்கப்பட்டன என்பதை திருக்குர்ஆன் தன் வசனங்கள்மூலம் தெளிவுபடுத்துகிறது. இதனால்தான் இறுதி வேதத்தை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கின்றான்: "அதனை ஒன்று திரட்டுவதும் ஓதிக் காண்பிப்பதும் நம்முடைய பொறுப்பாகும். நாம் அதனை ஓதிக் காட்டினால் நீங்கள் அதனைப் பின்பற்றுங்கள்" (கியாமா: 17-18). "நாமே வேதத்தை அருளினோம். நாமே அதனைப் பாதுகாப்போம்" (ஹிஜ்ர்: 9). குர்ஆனை இறக்கிவைப்பதில் எவ்வாறு அல்லாஹ் வேறு யாரையும் பங்காளராக இணைத்துக் கொள்ளவில்லையோ அவ்வாறே அதனைப் பாதுகாப்பதிலும் இறுதி நபிக்கு அதனை ஓதிக் காட்டுவதிலும் மக்களுக்கு அதன் வசனங்களை தெளிவுபடுத்துவதிலும் வேறு எவரையும் அவன் பங்காளராக இணைக்கவில்லை. இதனூடாக திருக்குர்ஆன் முழு மனித சமூகத்துக்குமான மூலாதாரமாக மாறுகின்றது. இதுதான் இறுதி வேதம். இது தூதர்கள் அனைவரின் மரபுகளைப் கட்டுப்படுத்துவதுடன் அவற்றை உண்மைப்படுத்தவும் செய்கிறது. இதில் இறுதி நபியான முஹம்மது (ஸல்) அவர்களுடைய மரபும் உள்ளடங்கும். இங்கு ஏனைய மரபுகளைக் கட்டுப்படுத்தி உண்மைப்படுத்துதல் என்பதன் பொருள், வேதநூல்கள் எதிர்கொள்ளும் எல்லை மீறிய திரிபுகள், வழிதவறிய இடைச் செருகல்கள், அறிவீனமான விளக்கங்கள் போன்றவற்றை அகற்றி, அதன் உண்மையான வடிவத்தை முன்வைத்தலாகும். இவை அனைத்தும் சாத்தியப்படுதுவதற்கு பின்வரும் வழிமுறையைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்:

## மூன்றாவது: சுன்னாவை திருக்குர்ஆனிடம் முன்வைத்தல்

பெரும்பாலான ஷாஃபி மத்ஹப் அறிஞர்களும் இமாம் ஷாதிபியும் அவர்களுக்குப் பின் வந்த அனைவரும் பேசிய ஒரு உண்மையை இங்கு நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம். அதாவது, ஆதாரப்பூர்வமான

ஒரு சுன்னா நிச்சயம் குர்ஆனில் ஓர் அடிப்படையைக் கொண்டிருக்கும். இமாம் ஷாஃபி தம்முடைய 'ரிஸாலா' என்னும் நூலில் கூறுகிறார்: "தான் இறக்கியவற்றையே தன் தூதர் பின்பற்ற வேண்டும் என அல்லாஹ் கடமையாக்கியிருக்கின்றான் எனில் சுன்னா ஒருபோதும் குர்ஆனுடன் முரண்படுவதற்கு வாய்ப்பில்லை. குர்ஆனை இறக்கிவைத்து அல்லாஹ் எதனை தெளிவுபடுத்த நாடினானோ அதனைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு ஒன்றாக சுன்னா ஒருபோதும் இருக்க முடியாது. அது எல்லா நிலையிலும் குர்ஆனைப் பின்பற்றியதாகவே இருக்கும்." இன்னொரு இடத்தில் கூறுகிறார், "நபியவர்களின் சுன்னா அல்லாஹ்வின் வேதத்திற்கு எந்த வகையிலும் முரண்படாது. மாறாக அது குர்ஆனில் உள்ள பொதுவாகச் சொல்லப்பட்டவற்றையும் குறிப்பாகச் சொல்லப்பட்டவற்றையும் தெளிவுபடுத்தக்கூடியதாகும். அது திருக்குர்ஆனுக்கான விளக்கம் என்ற வட்டத்திற்குள் அடங்கி விடுகிறது." இன்னொரு இடத்தில் கூறுகிறார்: "நபியவர்களின் வாழ்வு முறையானது திருக்குர்ஆனுடன் ஒத்திசைந்து செல்லக்கூடியதாக இருக்கின்றது. அது சுருக்கமாகச் சொல்லப்பட்டவற்றை தெளிவுபடுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

சில இமாம்கள் ஹதீஸை குர்ஆனுடன் ஒப்புநோக்கி மூன்றாக பிரித்துப் பார்த்தார்கள். முதலாவது, குர்ஆனுடன் உடன்பாடான ஹதீஸ்கள். இந்தப் பகுதியை ஏற்று நடப்பது கட்டாயமாகும். இரண்டாவது, குர்ஆனில் உள்ளவற்றை விடவும் மேலதிகமான விசயங்களைப் பேசுகின்ற ஹதீஸ்கள். இவை குர்ஆனுடன் இணைந்தவையாகவே கருதப்படும். இவற்றை ஏற்று நடப்பதும் கட்டாயமாகும். மூன்றாவது, குர்ஆனுடன் முரண்படும் ஹதீஸ்கள். இவை ஏற்கப்பட மாட்டாது.

சுன்னாவை குர்ஆனுடன் ஒப்புநோக்குதல் என்பது சுன்னாவைப் பகுப்பாய்வு செய்வதன் பிரதானமான ஓர் அடிப்படை என அதிகமான ஹனபி மரபைச் சேர்ந்த இமாம்கள் கருதுகிறார்கள். இமாம் ஸரக்ஸி, "அறிவிப்பாளர் வரிசை தொடராக அல்லாமல் துண்டிக்கப்பட்ட நிலையில் இருத்தல்" என்ற விசயத்தை, வார்த்தை துண்டிக்கப்படல், கருத்துத் துண்டிக்கப்படல் என இரண்டாக பிரித்துப் பார்த்தார். வார்த்தை துண்டிக்கப்படல் என்பதன் பொருள் அதன் அறிவிப்பாளர் வரிசையில் நிகழும் தொடரற்ற நிலையைக் குறிக்கிறது என்றும் கருத்துத் துண்டிக்கப்படல் என்பது, சுன்னா, குர்ஆனுக்கு முரண்படும் நிலை. அப்போது குறித்த ஹதீஸ் ஏற்கப்படவோ ஆதாரமாகக் கொள்ளப்படவோ மாட்டாது என்றும் குறிப்பிட்டுள்ளார். இமாம் ஸரக்ஸி, இந்தக்

கருத்தை சில ஹதீஸ்களின் வாயிலாகவும் அறிவுரீதியாகவும் ஆதாரப்படுத்துகின்றார். நபியவர்கள் கூறினார்கள்: "குர்ஆனில் இல்லாத எந்தவொரு நிபந்தனையும் ஏற்கப்பட மாட்டாது. குர்ஆனே ஏற்கத்தகுந்தது" இமாம் ஸரக்ஸீ இந்த ஹதீஸுக்கு விளக்கம் அளிக்கும்போது, இங்கு குர்ஆனில் இல்லாதவை என்பதன் பொருள் குர்ஆனுடன் முரண்படுகின்றவை என்பதாகும். மாறாக அவை நேரடியாக குர்ஆனில் குறிப்பிடப்படாமலிருத்தல் என்பதல்ல என்கிறார். நபியவர்கள் கூறினார்கள்: "எனக்குப் பின்னர் உங்களுக்கு அதிகமான ஹதீஸ்கள் கிடைக்கப் பெறவுள்ளன. அவற்றுள் குர்ஆனுக்கு உடன்பாடானவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். அவை என்னிடமிருந்து வந்தவை என்பதை அறிந்து கொள்ளுங்கள். குர்ஆனுடன் முரண்படுகின்றவற்றை ஏற்காதீர்கள். அவை என்னிடமிருந்து வரவில்லை."

இந்தக் கருத்தை நிறுவ, அறிவு ரீதியான ஆதாரங்களை இமாம் ஸரக்ஸி பின்வருமாறு முன்வைக்கின்றார். குர்ஆனும் சுன்னாவும் நிறுவப்படும் வழியின் ஆதாரப்பூர்வத்தன்மையை மையப்படுத்தி அமைந்துள்ளன. திருக்குர்ஆன் முழுவதும் திட்டவட்டமாக நிறுவப்பட்டுள்ளது. ஆனால் சுன்னாவின் பெரும்பகுதி திட்டவட்டமற்றவை. எனவே அவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று முரண்படும்போது திட்டவட்டமானது முற்படுத்தப்பட்டு, திட்டவட்டமற்றது தவிர்க்கப்படும். இந்த விதி, குர்ஆனிலும் சுன்னாவிலும் பொதுவாகச் சொல்லப்பட்டவை, குறிப்பாகச் சொல்லப்பட்டவை என இரண்டிற்கும் பொருந்துகின்றது, ஏனெனில், குறிப்பான பரப்பிற்குரிய சட்டம் திட்டவட்டமானதாக அமைவது போலவே பொதுவான பரப்பிற்குரிய சட்டமும் திட்டவட்டமானதாகவே அமைகின்றது. அதேபோன்று பொருள்கோடலில் காணப்படும் திட்டவட்டமானவையும் திட்டவட்டமற்றவையும் இந்த விதிக்கு உட்பட்டவையாகும். ஏனெனில் குர்ஆனின் உள்ளடக்க வசனங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நம்பந்தகுந்தவை. சுன்னாவின் உள்ளடக்க வசனங்கள் அவ்வாறு இல்லை. ஏனெனில் நபித்தோழர்கள் நபியவர்களின் நேரடியான வார்த்தைகளை அன்றி அதன் கருத்துகளை அறிவிப்புச் செய்திருப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. பின்னர் அவர்கள் அறிவிப்புச் செய்த கருத்துகளே அதன் உள்ளடக்க வசனங்களாக மாறிவிடுகின்றன. பொதுவாக, ஒன்றைவிட மற்றொன்றை மேம்பட்டதாகக் கொள்ளும்போது, முதலில் அதன் உள்ளடக்க வசனங்களே கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அடுத்ததாகவே அதன் பொருள் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

குர்ஆனின் உள்ளடக்க வசனங்கள் முதவாதிரான முறையில் நகர்த்தப்பட்டிருக்கின்றமையால் நிச்சயம் அவை சுன்னாவை விட மேம்பட்டவை என்பதில் சந்தேகமில்லை. அந்த வகையில் குர்ஆனுடன் ஒரு சுன்னா முரண்படுகின்றது எனில் அது அந்த சுன்னாவில் ஒரு தவறு நடைபெற்றிருக்கிறது என்பதைக் குறித்துக் காட்டும் ஒரு முக்கிய ஆதாரமாகும்.

தொடர்ந்து இமாம் ஸரக்ஸி ஹதீஸை, திருக்குர்ஆன் மற்றும் மஷ்ஹூரான சுன்னாவுடன் ஒப்புநோக்குவதன் முக்கியத்துவம் குறித்துப் பேசுகிறார். இந்த விசயத்தில் ஹனபி மரபின் அணுகு முறையை சிலாகித்துப் பேசுகிறார். ஹதீஸ்களை இவற்றுடன் ஒப்புநோக்கியறிவது ஒரு சிறந்த கல்வி மாத்திரமன்றி மார்க்கத்தைப் பாதுகாக்கும் ஒரு செயல்பாடுமாகும். மார்க்கத்தில் நூதனங்கள் நுழைந்ததன் பின்புலத்தில் ஆஹாதான ஹதீஸ்களை திருக்குர்ஆன் மற்றும் மஷ்ஹூரான ஹதீஸ்களுடன் ஒப்புநோக்கி அறிந்து கொள்ள முற்படாதது ஒரு முக்கிய காரணம். அவற்றை நபியவர்களுடன் தொடர்புபடுத்துவது திட்டவட்டமற்றது என்றாலும் சிலர் அவற்றையும் மூலாதாரமாகக் கருதியிருந்தனர். மட்டுமின்றி குர்ஆனையும் மஷ்ஹூரான சுன்னாக்களையும் அவற்றுக்கு விளக்கமாகவும் முன்வைத்தனர். பின்பற்றி வர வேண்டிய ஒன்றை வழிநடத்தும் ஒன்றாக அவர்கள் மாற்றிவிட்டார்கள். திட்டவட்டமற்ற ஒன்றை அடிப்படையாக மாற்றிவிட்டார்கள். இதன் காரணமாக அவர்களையும் அறியாமல் பல பித்அத்களில் விழுந்துவிட்டார்கள். ஆஹாதான ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்வதை அவர் மறுத்துரைக்கும் போது கூறினார்: "இந்த விசயத்தில் எங்கள் மத்ஹபினரின் அணுகுமுறையே மிகவும் பொருத்தமானதாகும்; அவர்கள் ஒவ்வொரு ஆதாரத்தையும் அதற்குரிய இடத்தில் வைத்தார்கள். குர்ஆன், மஷ்ஹூரான சுன்னா ஆகியவற்றையே அவர்கள் ஆதாரமாகக் கருதினார்கள். திட்டவட்டமற்ற ஆஹாதான ஹதீஸ்களை அவர்கள் இவற்றுடன் ஒப்புநோக்கினார்கள். இவற்றுடன் உடன்பாடானவற்றை ஏற்றுக் கொண்டதுடன் இவற்றில் எந்தக் குறிப்பும் காணப்படாதவற்றையும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் இவற்றுடன் முரண்படுகின்றவற்றை மறுத்தார்கள்".

சிறிய வித்தியாசங்களுடன் இதே நிலைப்பாட்டைக் கடைபிடித்தவர்களுள் இமாம் மாலிக் முக்கியமானவர். ஈராக் அறிஞர்களைப் போலவே அவரும் ஆஹாதான ஹதீஸ்களை குர்ஆனுடன் ஒப்புநோக்கியே ஏற்றுக் கொண்டார். இமாம் மாலிக்,

ஆஹாதான சுன்னாவைவிட குர்ஆனின் வெளிப்படையான கருத்தை முற்படுத்துவார். அதுபோல் கியாஸ், மதீனாவாசிகளின் செயல் போன்றவற்றுடன் முரண்படுகின்ற ஆஹாதான சுன்னாவையும் ஏற்க மாட்டார். இமாம் ஷாதிபியும் ஆஹாதான ஹதீஸ்களை குர்ஆனுடன் ஒப்புநோக்கியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஹனபி மரபினரின் நிலைப்பாட்டை ஆதரித்துள்ளதுடன் இஸ்லாத்தின் முதல் தலைமுறையினரும் இவ்வாறே நடந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

ஹதீஸ் துறையாளர்களும் ஏனைய சிலரும் குர்ஆனையும் சுன்னாவையும் சமதரத்தில் வைத்து நோக்கினார்கள். சில சமயங்களில் குர்ஆன் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாகவும் சுன்னாவைக் கருதினார்கள். இவர்கள் சுன்னாவை குர்ஆனுடன் ஒப்புநோக்கி ஏற்றுக் கொள்ளுதல் என்னும் அணுகுமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனைக் கடுமையாக மறுத்ததுடன், குர்ஆனுடன் முரண்படும் ஆதாரப்பூர்வமான ஒரு ஹதீஸ் இருக்க முடியாது என்றும் கூறினார்கள். இவர்களது கருத்தை இமாம் இப்னு ஹஸ்ம் தம்முடைய வாசகங்களில் இப்படிச் சொல்கின்றார்: “அடிப்படையில் குர்ஆனுடன் முரண்படும் ஆதாரப்பூர்வமான ஒரு ஹதீஸ் இருப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. ஒவ்வொரு ஹதீஸும் ஷரீஅத்தாகவே கருதப்படுகின்றது. ஒன்று, அவை திருக்குர்ஆன் பேசுகின்றவற்றுடன் இணைந்தவை அல்லது இணையாமல் தனித்து நிற்பவை. இந்த இரு நிலைகளிலும் அவை குர்ஆனுக்கு விளக்கமாகவே அமைகின்றன. மூன்றாவது ஒரு வகை இதில் கிடையாது.” இவரது இந்த வார்த்தைகளைப் பார்க்கும்போது, இமாம் இப்னு ஹஸ்மும் இந்தக் கருத்தை வலியுறுத்திய ஏனையவர்களும் “மக்களுக்கு இறக்கப்பட்டவற்றை அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக” என்ற திருக்குர்ஆன் வசனத்தை, இறக்கப்பட்ட குர்ஆனை சுன்னாவின்மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்துதல் என்று பொருள்கோடல் செய்திருப்பதாக தெரிகிறது. மாறாக நாம் இதற்கு முன்னர் பலமுறை கூறியிருப்பது போன்று குர்ஆனை குர்ஆன் ஊடாகவே தெளிவுபடுத்துதல் என்பதுதான் இந்த வசனத்திற்கான மிகச் சரியான கருத்தாகும்.

ஹதீஸை குர்ஆனுடன் ஒப்புநோக்குவது அவசியமற்றது என்பதற்கு ஹதீஸ் துறையாளர்கள் ஒரு ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு வருகின்றார்கள். மிக்தாம் இப்னு மஃதீகரிப் அல்கின்தி ஊடாக அறிவிக்கப்பட்டு, இமாம் இப்னு மாஜா இதனைப் பதிவு செய்திருக்கின்றார். நபியவர்கள் கூறினார்கள்: “ஒரு காலத்தில்

எனது ஹதீஸ்களில் ஒன்று எடுத்துரைக்கப்படும் போது, சோபாவில் சொகுசாக அமர்ந்து கொண்டு ஒருவர் சொல்வார்: எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் குர்ஆன்தான் பேசும். அதில் ஹலால் என்று சொல்லப்பட்ட ஒன்றை நாங்களும் ஹலால் என்போம்; அதில் ஹராம் என்று சொல்லப்பட்ட ஒன்றை நாங்களும் ஹராம் என்போம் என்று சொல்வார். அறிந்து கொள்ளுங்கள் நபியவர்கள் ஹராமாக்கியவை அல்லாஹ் ஹராமாக்கியவற்றைப் போன்றவையாகும்.''

இந்த ஹதீஸ், குர்ஆனில் குறிப்பிடப்படாத தனித்த விசயங்களைப் பேசும் சுன்னாக்களை மறுப்பதைக் கண்டிப்பதாக இமாம் கத்தாபி கருதுகின்றார். இந்த வகை சுன்னாக்களை மறுப்பது, கவாரிஜ்கள், ராபிழீக்களின் நிலைப்பாடாகவே இருந்திருக்கிறது. அவர்கள் வெளிப்படையான குர்ஆனின் கருத்துக்களையே ஏற்றுக் கொண்டார்கள். குர்ஆனுக்கு விளக்கமாக அமையும் சுன்னாக்களை மறுத்தார்கள். இமாம் கத்தாபி கூறுகின்றார்: ''ஹதீஸை குர்ஆனுடன் ஒப்புநோக்குவது அவசியமற்றது என்பதை இந்த ஹதீஸ் உணர்த்துகிறது. நபியவர்கள் ஊடாக குறித்த ஒரு விசயம் வந்திருக்கின்றது என்பது உறுதிப்படுத்தப்படும் எனில் அது தன்னிலேயே ஓர் ஆதாரமாக இருக்கும்.''

இந்த விசயத்தில் நபியவர்களிடமிருந்து வந்ததாக உறுதிப்படுத்தப் பட்ட சுன்னாக்களையும் உறுதிப்படுத்தப்படாதவற்றையும் நாம் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே இமாம் ஷாஃபியுடைய கூற்றில் குறிப்பிடப்பட்டது போல், மிகவும் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்ட, ஆதாரப்பூர்வமான ஒரு சுன்னா ஒரு போதும் குர்ஆனுடன் முரண்படுவது சாத்தியமில்லை.

சுன்னா, குர்ஆனுடன் ஒப்புநோக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு ஆதாரமாக முன்வைக்கப்படுகின்ற ஹதீஸை அந்தத் துறையாளர்கள் பலவீனமானது என்கிறார்கள். மட்டுமின்றி, சிலர் அதனை இட்டுக்கட்டப்பட்ட போலியான ஒன்று என்கிறார்கள். இது ஸின்தீக்கள் ஊடாக இட்டுக்கட்டப்பட்ட ஒரு ஹதீஸ் என இமாம் யஹ்யா இப்னு முஈன் கூறியதாக இமாம் கத்தாபி பதிவு செய்துள்ளார்.

சுன்னாவை குர்ஆனுடன் ஒப்புநோக்கி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடு மிகவும் ஆபத்தானது என ஹதீஸ் துறையாளர்கள் கருதுகின்றனர். அது காலம் செல்லச் செல்ல சுன்னாவைக் கைவிட்டு குர்ஆனை மட்டுமே பின்பற்றும் இடத்திற்கு கொண்டு சென்று விடும் என்றும் இந்தக் கருத்துக்கு மார்க்கத்தில் எந்த இடமும் இல்லை.

இது முஸ்லிம்களின் இஜ்மாவுக்கு முற்றிலும் முரணானதாகும் என்கிறார்கள். இமாம் இப்னுல் கையிம் ஹதீஸ் துறையாளர்களின் கருத்தை ஆதரித்துப் பேசும்போது கூறுகிறார்: “சுன்னாவில் குறிப்பிடப்பட்டவை குர்ஆனில் குறிப்பிடப்படவில்லை என்ற காரணத்தால் மறுக்கப்படுகின்றன என்றால் நாம் அதிகமான சுன்னாக்களை மறுத்துரைக்க வேண்டி வரும். இது சுன்னாக்களை முழுமையாக ஒதுக்கிவிடும் நிலைக்கு எடுத்துச் செல்லும். குர்ஆனில் இல்லாத ஒன்று ஏற்கப்படவோ செயற்படுத்தப்படவோ மாட்டாது என்று ஒருவர் சொல்கின்றார் எனில் அது குறித்துதான் நபியவர்கள் எங்களுக்கு ஏற்கனவே எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.”

இந்தக் கருத்துவேறுபாட்டுத் தளத்தில் கவாரிஜ்கள், ராபிழீக்கள் மற்றும் இதர சிந்தனைப் பிரிவுகளின் ஈடுபாடு, இந்த நிலைப்பாட்டின் நியாயத்தைக் கண்டு கொள்வதற்குத் தடையாக இருந்திருக்கலாம். அத்துடன் சில பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள், சுன்னாவை குர்ஆனுடன் ஒப்புநோக்குதல் என்ற விவகாரத்தில், குர்ஆனின் சட்ட வசனத்திற்கு மேலதிகமான ஒன்று மறுக்கப்படும் என்ற விவகாரத்தையும் உள்ளே நுழைத்தனர். இதனால் குர்ஆனில் சொல்லப்பட்ட சட்டங்களுக்கு மேலதிகமான ஒரு சட்டத்தைச் சொல்லியிருக்கின்றது என்ற ஒரே காரணத்தைக் கொண்டு மட்டுமே பல ஹதீஸ்களை அவர்கள் மறுத்தார்கள்.

இவற்றைத் தவிர்த்துப் பார்த்தால், சுன்னாவை குர்ஆனுடன் ஒப்புநோக்குதல் என்ற சிந்தனையில் எந்தத் தவறும் இல்லை. அது மார்க்கத்தில் உருவாக்கப்பட்ட ஒரு பித்அத் அல்ல. இது நபித்தோழர்கள் காலத்திலும் பயன்பாட்டில் இருந்திருக்கிறது. ஹதீஸ்களை அதிகமாக அறிவிப்புச் செய்த நபித்தோழர்களாக இருந்தாலும் சரி, குறைவாக அறிவிப்புச் செய்த நபித்தோழர்களாக இருந்தாலும் சரி அனைவரும் இதனைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதனை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன் படுத்துவதற்குரிய ஒரு பொது விதியாகக் கருதவில்லை. மாறாக முரண்பாடுகளின்போது அல்லது குறித்ததொரு ஹதீஸின் ஆதாரப்பூர்வத் தன்மை குறித்து சந்தேகம் எழுகின்றபோது மட்டுமே இதனைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதுபற்றி இமாம் அபூஸஹ்ரா குறிப்பிடும்போது கூறுகிறார்: “குர்ஆனுடன் ஒப்புநோக்கியதன் அடிப்படையிலேயே ஹதீஸ்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற இமாம்களின் நிலைப்பாட்டைப் பொருத்தவரை, அவர்கள் இந்த விசயத்தில் அபூபக்ர் (ரழி), உமர்(ரழி), ஆயிஷா (ரழி) போன்ற

நபித்தோழர்களின் அணுகுமுறையையே கடைபிடித்திருக்கிறார்கள். இதனடிப்படையில் குறிப்பிட்ட இமாம்கள் பித்அத் செய்தவர்கள் அன்றி ஸஹாபாக்களின் அணுகுமுறையைப் பின்பற்றியவர்கள் என்றே கொள்ளப்பட வேண்டும்''.

ஆகவே சுன்னாவை குர்ஆனுடன் ஒப்புநோக்கி ஏற்றுக் கொள்ளுதல் என்ற சிந்தனை நியாயமான ஒரு சிந்தனை. இதன் எண்ணக்கருவை வரையறை செய்வதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மற்றும் அவை நிகழ்ந்த காலசூழ்நிலை போன்றவற்றின் காரணமாகவே இது குறித்த விமர்சனங்கள் எழுந்துள்ளதைக் காணலாம். மறுபுறம் ஹதீஸ் துறையாளர்கள்கூட இந்தச் சிந்தனையை முழுமையாக மறுக்கவில்லை. ஹதீஸின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வழிமுறையில் அதிலும் குறிப்பாக இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸை இனம்காணும் ஒரு முக்கிய அடிப்படையாக குர்ஆனின் வெளிப்படையான கருத்துடன் முரண்படாதிருக்க வேண்டும் என்பார்கள்.

## நான்காவது: சுன்னாவைக் கையாள்வதில் உள்ள கோட்பாட்டுச் சிக்கல்கள்

முஸ்லிம் அறிவு மரபில் அதிகம் பேசப்பட்ட இன்று வரை பேசப்படுகின்ற விவகாரங்களில் ஒன்று, குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான நுண்ணிய தொடர்பை எவ்வாறு வடிவமைப்பது என்பதாகும். திருக்குர்ஆன் சட்ட உருவாக்க மூலாதாரம் என்பதும் சுன்னா கட்டாயமாகக் கடைபிடிக்கப்பட வேண்டிய அதற்குரிய விளக்கவுரை என்பதும் தெள்ளத் தெளிவானது என்றிருந்த போதிலும் அவையிரண்டுக்கும் இடையிலான தொடர்பு குறித்த கேள்விகள் இன்னும் எழுப்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஏனெனில் சில அறிஞர்களின் கருத்துப்படி, குர்ஆனுக்குப் புறம்பாக சுன்னா தனித்து சட்டங்களை இயற்றக்கூடிய ஒரு மூலாதாரமாக இருக்க முடியும். இதனடிப்படையிலேயே சட்டக் கோட்பாட்டாளர்கள் சுன்னாவை சட்டவாக்கத்துக்கான இரண்டாவது மூலாதாரம் என்றும் குர்ஆனை முதலாவது மூலாதாரம் என்றும் கூறினர். இந்த சிந்தனையை, திட்டவட்டம், திட்டவட்டமின்மை என்ற கோட்பாட்டின் மீது கட்டமைத்தனர். திருக்குர்ஆன் திட்டவட்டமானது. ஆகவே அது முதல் தர மூலாதாரமாகவும் சுன்னா பொதுவாகத் திட்டவட்டமற்றது என்றவகையில் அது இரண்டாம் தர மூலாதாரமாகவும் கருதப்பட்டது.

அதே சமயம் இன்னும் சில அறிஞர்கள், குர்ஆனையும் சுன்னாவையும் இணைத்து நோக்கினார்கள். அவையிரண்டுமே வஹி, ஆனால் அவற்றின் அற்புதத்தன்மையிலும் வணக்கத்தன்மையிலுமே வேறுபாடு இருக்கின்றது என்றனர். இன்னும் சிலரிடத்தில் இரண்டு வஹிக்கள் என்ற பிரயோகமே புழக்கத்தில் இருந்திருக்கிறது. அவர்கள் இரண்டுக்கும் இடையில் வேறுபாடாக நோக்கியது என்னவெனில், குர்ஆனின் மொழியும் கருத்தும் வஹி. ஆனால் சுன்னாவின் கருத்து மாத்திரமே வஹி. திருக்குர்ஆன் அற்புதத் தன்மை வாய்ந்தது, ஆனால் சுன்னாவில் அந்த அற்புதத்தன்மை இல்லை. திருக்குர்ஆன் இறக்கப்பட்ட அதே வசனங்களையே ஓதவேண்டும். ஆனால் சுன்னாவை அதன் மொழியைத் தவிர்த்து கருத்தாக மாத்திரம் அறிவிப்புச் செய்யவும் முடியும். இந்த வகை சிந்தனைகள் சில ஆபத்தான நிலைப்பாடுகளுக்கு இட்டுச் சென்றுள்ளன. உதாரணமாக, திருக்குர்ஆன் முன்வைக்கும் ஒரு சட்டத்தை சுன்னா செல்லுபடியற்றதாக மாற்ற முடியும். மறுபுறம் சுன்னா முன்வைக்கும் ஒரு சட்டத்தை திருக்குர்ஆன் செல்லுபடியற்றதாக மாற்ற முடியும். அதேபோன்று குர்ஆனும் சுன்னாவும் ஒன்றை ஒன்று முரண்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அவ்வாறு முரண்படுகின்றபோது, ஏதேனும் ஒன்றின் சட்டத்தை செல்லுபடியற்றதாக்குதல் அல்லது ஏதேனும் ஒன்றுக்கு மாற்று விளக்கம் அளித்தல் அல்லது வேறு ஏதேனும் ஒரு வழி ஊடாக இணக்கப்பாடு காண வேண்டும் என்கிறார்கள். இதனால் சிலர் குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையில் மொழி, படித்தரம் சம்பந்தப்பட்ட ஒரு புறத்தோற்ற வேறுபாடு மட்டுமே இருக்கின்றது என்று கருதினார்கள். அந்த வகையில் குர்ஆனுக்கான விளக்கவுரையானது சுன்னா நிகழ்ந்த காலத்துடன் நெருக்கமான பிணைப்பைக் கொண்டது. திருக்குர்ஆன் இறங்கிய காலச்சூழல்தான் அதற்குரிய விளக்கவுரைக்கான காலசூழலுமாகும். அந்த விளக்கத்தை ஒருபோதும் மீறிச் செல்ல முடியாது. திருக்குர்ஆன் இறங்கிய காலத்தின் விளக்கவுரைக்கு வெளியில் வேறொரு விளக்கம் அதற்கு வழங்கப்பட முடியாது என்று கருதினர்.

திருக்குர்ஆன் கால, இட பரிமாணங்களை உள்ளடக்கிய புனித வசனங்கள் அல்ல என்ற கருத்தைத் தரக்கூடிய எந்த விளக்கங்களும் மிகவும் ஆபத்தானவை. அவற்றை நாம் கட்டாயமாகப் புறந்தள்ளி விடவேண்டும். திருக்குர்ஆன் கால, இட பரிமாணங்களுக்குள் வரையறுக்கப்பட்டது என்று கருதுகின்றபோது, அதன் வார்த்தைகள் அனைவரையும் நோக்கியது என்று சொல்வதிலோ அல்லது அவை

முழுமைப்பண்பைப் பிரதிபலிப்பவை என்று சொல்வதிலோ எந்த அர்த்தமும் கிடையாது. இவை அனைத்திலும் திருக்குர்ஆன் வரலாற்று ஓட்டத்தை உள்வாங்கிக் கொள்ளவோ அதனைக் கடந்து நிற்கவோ தகுதியற்றது என்று கருதுவதாகவே அது அமைந்து விடும். இங்குதான் குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான உறவின் நுண்ணிய வரையறை கவனத்தில் கொள்ளப்படாதது புலப்படுகிறது. அந்த வரையறையையே பின்வரும் திருக்குர்ஆன் வசனங்கள் குறித்து நிற்கின்றன: "அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ள விசயத்தை நீர் அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே நாம் உமக்கு வேதத்தை அருளினோம். இது நம்பிக்கையாளர்களுக்கு அருளாகவும் நேர்வழியாகவும் இருக்கின்றது" (நஹ்ல்: 64). "இந்த வேதத்தை நாம் உமக்கு அருளினோம். அது ஒவ்வொரு விசயத்தையும் தெளிவுபடுத்துவதற்காகவும் முஸ்லிம்களுக்கு அருளாகவும் நேர்வழியாகவும் நற்செய்தி கூறக்கூடியதாகவும் அமைய வேண்டும் என்பதற்காக" (நஹ்ல்: 89). "தூதரே! நீர் கூறும்: இந்த ஊரை கண்ணியப்படுத்திய இறைவனை வணங்கவே நான் ஏவப்பட்டுள்ளேன். ஒவ்வொன்றும் அவனுக்கே சொந்தமானது. முஸ்லிம்களில் ஒருவராக இருக்குமாறும் குர்ஆனை ஓதிக்காட்டுமாறும் நான் பணிக்கப்பட்டுள்ளேன். நேர்வழி பெறுகின்றவர் தம் நலனுக்காகவே நேர்வழி பெறுகின்றார். வழிகேட்டில் செல்கின்றவருக்கு நான் ஒரு எச்சரிக்கை செய்பவன் ஆவேன்" (நம்ல்: 91-92).

இந்த வசனங்கள் தெள்ளத் தெளிவாக தூதுத்துவத்தின் மையம் அல்லது சட்ட உருவாக்க மூலாதாரம் திருக்குர்ஆன் என்பதைக் குறிப்பிடுகின்றன. நபித்துவப் பணி என்பது அதனை எடுத்துரைப்பதும் தெளிவுபடுத்துவதும் மனித சமூகத்திற்கு அதன் சட்டங்கள், விழுமியங்கள் பற்றிய ஒரு நடைமுறை மாதிரியை வழங்குவதுமாகும். அந்த மாதிரியை உதாரணமாகக் கொண்டு மனித சமூகம் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் தனக்குரிய வழிமுறையை அமைத்துக்கொள்ள முடியும். அதே விசயத்தை மீண்டும் உருவாக்க வேண்டும் என்று மனித சமூகத்திடம் வேண்டப்படவில்லை. அவ்வாறு யாரேனும் நினைத்தால் அது தவறானது. குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான உறவின் இயல்பும் வேறுபாடும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை எனில் இந்த சிக்கலை தாண்டிச் செல்வது மிகவும் சிரமம். அது நம்முடைய மூலாதாரப் பரப்பில் பெரிய குழப்பத்தை ஏற்படுத்தி விடும்.

நம்முடைய சட்ட, ஹதீஸ் பாரம்பரியங்களில் காணப்படுகின்ற பல்வேறு சிந்தனைகள், குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் இடையிலான உறவைச் சிதைவடையச் செய்துள்ளன. உதாரணமாக, "சுன்னா அல்குர்ஆனின் சட்டங்களை இரத்துச் செய்யக் கூடியது", "சுன்னாவுக்கு குர்ஆன் அவசியப்படுவதை விடவும் குர்ஆனுக்கு சுன்னா அவசியமாகிறது". இவை உண்மையில் நுணுக்கமற்ற சில வார்த்தைகள். திருக்குர்ஆனுக்கும் சுன்னாவுக்கிடையிலான உறவு குறித்த அவர்களின் குழப்பமான சிந்தனையை எடுத்துக் காட்டுகின்றன.

கிளைச் சட்டங்களுக்கான ஆதாரங்களைப் பெற்றுக் கொள்வதில், குர்ஆனை விடவும் இலகுவான மூலாதாரமாக சுன்னா காணப்பட்டது. ஏனெனில் நடைமுறை நிகழ்வுகள், சம்பவங்களுடன் சுன்னா தொடர்புபட்டிருந்ததனால் பிற்பட்ட காலங்களில் அவற்றை ஒப்பீடு செய்து சட்டமுடிவுகளைப் பெற்றுக் கொள்வது இலகுவாக இருந்தது. இதனால் குர்ஆனும் சுன்னாவும் தனித்தனி மூலாதாரங்கள் என்ற சிந்தனை வலுப்பெற்றது. இதனோடு, சுன்னாவின் சட்ட மூலாதாரத் தன்மை கேள்விக்குட்படுத்தப்பட்டு அதனுடைய முக்கியத்துவம் குறைத்து நோக்கப்படும் முயற்சியும் மறுபுறத்தில் நடைபெற்றது. இது எதிர்மறையாக நிலைமையை இன்னும் சிக்கலாக்கியது. இதனால் குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான தொடர்பு ஒன்றையொன்று முழுமைப்படுத்தும் உறவுமுறை என்று இருப்பதற்குப் பதிலாக தற்போதுள்ள சிக்கலான சிந்தனைகள் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டன.

## 1. சட்டக் கோட்பாட்டியல் மரபில் உள்ள சிக்கல்கள்

நபியவர்களின் பணிகளை விளங்கிக் கொள்வதிலும் அவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை அறிந்து கொள்வதிலும் நவீன ஆய்வாளர்கள் சிலரிடம் ஒரு தெளிவற்ற நிலை காணப்படுகிறது. அவற்றுக்கிடையில் வேறுபாடுகளைக் கண்டறிவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. நபியவர்களது ஒவ்வொரு பண்பையும் பணியையும் வேறுபடுத்துவதில் இன்னும் விரிவான ஆழமான ஆய்வுகள் அவசியப்படுகின்றன. ஆரம்ப கால சட்டக் கோட்பாட்டாளர்கள் இந்த விசயத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பணியைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் நபியவர்களின் தூதுத்துவப் பண்பு, மனிதப் பண்பு, தலைமைத்துவப் பண்பு போன்ற அம்சங்களை அவதானித்ததன் அடிப்படையில் நபியவர்களின் பணிகளை வேறுபடுத்தி நோக்கி யுள்ளனர். நபியவர்கள் மனிதர் என்ற வகையில் மேற்கொண்ட

நடவடிக்கைகளையும் ஒரு தூதர் என்ற வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் கற்பித்தல் நோக்கத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஆட்சித் தலைவர் என்ற வகையில் மேற் கொண்ட நடவடிக்கைகளையும் அல்லது வேறு ஏதேனும் ஓர் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் வேறுபடுத்தி நோக்கியுள்ளார்கள். ஆனால் அவர்கள் இந்த அணுகுமுறையை நபியவர்களின் வார்த்தைகளில் முறையாகப் பிரயோகிக்கவில்லை.

சட்ட வாக்கத்துக்கு உட்பட்ட சுன்னாக்களையும் சட்டவாக்கத்துக்கு உட்படாத சுன்னாக்களையும் சட்டக் கோட்பாட்டாளர்கள் மிகச் சரியாக வேறுபடுத்தவில்லை. காரணம், அவர்கள் சுன்னாவைக் கையாளும்போது, ஹதீஸ் துறையாளர்களின் நிலைப்பாடுகளை அவ்வாறே ஏற்றுக் கொண்டார்கள். அவை தொடர்பாக தங்களின் மத்ஹப் இமாம்களிடம் குறித்ததொரு நிலைப்பாடு காணப்பட்டால், அதற்குரிய வகையில் அவற்றைப் பயன்படுத்தினார்கள். மீதமுள்ள வற்றில் ஹதீஸ் துறையாளர்கள் முன்வைத்துள்ள வரையறைகளை உதாரணமாக ஸஹீஹ், ஹஸன், மஷ்ஹூர், முஅல்லல், முதல்லஸ், முஅன்அன் போன்றவற்றை மாற்றமின்றி ஏற்றுக் கொண்டார்கள். இதனால் சுன்னா என்பது வரையறை வேறுபாடுகளின்றி அனைத்தும் சட்டவாக்கத்துக்கு உட்பட்டவையாகக் கருதப்பட்டன. நபியவர்கள் மனித இயல்பின் அடிப்படையில் மேற்கொண்டவற்றையும்கூட அடிப்படையில் அவை சட்டவாக்க அந்தஸ்த்தைப் பெறுகின்றன என்றும் அதனால் அவை சட்டங்களை உற்பத்தி செய்யும் தகுதி கொண்டவை என்றும் கருதப்பட்டன. ஆனால் அவற்றை நபியவர்கள் மனித இயல்பின் அடிப்படையில் அல்லது வழக்காற்றின் அடிப்படையிலேயே செய்துள்ளார்கள் என்பது நிரூபனமாகின்றபோது மட்டுமே அவை சட்டவாக்கத்திற்கு உட்படாதிருக்கின்றன என்றார்கள். இதற்கு அப்பால் குர்ஆனுக்கு நிகரான தனித்த சட்ட அதிகாரத்தை சுன்னாவுக்கும் வழங்கியதால், நபியவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் ஒவ்வொரு ஹதீஸும் ஷரீஆவாக நோக்கப்பட்டன. அதாவது ஒரு ஹதீஸ் குறிப்பாக எதனையும் சுட்டிக் காட்டாவிட்டாலும் அது ஆகுமானது என்ற சட்டத்தை முன்வைப்பதாகக் கருதினார்கள். இந்தப் பின்புலத்தி லேயே முபாஹ் என்னும் ஆகுமானது என்ற சட்ட வரையறை தொடர்பில், அது ஷரீஅத் ரீதியான ஒரு சட்டமா அல்லது பகுத்தறிவு ரீதியான ஒரு சட்டமா என்பதில் பலத்த கருத்து வேறுபாடு நிலவுகிறது. பெரும்பான்மையினர் அதனை ஷரீஅத் ரீதியான ஒரு சட்டமாகக் கருதி, ஐவகை சட்ட முடிவுகளில் ஒன்றாக

அதாவது, வாஜிப், ஹராம், மன்தூப், மக்ரூஹ் என்பவற்றுடன் ஐந்தாவதாக முபாஹ் என்னும் ஆகுமானது என்பதையும் இணைத்துக் கொண்டார்கள். அவர்கள் முபாஹ் என்பது ஷரீஅத் ரீதியான ஒரு சட்டம் பகுத்தறிவு ரீதியானதல்ல என்று சொல்வதன் ஊடாக, குறித்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமானதா இல்லையா என்பதுடன் பிரச்சினையை சுருக்கி விட்டார்கள், அதாவது ஒரு ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது என்று நிறுவப்பட்டால் பிரச்சினை முடிந்து விட்டது, ஏனெனில் எந்த நிலையிலும் அது ஷரீஅத்தாகவே கருதப்பட்டது.

## 2. சுன்னாவைக் கையாள்வதில் சட்ட அணுகுமுறையின் செல்வாக்கு

சட்டப்பகுதிக்குக் கொடுக்கப்பட்ட அதிக முக்கியத்துவத்தினால் குர்ஆனும் சுன்னாவும் சட்டங்களுக்கான மூலாதாரம் என்றே நோக்கப்பட்டது. இதனால் அவையிரண்டும் மனித நாகரீகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் உரிய மூலாதாரங்கள் என்ற கருத்து முஸ்லிம் சிந்தனையை விட்டு சற்று மறைந்து போனது. ஆகவே சட்டப்பகுதி பெற்றுக் கொண்ட அதே முக்கியத்துவத்தையும் அழுத்தத்தையும் ஏனைய பகுதிகளும் பெற்றுக் கொள்வதற்குரிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அடுத்து ஏற்கனவே குறிப்பிடப்பட்டதுபோன்று சுன்னா நேரடியாக நிகழ்வுகளுடனும் சம்பவங்களுடனும் சம்பந்தப்பட்டது என்ற வகையில் கிளைச் சட்ட விவகாரங்களுக்கு, குர்ஆனைவிட சுன்னாவை ஆதாரமாகக் கொள்வது இமாம்களுக்கு இலகுவாக இருந்துள்ளது. இதனால் இரண்டுமே தனித்தனி மூலாதாரங்கள் என்ற கருத்து வலுப்பெற்று, அந்த சிந்தனையின் அடிப்படையிலான சட்டப் பெறுமானங்கள் நீண்டதொரு பயணத்தைக் கடந்து வந்து விட்டன. இன்று அது விவாதத்துக்கு உட்படுத்தப்பட முடியாத ஒரு முற்றுண்மையாக மாறிவிட்டிருக்கிறது.

குர்ஆன், சுன்னா மீதான கிளைச் சட்ட வாசிப்பு அணுகுமுறை காரணமாக ஒரே கட்டமைப்பாக குர்ஆனைப் புரிந்து கொள்வதிலும் ஒரே கட்டமைப்பாக சுன்னாவைப் புரிந்து கொள்வதிலும் அதுபோல் இரண்டையும் ஒன்றிணைந்த சட்ட மூலதாரங்களாக — அவற்றுள் ஒன்று, தெளிவுபடுத்துவதற்குரியது மற்றொன்று தெளிவுபடுத்தப்படுவதற்குரியது — புரிந்து கொள்வதிலும் தவறு விடப்பட்டிருக்கிறது. அதனால் குர்ஆனும் சுன்னாவும் படித்தர வரிசையில் அடுத்தடுத்து வரக்கூடிய மூலாதாரங்கள் என்ற சிந்தனையே வலுப்பெற்றுள்ளது. சில தவறான அனுமானங்கள் மற்றும் மிகவும் பலவீனமான ஒரு ஹதீஸ் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இமாம்களால் இந்தப் படித்தர வரிசை அமைக்கப்பட்டுள்ளது.

முதலாவது அனுமானம்: குர்ஆனிய வசனங்கள் முற்றுப் பெற்றவை. ஆனால் தீர்வு அவசியப்படும் பிரச்சினைகள் முற்றுப் பெறாதவை என்றனர். "அனைத்தையும் தெளிவுபடுத்தக்கூடியதாகவே நாம் உங்களுக்கு வேதத்தை இறக்கினோம். அது முஸ்லிம்களுக்கு அருளாகவும் நேர்வழியாகவும் நற்செய்தியாகவும் இருக்கின்றது" (நஹ்ல்: 89) என்று திருக்குர்ஆன் கூறுகின்றபோது அதன் வசனங்கள் முற்றுப்பெற்றவை என்று எவ்வாறு கூறமுடியும்? தொடர்ந்து இரண்டு வசனங்களுக்குப் பிறகு சில பொது விதிகளை முன்வைக்கிறது. அதனூடாக குர்ஆன், மனித வாழ்வில் நிகழ்ந்துள்ள, நிகழவுள்ள அனைத்து விவகாரங்களையும் இணைத்து எவ்வாறு கையாள்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மனித வாழ்வுக்கு மிகவும் பொருத்தமான ஒரு மதிப்பீட்டை அது வழங்குவதுடன் நடைமுறைக்குச் சிறந்த ஒரு மாதிரியை சுன்னா வழங்குகின்றது. மனித வாழ்வு தொடர்பாக திருக்குர்ஆன் எதனையும் விட்டுவிடவில்லை என்பதை குர்ஆனே குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

இரண்டாவது அனுமானம்: குறித்த ஹதீஸில் முஆத் (ரழி) அவர்கள், குறித்த பிரச்சினைக்கு குர்ஆனில் தீர்வு கிடைக்க மாட்டாது என்ற நிலையிலேயே ஹதீஸில் தீர்வைத் தேட முற்படுகின்றார். இது குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான தொடர்பு குறித்து அவையிரண்டும் வரைந்து காட்டிய விசயத்துடன் முரண்படுகிறது. அதே சமயம் இங்கு மற்றொரு சிக்கலும் இருக்கிறது. குர்ஆனிலும் சுன்னாவிலும் தீர்வு இல்லாத போதே பகுத்தறிவுப் பிரயோகம் நடைபெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் மனிதனின் முதல் கடமை அல்லாஹ்வை அறிந்து கொள்வது என்பதை ஷரீஅத் ஆதாரங்கள் வழியாக நாம் அறிந்து வைத்திருக்கிறோம். இந்த அறிதல் முறை பகுத்தறிவு சார்ந்தது. பகுத்தறிவிலிருந்து ஆரம்பித்து நபியவர்கள் கொண்டு வந்த அற்புதத்தை விளங்கி, இறுதியில் அவரது தூதை ஏற்றுக் கொள்வதாக அது அமைகிறது.

இந்த உண்மையை நாம் புரிந்து கொண்டால், சுன்னாவின் தனித்த சட்ட மூலதாரத் தன்மை மற்றும் அது குர்ஆனுக்குத் தீர்ப்புச் சொல்லும் நிலை அல்லது திருக்குர்ஆன் சுன்னாவைக் கட்டுப்படுத்துதல் போன்ற விவகாரங்களில் அன்றும் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வாதங்கள் அனைத்தும், ஒரு மனிதனிடம் குறித்த உண்மைகளுக்கும் அவனது அறிவாற்றலுக்கும் இடையில் நிகழும் இடையீடுகளின் காரணமாகவே ஏற்பட்டுள்ளன என்பதைக் கண்டுகொள்ளலாம். ஏனெனில் அவனது அறிவாற்றல் மிக முக்கியமானதில் இருந்து படிப்படியாகவே நகர்ந்து செல்ல வழியமைக்கின்றது.

உங்களுக்கு இவ்வாறு ஒரு கேள்வி தோன்றலாம்: ஆய்வாளர் ஒருவர் ஒரு பிரச்சினை குறித்துத் தேடுகின்றபோது, அந்தப் பிரச்சினை குறித்த ஹதீஸ்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி அவற்றை ஒழுங்குபடுத்தி அவற்றில் நாஸிக், மன்சூக், வரையறைக்குற்பட்டவை, வரையறைக்குற்படாதவை, சுருக்கமானவை, விளக்கமானவை என அனைத்தையும் ஆய்வுக்கு உட்படுத்துகின்றார் எனில் இதனை ஒரு மொத்த வாசிப்பு என்று சொல்லலாம் அல்லவா? இதனைப் பகுதியான வாசிப்பு என்று ஏன் அழைக்க வேண்டும்?

பதில்: மொத்த வாசிப்பு என்பதன்மூலம் இந்த வகையான அணுகுமுறையை நாம் குறிப்பிடவில்லை. முதல் பார்வையில் இது மொத்த வாசிப்புபோல தோன்றினாலும் உண்மையில் இது குர்ஆன் மற்றும் சுன்னாவின் மொத்த விழுமியங்களைச் சுற்றிச் சுழலவில்லை. மாறாக ஒரு கிளை விவகாரத்தைச் சுற்றியே சுழல்கின்றது. மொத்த வாசிப்பு என்பதன்மூலம் பொதுவான பண்புகள் மற்றும் விழுமியங்களே நாடப்படுகின்றன. வஹி பற்றிய மொத்தப் பார்வை, படைப்பின் நோக்கம், பிரபஞ்சம், அதில் மனித வாழ்வு பற்றிய சிந்தனை போன்றவற்றின் ஊடாகவே இவை பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இவை பிறவற்றைக் கட்டுப்படுத்தும் விழுமியங்கள். உதாரணமாக, ஏகத்துவம், தூய்மைப்படுத்தல், அபிவிருத்தி, நீதி, சுதந்திரம், மனிதனின் அடிப்படையான தேவைகள், அழகியல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய பொது விழுமியங்கள் நமக்கான வரையறைகள், கோட்பாட்டுச் சட்டகங்களை அமைத்துத் தருகின்றன. வஹியை அணுகுவதற்கான பொது விதிகளை இடுகின்றன. இவற்றின் துணைகொண்டு பின்னர் கிளை விவகாரங்கள் அணுகப்படுவதும் புரிந்து கொள்ளப்படுவதும் இலகுவாகிறது. ஆனால் இந்த அணுகுமுறை மறக்கப்பட்டு கிளைச்சட்ட அணுகுமுறையே மிகைத்து நின்றுள்ளது. இதனாலேயே மொத்த வாசிப்பு அணுகுமுறைக்கான தேவை இல்லாமல் போய்விட்டது.

## 3. அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டின் தனித்த பிரயோகம்

சுன்னாவை ஆதாரப்பூர்வமானதாகக் கருதுவதில் அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாடே உச்சமாகக் கருதப்பட்டது. அதனை மிகைத்த வேறு எந்தக் கோட்பாடும் காணப்படவில்லை. அதாவது சுன்னாவையும் குர்ஆனைப் போன்று தெளிவாக வரையறுக்கப்பட்ட வார்த்தைகளாகவே நோக்கினர். அந்த வகையில் அதன் அறிவிப்பாளர் வரிசை ஆதாரப்பூர்வமானது என்றிருப்பின் அது போதுமானது, வேறு எதனையும் பார்க்க

வேண்டிய அவசியமில்லை என்று கருதினர். ஆனால் சுன்னாவின் உள்ளடக்க வசனங்களின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுவதற்குரிய அளவுகோல்களில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அதற்கான விஞ்ஞானப்பூர்வமான பல அளவுகோல்களை ஹதீஸ் துறையாளர்களே முன்வைத்திருக்கிறார்கள். அவை அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டுடன் இணைந்து சுன்னாவை மதிப்பீடு செய்யும் பணியை முழுமைப்படுத்த முடியும். இந்த அணுகுமுறையின் ஊடாகவே சுன்னாவை தனித்த வசனங்களாகவன்றி குர்ஆனுடைய வாழ்வு முறைக்கான வழியாகவும் அதன் போதனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் மாதிரியாகவும் புரிந்து கொள்வதற்கான வாயில் திறக்கப்படுகிறது. அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டுக்கு இந்தளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டதற்கு ஒவ்வொரு தலைமுறையினரும் முதவாதிரான வடிவில் குர்ஆனை நகர்த்தியதால்தான் அது தனது திட்டவட்டத்தன்மையை பெற்றுக் கொண்டுள்ளது என்ற கருத்து முக்கிய காரணமாகும். ஆனால் உண்மையில் குர்ஆனை அதன் உள்ளடக்கத் தரத்தினூடாகவே அல்லாஹ் பாதுகாக்கிறான். அது நகர்த்தப்பட்ட வழி குறைந்த தொகையினர் என்பதாலோ அதிகமானோர் என்பதாலோ அதன் உள்ளடக்கத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அதன் திட்டவட்டத் தன்மைக்கும் பாதுகாப்புக்கும் இதற்கும் இடையில் எந்த சம்பந்தமும் இல்லை.

ஹதீஸ் துறையாளர்களும் பல சட்டவியலாளர்கள் கடைபிடித்தது போன்று இரண்டு அணுகுமுறைகளையும் இணைத்துப் பயன் படுத்தியிருப்பார்கள் எனில் சிறப்பாக இருந்திருக்கும். அதாவது, ஒரு ஹதீஸின் ஆதாரப்பூர்வத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதுடன், அதன் உள்ளடக்க வசனங்களை அளவிடுவதற்கான அளவு கோல்களையும் பயன்படுத்தி, இஸ்லாத்தின் உயர் விழுமியங்களான ஏகத்துவம், தூய்மையாக்கம், அபிவிருத்தி போன்றவற்றின் ஒளியில் நின்று அவற்றை ஆய்வு செய்திருந்தால் அது மிகவும் சிறப்பாக இருந்திருக்கும். இந்த இரு அணுகுமுறைகளும் ஒருசேர பயணித்திருப்பின், 'முரண்பட்ட ஹதீஸ்கள்' அல்லது 'சுன்னாவின் சட்ட மூலாதாரத்தன்மை' போன்ற தலைப்புக்களில் பெரிய அளவிலான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைந்திருக்கும். அதுபோல் 'குர்ஆனியவாதிகள்' (அஹ்லுல் குர்ஆன்) என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட நூதனவாதமும் தோற்றம் பெற்றிருக்காது. உண்மையில் அவர்கள் குர்ஆனியவாதிகள் அல்ல. ஏனெனில் உண்மையான குர்ஆனியவாதி

ஒருபோதும் சுன்னாவை மறுக்கமாட்டார் அல்லது தான் விரும்பியவாறு அதற்கு விளக்கமளிக்கவோ தான் விரும்பியவாறு சிலவற்றை ஏற்கவோ மறுக்கவோ முற்பட மாட்டார்.

தற்காலத்தவர்கள் மத்தியில் காணப்படுகின்ற அநேகமான வாதப்பிரதிவாதங்களுக்கு மிக முக்கியமாக இவற்றுள் ஏதேனும் ஒரு அணுகுமுறையை மட்டுமே கைக்கொண்டு மற்றதை கவனத்தில் கொள்ளாததுதான் காரணமாகும். சிலர் அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டை மட்டுமே பிரயோகிக்கின்றனர். அதனடிப்படையில் ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது எனில் அதன் உள்ளடக்க வசனங்களின் பொருத்தப்பாடு குறித்து அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. ஏனெனில் ஹதீஸினுடைய அறிவிப்பாளர் வரிசை ஆதாரப்பூர்வமானது எனில் அது அபாயக் கட்டத்தைத் தாண்டி விட்டது என்று அவர்கள் கருதுகிறார்கள். இன்னும் சிலர் அறிவிப்பாளர் வரிசை குறித்து சிறிதும் கவனத்தில் எடுப்பதில்லை. குறித்த ஹதீஸைப் பதிவு செய்திருப்பது இமாம் புகாரியா அல்லது முஸ்லிமா அல்லது தபரானியா அல்லது இப்னு மாஜாவா அல்லது வேறு யாராவதா என்பது அவருக்கு முக்கியமில்லை. அதன் உள்ளடக்க வசனத்தை மதிப்பிடுவதற்குரிய அளவுகோல்களை அதன் மீது பிரயோகிப்பார். சில சமயங்களில் இந்தத் துறை வளர்ச்சியடைந்த காலத்திற்குப் பின்னர் இந்த அளவுகோல்களை அபிவிருத்தி செய்வது குறித்து யாரும் பேசாததன் காரணமாக ஆரம்ப காலத்தவர்களால் பேசப்படாத அளவுகோல்களையும்கூட பிரயோகித்திருப்பார். இதனால் அடுத்தவர்களின் விமர்சனங்களுக்கு உட்படுகின்ற நிலை ஏற்படுகின்றது. இவர் தம் மனஇச்சைப்படி செயல்படுகின்றார் என்றும் அறிவியல் முக்கியத்துவமற்ற தனிப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் செயல்படுகின்றார் என்றும் இதுபோன்ற தவறுகளில் ஒரு ஆய்வாளர் விழுவது பொருத்தமானதல்ல என்றும் கூறுவர்.

அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டையும் உள்ளடக்க வசனங்களை மதிப்பிடுதல் பற்றிய கோட்பாட்டையும் இணைத்து விமர்சன ரீதியான ஒரு ஆய்வுக்கு உட்படுத்தாதவரை இந்த சிக்கலில் இருந்து வெளியில் வருவது சிரமமானது. இவ்விரு கோட்பாடுகளும் தோற்றம் பெற்ற அறிவியல் வரலாற்றுப் பின்புலம் எது? அதில் இவற்றின் வளர்ச்சிப் போக்கு எவ்வாறு இருந்திருக்கிறது? இவற்றைத் தனியாகவோ இணைத்தோ பிரயோகிப்பதில் இமாம்களின் அறிவுப் பங்களிப்புகள் எத்தகையவை? இவற்றுள் ஏதேனும் ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் மட்டுமே மதிப்பிடப்பட்டுள்ள ஹதீஸ்கள் எவை? இவற்றின் வளர்ச்சி ஓட்டம் தடைப்பட்ட

சந்தர்ப்பங்கள் இருக்கின்றனவா? அச்சமயங்களில் இமாம்களின் பங்களிப்புகள் எவ்வாறு காணப்பட்டுள்ளன? இந்தக் கோட்பாடுகளை மீள்வாசிப்புச் செய்வதற்கான வாய்ப்புக்கள் என்ன? போன்ற பல்வேறு விவகாரங்கள் குறித்த விமர்சனப்பூர்வமான ஆய்வின் அவசியப்பாடு இருக்கின்றது.

பொதுவாக ஹதீஸ் துறையாளர்களில் அறிவிப்பாளர் வரிசை பற்றியோ உள்ளடக்க வசனம் பற்றியோ ஹதீஸ் துறை வரலாறு பற்றியோ ஹதீஸ் அறிவிப்பாளர்கள் பற்றியோ அறிவிப்பாளர்களைக் குறைகாணல் மற்றும் சரிகாணல் கலையிலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு பகுதியிலோ கவனம் செலுத்திய அனைவரும் எதிர்கொண்ட மிகவும் முக்கியமான சவால் எதுவெனில், போலியான ஹதீஸ்களின் தோற்றம் மற்றும் அதிலிருந்து ஹதீஸ்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதாகும். இதனாலேயே அறிவிப்பாளர் வரிசை குறித்தும் ஹதீஸ்களின் ஆதாரப்பூர்வத் தன்மை குறித்தும் அவர்களின் கவனம் அதிகமாகவே குவிந்திருக்கிறது. ஏனைய பகுதிகள் குறித்து போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அதாவது நவீன காலத்தின் சவாலாகக் கருதப்படும் ஹதீஸ்களின் உள்ளடக்க வசனங்களின் மதிப்பீடுகள் குறித்து அன்று அவர்கள் பெரிய பிரச்சினையை எதிர்கொள்ளவில்லை. ஆனால் இன்றைய நிலையில் ஹதீஸ் திறனாய்வுக் கலையினுள் முக்கியமாக உள்வாங்கப்பட வேண்டிய ஒரு பகுதியாக இது காணப்படுகின்றது. முரண்பட்ட ஹதீஸ்கள் என்ற விவகாரம் தோற்றம் பெற்றபோது, அதாவது ஹதீஸ்களுக்கிடையில் முரண்பாடுகள் இருப்பதுபோல் தோன்றுகின்ற சமயம், அவற்றுள் அறிவிப்பாளர் வரிசையின் அடிப்படையில் ஆதாரபூர்வமானதாகக் கருதப்பட்ட ஹதீஸ்களுக்கு விளக்கங்கள் வழங்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அவற்றின் பொருள், மொழிவிளக்கம் போன்றனவற்றில் தொடர்ந்தும் கேள்விகள் இருந்து வந்துள்ளன.

பகுதி நான்கு

# அறிவிப்புகளின் மிகை வகிபாகம் எவ்வாறு நடைபெற்றது?

## ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

*நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் வழிகாட்டல்கள் சிறந்து பின்பற்றப்படும் நிலையில் காணப்பட்டிருந்தால், குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான தொடர்பு குறித்த ஒரு சர்ச்சைக்குரிய தலைப்பு தோன்றியிருக்காது. திருக்குர்ஆன் கூறுகிறது: "அவர் அவர்களுக்கு அல்லாஹ்வின் வசனங்களை ஓதிக் காட்டுகிறார். அவர்களைத் தூய்மைப்படுத்துகின்றார். அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். இதற்கு முன்னர் அவர்கள் தெளிவான வழிகேட்டிலேயே இருந்தார்கள்" (ஆலஇம்ரான்: 164). ஆனால் நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு உள்ளங்கள் மாற்றமடைந்தன. அவற்றில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. வேறுபட்ட விளக்கங்கள் வெளிப்பட்டன. இந்தப் பின்புலத்திலேயே இந்த உறவுச் சிக்கல் தோற்றம் பெற்றிருக்கிறது. இதன் வழியாக நம்முடைய எத்தனையோ கலைகளில் ஒரு சிக்கல் நிலை தொடர்ந்து ஏற்பட்டது மட்டுமின்றி சுன்னா அறிவிப்புச் செய்யப்படக் கூடிய மொழியிலும்கூட இந்த சிக்கல் ஏற்பட்டது. சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் குர்ஆனுடன் இணைந்து செயல்பட்ட ஒரு மூலாதாரம் என்ற வகையில், திருக்குர்ஆன் மற்றும் சுன்னா குறித்து இந்த உம்மத்தின் ஒவ்வொரு தலைமுறையும் கொண்டிருந்த நிலைப்பாடுகள் குறித்த ஒரு வரலாற்றுப் பார்வையை அறிந்து கொள்வது அவசியம் என்று கருதுகின்றோம். சுன்னாவைப் பெற்றுக் கொண்ட முதல் தலைமுறை, அதனை அறிவிப்புச் செய்த தலைமுறை, அறிவாய்வில் ஈடுபட்ட சட்டவியல் தலைமுறை, சுய ஆய்வின்றி பிறர் ஆய்வில் தங்கிய தலைமுறை ஆகிய தலைமுறைகள் பற்றி அடுத்து இங்கு ஆராயப்படுகின்றது.*

## முதலாவது: நேரடியாகப் பெற்றுக் கொண்ட முதல் தலைமுறை

குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான உறவு எத்தகையது என்பது முதல் தலைமுறையினரிடத்தில் தெள்ளத் தெளிவாக இருந்தது. அதனால் சிக்கல் நிலையொன்று அங்கு காணப் படவில்லை. நபியவர்கள் திருக்குர்ஆன் இறங்குகின்ற சமயங்களில் அவர்களுக்கு அதனை ஓதிக் காட்டுவார்கள். அதனை எவ்வாறு ஓத வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும் என்பதையும் தம்முடைய வாழ்வில் எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் கற்பிப்பார்கள், இது அவர்களுக்கு மிகவும் பழக்கமான ஒரு விசயமாக இருந்திருக்கிறது. அவர்களின் கேள்விகளுக்கு நபியவர்கள் பதில் தருவார்கள். அவர்கள் மத்தியிலான உறவுகளை சீரமைப்பார்கள். ஹலாலையும் ஹராமையும் தெளிவுபடுத்துவார்கள். நல்லதையும் கெட்டதையும் சத்தியத்தையும் அசத்தியத்தையும் வேறுபடுத்துவார்கள். சில சமயங்களில் அவர்களிடமிருந்து எந்தக் கேள்வியும் எழாதபோதும் திருக்குர்ஆன் இறங்கியிருக்கின்றது. இன்னும் சில சமயங்களில் அவர்களின் ஒரு கேள்விக்கு விடையாக அல்லது அவர்கள் எதிர்கொண்ட ஒரு பிரச்சினைக்குத் தீர்வாக திருக்குர்ஆன் இறங்கியிருக்கிறது. இதனால் நபித்தோழர்களிடம் கேள்விகள் தோன்றுவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகவே இருந்திருக்கின்றது. திருக்குர்ஆன் குறிப்பிடுவதுபோல் சுமார் பதினைந்து கேள்விகளே அவர்களால் கேட்கப்பட்டிருக்கின்றன. திருக்குர்ஆன் "அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர்" என்று குறிப்பிட்டுவிட்டு அதற்கான பதிலைத் தொடர்ந்து வழங்கியிருக்கிறது. இவற்றுள் எட்டுக் கேள்விகள் சட்டங்களுடன் சம்பந்தப்பட்டவை. இவற்றுக்குச் சட்டம் சொல்வது தமக்குப் பொறுப்பான ஒரு விசயம் என்றிருப்பின் நபியவர்கள், திருக்குர்ஆன் பதில் தரும் வரையில் காத்திராமல் அவற்றுக்குப் பதில் வழங்கியிருப்பார்கள்.

சில சமயங்களில் மக்கள் கேள்வி எழுப்பாத விசயங்கள் குறித்தும் தெளிவுபடுத்துமாறு நபியவர்கள் கேட்கப்படுவார்கள். "வாருங்கள், உங்களின் இறைவன் உங்களுக்குத் தடுத்துள்ளவற்றை நான் ஓதிக்காட்டுகிறேன். அவனுக்கு எதனையும் நீங்கள் இணையாக்காதீர்கள். பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். வறுமைக்குப் பயந்து உங்கள் பிள்ளைகளைக் கொலை செய்யாதீர்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் நாம்தான் உணவளிக்கிறோம். வெளிப்படையான, மறைமுகமான மானக்

கேடான பாவங்களை நெருங்கவும் வேண்டாம். அல்லாஹ் கண்ணியப்படுத்திய உயிர்களை நியாயமான காரணமின்றி கொலை செய்ய வேண்டாம். இதுதான் எங்களுக்கு உபதேசிக்கப்படுபவை. இதன்மூலம் நீங்கள் அறிவு பெறுவீர்கள். அநாதைகள் அவர்களின் பருவத்தை அடையும் வரை முறையான ஒழுங்கிலேயே அவர்களது செல்வத்தைக் கையாளுங்கள். அளவை, நிறுவையில் முழுமையான நீதியைக் கடைபிடியுங்கள். நாம் எந்த ஒருவருக்கும் அவரது சக்திக்கு அப்பால் பொறுப்புக்களை வழங்குவதில்லை. பேசினால் நீதியுடன் பேசுங்கள். அது உங்கள் உறவினரின் விவகாரமாக இருந்தாலும் சரியே. அல்லாஹ்வுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுங்கள், இதுவே உங்களுக்கு உபதேசிக்கப்பட்டவை. இதன்மூலம் நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவீர்கள். இதுவே எனது நேரான வழியாகும். இதனையே பின்பற்றுங்கள். வேறு வழிகளைப் பின்பற்ற வேண்டாம். அவை உங்களை நேர்வழியை விட்டு திசை திருப்பி விடும். இதுவே உங்களுக்கான உபதேசமாகும். இதன்மூலம் நீங்கள் இறையச்சம் கொண்டவர்களாவீர்கள்" *(அன்ஆம்: 151-153)*. அதேபோன்று அந்நிசா என்ற அத்தியாயத்தின் 2லிருந்து 59 வரையிலான வசனங்களும் 92 லிருந்து 94 வரையிலான வசனங்களும் அல்இஸ்ரா என்ற அத்தியாயத்தின் 22 லிருந்து 39 வரையிலான வசனங்களும் இவை போன்ற பல்வேறு சட்டங்களைப் பேசுகின்றன. இவற்றுடன் அல்பகரா, ஆலஇம்ரான், அல்மாயிதா போன்ற அத்தியாயங்களிலும் இன்னும் பல அத்தியாயங்களிலும் நேரடியாகவோ ஆய்வின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் வகையிலோ இந்த வகையான பல சட்டங்கள் பேசப்பட்டுள்ளதைக் காணலாம். இந்த உம்மத்தை நோக்கிப் பேசப்பட்ட அனைத்து சட்டங்களும் முழுமையாக குர்ஆனை மூலமாகக் கொண்டவையாகும். நபியவர்கள் அவற்றைப் பின்பற்றுவதுடன் மக்களுக்கு எடுத்துரைத்து, அவற்றை முறையாகப் பிரயோகிக்கும் மாதிரியைக் கற்றுக் கொடுக்கிறார்கள். இந்தத் தெளிவு முதல் தலைமுறையினரிடத்தில் இருந்தது. குர்ஆனுடைய சட்டங்களைத் தெளிவுபடுத்துதல் என்ற தரத்தைவிட யாரும் சுன்னாவை வேறு தரத்துக்கு எடுத்துச் செல்லவில்லை. குர்ஆனுக்குப் பிறகு சுன்னாவுக்கு சட்டவாக்க அதிகாரம் உள்ளதாக யாரும் ஒரு முறையேனும் குறிப்பிடவில்லை. ஏனெனில் திருக்குர்ஆன் எந்தவொரு விசயத்தையும் விட்டுவைக்கவில்லை என்பதுடன் தெளிவுபடுத்தும் பணி என்பது தனித்து சட்டம் இயற்றுவது அல்ல என்பதிலும் அவர்கள் தெளிவுடன் இருந்தனர். திருக்குர்ஆன்

சட்டங்களைக் குறிப்பிடுகிறது. நபியவர்கள் அவற்றை தங்களின் வார்த்தைகள், செயல்பாடுகளின் வழியாகத் தெளிவுபடுத்துவார்கள் என்றே அவர்கள் புரிந்து வைத்திருந்தார்கள்.

நபியவர்கள் சுயமாக சட்ட முடிவுகளை முன்வைத்திருப்பதாக முன்வைக்கப்படும் ஆதாரங்கள் அனைத்தும், மனித அறிவுக்கு விடப்பட்ட துறைசார் விவகாரங்களாகவே இருக்கின்றன. அத்தகைய விவகாரங்களில் தம்முடைய கருத்தை முன்வைக்க முடியும் என்பதை நபியவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவற்றிலும் திருக்குர்ஆன் நபியவர்களை பல்வேறு சமயங்களில் சரியான திசையில் வழிநடத்தியிருப்பதைக் காணலாம். உதாரணமாக, பத்ர் யுத்தக் கைதிகள் விவகாரம், தபூக் யுத்தத்திலிருந்து பின்வாங்கியவர்கள் பற்றிய விவகாரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அல்லாஹ் தன்னுடைய சட்டவாக்க அதிகாரத்தில் யாரையும் இணைத்துக் கொள்ளவில்லை என்பதை இவற்றின் மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்தினான். இதிலிருந்து நபியவர்கள் தமக்கு தனித்து சட்டவாக்க அதிகாரம் இருப்பதாக, அதாவது மூலச்சட்டத்தை தாம் உருவாக்க முடியும் என்று அவர்கள் கருதவில்லை. மாறாக எடுத்துரைப்பதும் பின்பற்றுவதுமே தமக்குரிய பணிகள் என்று அவர்கள் கருதியிருக்கிறார்கள் என்பது எந்த சந்தேகத்துக்கும் இடமில்லாத வகையில் தெளிவாகிறது. நபியவர்களின் தெளிவுபடுத்தல் பணி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று வார்த்தையாக அல்லது செயலாக அல்லது அங்கீகாரமாகக் காணப்பட முடியும்.

வஹியைப் பெற்றுக்கொண்ட முதல் தலைமுறையினர் தூய்மையான ஒரு தலைமுறையினர். அவர்களிடையே குழுக்கள் இருக்கவில்லை; முரண்பாடுகள் இருக்கவில்லை; சட்டப்பிரிவுகள் இருக்கவில்லை; அரசியல் மோதல்கள் இருக்கவில்லை; அதிகாரப் போட்டியும் இருக்கவில்லை; அரசியல் அதிகாரம் கைநழுவிப் போனால் அறிவியல் அதிகாரத்தைப் பிடித்துக் கொள்கின்றவர்கள் இருக்கவில்லை; ஏதேனும் ஒரு வாதத்தின்மூலம் தம்மை தலைமை பீடத்தில் அமர்த்திக் கொள்ள முடியாதபோது, குறுங்குழுக்களை அமைத்துக் கொண்டு, அதன்மூலம் தம்முடைய ஆசைகளை அடைந்து கொள்ளவும் அடுத்தவர்கள் முன்னால் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளவும் போராடுகின்றவர்களும் இருக்கவில்லை.

1. நல்லாட்சி புரிந்த நான்கு கலீஃபாக்கள் காலத்தில் சுன்னா அணுகப் பட்ட முறை

*அபூபக்கரும் உமரும் ஹதீஸின் உள்ளடக்க வசனங்களை உறுதிப் படுத்திக்கொள்வதில் மிகவும் கவனத்துடன் செயல்பட்டிருக்கிறார்கள். இமாம் தஹபி கூறுகிறார்: "ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வதில் முதலில் பேணுதலாகச் செயற்பட்டவர் அபூபக்கர் ஆவார். கபீஸா இப்னு துஹைப் ஊடாக இப்னு ஷிஹாப் அறிவிக்கிறார்: ஒரு மூதாட்டி அபூபக்கரிடம் வந்து தமக்கு பேரனின் சொத்தில் பங்கு வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர், "அல்லாஹ்வின் வேதத்தில் உங்களுக்கு பங்கேதும் குறிப்பிடப்படவில்லை, நபியவர்களும் அது பற்றி ஏதும் குறிப்பிட்டுள்ளதாக நான் காணவில்லை" என்றார். பிறகு அவர் அது குறித்து நபித்தோழர்களிடம் விசாரித்தபோது, முகீரா, நபியவர்கள் ஒரு பாட்டிக்கு ஆறில் ஒரு பங்கை வழங்கிய ஒரு சபையில் நானும் இருந்தேன் என்றார். உங்களுடன் இந்தக் கருத்தில் வேறு எவரேனும் இருக்கின்றனரா? என்று அபூபக்கர் விசாரித்தார். அதனை முஹம்மது இப்னு மஸ்லமாவும் உறுதிப்படுத்தினார். பின்னர் அபூபக்கர் அந்த சட்டத்தை அமுல்படுத்தினார்."*

*இதன்மூலம் அபூபக்கர் ஒரு புதிய பிரச்சினையை அணுகுவதற்குரிய முறைமை ஒன்றை பரிந்துரைக்கிறார். முதலில் பிரச்சினைக்கான தீர்வை நேரடியாக குர்ஆனில் தேட வேண்டும். வேறு அனுமானங்களின் அடிப்படையில் பிரச்சினையை ஆராய்ந்து விட்டு, அதற்குச் சான்றாக குர்ஆனில் வசனம் இருக்கிறதா என்று தேடக்கூடாது. அடுத்து, இரண்டாவது கட்டமாக நபியவர்களின் நடைமுறையில், குர்ஆனிய மூலத்திலிருந்து நபியவர்கள் பெற்றுக் கொண்ட ஏதேனும் வழிகாட்டல் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அது குறித்து நபியவர்களின் விளக்கம் ஏதேனும் இருந்தால் அது தனித்த ஒரு ஆதாரமாகவோ விதியாகவோ கருதப்பட மாட்டாது. மாறாக பிரச்சினைக்கு குர்ஆன் வழங்கும் தீர்வின் விளக்கமாகவே அது நோக்கப்பட வேண்டும். ஹதீஸ்களை அதிகம் அறிவிப்புச் செய்யாமை என்பது இந்தக் காலப் பகுதியின் முக்கியதொரு சிறப்பம்சமாகக் காணப்பட்டது. ஒரு ஹதீஸ் அறிவிப்புச் செய்யப்படும் போது சிலசமயங்களில் மற்றொரு சாட்சி கேட்கப்படும் நிலையும் இருந்துள்ளது. அனுமதி கேட்டல் விவகாரம் தொடர்பான அறிவிப்பில் அபூ மூஸா அல்அஷ்அரியிடம் இவ்வாறு வினவப்பட்டது.*

ஹதீஸின் உள்ளடக்க வசனங்களையும் முதல் தலைமுறையினர் விமர்சனக் கண்கொண்டு நோக்கியிருக்கிறார்கள். இமாம் புகாரீ மற்றும் முஸ்லிம் பதிவு செய்துள்ள, பாதிமா பின்த் கைஸின் கணவர் அவரை தலாக் சொன்னதற்குப் பிறகு அவருக்குத் தங்குவதற்கான வீட்டு வசதிகளும் ஏனைய செலவுகளும் வழங்கப்படவில்லை என்று வருகின்ற ஹதீஸ் குறித்து உமரிடம் ஒரு மாற்றுப் பார்வை இருந்திருக்கிறது. "ஒரு பெண்ணின் வார்த்தையை வைத்துக் கொண்டு குர்ஆனையும் நபியவர்களது நடைமுறையையும் எங்களால் கைவிட முடியாது. அந்தப் பெண் ஹதீஸை நினைவில் வைத்திருந்தாரா அல்லது மறந்து விட்டாரா என்பது பற்றி எங்களுக்குத் தெரியாது. "அவர்களை அவர்களது வீடுகளில் இருந்து வெளியேற்றாதீர்கள். அவர்கள் பகிரங்கமான ஒரு குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தால் அன்றி அவர்கள் வீடுகளைவிட்டும் வெளியில் செல்ல வேண்டிய அவசியமில்லை" (தலாக்: 1) என்று குறிப்பிட்டுள்ளான்" என்றார். அதேபோன்று அன்னை ஆயிஷாவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நபித்தோழர்களுடைய அறிவிப்புகளை குர்ஆனை அடிப்படையாகக் கொண்டு மறுத்திருக்கிறார். உதாரணமாக, குடும்பத்தினருடைய அழுகையின் காரணமாக மரணித்தவர் வேதனை செய்யப்படுவார் என்ற ஹதீஸை "ஒரு ஆன்மா மற்றொரு ஆன்மாவின் பாவத்தை சுமக்க மாட்டாது" (அன்ஆம்: 164) என்ற வசனத்தை ஆதாரமாகக் கொண்டு மறுத்துள்ளார்.

## 2. நபியவர்களின் செயல்கள் இரு வகைப்படும்

முதலாவது: குர்ஆனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதற்குரிய கட்டாயச் செயல்பாடுகள். உதாரணமாக, "தொழுகையை நிலைநாட்டுங்கள், ஸகாத்தைக் கொடுங்கள்" (பகரா: 43) என்ற வசனத்தை திருக்குர்ஆன் ஒரு கட்டளையாக மட்டுமே முன்வைத்துள்ளது. பின்னர் நபியவர்கள் அதனை தங்களின் செயல்பாடுகள் வழியாகத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதனைத் தான் "நான் தொழுவதைப்போல நீங்களும் தொழுங்கள்" "என்னிடமிருந்து உங்கள் கிரியைகளை பெற்றுக் கொள்ளுங்கள்" போன்ற வார்த்தைகள் உணர்த்துகின்றன. இமாம் கஸ்ஸாலி கூறுகிறார்: "நபியவர்களின் செயல்பாடுகளைப் பொருத்தவரை, அவை குறித்ததொரு சட்டத்திற்கான விளக்கமாக இல்லாதபோது அவற்றைப் பொதுச் சட்டமாகக் கொள்ள முடியாது. நபியவர்களின் இவ்வகைச் செயல்பாடுகள், வஹியை எடுத்துரைத்தல் என்ற வகைப்பாட்டுக்குள் அடங்குபவையாகும்.

இரண்டாவது: சூழலின் தேவைக்கேற்ப வெளிப்பட்ட நபியவர்களின் தனிப்பட்ட செயல்பாடுகள். இவற்றைத் தூதுத்துவச் செயல்பாட்டு வகைக்குள் இமாம்கள் அடக்கவில்லை. இவற்றுள் நபியவர்களது இஜ்திஹாத் சார்ந்த செயல்பாடுகளும் அவர் மனிதர் என்ற வகையில் மேற்கொண்டவையும் அடங்குகின்றன.

நபியவர்களின் தனித்த சட்ட அதிகாரத் தன்மை. அன்று ஒரு பேசு பொருளாகவே இருக்கவில்லை. இதனாலேயே இமாம் இப்னுல் கையிம் திருக்குர்ஆன் முன்வைத்த சட்டங்களைத் தெளிவுபடுத்துதலும் அந்த சட்டங்களுக்குரிய நிபந்தனைகள், கால இட வரையறைகள், தடைக் காரணிகள், பண்புகள் போன்றவற்றை வரையறுத்தலுமே — இவற்றையே பிற்கால சட்டக் கோட்பாட்டாளர்கள் காரணச் சட்டங்கள் என்றார்கள் — நபியவர்களின் பிரதான பணி என்றார். நபித்தோழர்கள் நபியவர்களின் நடைமுறைகளில் இருந்து குர்ஆனுக்கான ஒரு நபித்துவ சட்டமுறைமையைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்தார்கள். அதனை மாதிரியாகக் கொண்டு சட்ட வசனங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் இடையிலான உறவாடலை நெறிப்படுத்திக் கொள்ள முடியும் என்று கருதினார்கள். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பாட்டியொருவருக்கு பேரனின் சொத்தில் ஆறில் ஒரு பங்கை வழங்கிய உதாரணம் இவ்வகை சார்ந்ததாகும்.

## இரண்டாவது: அறிவிப்புச் செய்த தலைமுறையினரின் தோற்றம்

நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் இல்லாமையினால் உருவான இடைவெளி இலகுவில் நிரப்பப்பட முடியுமான ஒன்றாக இருக்கவில்லை. இருப்பினும் குர்ஆனின் அடித்தளத்திலும் நபியவர்களின் கட்டுமானத்திலும் உருவான அந்த சமூகம் தளர்ந்து விடவில்லை. அது அறபுக் குடிகளின் மதமாற்றப் பிரச்சினையை எதிர்த்து வெற்றி கண்டது. மேலும் சமூக ஒருமைப்பாடு சிதைந்து விடாமல் பாதுகாத்தது. இந்தச் சாதனைகளின் பெருமை முதல் தலைமுறையினரையே சேரும். அதிலும் குறிப்பாக தலைமை தாங்கிய அபூபக்ர், உமர், அலி, ஆயிஷா மற்றும் ஏனைய அறிவுத்துறைப் பங்களிப்பு செய்த நபித்தோழர்கள் அனைவரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். அவர்களிடத்தில் இஸ்லாம் தெளிவான ஒன்றாகவே இருந்தது. நபியவர்களின் மரணம் அவர்களிடையே சட்டவாக்க இடைவெளியொன்றை தோற்றுவிக்கவில்லை. ஹலாலும் ஹராமும் அவர்களிடத்தில் தெளிவாகவே இருந்தன. அவற்றுக்கிடையே சில

தெளிவற்ற விவகாரங்களும் இருந்திருக்கின்றன, ஆனால் சற்று ஆழ்ந்து சென்று, குர்ஆனுடைய பொதுக் கோட்பாடுகளின் ஒளியில் ஒவ்வொரு விவகாரத்தையும் அவர்களால் தெளிவுபடுத்திக்கொள்ள முடிந்தது. நபியவர்கள் மீது அவர்கள் வைத்திருந்த ஆழ்ந்த அன்பு சட்ட விவகாரங்களில் மட்டுமின்றி அவர்களுடைய வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பிரதிபலித்ததைப் பார்க்கலாம்.

இஸ்லாத்தின் பரவலுக்குப் பிறகு பல்வேறு சமூகங்கள் இஸ்லாத்தினுள் நுழைந்தன. இப்போது சூழல் மாற்றமடையத் தொடங்கியது. சமூகத்தின் பிரச்சினைகளும் கேள்விகளும் மாற்றமடைந்தன. பலவகையான கலாச்சாரங்கள் சங்கமிக்கத் தொடங்கின. அவை சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியதுபோன்று பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தின. முதல் தலைமுறையில் தோன்றாத பல புதிய சிந்தனைகளும் கருத்துக்களும் தோற்றம் பெற்றன. நபியவர்களிடமிருந்து குர்ஆனை நேரடியாகப் பெற்றுக் கொண்ட முதல் தலைமுறையினர் தற்போது இல்லை என்ற நிலை வந்தபோது, தமக்கு முன்னால் எழுப்பப்படும் புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வதற்கு திருக்குர்ஆன் மட்டுமே போதாது என்று இரண்டாவது தலைமுறையினர் நினைக்கத் தொடங்கினர். ஆனால் இயல்பாகவே அவர்கள், தாம் எதிர்கொண்ட சட்டப் பிரச்சினைகளுக்கும் சிந்தனைச் சிக்கல்களுக்கும் தீர்வாக முதலில் திருக்குர்ஆன் வசனங்களின் விளக்கங்களேயே நாடினார்கள். இருப்பினும் அவர்களின் ஆய்வுகள் போதுமான பதில்களைப் பெற்றுத் தரவில்லை. இந்த சமயத்தில் அவர்கள் நபியவர்களது அறிவிப்புகளை நோக்கித் திரும்பினார்கள். அவர்களது வாழ்வுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விசயங்களையும் ஒன்று திரட்டத் தொடங்கினார்கள்.

## உமர் இப்னு அப்துல் அஸீஸும் சுன்னா ஒன்று திரட்டப்படுதலும்

வரலாற்றில் ஹதீஸை ஒன்று திரட்டுவதற்கான ஆரம்ப முயற்சியாக உமர் இப்னு அப்துல் அஸீஸின் முயற்சியையும் அதற்கு முன்னர் அவரது தந்தை அப்துல் அஸீஸ் சில சட்ட அறிஞர்களின் துணையுடன் மேற்கொண்ட முயற்சியையும் குறிப்பிடலாம். மூலாதார முரண்பாட்டுச் சூழல் ஒன்றை அவர்கள் அவதானித்ததன் அடிப்படையில், சுன்னா ஒன்று திரட்டப்படும்போது முரண்பட்ட சட்ட அணுகுமுறைகளுக்கு மாற்றீடாக அது அமையும் என அவர்கள் நம்பினார்கள். அப்துல் அஸீஸும் அவரது மகன் உமரும் சுன்னாவை ஒன்றுதிரட்டி, அது குர்ஆனுக்கான பிரயோக மாதிரி என்ற வகையில் குர்ஆனுடன் அதனையும் மக்கள் புழக்கத்துக்கு விடுகின்றபோது,

சமூகத்தில் உள்ள முரண்பாடுகளும் பிளவுகளும் குழுவாதங்களும் நீங்கிவிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று கருதினார்கள். ஆனால் இதன் விளைவாக வஹியைப் பெற்றுக் கொண்ட முதல் தலைமுறையினருடைய சிறப்பம்சங்களை விடவும் வேறுபட்ட சிறப்பம்சங்களுடன் மற்றொரு தலைமுறை தோற்றம் பெற்றதைக் காணலாம். அதுதான் சுன்னாவை அறிவிப்புச் செய்யும் தலைமுறை. நபியவர்களின் அறிவிப்புகளை அப்துல் அஸீஸும் அவரது மகன் உமரும் குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் உள்ள தனித்த சட்டவாக்க மூலாதாரம் என்று நோக்கவில்லை. ஏனெனில் குர்ஆனுக்கும் சுன்னாவுக்குமிடையிலான உறவு அவ்வகையானதாக இருக்கவில்லை. சிந்தனைகள் மருந்துகள் போன்றவை. மருந்துகளுடன் பக்க விளைவுகளும் உருவாகுவது போல் சிந்தனைகள் பிறந்தாலும் பக்க விளைவுகளும் உருவாகி விடுகின்றன. சுன்னாவை ஒன்று திரட்ட வேண்டும் என்ற சிந்தனையின் பக்க விளைவாகவே அது தனித்த மூலாதாரம் என்ற சிந்தனை பிறந்தது. உண்மையில் முதல் தலைமுறையினர் சுன்னாவை ஒன்று திரட்டும் செயல்பாட்டுக்குத் தயக்கம் காட்டியதற்கு இதுவே காரணமாக இருந்தது. அதனால் சுன்னா அதிகம் பரப்பப்படுவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. அவர்களது முழுமுதல் கவனம் குர்ஆனை நோக்கியே இருந்தது. சுன்னாவின் அறிவிப்புகள் பரவலடைந்ததுடன் மக்களின் கவனம் பெரிதும் அவற்றில் குவியத் தொடங்கியது. முதல் தலைமுறையினர் பயந்த விசயம் அங்கு நடைபெற்றது. இதனாலேயே உமர் (ரழி) சுன்னாவை ஒன்று திரட்டும் பணியை ஆரம்பித்து விட்டு அதனை இடைநிறுத்தினார். அவருக்கு முன்னர் அபுபக்கரும் (ரழி) இதில் பெரும் தயக்கத்தை வெளிப்படுத்தினார்.

## மூன்றாவது: சட்டவியலாளரும் சட்டவியல் தலைமுறையும்

சட்டவியல் என்ற கருத்தைத் தரும் பிக்ஹ் என்ற பிரயோகம் ஹிஜ்ரி நாற்பதுகளில் புழக்கத்துக்கு வந்தது. நபியவர்களது அறிவிப்புகள் பரவலடையத் துவங்கியது முதல் பிக்ஹும் பெரிய அளவில் விரிவடையத் தொடங்கியது. அந்த அறிவிப்புகள், குர்ஆனுக்கான சுன்னாவின் பிக்ஹாக இருப்பதை விடுத்து, இறையியலாளர்கள் மற்றும் சட்டவியலாளர்களின் கருத்து வேறுபாடுகளை உள்வாங்கிய ஒன்றாக மாறியது. முன்னர் திருக்குர்ஆன், சுன்னா மீது முஸ்லிம் சமூகத்தின் ஒருமைப்பாடு இருந்ததுபோன்று இப்போது வேறு புதிய விசயம் ஒன்றின்மீது சமூகத்தின் ஒருமைப்பாடு மாற்றமடைந்தது.

இறையியலாளர்கள், சட்டவியலாளர்கள், சட்டக் கோட்பாட்டாளர்கள் அனைவரும் அந்த அறிவிப்புகளை தங்களின் அணியையும் சிந்தனையையும் பலப்படுத்திக் கொள்வதற்குரிய புதிய ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள். சுன்னாக்கள் ஒன்று திரட்டப்பட்டபோது, மக்கள் சுன்னாவை, குர்ஆனுக்கான நபியவர்களின் பிக்ஹாகவும் அதன் பிரயோக மாதிரியாகவும் பார்ப்பதைத் தவிர்த்து, அதனை குர்ஆனுக்கு நிகரான ஒரு சட்ட மூலாதாரமாக நோக்கினார்கள். சில சமயங்களில் சிலர் குர்ஆனைவிட அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முற்பட்டார்கள். திருக்குர்ஆன் பெரியளவில் புறக் கணிப்பட்ட ஒன்றாக மாறியது. அதனை நியாயப்படுத்தும் வகையில் "திருக்குர்ஆன் பல்வேறு பொருளுக்கு இடம்பாடு கொண்டது. அதன் மொழி அற்புதத் தன்மை வாய்ந்தது. வெகுசிலரே "அதனைப் புரிந்து கொள்ளும் தகுதியைப் பெறுவர்" என்றனர். இதனால் மக்கள் சுன்னாவையும் பிக்ஹையும் நோக்கிச் செல்லத் துவங்கினர்.

திருக்குர்ஆன் அதிகபட்சமாக ஐநூறு சட்ட வசனங்களை மட்டுமே உள்ளடக்கியிருக்கிறது என்ற ஒரு தவறான சிந்தனை மக்கள் மத்தியில் பரவலாகப் பரிமாறப்பட்டு வந்தது. "சட்ட அறிஞர் ஒருவர் இவற்றில் மட்டும் கவனம் செலுத்தினால் பொதுமானது. குர்ஆனில் "செய்யுங்கள், செய்ய வேண்டாம்" என்ற வடிவில் வந்துள்ள வசனங்களே சட்டங்களுக்குரியவை. ஏனையவை அனைத்தும் மறுமை நாள், சம்பவங்கள், உபதேசங்கள் ஆகியவற்றைப் பேசுபவையே" என்றனர். ஆகவே குர்ஆனை நோக்கிய தேவை, அதிலிருந்து சில சட்ட வசனங்களைப் பெற்றுக் கொள்வது என்ற இடத்துடன் சுருங்கிவிட்டது. சிலர் அவை வெறுமனே 330 வசனங்கள் மட்டுமே" என்றனர். அவற்றுள் வணக்க வழிபாடுகள் தொடர்பாக 140 வசனங்களும் குடும்பவியல் தொடர்பாக 70 வசனங்களும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக 70 வசனங்களும் தண்டனைகள் தொடர்பாக 30 வசனங்களும் நீதித்துறை தொடர்பாக 20 வசனங்களும் மட்டுமே உள்ளதாக வரையறுத்துள்ளனர். இவற்றோடு சட்டங்களைப் பேசும் சுமார் 1100 ஹதீஸ்கள் காணப்படுவதாகக் குறிப்பிடுவர். சிலர், திருக்குர்ஆன் வசனங்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவில் அதன் பிரயோகத்தை தெளிவுபடுத்துவதற்குரிய ஹதீஸ்கள் காணப்படுகின்றன என்றனர். உதாரணமாக, கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எழுபது குர்ஆன் வசனங்களைத் தெளிவுபடுத்த எழுபது ஹதீஸ்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பகுதிக்கும் இவ்வாறே கூறலாம். இவை தவிர்த்து ஏனைய விவகாரங்களைப் பொறுத்தவரை அவற்றுக்கான மூலாதாரமாக சுன்னா மட்டுமே காணப்படும்.

அதிலிருந்தே விதிகள் உருவாக்கப்படும்; வகைப்பாடுகள் தீர்மானிக்கப்படும்; தீர்வுகள் வழங்கப்படும். சுன்னா இருக்கும்போது வேறு ஓர் ஆதாரத்தின் தேவை இல்லை என்றனர்.

சிலர், இந்த எல்லையையும் தாண்டிச் சென்று முழு சுன்னாவையும் சட்ட மூலாதாரம் என்றனர். அதாவது, நேரடியாகச் சட்டங்களுடன் சம்பந்தப்படாத சுன்னாக்களையும், அவை ஆகுமானவை (முபாஹ்) என்ற சட்டப் பரப்புக்குள் வருகின்றன என்ற ஒரு நியாயத்தின் அடிப்படையில், சட்டவாக்கச் சுன்னாவாகக் கருதினர். ஏனெனில் நபியவர்கள் அனுமதித்த அல்லது ஏற்றுக் கொண்ட ஒரு விசயம், சட்ட ரீதியாக ஆகுமானது (முபாஹ்) என்ற சட்டத்தரத்தைப் பெறுவதாகக் கூறினர். இங்குதான் முஸ்லிம் உம்மத்தின் அறிஞர்கள் மத்தியில் பிரிவினைக்கான அடையாளங்கள் தெளிவாக வெளிப்படத் துவங்கின. அதன் செயல் வடிவமாகவே அறிவிப்புகள்சார் சிந்தனைப் பள்ளி மற்றும் பகுத்தறிவுசார் சிந்தனைப் பள்ளி என இரு சிந்தனைப் பள்ளிகள் தோற்றம் பெற்றன. இரு தரப்பினரும் தங்களுக்கான தனித்த அடையாளங்களுடன் நிலைத்து நின்றனர். குர்ஆனையும் சுன்னாவையும் தனித்தனி மூலாதாரங்களாக நோக்கிய சிந்தனையின் சில அபாயமான பக்கங்கள் குறித்து இங்கு எடுத்துக் காட்டப்படுவது முக்கியமானது.

முதல் தலைமுறையினரிடம் காணப்பட்ட, குர்ஆனுடன் எதுவும் கலந்துவிடக் கூடாது என்ற கவனம் இல்லாது போய்விட்டது. மக்கள் அறிவிப்புகளுடன் மட்டுமே அதிக நேரம் செலவளிக்கத் தொடங்கினர். இறுதியில் குர்ஆனை வெறுமனே ஒரு சான்றாக மட்டுமே பயன்படுத்தப்படும் நிலை உருவானது. யாரேனும் குர்ஆனை மையப்படுத்தி ஒரு விசயத்தை நிறுவ முற்படுகின்ற போது, சிலர் "சுன்னா திருக்குர்ஆன் மீது தீர்ப்புக் கூறும் அதிகாரம் கொண்டது, ஆனால் குர்ஆனுக்கு அந்த அதிகாரம் கிடையாது" என்பார்கள். இந்நிலைப்பாட்டில் முக்கிய சில அறிஞர்கள் இருந்துள்ளனர். இமாம் ஸஈத் இப்னு மன்சூர் இமாம் மக்ஹூல் கூறியதாகச் சொல்கின்றார்: "குர்ஆனுக்கு சுன்னா அவசியப்படும் அளவுக்கு சுன்னாவுக்கு குர்ஆன் அவசியப்பட மாட்டாது" இமாம் அவ்ஸாஈ, யஹ்யா இப்னு அபீ கஸீர் கூறுவதாகச் சொல்கின்றார்: "திருக்குர்ஆன் மீது தீர்ப்பபுக் கூறும் அதிகாரம் சுன்னாவுக்கு இருக்கின்றது ஆனால் குர்ஆனுக்கு அந்த அதிகாரம் இல்லை". இமாம் பழ்ல் இப்னு ஸியாத் கூறுகின்றார்: "இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலிடம் சுன்னா குர்ஆனுக்கு தீர்ப்பு வழங்கும் அதிகாரம் கொண்டது என்ற கருத்து குறித்து வினவப்பட்ட போது, இவ்வாறான

ஒரு கருத்தைச் சொல்வதற்கு நான் ஒரு போதும் துணிய மாட்டேன். மாறாக சுன்னா குர்ஆனுக்கான விளக்கமாக அமைகின்றது என்றுதான் சொல்லப்பட வேண்டும் என்றார்". இமாம் பழ்ல் தொடர்ந்து கூறும்போது, "இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலிடம் திருக்குர்ஆன் கூறும் ஒரு சட்டத்தை ரத்து செய்யும் அதிகாரம் சுன்னாவுக்கு இருக்கின்றதா? என்று வினவப்பட்ட போது, குர்ஆனை ரத்து செய்யும் அதிகாரம் குர்ஆனுக்கு மட்டுமே இருக்கிறது" என்று கூறினார். இமாம் அபூ உமர் கூறுகின்றார்: இதுதான் இமாம் ஷாஃபியினுடைய கருத்தாகவும் இருந்தது. குர்ஆன் வசனத்தை இன்னொரு குர்ஆன் வசனம் மட்டுமே சட்டத்தன்மை அற்றதாக மாற்ற முடியும் என்றார் அவர். திருக்குர்ஆன் கூறுகின்றது: "நாம் ஒரு வசனத்திற்குப் பகரமாக மற்றொரு வசனத்தை மாற்றினால்" (நஹ்ல்: 101), "நாம் ஒரு வசனத்தை நீக்கினால் அல்லது அதனை மறக்கச் செய்தால் அதனை விட சிறந்த அல்லது அதனைப் போன்ற ஒன்றை நாம் கொண்டு வருவோம்" (பகரா: 106). இந்த இமாம்களின் கல்விப் படித்தரத்தையும் அவர்கள் வாழ்ந்த சூழலையும் தவிர்த்து, இந்தக் கூற்றுக்களை நோக்கும்போது, ஒரு பெரும் நெருக்கடி நிகழ்ந்து விட்டிருப்பதை இவை குறிக்கின்றன. குர்ஆனுடன் சுன்னாவின் அறிவிப்புகளையும் சட்டவாக்க மூலமாக மாற்றினர். குர்ஆனுடன் அதனைப் போன்ற மற்றொன்றும் இருக்கின்றது. அந்த மற்றொன்று தம்மிடம் இருக்கின்ற அறிவிப்புகள் என்றனர். இதற்கு மிக்தாம் இப்னு மஃதீகரிப் ஊடாக வருகின்ற ஒரு ஹதீஸை ஆதாரமாகக் கொண்டனர். "எனக்கு குர்ஆனுடன் அதனைப் போன்ற ஒன்றும் வழங்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் நன்கு சாப்பிட்டுவிட்டு தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டு ஒரு மனிதன் சொல்வான், நீங்கள் இந்த குர்ஆனையே பின்பற்றுங்கள். அதில் ஹலால் என்று வந்துள்ளவற்றை ஹலாலாக்குங்கள், அதில் ஹராம் என்று வந்துள்ளவற்றை ஹராமாக்குங்கள், அறிந்து கொள்ளுங்கள் கோவேறுக் கழுதை உங்களுக்கு ஹலாலாக மாட்டாது. நகங்களினால் வேட்டையாடும் மிருகங்கள் உங்களுக்கு ஹலாலாக மாட்டாது. ஒப்பந்தம் செய்து வாழும் சமூகத்தினரொருவரின் தவறவிட்ட ஒரு பொருளை, அவர் அது தனக்கு அவசியமற்றது என்று கருதினாலன்றி எடுக்கலாகாது" என்றார்கள்.

பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி குர்ஆனை ஆஹாதான சுன்னாகூட சட்டத்தன்மை அற்றதாக மாற்ற முடியும். அதேபோன்று சுன்னாவை திருக்குர்ஆன் சட்டத்தன்மை அற்றதாக மாற்ற முடியும். இதன்மூலம் சட்ட உருவாக்க மூலாதாரமான குர்ஆனுக்கும்

அதன் பிரயோகமான சுன்னாவுக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாகவும் அந்த முரண்பாட்டை சட்டத்தன்மை அற்றதாக மாற்றும் செயல்பாட்டின் ஊடாகவே தீர்க்க முடியும் என்றும் கருதுகின்றனர். இந்த வாதம் உள்ளடக்கியுள்ள அபாயகரமான சிந்தனை பற்றி அவர்கள் உணரத் தவறி விட்டனர். மிகவும் எளிமையாகச் சொன்னால் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் இடையில் முரண்பாடு இருக்கின்றது, அந்த முரண்பாடு, சட்டத்தன்மை அற்றதாக ஆக்கும் செயல்பாட்டின்மூலம் மட்டுமே தீர்க்கப்பட முடியும் என்கின்றனர். இமாம் ஷாஃபி இந்த சிந்தனையின் அபாயத்தை முற்கூட்டியே உணர்ந்திருக்கின்றார். இதனால் குர்ஆன் சுன்னாவையோ சுன்னா குர்ஆனையோ சட்டத்தன்மை அற்றதாக ஆக்குதல் என்ற சிந்தனையை அவர் மறுத்திருக்கிறார். இதனைச் சமநிலைப்படுத்தும் வகையில் அவர் ‘பலப்படுத்துதல்’ என்றதொரு சிந்தனையை முன்வைத்தார். அதாவது குர்ஆனை குர்ஆன் சட்டத்தன்மை அற்றதாக மாற்ற முடியும், அவ்வாறு நிகழும்போது சட்டத்தன்மை அற்றதாக மாற்றும் வல்லமையுடைய வசனத்துடன் உடன்பாடான சுன்னாக்கள் அந்த வசனத்தைப் பலப்படுத்துவதாக அமைய முடியும். அவ்வாறே சுன்னாவை குர்ஆன் சட்டத்தன்மை அற்றதாக மாற்றாது. ஆனால் சுன்னாவை மற்றொரு சுன்னா சட்டத்தன்மை அற்றதாக மாற்ற முடியும். அந்த சுன்னாவின் கருத்தை திருக்குர்ஆன் பலப்படுத்துவதாக அமைய முடியும் என்றார்.

திருக்குர்ஆன் தொடர்பாக இன்னும் சில கருத்துக்களும் பரவலாகப் பேசப்பட்டு வந்துள்ளன. திருக்குர்ஆன் முக்காலத்துக்கும் உரிய புதையல்களை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு வேதநூல் என்பதை மறந்தது போன்றுதான் அந்தக் கருத்துக்கள் அமைந்துள்ளன. சிலர், “திருக்குர்ஆன் பல்வேறு பொருளைத் தரக்கூடியது” என்றனர். ஆகவே அவற்றுள் ஒரு கருத்தை தெரிவு செய்வதற்கான ஒரு வழிமுறை அவசியம். அந்தப் பணியையே சுன்னா செய்கின்றது என்றார்கள். உண்மையில் இது திருக்குர்ஆன் தன்னை அடையாளப் படுத்திக் காட்டிய, இலகுவானது, தெளிவானது, அனைத்தையும் தெளிவுபடுத்தக்கூடியது என்ற பண்புகளுடன் முற்றிலும் முரண் படக் கூடிய ஒன்றாகும். அத்துடன் திருக்குர்ஆன் தன்னகத்தே கொண்டுள்ள சிந்தனைப் புதையல்கள் காலவோட்டத்தில் வெளிக் கொண்டு வர முடியுமானவை. அதாவது திருக்குர்ஆன் கால, இட பரிமாணங்களைத் தாண்டியது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் இடத்துக்கும் உரிய மனிதத் தேவைகளை அது நிறைவேற்றுகிறது. இதனால்தான் இமாம் சுயூத்தியும் இன்னும் பலரும் குறிப்பிடுவது

போன்று நபித்தோழர்கள் குர்ஆனை ஓதுகின்றபோது, தங்களின் நடைமுறைக்கு அப்பாற்பட்ட ஒரு விசயத்தைக் காண நேர்ந்தால், “இதற்குரிய விளக்கத்துக்கு இன்னும் காலம் கனியவில்லை” என்பார்கள். அதாவது அவர்கள், திருக்குர்ஆன் பல சிந்தனைப் புதையல்களைக் கொண்டிருக்கின்றது. தாம் வாழும் காலத்தில் இன்னும் அவற்றுக்குரிய விளக்கம் பெற்றுக் கொள்ளப்படுவதற்குரிய சூழல் இல்லை. காரணம் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் தற்போது இல்லை என்பதுடன் திருக்குர்ஆன் வேறுபட்ட காலங்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கியது என்பதைப் புரிந்து வைத்திருந்தனர். இதனால் அவர்கள், குர்ஆனில் மயக்க நிலைகள் இருக்கின்றன, தெளிவற்ற வசனங்கள் உள்ளன, வேறுபட்ட பொருள் இடம்பாடுகளால் வாசிப்பவரை குழப்பி விடுகின்றது போன்ற குற்றச் சாட்டுக்களைச் சொல்லிக் கொண்டு குர்ஆனை ஓரம்கட்டவில்லை. மாறாக திருக்குர்ஆன் இவ்வாறான குழப்பங்கள் அற்றவை என்றும் அது மிகவும் தெளிவானதும் இலகுவானதுமாகும் என்றும் உறுதிப்படுத்தினார்கள்.

சிலர் திருக்குர்ஆன் முற்றுப் பெற்றது என்றும் ஆனால் நிகழ்வுகள் முடிவிலி என்றும் கருதினர். எனவே இந்த சட்டவாக்க இடை வெளியை நிரப்பும் வகையில் குர்ஆனுக்கு மேலதிகமாக இன்னும் சில மூலாதாரங்கள் அவசியம் என்றனர். ஆனால் அவர்கள், அல்லாஹ் மறந்து விடுபவன் அல்ல: “உம் இறைவன் மறப்பவன் அல்ல” (மர்யம்: 64) என்பதையும் குர்ஆன் அனைத்தையும் தெளிவுபடுத்தக்கூடியது, அதில் எந்த விசயமும் தவறிப் போக வில்லை என்ற பேருண்மையையும் கண்டுகொள்ளாமல் விட்டனர். இதன் பொருள், குர்ஆனின் பொதுக் கொள்கைகள், மனித வாழ்வின் கிளையம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கக்கூடியது என்பதும் புதிதாத உருவாகக்கூடிய எதையும் உள்ளீர்த்துக் கொள்ளக் கூடியது என்பதும் ஆகும். “அவர்கள் உம்மிடம் எந்த உதாரணத்தைக் கொண்டு வந்தாலும் உண்மையானதும் அழகானதுமான ஒரு விளக்கத்தை நாம் உமக்கு வழங்குவோம்” (புர்கான்: 33). திருக்குர்ஆன் மனித வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் மிகுந்த நேர்த்தியை நோக்கியே வழிநடத்துகிறது. திருக்குர்ஆன் ஒன்றை முன்வைக்கும் பாங்கும் அதன் மொழியும் தனித்துவமானது. ஆனால் கடந்த கால சமூகங்களுக்கு நடைபெற்றதுபோல் ஒரு பிறழ்வு இந்த சமூகத்திலும் நிகழ்ந்துள்ளது. ஒரு நூதனத்தை அவர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். குர்ஆனின் முக்கியத்துவத்தைக் குறைத்து அறிவிப்புகளின் முக்கியத்துவத்தை அதிகரித்தார்கள். இறுதியில்

குர்ஆனையும் விட்டு அறிவிப்புகளையும் விட்டு, தாங்களே உருவாக்கிக் கொண்ட விதிகளிலும் கோட்பாடுகளிலும் கவனம் செலுத்தினார்கள். அவற்றுக்கு உஸூலுல் பிக்ஹ், பிக்ஹ், தப்ஸீர் என்று பெயர்களையும் வைத்துக் கொண்டார்கள். குர்ஆனுக்கு அதன் மொழியும் வசன அமைப்பும் இடம் கொடுக்காத விளக்கங்களையும் வழங்கினர். அறிவிப்புகளில் அபூபக்ர், உமர் மற்றும் இன்னபிற நபித்தோழர்களின் அணுகுமுறையையும் தாண்டிச் சென்றார்கள். முதல் தலைமுறையினர் ஒரு தனித்த அறிவிப்பாளர் அவர் ஒரு நபித்தோழராக இருந்தாலும், அவரது அறிவிப்பை மற்றொருவர் உறுதிப்படுத்தாதவரை ஏற்பதில்லை. ஹிஜ்ரி 40 வரை இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. அலி (ரழி), ஒருவர் தனது அறிவிப்புகு மற்றொருவரை சாட்சியாகக் கொண்டு வராத போது, அதனை உறுதிப்படுத்தும் வகையில் அவரிடம் சத்தியம் செய்யுமாறு வேண்டுவார்கள்.

## 1. சுன்னா குர்ஆனுக்கு அடுத்த படித்தரத்தைப் பெறுகின்றது என்ற அவர்களின் வார்த்தைக்கும் சட்டவாக்கச் செயற்பாட்டில் குர்ஆனை விட சுன்னாவை முற்படுத்தும் அவர்களின் செயல்பாட்டிற்கும் இடையிலான முரண்பாடு

இந்தத் தலைமுறையினர் சுன்னாவை குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் வைத்தபோது, அவர்கள் அவையிரண்டுக்கும் இடையிலான உறவுச் சிக்கலுக்கான தீர்வாகவே அதனை முன்வைத்தனர். ஆனால் அது பிரச்சினையை இன்னும் ஆழப்படுத்துவதாக அமைந்து விட்டது. ஏனெனில் அது, குர்ஆனுக்கும் அதனை தம்முடைய வார்த்தைகள், செயல்கள்மூலம் நடைமுறைப்படுத்திய நபியவர்களது வாழ்வுக்கும் இடையிலான பிரிக்க முடியாத அந்த உறவை வெளிக் கொண்டு வருவதாக அமையவில்லை. அவர்கள் சுன்னாவின் தனித்த மூலாதாரத் தன்மைக்கு ஆதாரம் சொல்லும்போது, மூன்று சட்ட விவகாரங்களையே உதாரணமாக முன்வைத்தனர். அவையும் குர்ஆனின் பொதுக்கொள்கைகளுக்குள் உள்ளடங்குபவையாகும். அவை, ஒரு பெண்ணையும் அவளது மாமியையும் இணைத்துத் திருமணம் செய்யத் தடுக்கப்பட்டமை, கோவேறுக் கழுதைகள் சாப்பிட அனுமதிக்கப்படாமை, தமது நகங்களால் வேட்டையாடி உண்ணும் மிருகங்களும் பறவைகளும் சாப்பிட அனுமதிக்கப்படாமை ஆகியவையாகும். சுன்னா தனித்து ஒரு சட்ட உருவாக்க மூலாதாரம் என்று நாம் வைத்துக் கொண்டாலும் இந்த விவகாரங்கள் அதன்மூலம் முழுமையாக நிறுவப்படவில்லை. அவற்றிலும் பல கருத்து

வேறுபாடுகள் அவர்கள் மத்தியில் இருக்கின்றன. ஆகவே சுன்னா குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் தனித்ததொரு சட்ட மூலாதாரம் என்பதை நிறுவுவதற்கு இவை போதுமானவையாக இல்லை. அடுத்து சில இமாம்கள் குர்ஆனின் வெளிப்படையான கருத்தைவிட ஆஹாதான ஹதீஸ்களுக்கு முன்னுரிமை வழங்கினார்கள். குர்ஆனின் பொதுச் சட்டம் ஒன்றை ஆஹாதான ஒரு ஹதீஸ் குறிப்பான சட்டமாக்க முடியும் என்றார்கள். இதுவும் பல முரண்பாடுகளைக் கொண்டு வந்தது. ஆகவே சுன்னா குர்ஆனுக்கு அடுத்த தர மூலாதாரம் என்ற வார்த்தைக்கு பெரிய அர்த்தம் இல்லாமல் போய்விட்டது.

## 2. அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டின் தோற்றம்

அறிவிப்புகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாடு ஹிஜ்ரி 140 க்குப் பின்னரே தோற்றம் பெற்றது. அதாவது, இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலேயே அறிவிப்பாளர் வரிசைப் பிரயோகம் தொடங்கியது என்பது பெரும்பாலானவர்களின் நிலைப்பாடாகும். எனவே இக்காலப்பகுதிக்கு முந்திய அறிவிப்புகளும் அறிவிப்பாளர்களும் பெரும் பகுப்பாய்வுகளுக்கு உட்படவில்லை. இக்காலப்பகுதியில் பெரும்பாலான விமர்சனங்கள் ஹதீஸ் உள்ளடக்க வசனங்கள் குறித்த எளிமையான விமர்சனங்களாகவே அமைந்திருந்தன. அநேகமாக அவை மற்றொரு ஹதீஸின் உள்ளடக்கத்துடன் முரண்படுதல் அல்லது அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் எண்ணிக்கையைவிட குறைவாக இருத்தல் போன்ற காரணங்களுக்காகவே நிகழ்ந்துள்ளன. ஹதீஸ் துறையாளர்கள், தாம் அறிவிக்கும் ஹதீஸைப் பெற்றுக் கொண்ட வழியைக் குறிப்பிடத் தொடங்கிய போது, அவர்கள் தமக்கு அறிமுகமான, தாம் சந்தித்த, தாம் கற்ற ஒருவருடனேயே பெரிதும் அதனைச் சம்பந்தப்படுத்துவார்கள். பின்னர் அவர் யாரிடமிருந்து அதனைப் பெற்றுக் கொண்டார் என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை அவரிடமே விட்டுவிடுவார்கள்.

அறிவிப்பாளர் வரிசையை அந்தத் துறை சார்ந்தவர்கள், குறித்ததொரு ஹதீஸை நபியவர்களுடன் தொடர்புபடுத்துவது பற்றி எழக்கூடிய சந்தேகங்களை நீக்கும் வகையிலேயே பயன்படுத்தினார்கள். ஆனால் குர்ஆனுக்கு இவ்வாறானதொரு அறிவிப்பாளர் வரிசை அவசியமற்றது. அதனுடைய ஆதாரப்பூர்வத் தன்மை, அதன் மொழியமைப்பு, அற்புதத்தன்மை, அது விடுக்கும் சவால், மனித இயல்புடன் இயைந்து செல்லும் பண்பு போன்றவற்றின் மீதே தங்கியிருக்கின்றது.

அந்தவகையில் மக்கள் குர்ஆனை அணுகுவது, அது குறித்த அவர்களது ஈமானை மையப்படுத்தியே அமைகின்றது. ஆனால் ஹதீஸைப் பொருத்தவரை, அது நபியவர்களுடன் சம்பந்தப்பட்டதா? இல்லையா? என்ற ஒரு சந்தேகத்தின் மீது நின்றே மக்கள் அதனை அணுகுகின்றனர். எனவே அந்த சந்தேகத்தை நீக்கி, அதனைப் பலப்படுத்துகின்ற ஒரு காரணி அங்கு அவசியப்படுகின்றது. அந்தக் காரணிஊடாக அந்த செய்தி நபியவர்களுடன் சம்பந்தப் பட்டது என்பது உறுதிப்படுத்தப்படுகின்ற போது, அந்தச் செய்தி உண்மையானது என்பதும் மிகப் பெரும்பாலும் உறுதிப் படுத்தப்படுகின்றது. ஏனெனில் ஒரு செய்தி நபியவர்களுடன் சம்பந்தப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட முன்னர், அந்த செய்தி உண்மையா? பொய்யா? என்ற கேள்வி இருக்கின்றது. ஒரு செய்தி நபியவர்களுடன் சம்பந்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் காரணி அறிவிப்பாளர் வரிசை. இதனூடாகவே அதன் நம்பகத் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. இங்கு அறிவிப்பாளர் வரிசையின் முதல் அறிவிப்பாளர் விசயத்தில் மட்டுமே அனைவரது கவனமும் இருந்துள்ளது. பின்னர் அடுத்தடுத்து உள்ளவர்களை வரிசையில் அடுத்தடுத்து உள்ளவர்களே உறுதிப்படுத்த வேண்டும் என்றிருந்ததனால் அறிவிப்பாளர்களது நம்பகத்தன்மையை உறுதிப் படுத்துவதற்கு ஒருவர் மற்றொருவரில் தங்கி நிற்க வேண்டிய நிலை காணப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தப் புள்ளியில் இருந்துதான் அறிவிப்புகளில் கவனயீனங்கள் தோற்றம் பெற ஆரம்பித்தன. அதாவது அறிவிப்பாளர்கள் பற்றிய பகுப்பாய்வு நடைபெறும் போது, குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் குறித்த அறிவிப்பாளர் ஊடாக அறிவிக்கப் பட்டவற்றை ஆய்வுக்குட்படுத்தியதன் அடிப்படையில் அவரது நம்பகத் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் அக்காலப் பகுதிக்குப் பின்னர் அவரது அறிவிப்புகளில் குறைபாடுகளும் பலவீனங்களும் காணப்பட முடியும். இருப்பினும் அவர் பற்றிய முந்தைய முடிவின் படி பிந்திய அறிவிப்புகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மக்கள் தங்களின் அறிவிப்புகளுக்குரிய அறிவிப்பாளர் வரிசையைக் குறிப்பிடத் தொடங்கியது குழப்பத்திற்குப் பிறகுதான் நிகழ்ந்தது என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இங்கு குழப்பம் என்பதன் மூலம் எதனை நாடினார்கள் என்பது தெளிவற்றதாக உள்ளது. அது உஸ்மானுடைய (ரழி) மரணமா அல்லது குர்ஆனைத் தவிர்த்து ஹதீஸில் மட்டுமே மக்கள் ஈடுபடத் துவங்கியமையா அல்லது

மதீனாவுக்கு எதிராகப் போர் தொடுக்கப்பட்டமையா அல்லது திருக்குர்ஆன் படைக்கப்பட்டது என்ற வாதமா அல்லது எந்த நிலையிலும் ஒருவன் காஃபிராக மாட்டான் என்ற வாதமா? இவ்வாறு பல குழப்பங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றில் முதல் குழப்பம் உம்மத்தைப் பாதுகாக்கும் வேலியாக இருந்த உமர் (ரழி) அவர்கள் கொல்லப்பட்டதாகும்.

இவ்வாறு குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் பெருந்தொகையான அறிவிப்புகள் எமக்கு முன்னால் குவிந்திருப்பதை நாம் உணர்கின்றோம். இமாம் கதீப் அல்பக்தாதி தம்முடைய காலத்தின் ஹதீஸ் துறையாளர்கள் பற்றிக் கூறும்போது — இமாம் பக்தாதி ஹிஜ்ரி 463 ல் மரணித்தவர். ஹதீஸ் துறையாளர்களில் முந்தைய கால அறிஞர்களுள் இறுதியானவர் என்று அல்லது பிந்தைய கால அறிஞர்களுள் முதன்மையானவர் என்று இவரை அழைப்பர் — குறிப்பிடுகிறார்: "நம்முடைய காலத்தவர்களில் சிலர் ஹதீஸ் நூல்களிலும் அவற்றைச் சேகரிப்பதிலும் தம்முடைய முழு நேரத்தையும் செலவிடுகின்றனர். ஆனால் அதில் முற்பட்ட கால அறிஞர்களுடைய வழியை அவர்கள் பின்பற்றவில்லை, ஹதீஸ்களையும் அதன் அறிவிப்பாளர்களையும் முந்தைய அறிஞர்கள் பார்த்ததுபோன்று இவர்கள் பார்க்கவில்லை. அவற்றுள் நல்லதையும் கெட்டதையும் வேறுபடுத்துவதிலோ அவற்றிலிருந்து சட்டங்களைப் பெற்றுக் கொள்வதிலோ அவர்களது கவனம் இருக்கவில்லை. மாறாக ஹதீஸ் என்ற பெயர் இருந்தால் போதும் என்று அவர்கள் திருப்திப்பட்டுக் கொண்டார்கள். அவற்றை ஏடுகளில் பதிவு செய்வதுடன் போதுமாக்கிக் கொண்டார்கள். அவர்கள் பெருந்தொகையான ஏடுகளை வைத்திருந்தார்கள். அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு மிகுந்த சிரமங்களை சகித்துக் கொண்டார்கள். நீண்ட பயணங்கள் மேற்கொண்டார்கள். அதற்காக பெருந்தொகையான செல்வங்களை செலவு செய்தார்கள். இவற்றின் ஊடாக அவர்கள் ஒரே ஒரு விசயத்தை மட்டுமே எதிர்பார்த்தார்கள். அவர்களுக்குக் கிடைக்கின்ற ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை குறைந்த எண்ணிக்கையினராக இருக்க வேண்டும் என்பதுதான் அது. இதனைத் தாண்டி அவர்கள் அறிவிப்பாளரின் நேர்மையை உறுதிப்படுத்த நினைக்கவில்லை. அமானிதம் பேணாதவர்களது ஹதீஸ்களையும் அவர்கள் பதிவு செய்தார்கள். ஒருவருடைய அறிவிப்புகளின் நம்பகத் தன்மை தொடர்பாக விமர்சனங்கள் உள்ள போதும் அவற்றை அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். தான் பதிவு செய்த ஹதீஸை தவறின்றி வாசிக்கத் தெரியாதவர்கள்,

தம் ஆசிரியரிடமிருந்து நேரடியாகக் கேட்டவற்றையும் தாம் வாசித்ததை ஆசிரியர் சரி கண்டதையும் வேறுபடுத்தி அறிவிக்கத் தெரியாதவர்கள், நபியவர்கள்வரை அறிவிப்பாளர் வரிசை தொடராக உள்ள அறிவிப்புகள் தொடர் அறுந்த அறிவிப்புகள் இவற்றுக்கிடையில் வேறுபாட்டை அறியாதவர்கள், தம்முடைய ஆசிரியரின் பெயரை அறியாதவர்கள் என பலதரப்பினரிடமிருந்தும் ஹதீஸ்களைச் சேகரித்திருக்கிறார்கள். பாவம் செய்யக்கூடியவரின் அறிவிப்பையும் தெளிவான பித்அத்தில் ஈடுபடக்கூடியவரின் அறிவிப்பையும், அந்த அறிவிப்பாளர் வரிசைகள் தொடர் அறுபடாமலும் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கின்ற சமயம் அவற்றைப் பதிவு செய்திருப்பதுடன் அவற்றை அறிவிப்புச் செய்வது கட்டாயமானது என்றும் கருதியிருக்கிறார்கள். அறிவிப்பாளர் வரிசைகள் அவர்களிடத்தில் குழம்பிய வடிவத்திலேயே இருக்கின்றன. அவற்றை அவர்கள் முறையாகப் பதிவு செய்திருக்க மாட்டார்கள். அவர்கள் சிலசமயம் ஒரு ஹதீஸை அறிவிப்புச் செய்வார்கள். ஆனால் அந்த ஹதீஸை யாரிடமிருந்து பெற்றோம் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். காரணம் பெரும்பாலும் யாரிடமிருந்தேனும் எழுத்துப் பிரதியொன்றை விலை கொடுத்து வாங்கி அதிலுள்ளவற்றை அறிவித்திருப்பார்கள். அவர்கள் எதையேனும் மனனம் செய்திருந்தாலும் நல்லவையும் கெட்டவையும் அதில் கலந்தே காணப்படும். அவர்களிடத்தில் ஒரு ஹதீஸில் உள்ள குறைபாடு பற்றி விளக்கம் கேட்டாலோ ஹதீஸின் உள்ளடக்கத்துக்குரிய அறிவிப்பாளர் வரிசையல்லாத வேறு ஒன்றை மாற்றி விளக்கம் கேட்டாலோ அவர்கள் தங்களின் தாடியை நீவி விட்டு, தங்களின் அறியாமையை மறைப்பதற்காகக் கணைத்துக் கொண்டு தடுமாறுவதைக் காணலாம். செக்குகளில் தாம் அரைத்துக் கொண்டிருக்கும் பொருள் என்னவென்று தெரியாத கழுதைகள் போன்றவர்கள்தாம் அவர்கள்". இமாம் கதீப் அவர்கள் ஹதீஸ் துறையாளர்களுடன் நீதியாகவே நடந்து கொண்டிருக்கின்றார்கள், அவர்களில் குறிப்பிட்ட ஒரு சாராரையே விமர்சித்திருக்கின்றார்கள், பகுத்தறிவு சார் சிந்தனையாளர்களின் சில விமர்சனங்களுக்கான காரணங்களை இங்கு தெளிவுபடுத்துகின்றார்கள். ஆனால் அவரது வார்த்தைகள், அன்றைய நாளில் இருந்த நெருக்கடி நிலையை தெளிவாய் எடுத்துக் காட்டுகின்றன.

## நான்காவது: சுய ஆய்வின்றி மற்றவர்களை நம்பி நின்ற தலைமுறையினர்

சட்ட சிந்தனைப் பள்ளிகளின் செல்வாக்கு அதிகரித்தபோது சுயமான ஆய்வு வீழ்ச்சியடையத் துவங்கியது. மக்கள் நான்கு இமாம்களுடனும் அவர்களது சிந்தனை முறைகளுடனும் மட்டுமே சுருங்கி விட்டார்கள். மக்களை தங்களின் சிந்தனைப் பள்ளிகளுடன் இணைப்பதில்தான் அவர்கள் மிகவும் குறியாக இருந்தார்கள். சிலர் இமாம்களுடைய கூற்றுக்களை சட்ட வசனங்களின் தரத்தில் வைத்து நோக்கினர். அவற்றையும் சட்டவசனங்களைக் கையாள்வது போன்று முரண்பாடுகளைக் களைதல், சட்டத்தன்மை அற்றதாக ஆக்குதல் போன்ற செயல்முறைகளுக்கு உட்படுத்தினர். இவ்வாறுதான் ஆரம்பத்தில் மக்கள் குர்ஆனை விட்டுவிட்டு அறிவிப்புகளில் ஈடுபாடு காட்டினர். அறிவிப்புகள் குர்ஆனையும் உள்ளடக்கியவை என்று நம்பினர். அடுத்ததாக அறிவிப்புகளை இமாம்களின் சட்டக் கருத்துக்களுக்கு சான்றுகளாகக் கொண்டு வந்தார்கள். இறுதியில் அறிவிப்புகளையும் விட்டுவிட்டு சட்டவியலில் ஈடுபாடு காட்டத் துவங்கினர். இமாம்களின் சட்டக்கருத்துக்களை மட்டுமே அவர்கள் முன்வைத்தார்கள். ஷரீஆ என்பதே இமாம்களது கருத்துக்கள் தானோ என்று எண்ணுமளவுக்கு அது மாறியது. ஹனபி சட்ட மரபைச் சேர்ந்த இமாம் கிர்கி, “எங்கள் மத்ஹபைச் சேர்ந்தவர்களுடைய கருத்துக்களுடன் முரண்படும் ஒரு குர்ஆன் வசனம், சட்டத்தன்மை அற்றதாகக் கருதப்படும் அல்லது அதனைவிட இது மேம்பட்டதாகக் கொள்ளப்படும். இரண்டிற்குமிடையே இணக்கப்பாடு காண முடியும் எனில் அது மிகவும் சிறந்தது” என்றார். இந்தக் கருத்தைப் பார்க்கும்போது, மத்ஹப் வெறி ஒரு நோயாக மாறியிருக்கிறது என்று தோன்றுகின்றது. இங்கு அடிப்படை கிளையாக மாற்றப்பட்டுள்ளது மாத்திரமன்றி கிளை அடிப்படையை கட்டுப்படுத்தக்கூடியதாகவும் மாறியுள்ளது. சட்ட வியலிலும் சரி சட்டக் கோட்பாட்டியலிலும் சரி சுய ஆய்வு அற்றுப் போய் விட்டது. அது இரண்டாம் நூற்றாண்டில் இருந்த மட்டத்தைவிட மிகவும் தாழ்ந்து போனது. இதே நிலையை ஹதீஸ் துறையாளர்களிடமும் அவதானிக்க முடிந்தது. அவர்களும் தங்களின் பயணத்தை முறையாகத் தொடரவில்லை. அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டின் பிரயோகம் முழுமையாகத் தடைப்பட்டிருந்தது. தொகுக்கப்பட்ட ஒரு நூலில் மட்டுமே தங்கி நிற்கும் நிலை அல்லது ஒரு நூலை அறிவிப்புச் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதி அல்லது ஒரு ஆசிரியரிடம் அவரது நூலைக் கற்றல் மட்டுமே போதுமானதாகக் கருதப்பட்டது.

அரசியல் முரண்பாடுகளின் பின்புலத்தில் குறிப்பாக அறபு சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையே அரசியல் சட்டப்பூர்வத்தன்மை குறித்த முரண்பாடுகளில் பல ஹதீஸ்கள் இட்டுக்கட்டப்பட்டன என்பது மறுக்கப்பட முடியாது. இங்கு ஒவ்வொரு தரப்பும் தம் பக்கத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் அறிவிப்புகளை ஆதாரமாகப் பயன்படுத்தியுள்ளனர். இத்தகைய முரண்பாடுகளில் எந்தப் பக்கத்தையும் ஆதரிப்பதற்கு குர்ஆனை ஆதாரமாகக் கொண்டு வர முடியவில்லை. ஆகவே அவர்கள் தஞ்சமடைந்த இடம் அறிவிப்புகளாகும். சிலர் இட்டுக் கட்டும் பணியை மேற்கொள்ள இன்னும் சிலர் அவற்றைப் பரப்பும் பணியைச் செய்தார்கள். நகரங்களின் சிறப்புக்கள், கோத்திரங்களின் சிறப்புக்கள், சமூகங்களின் சிறப்புக்கள், அறிஞர்களின் சிறப்புக்கள் என்று பட்டியல் நீண்டு சென்றது. இந்தத் தொடரிலேயே இமாம் ஷாஃபி தொடர்பாகவும் இமாம் அபூ ஹனீபா தொடர்பாகவும் கவாரிஜ்கள், கதரிய்யாக்கள் என பலர் தொடர்பாகவும் போலி ஹதீஸ்கள் உலா வந்தன. இவற்றை விமர்சனத்திற்குட்படுத்தி, சரியையும் தவறையும் வேறுபடுத்துகின்ற பணியை பல அறிஞர்கள் மேற்கொண்டார்கள். அது குறிப்பிடத்தக்க பணிகளுள் ஒன்றாகும்.

## அறிவிப்புகள் குர்ஆனை விடவும் சிறப்புக்குரியவையல்ல

திருக்குர்ஆன் அதன் மொழியமைப்பிலும் ஒருமித்த கட்டமைப்பிலும் அதன் உள்ளடக்கத்திலும் தனித்தன்மை வாய்ந்தது. அந்த சிறப்பம்சம் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டது. விளங்குவதற்கும் அறிந்து கொள்வதற்கும் இலகுவாகவே அவன் அதனை அமைத்துள்ளான். முடிந்தால் அதனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வருமாறு மனித, ஜின் வர்க்கத்தினரிடம் அவன் சவால் விட்டுள்ளான். பல காரணிகள் சாதகமாக இருந்தும் அவர்களால் அவ்வாறு கொண்டு வர முடியவில்லை. முரண்பாடுகள், சந்தேகங்கள் எதுவும் அதில் இல்லை. அது வந்த சேர்ந்த வழி திட்டவட்டமானது. அதன் வசனங்கள் தெளிவானவை. "அலிப் லாம் ரா இது தெளிவான வசனங்களைக் கொண்ட வேதமாகும். பின்னர் அது நிபுணத்துவமும் ஞானமும் உடையவன் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது" (ஹூத்: 1). அதன் நம்பகத்தன்மை யாரோ ஒருவருடைய அறிவிப்பில் தங்கியில்லை. அறிவிப்புகள் இதில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. அறிவிப்புகள் உறுதிப்படுத்தும்வரை குர்ஆன் என்றும் காத்திருப்பதில்லை. அது அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பது மாத்திரமே அதன் திட்டவட்டத் தன்மைக்குப் போதுமானது. எந்த

வழியாலும் அதனுள் அசத்தியம் நுழைந்து விட முடியாது. அதனை நபியவர்கள் ஜிப்ரீலிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். அதனை ஓதவும் மனனமிடவும் கற்பிக்கவும் பரிமாற்றம் செய்யவும் மனித மனங்கள் என்றும் தயாராக இருக்கின்றன. அதனை மக்களுக்கு ஓதிக் காட்டுமாறு அல்லாஹ் நபியவர்களுக்குக் கட்டளையிட்டான். அதனை ஒன்றுதிரட்டவும் ஓதவும் விளக்கவும் பாதுகாக்கவும் உரிய பொறுப்பு அல்லாஹ்விடமே இருக்கின்றது. அது அல்லாஹ்வின் வார்த்தைகள், மனித அறிவிப்புகளுக்கு அது கட்டுப்பட்டதல்ல.

இருப்பினும் ஹதீஸ் துறையாளர்களில் சிலர் அறிவிப்புகளுக்கு ஒரு முக்கியத்துவத்தை வழங்க நினைத்தார்கள். குர்ஆனும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்கள். இக்கருத்தை கிராஅத் கலைகள் என்று பின்னர் அறிமுகமான கலையுடன் சம்பந்தப்படுத்தி கூறினார்கள். கிராஅத்துக்கள் உண்மையில் அறிவிப்புகளில் தங்கியிருப்பவையாகும். ஏனெனில் கிராஅத்துக்கள் வேறுபட்டமை குறித்து நம்முடைய நிலைப்பாடு சற்று வித்தியாசமானது. அதாவது, வேறுபட்ட கிராஅத்துக்கள் என்பது நாவுகள் பழக்கப்படாதவர்களுக்கு நபியவர்கள் வழங்கிய அனுமதிகளாகும். உதாரணமாக, ழாத் என்ற எழுத்தை உச்சரிக்க முடியாதவர்களுக்கு பகரமாக ஸாய் அல்லது ஸீன் உச்சரிக்கப்பட அனுமதிக்கப்பட்டது. அதுபோல் ஹா (?) உச்சரிக்க முடியாதவர்களுக்குப் பகரமாக அய்ன் அல்லது ஹா (?) உச்சரிக்கப்பட அனுமதிக்கப்பட்டது. இந்த அனுமதிகள் நபியவர்களது மரணத்துடன் நிறைவுற்றிருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக நபியவர்களது மரணத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் இறுதியாக குர்ஆனை இரு தடவைகள் மீட்டிப் பார்த்ததற்குப் பிறகு இவற்றுக்கு அனுமதி இருக்க வாய்ப்பில்லை. அடுத்து உஸ்மான் (அலை) அனைத்தையும் ஒரே வடிவத்துக்குக் கொண்டு வந்ததற்குப் பிறகு அந்த சலுகையை தொடர்ந்தும் பயன்படுத்த முடியாது என்பது இன்னும் உறுதியாகின்றது. உஸ்மான் (ரழி) குர்ஆனை ஒரே வடிவில் கொண்டு வந்ததற்குப் பிறகு, எந்தவொரு சொல்லையும் வேறு வார்த்தையில் ஓதுவதற்கு அனுமதியிருக்கின்றது என்று யாரும் குறிப்பிடவில்லை. நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு உஸ்மான் (ரழி) தொகுத்த குர்ஆன் பிரதியின் மீது மக்களுடைய பொது உடன்பாடு எட்டப்பட்டதற்குப் பிறகு இந்த சலுகைக்கு இடம் இருக்கவில்லை. அவ்வாறு இருந்திருப்பின் அது ஆச்சரியத்துக்குரிய விசயம். நிச்சயம் அவ்வாறு நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் சில அறிவிப்புகளைப் பயன்படுத்தி குறிப்பாக குர்ஆன் ஏழு எழுத்துக்களில் இறக்கப்பட்டுள்ளது என்ற

ஹதீஸை முன்னிறுத்தி, இதனை நிறுவ முற்பட்டாலும் அந்த அறிவிப்புகளும் மீள்பரிசீலனைக்குரியவை என்ற வகையில் அது பலமிழக்கின்றது.

அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாக திருக்குர்ஆன் நிறுவப்பட வேண்டிய தேவை இல்லை என்பதை நாம் மிகவும் உறுதியாகக் கூறுகின்றோம். அதுபோல் குர்ஆனில் வேறுபட்ட கிராஅத்துக்கள் இல்லை என்பதையும் உறுதி செய்கின்றோம். ஆய்வுப்பூர்வமாகவே இக்கருத்துக்கு நான் வந்திருக்கிறேன். இதற்கு முன்னர் குர்ஆனிய வசனங்கள் சட்டத்தன்மை அற்றதாக மாற்றப்படலாம் என்ற கருத்தையும் ஆய்வுப்பூர்வமாக மறுத்துள்ளேன்.

குர்ஆனுடன் சம்பந்தப்படும் அனைத்தும் இறைமூலத்தைக் கொண்டது. குர்ஆனும் ஏனைய அறிவிப்புகளைப் போல் அறிவிப்பாளர் வரிசையில் தங்கியிருக்கிறது எனில் மனிதனுக்கும் ஜின்னுக்கும் இது ஒரு சவாலாக இருக்க முடியாது. அறிவிப்புகளைவிட திருக்குர்ஆன் மேலானது. அறிவிப்புகளைப் பாதுகாப்பதற்கான மனித முறைமைகளை விட அது மேலானது. எனவே ஏனைய எழுத்துக்களும் நூல்களும் உட்பட முடியுமான வரையறைகளுக்கு குர்ஆனையும் உட்படுத்த நினைப்பது மிகவும் தவறானது. அந்த வகையில் குர்ஆனுக்கு அடுத்த நிலையில் மிகவும் ஆதாரப்பூர்வமான நூல் ஸஹீஹுல் புகாரீ என்று சிலர் சொல்வது பொருத்தமற்ற ஒரு கருத்தாகும். ஏனெனில் ஸஹீஹுல் புகாரீயை அதனைப் போன்ற ஒரு நூலுடன்தான் ஒப்பீடு செய்ய வேண்டும். ஸஹீஹுல் புகாரீ ஸஹீஹ் முஸ்லிமை விட ஆதாரப்பூர்வமானது அல்லது முஸ்னத் அஹ்மதைவிட அல்லது முஅத்தா மாலிக்கைவிட என்று சொல்வதில் தவறில்லை. ஆனால் குர்ஆனுடன் அதனை ஒப்பிடுவது குர்ஆனுக்கு சவால் விடுவது போன்றதாகும். அறிவுள்ள ஒரு மனிதன் இந்தத் தவறைச் செய்ய மாட்டான். குர்ஆனுக்கு நிகரில்லை. அதற்குச் சமானமாகவோ அல்லது நெருங்கியோ எதுவும் வர முடியாது. அதனோடு எதனையும் ஒப்பிடவோ அளவிடவோ முடியாது. அது முழுமையாக உண்மையானது. முழுமையாகத் திட்டவட்டமானது.

எனினும் ஹதீஸ்சார்பு சிந்தனைப் பிரிவினரும் பகுத்தறிவுசார்பு சிந்தனைப் பிரிவினரும் இரண்டு கட்சிகள் போல் பிரிந்து நின்று, குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான உறவு பற்றி விவாதிக்க முற்பட்டதனால் அது ஒரு போர்க்களம் போல் மாறிவிட்டது. அறிவிப்பாளர் வரிசையை மட்டுமல்லாமல் உள்ளடக்க வசனங்களையும் விமர்சனத்திற்கு உட்படுத்தி சில ஹதீஸ்களை

ஆதாரமாகக் கொண்டு, ஹதீஸ்களை குர்ஆனுடன் ஒப்பீடு செய்து ஏற்றுக்கொள்ளும் முறைமையை, ஸின்தீக்களின், பாவிகளின், நயவஞ்சகர்களின் நடைமுறை என்றும் அது நம்பிக்கையாளர்களின் நடைமுறை அல்ல என்றும் ஹதீஸ்சார்பு சிந்தனையாளர்கள் காட்ட முயன்றனர்.

பகுதி ஐந்து

# சுன்னா தொகுக்கப்பட்டதன் வரலாற்றுச் சூழமைவு

*சுன்னா தொகுக்கப்பட்ட வரலாற்றுச் சூழமைவை விளங்கிக் கொள்வது அறிவிப்புகளுடன் சம்பந்தப்பட்ட நம்முடைய மரபுகளில் ஏற்பட்ட பலவீனங்களை அடையாளம் காணவும் அவை முஸ்லிம் அறிவு மரபில் ஏற்படுத்திய தாக்கங்களைப் புரிந்து கொள்ளவும் பெரிதும் உதவி செய்யும்.*

*அறபுகள் எழுத்தறிவற்ற ஒரு சமூகத்தினர். முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன்னர் அவர்கள் ஒரு நபியைப் பார்த்ததில்லை. அவர்களுக்கு மத்தியில் நபியவர்கள் இருபத்தி மூன்று வருடங்கள் வாழ்ந்தார்கள். அவருக்கு வஹி இறங்குவதை அந்த மக்கள் நேரடியாகப் பார்த்தார்கள். தங்களின் உறுப்புகளைக் கொண்டு அதன் அருளை, ஒளியை உள்ளுக்குள் உணர்ந்தார்கள். ஆகவே காலப்போக்கில் வஹியும் தூதரும் அவர்களிடத்தில் நன்கு பழக்கப்பட்ட தெளிவான ஒரு விசயமாக மாறியிருந்தது. அதனாலேயே உமருக்கு (ரழி) நபியவர்களின் மரணத்தை நம்ப முடியவில்லை. அவரது நிலை மட்டுமல்ல. பலருடைய நிலையும் இவ்வாறே இருந்தது. காரணம் அவர் மீதான அன்பு அவர்களின் உள்ளத்தில் ஆழ ஊடுறுவி இருந்தது. அது அவர்களது ஈமானின் முக்கியமானதொரு அடையாளமாக வெளிப்பட்டது.*

*நபியவர்களின் மரணத்தை அவர்களால் சீரணித்துக் கொள்ள முடியாத ஒரு நிலை காணப்பட்டது ஆச்சரியமான ஒரு விசயமல்ல. நபியவர்களுடனான அவர்களது பற்றும் பிடிப்பும் அவரது மரணத்திற்குப் பின்னர் மூன்று வகையினரைத் தோற்றுவித்தது.*

**முதல் வகையினர்:** *அரசியலர்கள். இவர்கள் நபியவர்கள் மீதான தங்களின் பிடிப்பையும் அன்பையும், நபித்துவ வழியில், அவரது ஒவ்வொரு அடியையும் பின்பற்றி ஆட்சி செய்வதன்மூலம் வெளிப்படுத்தினார்கள். இதற்கான சிறந்த உதாரணமாக அபூபக்கரைக் (ரழி) காண முடியும். மதமாற்றப் பிரச்சினையை அவர் எதிர்கொண்ட விதம், இதற்கு முன்னர் அவரிடம் பார்க்கப்படாத உறுதியையும் துணிவையும் அவர் அதில் வெளிப்படுத்தினார். நபியவர்கள் வாழ்ந்த காலத்திற்கும் அதற்கு அடுத்த காலத்திற்கும் இடையில் எந்த வேறுபாடும் காணப்படக் கூடாது என்ற நோக்கத்தில் அவ்வாறு வேறுபடுத்த நினைத்தவர்களை எதிர்த்து களம் கண்டு அந்தக் குழப்பத்தை ஒழித்தார். நபியவர்களது வஸிய்யத்தை முழுமையாகவே பின்பற்றினார்.*

*அரசியலர்களில் மற்றொரு சாரார் இந்த எல்லையையும் தாண்டிச் சென்று, அவரது குடும்பத் தலைமைகளிடமே அரசியல் அதிகாரம் செல்ல வேண்டும் என்றனர். அதன்மூலம் இந்த உம்மத்தில் நபியவர்களின் பிரசன்னம் தொடர்ந்திருக்கும் என்றனர்.*

**இரண்டாம் வகையினர்:** *ஸூஃபிக்கள். இவர்கள் விலாயத் அடிப்படையில் உலகில் நபித்துவம் தொடர்கின்றது என்கிறார்கள். விலாயத் என்பது நபியவர்களுக்குப் பின்னர் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் என்று பொருள் கூறுகின்றனர். அந்த வகையில் நபியவர்களுடைய அற்புதங்கள் என்ற இடத்தில் இவர்களுடைய கராமத்துக்கள் காணப்படும். இவர்கள் மத்தியில் பிரயோகத்தில் உள்ள பல்வேறு ஹதீஸ்கள் மூலம் நபியவர்களின் வாழ்வுதான் குர்ஆனைவிடவும் பற்றற்ற வாழ்வை தெளிவாக எடுத்துரைக்கின்றது என்கிறார்கள். நபியவர்கள் மீதான அன்பையும் பற்றையும், நபியவர்கள் தங்களின் சபைகளில் கலந்து கொள்கின்றார் என்ற வடிவத்தில் வெளிப்படுத்துவார்கள். தங்களின் கவிதைகளிலும் பாடல்களிலும் நபி புகழைப் பரப்புவார்கள். கஷ்ஃப் என்னும் வழிமுறையின்மூலம் நபியவர்கள் தங்களுக்குப் பல விசயங்களை உணர்த்துகின்றார் என்ற நியாயத்தின் அடிப்படையில் முறையான ஒழுங்கில் ஆதாரப்படுத்த முடியாத கூற்றுக்களையும் நபியவர்களின் பெயரில் முன்வைப்பார்கள். தங்களின் நோக்கங்களை நிறைவு செய்யக் கூடிய கூற்றுக்கள் மற்றும் திருக்குர்ஆன் விளக்கங்கள் போன்றவற்றை எந்தத் தயக்கமும் இன்றி நபியவர்களின் பெயரில் சொல்லுவார்கள். "ஸுஜூது செய்பவர்களுடன் நீங்கள் இயங்குவதையும்" (ஷுஅரா: 219) என்ற வசனத்திற்கு, ஆம், முஹம்மது (ஸல்) அவர்கள் நாம்*

அல்லாஹ்வை நினைவு கூறும் சபைகளில் எங்களுடன் கலந்து இயங்குவார்கள் என்று விளக்கம் அளிப்பார்கள். இதற்கு ஆதாரமாக பல ஹதீஸ்களையும் முன்வைப்பார்கள்.

**மூன்றாம் வகையினர்:** அறிஞர்கள். இவர்களில் ஹதீஸ் துறை, சட்டவியல், இறையியல் போன்ற அனைத்துத் துறை அறிஞர்களும் உள்ளடங்குவர். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட வகையினருடன் குறிப்பாக இந்த வகையினர் ஊடாகவே சுன்னாவின் பொருள் மாற்றமடைந்தது. குர்ஆனை நடைமுறைப்படுத்துதல் என்றதொரு விசயம் மக்களுடைய வாழ்க்கையில் இருக்கவில்லை. எனவே அதனைத் தாண்டி யாரும் சிந்திக்கவில்லை. ஆனால் சுன்னாவின் பொருள் பரப்பு விசாலப்பட்டுச் சென்றது. நபியவர்களிடமிருந்து வெளிப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு செயலும் மாத்திரமன்றி பிறருடைய வார்த்தைகளும் செயல்களும்கூட நபியவர்களால் மறுக்கப்படாவிட்டால் அவற்றை அவர்களது அங்கீகாரமாகக் கருதினார்கள். தவிர, நபியவர்களது மௌனங்களையும் கவலைகளையும் ஹதீஸ் துறையாளர்கள் சுன்னா என்ற பட்டியலில் இணைத்து அவற்றுக்குத் தராதரங்களை வழங்கினார்கள்.

நபித்தோழர்கள் பல்வேறு நகரங்களில் பரந்து வாழ்ந்ததன் அடிப்படையில் அவர்களிடமிருந்த ஹதீஸ்களைப் பெற்றுத் தொகுக்கும் நோக்கில் ஹதீஸ் துறையாளர்களின் பயணங்கள் அமைந்தன. இதன்விளைவாக சுன்னா குர்ஆனுக்கான விளக்க மாகத் தேடப்படும் நிலை அற்றுப் போனது. மாறாக அது நபியவர்களிடமிருந்து வந்தது என்ற அடிப்படையில் மட்டுமே தேடப்பட்டது. இதனால் குர்ஆனிய சட்டவாக்கத்துக்கு நிகராக சுன்னாவின் சட்டவாக்கம் என்ற ஒன்று உருவானது. நபியவர்கள் குர்ஆனுக்கு விளக்கமாக அல்லாமல் மேற்கொண்டவை, அல்லாஹ்வை நெருங்கும் நோக்கில் செய்தவை என்ற வகையில், கண்டிப்பான சுன்னா என்றதொரு வகை தோற்றம் பெற்றது. இது கட்டாயமானவற்றிற்கு மிகவும் நெருக்கமானது. எந்த அளவுக்கு எனில், சுப்ஹ் தொழுகைக்கு முந்திய இரண்டு ரக்அத்துக்களையும் வித்ர் தொழுகையையும் விடுபவர்களுக்கு எதிராக போர் தொடுக்க முடியும் என்று இமாம்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறுதான் சுன்னா, எந்தச் சிறிய, பெரிய விவகாரத்தையும் விட்டு வைக்காத சுய சட்ட முறைமையாக மாறியது. அதனைக் கடைப்பிடிப்பது நபியவர்களை முன்மாதிரியாக் கொள்வது என்றும் அவர்களுக்குக் கட்டுப்படுவது வாஜிப் என்ற பொருளிலும்

பார்க்கப்பட்டது. உலக மனிதர்களில் நபியவர்கள் மட்டும்தான், அவர்களின் வார்த்தைகளும் செயல்களும் அமைதியும் அசைவுகளும், அவை தனிப்பட்ட வாழ்வாக இருந்தாலும் பொது வாழ்வாக இருந்தாலும் அனைத்தும் நுணுக்கமாகவும் மிகுந்த அன்புடனும் பின்பற்றப்படும் ஒரு சட்டமாக இருக்கின்றது. அவை குர்ஆனுக்கான விளக்கமாகவோ தனித்த சுன்னாக்களாகவோ, அவர் ஒரு தூதர் என்ற அடிப்படையில் செய்தவையோ மனிதர் என்ற அடிப்படையில் செய்தவையோ எவ்வாறு இருப்பினும் அவை பின்பற்றப்படுகின்றன.

## முதலாவது: சுன்னா தொகுக்கப்பட்டமையும் கிரேக்க, யூத அறிவு மரபுகளின் தாக்கமும்

யூதர்கள் மக்காவைவிட கைபரிலும் மதீனாவிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும்தான் அதிகம் வாழ்ந்தார்கள். ஏனெனில் புதிய தூதர் மதீனாவுக்கு இடம் பெயர்வார் என்ற முன்னறிவிப்புக்கள் அவர்களது வேதநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவர்கள் விவசாயத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருந்தார்கள். இதனால்தான் நபியவர்கள் குர்ஆனின் வழிகாட்டலுக்கேற்ப யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் மத்தியிலான பொது இணக்கப்பாடுகள் குறித்து அவர்களுக்கு அதிகம் அறிவுறுத்தினார்கள். முந்தைய வேதங்களை உண்மைப்படுத்தி அவற்றின் இறுதி வடிவமாகவே தாம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் நபிமார்களின் தந்தையான இப்ராஹீமின் (அலை) நீட்சியாகவே தம்முடைய பணி அமைகின்றது என்றும் இப்ராஹீம் (அலை) யூதராகவோ கிறிஸ்தவராகவோ இல்லாமல் முஸ்லிமாகத்தான் இருந்தார் என்றும் குறிப்பிடுவார்கள். ஆனால் அவர்களிடமிருந்த பகைமையும் எதிர்ப்புணர்வும் தங்களுக்குள் இருந்து இறுதி நபி வரவில்லை என்ற ஆதங்கமும் அவற்றை ஏற்றுக்கொள்ள விடாமல் செய்தன.

அவர்கள் குர்ஆனையும் தூதரையும் நிராகரித்து, நபியவர்களுடனான பகைமையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டும் முஹம்மது (ஸல்) அவர்கள் இறுதித் தூதராக இருந்துவிடக் கூடாது என்ற அர்த்தமற்ற நம்பிக்கையுடனும் இருந்தது அவர்களை பல்வேறு சதிகளில் ஈடுபட வைத்தது. நபியவர்களுக்கு எதிரான நிராகரிப்பாளர்களின் போராட்டங்களுக்கு நிதியும் ஆயுதங்களும் அவர்கள் வழங்கினார்கள். இவை தவிர பல்வேறு குழப்பங்களையும் சந்தேகங்களையும் தோற்றுவித்ததுடன் நிராகரிப்பாளர்களுடனும் ஏனைய

எதிரிகளுடனும் உடன்படிக்கைகளையும் செய்து கொண்டனர். அபூஹுறைரா (ரழி) கூறுகின்றார்: "வேதம் வழங்கப்பட்டவர்கள் ஹீப்ரு மொழியில் தவ்ராத்தை வாசிப்பார்கள். ஆனால் அறபு மொழியில் முஸ்லிம்களுக்கு அதனைத் தெளிவுபடுத்துவார்கள். நபியவர்கள் கூறினார்கள்: வேதம் வழங்கப்பட்டவர்களை நீங்கள் உண்மைப்படுத்தவும் வேண்டாம் பொய்ப்பிக்கவும் வேண்டாம்."

சில நூலாசிரியர்கள் அபூ ஹுறைரா (ரழி) வழியாக ஒரு அறிவிப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் ஏற்கத்தக்க மூல நூல்களில் அதனை நான் காணவில்லை. அபூஹுறைரா (ரழி) நபியவர்களுடைய செய்திகளை அறிவிப்பார்கள். கஃபுல் அக்பார் யூதர்களின் செய்திகளை அறிவிப்பார்கள். அவற்றைக் கேட்டவர்கள் சில சமயங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட குழப்பத்தில், கஃபுல் அக்பாரிடமிருந்து கேட்டதை அபூஹுறைராவிடமிருந்து கேட்டதாக அறிவித்திருக்கிறார்கள். தவ்ராத் அறபு மொழியில் பெயர்க்கப்பட்டதற்குப் பிறகுதான் அவர்களின் கதைகளில் உள்ள போலியையும் இடைச்செருகல்களையும் அறிஞர்கள் கண்டு கொண்டனர். முஸ்லிம்கள் அவற்றைப் பகுப்பாய்வு செய்தபோது, யூத கதை சொல்லிகள் எந்த அளவு பொய்யான கதைகளை அதனுள் புகுத்தியிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டு அது குறித்து முஸ்லிம்களை எச்சரிக்கும் நோக்கில் சில நூல்களையும் எழுதியுள்ளனர். இமாம் சுயூத்தியின் '*தஹ்தீருல் கவாஸ் மின் அகாதீபில் கஸ்ஸாஸ்*' என்ற நூல் முக்கியமானது. இமாம் ஜாஹில் தம்முடைய '*கிதாபுல் ஹயவான்*' என்ற நூலில் கஃபுல் அக்பாரினுடைய "ஆதம் பத்துப் பண்புகளின் காரணமாகத் தண்டிக்கப்பட்டதுபோன்று ஹவ்வாவும் பத்துப் பண்புகளின் காரணமாகத் தண்டிக்கப்பட்டார் என்று தவ்ராத்தில் எழுதப்பட்டுள்ளது" என்ற கூற்று பற்றிக் குறிப்பிடும்போது கூறுகிறார்: "கஃபுடைய அறிவிப்புகளில் அதிகமாக தவ்ராத்தில் எழுதப்பட்டுள்ளது என்று வந்துள்ள வாசகம், நபிமார்களின் நூல்களில் உள்ளவை என்பதைக் குறிக்கிறது என்று நான் கருதுகிறேன். அவர்கள் சுலைமானிடமிருந்து பல நூல்களை பரம்பரை பரம்பரையாகப் பெற்றிருக்கிறார்கள். உதாரணமாக, இஷஃயா போன்ற நூல்கள், இவற்றில் உள்ள விசயங்களே அவரால் கூறப்பட்டிருக்க வேண்டும். உமருடைய (ரழி) பண்புகள் போன்ற பல விவகாரங்களில கஃபுல் அக்பார் ஊடாக அறிவிப்புச் செய்தவர்கள், அவரது அறிவிப்புகளை சரிகண்டதன் அடிப்படையிலேயே அதனைச் செய்துள்ளனர். அவர் செய்திகளை இட்டுக்கட்டுகின்றவர் அல்ல. ஏற்கனவே நான் குறிப்பிட்ட வடிவில் அவரது வார்த்தைகளைப் புரிந்து கொள்வதே பொருத்தமானது.

இங்குதான் அறபு மரபுகளில் முந்தைய வேத மரபுகளில் இடையீடுகளால் இஸ்லாத்திற்கு அந்நியமான சிந்தனைகளின் வருகைக்கு வழியமைக்கப்பட்டன. நம்முடைய புரிதல்களில் அவை பலவந்தமாக உள்ளே நுழைந்தன. உதாரணமாக, மனிதன் தெரிவுச் சுதந்திரம் அற்றவன் என்ற சிந்தனை, இஸ்லாத்திற்கு முற்றிலும் மாறான அந்நியமான ஒன்று. இது யூத நம்பிக்கைக்கு நெருக்கமானது. இஸ்லாம் நேரடியான இறை அதிகாரத்தைப் பேசவில்லை. மாறாக சட்டவதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது; அதனை அவன் குர்ஆனில் வைத்துள்ளான் என்பதை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. அந்த வகையில் குர்ஆனுடைய சட்டவதிகாரம் மனிதப் புரிதலின் அடிப்படையிலேயே செயல்படுகின்றது. ஆகவே தெரிவுச் சுதந்திரமின்றி முழு இறை அதிகாரத்திற்கு உட்பட்டு மனிதனின் செயல்பாட்டை இஸ்லாம் அங்கீகரிப்பது ஒருபோதும் சாத்தியமில்லை. மனிதத் தெரிவுச் சுதந்திரத்தை மறுக்கும் இந்த சிந்தனை சுலைமானுக்கு (அலை) முந்தைய இஸ்ரவேலர்களிடத்தில் இருந்த நேரடி இறை அதிகார சிந்தனையுடன் பொருந்தி வருகின்றது. புனித பூமியின் நேரடியான ஆட்சியாளன் அல்லாஹ்வே என்றும் நபிமார்கள் வெறுமனே வாயிற் காவலர்கள் என்றும் யூதர்கள் நம்பினார்கள். இந்த நம்பிக்கையைவிட்டும் அல்லாஹ் தூய்மையானவன். அல்லாஹ் ஒரு சமூகத்துடன் பேச நினைத்தால், நபிமார்களுக்குக் கேட்குமாறு பேசுவான். அவர்கள் மக்களுக்குக் கேட்கும் வண்ணம் சத்தத்தை உயர்த்தி அதனை மீண்டும் சொல்வார்கள். இறை அதிகாரம் பற்றிய இந்த நம்பிக்கையின் காரணமாகவே யூதர்கள் தங்களை அல்லாஹ்வின் தெரிவு செய்யப்பட்ட சமூகத்தினர் என்றும் தாங்கள் அல்லாஹ்வின் பிள்ளைகள், அவனுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர்கள் என்றும் சொல்லிக் கொண்டார்கள். இந்தப் பின்புலத்திலிருந்தே அல்லாஹ்வே அனைத்தையும் நேரடியாக ஆள்கின்றான் என்ற கருத்து அவர்களிடத்தில் பரவியது. அல்லாஹ் அவர்களிடம் சிரம்பணியுமாறு கூறி "கேளுங்கள் கட்டுப்படுங்கள்" (தகாபுன்: 16) என்று கட்டளையிட்ட போது, அவர்கள் நாங்கள் கேட்டோம், மாறு செய்தோம் என்றார்கள்.

இஸ்லாம் முழுமையான தெரிவுச் சுதந்திரத்தின் மீதே எழுந்திருக்கிறது. மனிதனுக்கும் அவனது இறைவனுக்கும் இடையே நடைபெற்ற மூல ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்த அமானிதம் மனிதனுக்குப் பரிந்துரைக்கப்பட்ட சமயம், மனிதனுடைய விருப்பத் தெரிவின் அடிப்படையிலேயே அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர்

“உங்களில் மிகச் சிறந்த முறையில் செயல்படுகின்றவர்கள் யார் என்பதைச் சோதிப்பதற்காக” (ஹூத்: 7) மனிதனுக்குக் கடமைகள் வழங்கப்பட்டன. அந்த அமானிதத்தின் அடியாகத் தோன்றும் உன்னத நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில்தான் அவனுக்கு இந்தக் கடமைகள் வழங்கப்பட்டன. மனிதன் சுய தேர்வின் அடிப்படையில் இந்த அமானிதத்தை ஏற்றுக் கொண்டதன் விளைவாகவே இந்த பூமியின் பிரதிநிதித்துவம் அவனுக்குக் கிடைக்கின்றது. ஆகவே மனிதன் தெரிவுச் சுதந்திரம் அற்றவன் என்ற வாதத்திற்கு இங்கு இடமேயில்லை, இந்த அகீதாவும் ஷரீஆவும் முழுமையான மனித சுதந்திரத்தின் மீதே எழுந்துள்ளன. ஆனால் பரவலாகக் காணப்பட்ட ஒரு தவறான அறிவு மரபு, மனிதன் சுதந்திரமற்றவன் என்ற வடிவில், புனித வசனங்களுக்கு விளக்கமாக மாறியதுதான் இந்தத் தவறான சிந்தனைக்கு ஆதாரமாக நிற்கின்றது.

இதிலிருந்து ஆரம்பித்த தர்க்கவியல் சிந்தனைச் சிக்கல்கள் சங்கிலித் தொடராக வந்து கொண்டிருந்தன. மனிதன் தெரிவுச் சுதந்திரமற்றவன் என்ற இடத்திலிருந்து மனித நாட்டத்தின் படியே அனைத்தும் நடைபெறும், இறை நாட்டத்திற்கும் மனித செயலுக்கும் சம்பந்தமில்லை என்ற இடத்திற்குச் சென்று அடுத்தபடியாக நேரடி இறையதிகார சிந்தனையை நோக்கி நகர்ந்தது. இதனால் முஸ்லிம் உம்மத் பிளவுண்டது. குர்ஆனை வைத்து அவர்கள் பிளவுபட்டதற்குப் பிறகு அதனை மையப்படுத்தி அவர்களின் ஒற்றுமையை மீளக் கொண்டு வருவது சிரமமாகியது. இந்த இறையியல் சிந்தனைக் குழுக்களால் தமக்கு மத்தியிலான சிக்கல்களை குர்ஆனை ஆதாரமாகக் கொண்டு தீர்த்துக் கொள்ள முடியவில்லை. தவிர, குர்ஆனிய வசனங்களை ஆயுதமாகப் பயன்படுத்தியே ஒவ்வொரு தரப்பும் மற்ற தரப்பைத் தாக்கத் தொடங்கினர். அவர்கள் திருக்குர்ஆன் பல்பொருளுக்கு இடம்பாடானது. ஆகவே அது ஒரே சமயம் ஒரு விசயத்திற்கு ஆதரவான ஆதாரமாகவும் எதிரான ஆதாரமாகவும் அமைகின்றது என்றார்கள். அதேபோன்று, சட்ட வசனங்கள் முற்றுப் பெற்றவை, ஆனால் நிகழ்வுகள் முற்றுப் பெறாதவை என்றார்கள். இவற்றினூடாக திருக்குர்ஆன் தமக்கு வழிகாட்டும் சக்தியற்றது என்ற சந்தேகத்தை தம்மையறியாமல் அவர்கள் உண்டு பண்ணினார்கள்.

சமகாலத்தில் இஸ்லாமியக் கலைகளை வேறுபடுத்தி வரையறைப்படுத்தும் செயல்பாடும் நடைபெற்றது. முஸ்லிம்கள்

அரிஸ்டாட்டிலின் தத்துவ சிந்தனையால் கவரப்பட்டிருந்தனர். அரிஸ்டோட்டிலின் சிந்தனை, ஒரு விசயத்தின் யதார்த்தத்தை அறிய மொழி மூலமான வரையறைப்படுத்தலையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்தத் தத்துவமே அன்றைய முஸ்லிம் அறிவுச் சிந்தையை ஆக்கிரமித்திருந்தது. இமாம் கஸ்ஸாலி (மரணம் ஹி.505) போன்ற பேரறிஞர்கூட இதனை அறிவின் அளவுகோல் என்று குறிப்பிட்டார். எனவே எந்தவொரு விசயம் பற்றியும் ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள நினைப்பவருக்கு அது குறித்த, தர்க்க ரீதியான ஒரு வரையறை மட்டுமே போதுமானதாக இருந்தது. ஒரு வரையறையைக் கண்டு கொள்ள முடியாதவர், ஒன்றின் வகை மற்றும் வேறுபாட்டின் அடிப்படையில் அதனை விளங்கிக் கொள்வார். விசயங்களின் யதார்த்தத்தை புரிந்து கொள்வதற்கு இந்த அணுகுமுறைகள் போதுமானவையாகக் கருதப்பட்டன. இது ஒரு கற்பனையே என்பதை இமாம் கஸ்ஸாலியும் தம்முடைய சில நூல்களில் குறிப்பிட்டுள்ளார். அவருடன் இன்னும் பலரும் இந்த அணுகுமுறையின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி விசயங்களின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்வதற்கு இதற்கு மாற்றமான அணுகுமுறைகைளைப் பரிந்துரைத்தார்கள். இந்த அணுகுமுறையை மாற்றியமைப்பதற்கான துணிகர முயற்சியை எடுத்தவர் இமாம் இப்னு தைமியா ஆவார். அவர் இதற்கு மாற்றமாக குர்ஆனிய அணுகுமுறையைப் பரிந்துரைத்தார்.

அரிஸ்டோட்டிலின் வரையறைத் தத்துவம் இஸ்லாமிய சிந்தனைப் புலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்லாமியக் கலைகள் ஒவ்வொன்றிலும் சிந்தனைச் சிக்கல் நிலையொன்றிற்கு இது காரணமாகியிருக்கிறது. ஹதீஸ் துறையை எடுத்துக் கொண்டால், அதிலும் குறிப்பாக பிற்பட்ட காலத்தவர்கள், சுன்னாவை வரையறை செய்யும் முயற்சியில், சுன்னா பற்றிய சட்டவியலாளர்களின் புரிதலையும் திருக்குர்ஆன் விளக்கவுரையாளர்களின் புரிதலையும் ஏன் ஹதீஸ் துறையாளர்களின் புரிதலையும் ஒன்றாக இணைத்துக் குழப்பியிருக்கிறார்கள். ஆனால் ஆரம்ப காலத்தவர்களிடம் இந்த எண்ணக்கருக்கள் குர்ஆனின் சிந்தனையை மையப்படுத்தி மிகவும் நுணுக்கமாகவும் தெளிவாகவும் அமைந்திருந்தன. வரையறை என்ற பெயரில் அதன் மூலத் தலைப்பை விட்டுவிட்டு வேறு விசயங்களில் தர்க்கம் புரியும் நிலை அன்று காணப்படவில்லை. உதாரணமாக, சுன்னா பற்றிய இமாம் ஷாதிபியின் வரையறையை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் கூறுகின்றார்: “சுன்னா என்ற சொல், குர்ஆனில் குறிப்பிடப்படாத விவகாரங்களில் நபியவர்களிடமிருந்து குறிப்பாக

வெளிப்பட்டவற்றைக் குறிக்கின்றது. அவை குர்ஆனுக்கான விளக்கமாகவும் இருக்கலாம் அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். அதேபோல் சுன்னா என்ற பதம் பித்அத் என்பதற்கு எதிர்ப்பதமாகவும் பயன்படுத்தப்படுகிறது. ஒருவர் சுன்னாவைப் பின்பற்றுகின்றார் என்று சொல்லப்பட்டால் அதன் பொருள், அவர் குறித்த விசயத்தில் நபியவர்கள் செயல்பட்டதுபோன்று செயல்படுகின்றார் என்பதாகும். அது குர்ஆனில் குறிப்பிடப்பட்ட ஒன்றாக இருக்கலாம். அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். ஒருவர் பித்அத் செய்கின்றார் என்று சொல்லப்பட்டால் அதன் பொருள், அவர் மேற்சொன்னதற்கு மாற்றமாக செயற்படுகின்றார் என்பதாகும். இங்கு ஷரீஆவின்படி செயல்படுவது சுன்னா என்று அழைக்கப்படுகின்றது. அதில் குர்ஆனின் அடிப்படையில் செயல்படுவதும் உள்ளடங்கும். அதேபோன்று நபித்தோழர்களின் செயல்பாடுகளும் சுன்னா என்றழைக்கப்படுகிறது. அவர்கள் அனைவரும் ஒன்றுபட்ட இஜ்மாவான முடிவுகளும் அல்லது கலீஃபாக்களின் இஜ்மாவான முடிவுகளும் சுன்னா என்றழைக்கப்படுகிறது. அவர்களின் இஜ்மாவான முடிவுகள் பொது நலனின் அடிப்படையில் அனைவருடைய உடன்பாட்டையும் பெற்றுக் கொள்ள முடியுமானவையாகும்".

இமாம் ஷாதிபியின் வார்த்தைகள் சுன்னா பற்றிய அவரது புரிதலையே பிரதிபலிக்கின்றது. சுன்னா பற்றி அவர் வாழ்ந்த காலத்தின் வாதங்களை அவை எடுத்துக்காட்டுகின்றன. அதே சமயம் இது முற்காலத்தவர்கள் மற்றும் பிற்காலத்தவர்களின் சிந்தனைகளுக்கிடையே ஏற்பட்டுள்ள மிகப் பெரிய இடைவெளியையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. காலம் சிந்தனைகளில் எவ்வளவு தாக்கம் செலுத்துகின்றது!.

இந்த வரையறைகள் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று அவை அரிஸ்டோட்டிலின் வரைவிலக்கண அணுகுமுறையில் இருந்து வந்தவை. அவை சம்பந்தப்பட்ட விசயத்தின் யதார்த்தத்தை வாழ்வின் நடைமுறைகளில் இருந்து விளங்கிக் கொள்வதைவிட மொழியின் அடிப்படையிலேயே விளங்கிக் கொள்கின்றது. அத்துடன் அவை வரையறை அளித்தவரின் கண்ணோட்டத்தையும் அவரது புரிதலையுமே பிரதிபலிக்கின்றன. அவர் சம்பந்தப்பட்ட விவகாரம் தொடர்பாக அதன் யதார்த்த நிலை மற்றும் கிளையம்சங்கள் அனைத்திலும் தம்மால் நேரடியாகக் கண்டுகொள்ள முடியாத விசயங்களையும் உள்ளடக்குவதற்கான முயற்சியை மேற்கொள்வார். ஏனெனில் அவர் அவ்வாறு செய்தால்தான் அது அவரது வரையறை குறித்த கருத்தை முழுமையாகப் பிரதிபலிப்பதாகவும் அதனோடு

*சம்பந்தப்படாதவற்றைத் தவிர்ப்பதாகவும் அதே சமயம் பிறரது விமர்சனங்களுக்கு உட்படாததாகவும் இருக்க முடியும். உண்மையில் இது சாத்தியமற்ற ஒன்றாகும். இதனாலேயே எந்த வரைவிலக்கணம் தொடர்பிலும் வாதப்பிரதிவாதங்கள் முற்றுப் பெறாமலேயே இருக்கின்றது. நாம் சட்டவியலின் அல்லது தர்க்கவியலின் அல்லது இறையியலின் எந்தத் துறை நூல்களை எடுத்துப் பார்த்தாலும் இந்த உண்மையைக் கண்டு கொள்ளலாம். இதன் காரணமாக பல சமயங்களில் இந்த வரையறைகள் இவற்றுக்கான குர்ஆனுடைய சிந்தனையை விட்டும் சற்று தூரமாகவே அமைந்து விடுகின்றன. சுன்னா பற்றிய எண்ணக்கருவிலும் இந்தத் தவறுதான் நடைபெற்றுள்ளது.*

*சுன்னா ஒன்று திரட்டப்படும் செயல்முறை குறித்த வேறுபட்ட நிலைப்பாடுகளை நாம் ஆராய்வது அவசியம். அந்த வகையில் இது தொடர்பான நபியவர்களின் நிலைப்பாட்டில் இருந்து ஆரம்பம் செய்வோம். சுன்னாவுடனான உறவாடலில் இதற்கு ஒரு முக்கிய பங்கிருக்கின்றது.*

## இரண்டாவது: சுன்னாவைப் பதிவு செய்தல் தொடர்பாக வந்துள்ள அறிவிப்புகளைக் குறித்த ஒரு பார்வை

*ஹதீஸ்களைப் பதிவு செய்வதை அனுமதிக்காத அறிவிப்புகளும் அனுமதிக்கும் அறிவிப்புகளும்:*

### 1. ஹதீஸ்களைப் பதிவு செய்வதை அனுமதிக்காத அறிவிப்புகள்

*நபியவர்கள் கூறியதாக அபூ ஸஈத் அல்குத்ரி (ரழி) அறிவிக்கின்றார்: "என்னிடமிருந்து கேட்பவற்றை யாரும் எழுத வேண்டாம். யாரேனும் குர்ஆன் அல்லாத ஒன்றை எழுதியிருந்தால் அவர் அதனை அழித்து விடட்டும்."*

*"ஹதீஸ்களை எழுதுவதற்கு நாங்கள் அனுமதி கேட்டோம் எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை."*

*ஸைத் பின் ஸாபித், முஆவியாவிடம் வந்த சமயம், முஆவியா அவரிடம் தமக்கு ஒரு ஹதீஸைச் சொல்லுமாறு கேட்டுவிட்டு அதனை எழுதுவதற்கு ஒருவரைப் பணித்தார். அப்போது ஸைத், நபியவர்கள் தங்களுடைய ஹதீஸ்களில் எதையும் எழுத வேண்டாம்*

என எங்களுக்குக் கட்டளையிட்டிருந்தார்கள் என்றார். அப்போது முஆவியா அதையும் ஏற்கனவே தம்மிடம் இருந்தவற்றையும் அழித்து விட்டார்.

## 2. ஹதீஸ்களைப் பதிவு செய்வதை அனுமதிக்கும் அறிவிப்புகள்

அப்துல்லாஹ் இப்னு அமர் இப்னு ஆஸ் (ரழி) கூறுகின்றார்: நபியவர்களிடமிருந்து நான் கேட்கும் அனைத்தையும் எழுதி வந்தேன். அவற்றை நான் மனனமிட முனைந்தபோது குறைஷிகள் என்னைத் தடுத்தனர். நபியவர்களிடமிருந்து கேட்ட எல்லாவற்றையும் எழுதுகின்றீரா? அவர்கள் கோபத்திலும் பேசுவார்கள், சந்தோசத்திலும் பேசுவார்கள் என்றனர். நான் எழுதுவதை விட்டுவிட்டேன். அது பற்றி நபியவர்களிடம் கூறியபோது, தம் விரலால் தம் வாயைச் சுட்டிக் காட்டி, "நீங்கள் எழுதுங்கள், அல்லாஹ் மீது சத்தியமாக இதிலிருந்து சத்தியம் மாத்திரமே வெளிவருகின்றது" என்றார்கள்.

அபூ ஹுரைரா (ரழி) கூறுகின்றார்: நபியவர்களிடமிருந்து என்னைவிட அதிகம் ஹதீஸ்களை அறிவித்தவர்கள் இல்லை. ஆனால் அப்துல்லாஹ் இப்னு அம்ரைப் பொறுத்தவரை ஹதீஸ்களை எழுதுவார். நான் எழுதுவதில்லை.

நபியவர்கள் கூறியதாக அனஸ் இப்னு மாலிக் கூறுகின்றார்: "அறிவைப் பதிவுசெய்வதன்மூலம் பாதுகாத்திடுங்கள்." இவை போன்ற இன்னும் பல ஹதீஸ்கள் காணப்படுகின்றன.

## 3. நபித்தோழர்கள் காலத்தில் ஹதீஸ்களைப் பதிவு செய்தல்

அபூபக்கர், உமர் மற்றும் அறிவுத் துறையில் ஈடுபட்ட நபித்தோழர்கள் அனைவரிடமும் ஹதீஸ்களைப் பதிவு செய்யக் கூடாது என்பதும் அவற்றை அதிகமாக அறிவிப்புச் செய்வதையும் தவிர்க்க வேண்டும் என்பதும் குறிப்பாக நல்லாட்சிக் காலப்பகுதியில் மிகவும் தெளிவான ஒன்றாகவே இருந்தது. ஏனெனில் யாரும் குர்ஆனைத் தவிர்த்து ஹதீஸில் தங்களின் கவனத்தைக் குவித்துவிடக் கூடாது, முஸ்லிம் ஆளுமையை வடிவமைக்கும் பணி, குர்ஆனுக்கு உரியதே என்று அவர்கள் கருதினார்கள். காஸிம் இப்னு முஹம்மது ஊடாக இமாம் ஹாகிம் பதிவு செய்திருக்கின்ற ஓர் அறிவிப்பில் ஆயிஷா (ரழி) கூறுகின்றார்: என்னுடைய தந்தை நபியவர்களிடமிருந்து ஐநூறு ஹதீஸ்களைப் பதிவு செய்து வைத்திருந்தார். ஒரு நாள் இரவு மிகுந்த சிந்தனையுடன் இருந்தார். மறுநாள் என்னை அழைத்து உங்களிடம் இருக்கின்ற ஹதீஸ்களைக் கொண்டு வாருங்கள் என்றார். நான்

அவற்றைக் கொண்டு வந்து கொடுத்தேன். அவற்றை அவர் எரித்து விட்டார்.

உமர் (ரழி) ஒரு தடவை மக்களுக்கு உரையாற்றும் போது, மக்களே, உங்களிடம் எழுதப்பட்ட ஹதீஸ்கள் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன், நீதியும் நேர்த்தியுமே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது, எனவே உங்கள் அனைவரிடமும் இருக்கின்ற ஏடுகளை என்னிடத்தில் கொண்டு வந்து தாருங்கள். அவை பற்றி நான் கருத்துக் கூறவேண்டும் என்றார். உமர் அவற்றைப் பார்த்து அவற்றில் கருத்து வேறுபாடுகள் ஏற்படாத வண்ணம் ஒழுங்கமைப்பதற்காகவே கேட்கின்றார் என்று மக்கள் நினைத்தனர். மக்கள் கொண்டு வந்து கொடுத்த பிறகு அவர் அவற்றை எரித்து விட்டார். பிறகு வேதம் வழங்கப்பட்டவர்களிடம் இருந்த ஆசை போல் இதுவும் ஓர் ஆசை என்றார்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) கூறுகின்றார்கள்: “நபியவர்களின் காலத்தில் நாங்கள், உதவி தேடி கேட்கும் துஆ, தொழுகையின் இறுதி அமர்வில் கேட்கும் துஆ ஆகியவற்றை மட்டுமே எழுதி வைத்திருந்தோம். அபூ மூஸா அல்அஷ்அரி தம்மிடமிருந்து தம்முடைய மகன் பெற்று எழுதி வைப்பதை விரும்பவில்லை, காரணம் அதில் கூடுதல், குறைவுகள் ஏற்படலாம் என்று பயந்தார். ஆகவே அவற்றை நீரினால் அழித்து விட்டார்.

இந்த அறிவிப்புகளும் இன்னும் பலவும், நபித்தோழர்கள் குர்ஆனிய ஆளுமை உருவாக்கத்தின் அவசியம் குறித்த விழிப்புணர்வுடன் இருந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. குர்ஆனுடன் நபியவர்களின் வழிகாட்டல்களுக்குரிய இடம் எது என்பதிலும் தெளிவாக இருந்திருக்கின்றார்கள். குர்ஆன் அல்லாத வேறு ஒன்றின் மீது மக்களது ஈடுபாடு செல்வதற்கு எந்த வாயிலும் திறக்கப்படக் கூடாது என்பதில் எச்சரிக்கையுடன் இருந்தார்கள். உள்ளத்தில் முதலில் ஒரு விசயம் பதிந்து நடத்தையாக மாறிவிட்டால், அதன் பின்னர் வரக்கூடிய அனைத்தும் முதலில் பதிந்த விடயத்தின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படும். அதனாலேயே குர்ஆனின் மீதான கவனம் இந்தளவு குவிக்கப்பட்டதைக் காண்கின்றோம்.

இன்று சமூகப் பிளவுகளையும் குழுவாதங்களையும் உம்மத்தைப் பாதித்துள்ள ஏனைய நோய்களையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி பார்க்கின்ற போது, ஏதேனும் ஒரு வடிவில் குர்ஆனுடனான தொடர்பின் பலம், பலவீனத்திற்கும் இவற்றுக்கும் சம்பந்தம் இருப்பதைக் கண்டு கொள்ளலாம். குர்ஆனைப் பற்றிக் கொள்வோர் பிளவுகள்,

முரண்பாடுகளில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். குர்ஆனைப் புறக்கணித்துவிட்டு பிறிதொன்றில் ஈடுபாடு காட்டுகின்றவர்களை ஒற்றுமைப்படுத்துவதும் உள்ளங்களை இணைப்பதும் இயலாத காரியமாகி விடுகின்றது. அதன் காரணமாகவே எந்த விசயமும் குர்ஆனின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று நாம் அழைக்கின்றோம். குர்ஆனினால் ஆதாரப்படுத்தப்படாத எந்தவொன்றும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது.

### 3. தாபிஈன்களின் காலத்தில் ஹதீஸ் தொகுக்கப்படல்

உபைதா இப்னு அம்ருஸ் ஸல்மானி, இப்ராஹீம் அந்நகஈ போன்ற பெரும் தாபிஈன்கள் ஹதீஸ்களைப் பதிவு செய்வதைத் தவிர்ந்து கொண்டனர். உபைதா தம்முடைய சபையில் ஒருவர் ஹதீஸை எழுதுவதையோ எழுதப்பட்ட ஒன்றை வாசிப்பதையோ விரும்பவில்லை. இப்ராஹீம் அந்நகஈ எனது பெயரில் எந்தப் புத்தகத்தையும் வைக்காதீர்கள் என்று உபதேசம் செய்துள்ளார். அவரது மரணத்திற்கு முன்னர் அவரது பெயரில் உள்ள நூல்களை ஒன்று திரட்டி எரித்து விட்டார்கள். இமாம் ஷஅபி கூறுகின்றார்: “வெள்ளைத் தாளில் கருப்பு நிறத்தில் நான் எதனையும் எழுதியதில்லை, என்னிடத்தில் ஒருவர் ஒரு ஹதீஸைச் சொன்னால் அதனை மீளவும் சொல்லுமாறு கேட்டதுமில்லை”. ஜாபிர் இப்னு ஸைதிடம் சிலர் வந்து, மக்கள் உங்கள் கருத்துக்களை பதிவு செய்கின்றனர் என்றார்கள். நாளை நான் மாற்றிக் கொள்ள முடியுமான கருத்துக்களையா எழுதுகின்றீர்கள் என்று அவர் அதனை மறுத்துரைத்தார். இது தொடர்பாக இன்னும் எத்தனையோ கூற்றுக்களும் சம்பவங்களும் இருக்கின்றன. உதாரணத்திற்காகவே இங்கு சில குறிப்பிடப்பட்டுள்ளன.

முதலாம் நூற்றாண்டின் இறுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஹதீஸ்களைப் பதிவுசெய்யும் நடைமுறை பரவலடையத் தொடங்கியது. அபூ கிலாதா அறிவிக்கின்றார்: “உமர் இப்னு அப்துல் அஸீஸ் ளுஹர் தொழுகைக்காக வெளியில் வரும்போது அவரது கையில் ஒரு கொப்பி இருக்கும். பின்னர் அஸர் தொழுகைக்காக வரும்போதும் அதே கொப்பி கையில் இருக்கும், அமீருல் முஃமினீன் அவர்களே! கையில் இது என்ன கொப்பி என்று நான் கேட்டேன், அதற்கு அவர், அவ்ன் இப்னு அப்துல்லாஹ் எனக்கு ஒரு ஹதீஸைக் குறிப்பிட்டார். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது எனவே நான் அதனைப் பதிவுசெய்து கொண்டேன் என்றார்.

ஹதீஸ்களைப் பதிவுசெய்வதை தடைசெய்து வந்துள்ள ஹதீஸ்களை, பின்னர் அனுமதித்து வந்துள்ள ஹதீஸ்கள் சட்டத்தன்மை அற்றதாக மாற்றுகின்றன என்ற கருத்தை உமர் இப்னு அப்துல் அஸீஸின் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் முந்தைய அறிஞர்களில் யாரும் குறிப்பிடவில்லை. அவரது காலத்தில்தான் ஹதீஸ்கள் பதிவு செய்யப்படுவதை நியாயப்படுத்தும் வகையில் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது.

தாபியீன்களின் இரண்டாம் தலைமுறையினரிடத்தில் ஹதீஸ்களைப் பதிவுசெய்தல்

இவர்கள் இமாம் ஸுஹ்ரியின் தலைமுறைக்குப் பிறகு வந்தவர்கள். இமாம் ஸுஹ்ரியின் காலத்தில் ஹதீஸ்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என அதிகாரப்பூர்வமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு அதனை விரும்பாத ஒரு தலைமுறை தோன்றியது. இமாம் ழஹ்ஹாக் இப்னு முஸாஹிம், "ஒரு காலம் வரும் அதில் மக்களிடம் ஹதீஸ்கள் அதிகமாகக் காணப்படும். அப்போது நூல்களைப் படிப்பதற்கு ஆளின்றி தூசு படிந்து போயிருக்கும்" என்றார். இமாம் அவ்ஸாயீ கூறினார்: "அறிஞர்களிடம் நேரடியாக வாய் மொழி மூலம் கற்றபோது இந்த அறிவு கண்ணியமாக இருந்தது, அது நூல்களுக்கு மாறியபோது அதன் ஒளி குன்றிவிட்டது, தகுதியற்றவர்கள் கையில் சென்றுவிட்டது". இக்காலப் பகுதியில் சில தாபியீன்கள், ஹதீஸ்களை மனனமிடுவதற்காக மட்டுமே பதிவு செய்து வைத்துக் கொள்வார்கள், மனனமிட்டதன் பின்னர் அவற்றை அழித்து விடுவார்கள். இதே நடைமுறை சுப்யானுஸ் ஸௌரி, ஹம்மாத் பின் ஸலமா போன்ற பல ஸலபுகளிடம் இருந்திருக்கின்றது.

மறுபுறம் இக்காலப்பகுதியில் ஹதீஸ்களைப் பலர் பதிவு செய்திருக்கின்றார்கள். அவர்களில் முதன்மையானவர்களாக இமாம் இப்னு ஜுரைஜ் (ஹி.150), இமாம் லைஸ் இப்னு ஸஃத் (ஹி.175), இமாம் மாலிக் (ஹி.179), இமாம் இப்னுல் முபாரக் (ஹி.181) இமாம் ஸுப்யான் இப்னு உயைனா (ஹி.198) போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் அனைவரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் நபியவர்களது ஹதீஸ்களுடன் நபித்தோழர்களின் கூற்றுக்கள் மற்றும் தாபியீன்களின் பத்வாக்களையும் உள்ளடக்கி பல தலைப்புக்களில் தங்களுடைய தொகுப்புக்களை அமைத்தனர். இதுவே இவர்களது பொது அணுகுமுறையாக இருந்தது.

## 4. ஹதீஸ்களைப் பதிவு செய்வது குறித்த கருத்து வேறுபாட்டுப் புள்ளியை அடையாளம் காணல்

*குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் தன்னிடமே வைத்துக் கொண்டான். அந்தப் பொறுப்பு மனிதர்களுக்கு அல்லது நபிக்குக்கூட வழங்கப்படவில்லை. திருக்குர்ஆன் அதனுடைய மொழியமைப்பாலும் அற்புதத் தன்மையாலுமே பாதுகாக்கப்படுகிறது. அவை இயல்பிலேயே பாதுகாக்கப்பட்ட புனித வசனங்களாகும். குர்ஆன் எழுதப்படவேண்டும் என்பதையும் சுன்னா எழுதப்படக்கூடாது என்பதையும் நபியவர்கள் தம் தோழர்களிடம் அறிவுறுத்தி இருந்தார்கள். சுன்னா எழுதப்பட வேண்டும் எனில் அதற்குப் பிரத்தியேக அனுமதி தேவைப்பட்டது. அதற்கு அனுமதி வழங்கப்படவும் முடியும் வழங்கப்படாமல் இருக்கவும் முடியும். எழுதுவதற்கான அனுமதி வழங்கப்பட்ட ஒவ்வொரு நிகழ்வையும் எடுத்து ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேகமான நியாயங்கள் இருப்பதைக் கண்டு கொள்ளலாம். அனுமதி வழங்கப்பட்டவர்கள் மிகவும் சொற்பத் தொகையினர் மட்டுமே. அவர்கள் குர்ஆனின் நோக்கங்கள், அணுகுமுறைகள், போதனைகள் குறித்து தெளிவுடன் இருந்தவர்கள். சுன்னா குர்ஆனுடன் கலந்துவிடாதளவுக்கு அவர்களுடைய மனதிலும் அறிவிலும் குர்ஆன் போதுமான செல்வாக்குடன் இருக்கிறது என்பது உணரப்பட்டிருந்தது.*

*ஹதீஸ்களைப் பதிவுசெய்தல் தடுக்கப்பட்டதற்கு குர்ஆனுடன் அவை கலந்து விடும் என்ற அச்சம் மட்டுமே காரணமாக இருக்கவில்லை. ஏனெனில் அறபுகளிடமிருந்த மொழியாற்றல், இலக்கியத்திறன் ஆகியவற்றின் காரணமாக இது போன்ற ஒரு விளக்கத்தை மட்டுமே ஏற்றுக்கொள்வது சிரமமாக இருக்கின்றது. எனவே புனித வசனங்களுக்கும் நபியவர்களது வார்த்தைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்குச் சொல்லப்பட்டதாகவே இதனைக் கொள்ள முடியும். திருக்குர்ஆன் இறங்கிய முதல் சந்தர்ப்பத்திலேயே அது பதிவு செய்யப்பட்டது, குர்ஆனின் புனித வசனங்கள் எந்த சிறிய மாற்றத்துக்கும் உட்பட முடியாதது என்பதைக் காட்டுகிறது. ஆனால் சுன்னாவைப் பொறுத்தவரை, பெரும்பாலும் அது ஒரு நடைமுறை விளக்கம், நபியவர்கள் வழியாக ஒரு செயல் எவ்வாறு இருக்க வேண்டும், எவ்வாறு அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து அறிவிக்கப்பட்ட வார்த்தைகளாகும். சுன்னாவைப் பொறுத்தவரை*

ஒரு புனித வசனமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லை. இதனாலேயே சுன்னாவின் கருத்தை அறிவிப்புச் செய்வதும் அனுமதிக்கப்பட்டிருந்தது. அது எழுத்துக்களில பாதுகாக்கப்படுவதைவிட உள்ளங்களிலும் நடைமுறை வாழ்விலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். உள்ளங்களில் பாதுகாக்கப்படும் ஒன்று புனித வசனமாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அன்றைய நிலையில் அதன் புற மொழி வடிவைவிட அதன் உட்பொருளில்தான் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஆகவே சுன்னா குர்ஆனுக்கு நிகரானதொரு புனித வசனமாகக் கருதப்படுவதற்கான அவசியம் ஏற்படவில்லை.

ஹதீஸ்களைப் பதிவு செய்வதை ஆதரிக்காதவர்களின் நோக்கம், குர்ஆனைத் தவிர்த்து மொழியும் பொருளும் இணைந்து பாது காக்கப்பட வேண்டிய வேறு ஒரு புனித வசனம் இருக்கக் கூடாது என்பதாகும். தேவைப்படுகின்ற சமயம் பெற்றுக் கொள்வதற்குரிய வகையில் காணப்பட வேண்டியது அது மட்டுமே என்றார்கள். ஆனால் சுன்னாவின் மூலாதாரத் தன்மையைப் பொறுத்தவரை, அது கருத்தளவில் பாதுகாக்கப்பட வேண்டியதே அன்றி முழுமையாக வார்த்தைகளாகப் பாதுகாக்கப்பட வேண்டியதல்ல. திருக்குர்ஆனை விடுத்து எந்தவொன்றாக இருந்தாலும் அது பொதுப் புழக்கத்தில் வார்த்தைகளாகப் பாதுகாக்கப்பட முடியுமானதுதான். ஆகவே சுன்னாவின் எழுத்து வடிவை ஆதரிக்காதவர்கள், குர்ஆனுக்கு நிகரான மற்றொரு புனித வசனம் இருப்பதை ஆதரிக்காதவர்களாவர்.

ஹதீஸ்கள் பதிவு செய்யப்படுவதை ஆதரித்தவர்கள், நபியவர்கள் காலத்தில் அனுமதி வழங்கப்பட்ட நிகழ்வுகளை, குறிப்பிட்ட சிலரின் தேவை கருதி வழங்கப்பட்ட அனுமதிகளாகவே நோக்கினர். ஏனெனில் அவை அரிதான நிகழ்வுகள் என்ற வகையில், குர்ஆனுக்கு நிகரான பொது மூலாதாரம் ஒன்றாக அவை நிலை நிறுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்றனர்.

சுன்னாவை இரண்டாம் படித்தர சட்ட மூலாதாரம் என்று சொன்னவர்கள், குர்ஆனுக்கு நிகரான தனித்த மூலாதாரத் தரத்தைக் கொண்ட மற்றொரு புனித வசனத்தை எவ்வாறு கொண்டு வரமுடியும் என்ற வாதத்தைத் தவிர்க்கும் வண்ணமே அதனை முன்வைத்தார்கள். நாம் அதனை இரண்டாம் தர மூலாதாரம் என்றே சொல்கின்றோம். ஆகவே எங்களின் வார்த்தைகளில் தவறில்லை என்கிறார்கள். ஆனால் உண்மையில் இங்கு படித்தரம் எது என்பது அல்ல பிரச்சினை. மாறாக மூலாதாரத் தரம் கொண்ட புனித

வசனமா இல்லையா என்பதுதான் பிரச்சினை. அதுபோன்று இந்த விவகாரத்தை, ஆஹாதான அறிவிப்புகளின் நம்பகத்தன்மையோடு சம்பந்தப்படுத்தி விவாதித்தவர்களும் கருத்து வேறுபாட்டுப் புள்ளியை தவற விட்டனர். அதாவது நபியவர்களிடமிருந்து வந்தவை என்று நிறுவப்படும் ஒவ்வொரு அம்சத்தையும் ஒவ்வொரு முஸ்லிமும் கடைப்பிடிப்பது கட்டாயமானது. அது திட்டவட்டமாக நிறுவப்பட்டதா இல்லையா என்பது அங்கு முக்கியமல்ல. ஏனெனில் திட்டவட்டத் தன்மை என்பது, ஒரு ஹதீஸைப் பெற்று அறிவிக்கின்ற வழிமுறையுடன் சம்பந்தப்பட்டதாகும் என்றனர். ஆனால் இங்கு நாம் பேசுவது, நபியவர்களிடமிருந்து வந்தவற்றின் மூலாதாரத்தன்மை குறித்தது, அவற்றின் நம்பகத்தன்மை பற்றியது அல்ல. இங்குதான் நபியவர்களின், நபித்தோழர்களின் தூரநோக்கு தெளிவாகப் புலப்படுகிறது. அதாவது அடிப்படையில் திருக்குர்ஆன் தவிர மற்றொன்று பதிவு செய்யப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஹதீஸ்களைப் பதிவு செய்தலும் அதிகமாக அறிவிப்புச் செய்தலும் தடுக்கப்பட்டமைக்கான மற்றொரு காரணம், நபியவர்கள் குர்ஆனை செயல்படுத்தியதன் அடிப்படையில் அவரிடமிருந்து வெளிப்பட்ட சட்டவாக்கச் செயல்பாடுகளும் அவர் ஒரு மனிதர் என்ற வகையில் வெளிப்பட்ட, அவரது ஆட்சித் தலைமைத்துவம், நீதி வழங்கியமை, ஆலோசணை மற்றும் உள ஆற்றுப்படுத்தலில் ஈடுபட்டமை போன்ற இன்னும் பல அன்றாட வாழ்வுச் செயல்பாடுகளும் கலந்து விடக்கூடாது என்பதும் நோக்கமாக இருந்திருக்கிறது. அவரது சட்டவாக்கச் செயல்பாடுகளைப் பொறுத்தவரை, அவர் ஒரு தூதர் என்ற வகையில் குர்ஆனின் ஊடாக அவருக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவையாகும். இவற்றை நபியவர்கள் முதலில் தம்முடைய வாழ்வில் கடைப்பிடிப்பதுடன் தம்முடைய உம்மத்தினர் இந்த விசயத்தில் தம்மை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் ஊக்கப்படுத்துவார்கள். இதுதான் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு அவனது வேதத்தைக் கடைபிடித்தலில் அவரது முன்மாதிரியாகும்.

மேற்சொன்ன சிந்தனையை உறுதிப்படுத்தக் கூடிய இன்னும் சில நியாயங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்: நபியவர்களது செயல்பாடுகளை அதிகமாக நபித்தோழர்களில் ஒருவரோ வெகு சிலரோ மட்டுமே உடனிருந்து அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். நபித்தோழர்களைப் பொறுத்தவரை, தவறு, மறதிகளில் இருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் அல்லர், அதுபோல்

ஹதீஸ்களின் கருத்தை அறிவிப்புச் செய்வதிலும் சம அளவிலான நினைவாற்றலுடன் அவர்கள் செயல்படவுமில்லை. அத்துடன் நபியவர்களும் தம்மைப் பின்பற்றுதல் என்பதில் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய பரப்பு குறைவாகவும் பொது அனுமதியுள்ள பரப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்றும் விரும்பினார்கள். அத்துடன் ஆஹாதான அறிவிப்புகள் கட்டாயச் செயல்பாடுகளாக மாற்றம் பெற்றது கால ஓட்டத்தில்தான் நிகழ்ந்திருக்கிறது. ஆகவே திருக்குர்ஆனைத் தவிர்த்து ஒவ்வொன்றும் அதனுடன் சுற்றிச் சுழலும் வாய்மொழி மூல அறிவின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும். அவை தனித்து நிற்பது அவசியமற்றது. மக்கள் குறிப்பிட்ட ஒரு வாழ்க்கைச் சூழலில் மார்க்கத்தைச் செயல்படுத்தும்போது அல்லது குர்ஆனின் சட்டங்களை செயல்படுத்தும்போது சுன்னாவை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்கள். எதிர்காலத் தலைமுறைகள் புனித வசனங்களை தங்களின் சூழலில் பிரயோகிப்பதற்கு இது ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

## 5. அறிவிப்புகளின் தோற்றமும் வளர்ச்சியும்

### 1. தோற்றப் பின்னணி

அறிவிப்புகளின் தோற்றத்திற்கு புதிய சூழ்நிலைகளின் அழுத்தங்களும் அதனால் தோன்றிய புதிய கேள்விகளுக்கான பதில்களின் அவசியமும் முக்கிய பின்னணியாக அமைந்தது. நல்லாட்சிக் காலம் அதன் இறுதிக்கட்டத்தை அடைந்த போது, சிந்தனைத் தலைமைத்துவமும் அரசியல் தலைமைத்துவமும் பிரிந்து விட்டன. நல்லாட்சிக் காலத்தின் — குறிப்பாக அபூபக்கர், உமர் ஆகிய இருவருடைய காலத்தின் சிறப்பம்சம், இரண்டு தலைமைத்துவங்களும் ஒன்றாக இருந்தமையாகும். கலீஃபாவுக்கு மார்க்க விளக்கம் வழங்குவதற்கு ஓர் அறிஞர் அவசியப்படவில்லை. அவரே தம் கவர்னர்களுக்கும் நீதிபதிகளுக்கும் வழிகாட்டுவதுடன் புனித வசனங்களை செயல்படுத்துதல் குறித்த விளக்கங்களையும் வழங்குவார். அவர்கள் சட்ட அறிஞர்களாகவும் ஆட்சித் தலைவர்களாகவும் சமகாலத்தில் செயற்பட்டனர். தங்களுக்கு ஃபத்வா வழங்குவதற்குரிய முஃப்தீக்களை வைத்துக் கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. நல்லாட்சியின் நிறைவுடன் இந்தச் சூழல் மாற்றமடைந்தது.

அறிவிப்புகளில் தங்கியிருந்த புதிய சமூகங்களும் கோத்திரத் தலைமைகளும் அதிகாரத்திற்கு வந்தபோது மக்கள் அறிவிப்புகளில்

அதிகம் ஈடுபடத் துணிந்தனர். பல்வேறுபட்ட காரணங்களால் தோன்றிய புதிய கேள்விகளுக்கு விடைகளைக் காண முற்பட்டனர். அறிவிப்புகள் சட்டவியலுடனும் இறையியலுடனும் இரண்டறக் கலந்து விட்டன. அதனால் கூர்மையான பல முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. அவற்றை ஆட்சியாளர்கள் வன்மையாகத் தடுக்க முற்பட்டனர்.

இந்தச் சமயத்தில் தான் உமர் இப்னு அப்துல் அஸீஸின் தந்தையான அப்துல் அஸீஸிடத்தில் சுன்னாவை ஒன்றுதிரட்ட வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. இந்த சிந்தனைக்குப் பின்னால், அன்று முஸ்லிம் உம்மத்தில் பிளவுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தக் காரணமாகவிருந்த சட்டக் கருத்து வேறுபாடுகளுக்கு மாற்றீடாக இதனை அமைக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருந்திருக்க முடியும். சுன்னாவில் கட்டாயம் என்றதொரு காரணி இருக்கின்றது. ஆனால் சட்டவியலில் அது இல்லை. சுன்னா குர்ஆனுக்கு விளக்கமாக அமையக் கூடியது. அதில் ஆதாரப்பூர்வமான ஒன்று குர்ஆனுடன் முரண்படும் வாய்ப்புக் குறைவு. ஆனால் சட்டவியல் அவ்வாறானதல்ல. சுன்னா குர்ஆனுடன் இணையும்போது, அதன் ஊடாக அது உறுதிப்படுத்தப்படுகின்றது, வழிநடத்தப்படுகின்றது. ஆகவே மக்களுடைய முரண்பாடுபாடுகளைக் களைந்து ஒருமைப் பாட்டை மீட்டெடுக்க அதனால் முடிகின்றது. உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, உம்மத்தின் ஒருமைப்பாட்டை மீளக் கொண்டு வரவேண்டும் என்பது அவரது மனதைக் குடைந்து கொண்டிருந்த ஒரு விசயம். இது தொடர்பாக அவர் உமையா வம்சப் பிரதானிகளுடன் கறாரான கலந்துரையாடல் ஒன்றை ஆரம்பித்தார். முடிவாக, பிளவுக் குழுக்களுக்கு எதிரான குறிப்பாக கவாரிஜ்களுக்கு எதிரான போர்ப் பிரகடனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அவரது மற்றொரு முக்கிய செயற்பாடு, சுன்னாவை ஒன்று திரட்டும் முயற்சியாகும். சட்ட அறிஞர்களால் முன்வைக்கப்பட்டிருந்த சட்ட அபிப்பிராயங்களுக்கு மாற்றீட்டுச் சட்டமாக மக்களுக்கு அது அமையும் என்று எதிர்பார்த்தார். மக்கள் குர்ஆனைவிட்டு தூரச் சென்றுவிட்ட முக்கிய முரண்பாட்டுப் புள்ளியின் கதவுகளை இது அடைத்து விடும் என்று நம்பினார்கள். ஆனால் இந்த வேலைத்திட்டத்தை முழுமைப்படுத்த அவரது ஆயுள் இடம் தரவில்லை. எனவே இந்த சுன்னாவும் அறிவிப்புகளும் பின்னால் வந்தவர்களினால் ஏற்கனவே இருந்த முரண்பாடுகளுடன்

இன்னும் பல முரண்பாடுகளை அதிகரிப்பதற்கான சாதனமாகவே பயன்படுத்தப்பட்டது. சிலர் குர்ஆனுக்கு நிகரான ஒன்றாக அதனை மாற்றியமைத்தனர். குர்ஆனையும் அது உள்ளடக்கியிருக்கிறது என்றனர். மட்டுமன்றி, பிரச்சினைகளுக்கான தீர்வுகளை குர்ஆனை விடவும் அது சிறப்பாக முன்வைக்கிறது என்றனர். சிலசமயங்களில் அதுவே போதுமானது குர்ஆன் அவசியமற்றது என்றும் கருதினர். திருக்குர்ஆன் சுருக்கமாகப் பேசியதை அது விரிவாகப் பேசியது. குர்ஆன் பொதுவாகப் பேசியதை அது குறிப்பாகப் பேசியது. குர்ஆன் வரையறையின்றிப் பேசியதை அது வரையறுத்துப் பேசியது. இவ்வாறுதான் அவர்கள் சுன்னாவை நோக்கினார்கள். இறுதியில் இமாம் அவ்ஸாயீ சுன்னா குர்ஆனுக்குத் தீர்ப்பு வழங்கக் கூடியது என்றும் சுன்னாவுக்கு திருக்குர்ஆன் தேவைப்படுவதை விடவும் குர்ஆனுக்கு சுன்னா தேவைப்படுகின்றது என்றும் கூறத் தலைப்பட்டார். இதனாலேயே இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், இவ்வாறான ஒரு கருத்தைச் சொல்ல நான் துணிய மாட்டடேன். மாறாக சுன்னா குர்ஆனுக்கு விளக்கமாக அமைகின்றது என்று மட்டுமே நான் செல்வேன் என்றார்.

உள்ளேயும் வெளியேயும் உருவான குழப்பங்களின் அழுத்தங்கள், புதிய பிரச்சினைகள், வேறுபட்ட கலாச்சார மரபுகள், ஓயாத சட்டவாக்கச் செயல்பாடுகள் ஆகியவை உருவாக்கி விட்ட கிளைச் சிந்தனை மரபு, அதன் விளைவாக உருவான "புனித வசனங்கள் நிறைவு பெற்றுவிட்டன, ஆனால் பிரச்சினைகள் முற்றுப் பெறாதவை" போன்ற விதிகள் என்பன குர்ஆனுக்கு நிகரான மூலாதாரங்களைத் தோற்றுவித்துக் கொண்டன. புதிய கிளைச் சட்டங்களின் உற்பத்திக்கு அவசியமான சாதனங்களாக அவை அமைந்தன.

இதன் காரணமாகவே முதல் தலைமுறையினரிடம் சுன்னா பதியப்பட்ட ஒரு புனித வசனமாக இருக்கவில்லை. அதனைப் பதிவு செய்ய வேண்டும் என்று நபியவர்கள் வலியுறுத்தவும் இல்லை. அவ்வாறு பதிவு செய்யப்பட்டதை அறிந்தபோது அதனை அழித்து விடுமாறு சொன்னார்கள். இதனூடாக சுன்னா மூலாதாரமாகக் கொள்ளப்பட மாட்டாது என்றும் இந்த உம்மத்தை சீரமைப்பதில் அதற்கு எந்தப் பங்கும் இல்லை என்றும் நபியவர்கள் சொன்னதாக நாம் புரிந்துகொள்ளக் கூடாது. இதன் தத்துவம் அதனை விடவும் சற்று ஆழமானது. இது சமூக உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்டது. அந்த சமூகத்தின் மனப்பாங்கையும் சிந்தனையையும் குர்ஆனின்

அடிப்படையில் கட்டமைப்பதற்கான ஏற்பாடு. இதற்குப் பிறகு மனிதன் எந்த அறிவு மூலத்திலிருந்தும் எதனையும் எழுதலாம். ஏனெனில் குர்ஆன் உருவாக்கிய சிந்தனையில் இருந்து கொண்டு அவனால் எந்தவொன்றையும் வாசிக்க முடியும். குர்ஆனிய சூழலைவிட்டு தூரமாகி அவனால் தன் சிந்தனையையும் மனதையும் ஒருமுகப்படுத்த முடியாது.

2. அறிவிப்புகளின் வளர்ச்சி

முன்னர் நாம் குறிப்பிட்டதுபோன்று நபியவர்களுடன் வாழ்ந்த சமூகத்தினர் நேரடியாகப் பெற்றுக்கொண்ட முதல் தலைமுறையினர் என்று அழைக்கப்படுகிறார்கள். இரண்டாம் தலைமுறை, அறிவிப்புகளின் தலைமுறை என்று அழைக்கப்படுகிறது. மூன்றாம் தலைமுறை, சட்டவியல் தலைமுறை எனப்படுகின்றது. இவற்றுள் முதல் தலைமுறையைத் தவிர ஏனையவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. முதல் தலைமுறை நபியவர்களின் மரணத்துடன் நிறைவு பெறுகின்றது. முதல் தலைமுறையினரிடத்தில் அறிவிப்புகள் முழுமையாக இல்லாதிருக்கவில்லை. அவர்கள் மத்தியிலும் இது பரவலான ஒன்றாகவே காணப்பட்டது. ஆனால் அறிவிப்புகளைப் பெறுகின்றவர்கள் நபியவர்களிடம் நேரடியாகச் சென்று அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்தது. இதன் காரணமாக, அவர்கள் எந்த விதமான சிரமங்களும் கஷ்டங்களும் இன்றி நபியவர்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்த தலைமுறை என்ற பெயரைப் பெற்றுக் கொள்வதில் தடைகள் இருக்கவில்லை. ஆனால் அறிவிப்புகள் தலைமுறையும் சட்டவியல் தலைமுறையும் ஒன்றை ஒன்று இடையீடு செய்தன. ஆனால் அதனை முழுமையான இடையீடு என்று குறிப்பிட முடியவில்லை. ஏனெனில் அறிவிப்பு, சட்டவியல் கலைகளின் தனித்த வளர்ச்சிக்கு அது தடையாக அமையவில்லை. இரு கலைகளிலும் புலமைத்துவம் வாய்ந்த அறிஞர்கள் அக்காலத்தில் மிகவும் அரிதாகவே இருந்தனர். சிலசமயம் இதுதான் இரு கலைகளும் பிரிந்து நின்ற முதல் தருணமாக இருக்கலாம். இது ஒரு அபாயகரமான அடையாளம். இது ஹிஜ்ரீ 40 களிலேயே வெளிப்படத் துவங்கியது. அது வளர்ச்சியடைந்து ஹதீஸ் துறை சார் சிந்தனைப் பள்ளி என்றும் பகுத்தறிவு சார் சிந்தனைப் பள்ளி என்றும் இரு சிந்தனைப் பள்ளிகளாக மாற்றமடைந்தன. இந்தப் புதிய தோற்றப்பாடு ஆரோக்கியமற்றது என்றிருப்பினும் அறிவுத் துறை மாணவர்கள் இவற்றிலிருந்து நிறைய பயன்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மார்க்க மற்றும் வரலாற்று அறிவிப்புகள் புழக்கத்துக்கு வந்த முதல் சந்தர்ப்பத்திலேயே அறிவிப்புகள் கலை முக்கியத்துவம் மிகுந்த ஒன்றாகவோ அனைத்து நுணுக்கங்களுடனும் முழுமை பெற்ற ஒரு கலையாகவோ இருக்கவில்லை. மாறாக சூழ்நிலைகளின் தேவைக்கேற்பவே அது வளர்ந்து சென்றது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று, ஆரம்பத்தில் அறிவிப்பாளர் வரிசையின்றி ஒரு செய்தி சொல்லப்படும்போது, அதனைக் குறிப்பிடுமாறு யாரும் கேட்கப்படவில்லை. பின்னர் தோன்றிய புதிய சூழ்நிலைகளின் காரணமாகவே அவ்வாறு கேட்கத் தொடங்கினர். இமாம் இப்னு ஸீரீன் குறிப்பிடுகின்றார்: குழப்பம் தோன்றும்வரை அறிவிப்பாளர் வரிசையைக் குறிப்பிடச் சொல்லும் நிலை இருக்கவில்லை. குழப்பத்திற்குப் பின்னரே உங்கள் அறிவிப்பாளர்கள் யார் என்பதைச் சொல்லுங்கள் என்பார்கள். அறிவிப்பாளர்கள் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்தவர்கள் எனில் அவர்களது அறிவிப்புகள் ஏற்றுக் கொள்ளப்படும். அவர்கள் பித்அத்தான சிந்தனைகளைக் கொண்டவர்கள் எனில் அவர்களது அறிவிப்புகள் ஏற்கப்பட மாட்டாது.

இங்கு கருத்துத் தொடரை வைத்துப் பார்க்கும் போது, குழப்பம் என்பது பித்அத்தான சிந்தனைகளின் தோற்றத்தையே குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். அமீன் கௌலி தம்முடைய 'இமாம் மாலிக்' என்னும் நூலில், இமாம் மாலிக்கினுடைய மரணம் வரை (ஹிஜ்ரீ. 179) அறிவிப்பாளர் வரிசையானது, ஹிஜ்ரீ மூன்றாம் நூற்றாண்டில் இமாம் புகாரி போன்றவர்களிடம் காணப்பட்டது போல் மிகவும் நுணுக்கமான வடிவத்தில் இருக்கவில்லை என்கிறார். அதாவது சுமார் இரண்டு தலைமுறைகளுக்குப் பின்னரே அது முறையான ஒழுங்கைப் பெற்றது. இதிலிருந்து இமாம் மாலிக் மற்றும் அவருக்கு முன்னர் வாழ்ந்த அறிஞர்களிடம் முர்ஸலான அறிவிப்புகள் காணப்பட்டமையின் நியாயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். அதாவது அவர்களுடைய காலம் நபித்தோழர்களின் காலத்திற்கு நெருக்கமானது என்ற வகையில் குறித்த செய்தியுடன் நபித்தோழருடைய பெயரையும் இணைத்துக் குறிப்பிட வேண்டும் என்ற தேவையை அவர்கள் உணரவில்லை. எனவே முர்ஸலான அறிவிப்புகளின் மூலாதாரத்தன்மை குறித்த கேள்வி அன்று எழவில்லை. இது குறித்து சட்டக்கோட்பாட்டாளர்களிடம் வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருப்பது அறிந்ததே.

இது, இஸ்லாமியக் கலைகள் கடந்து வந்த மூன்று கட்டங்களை எமக்கு அடையாளம் காட்டுகிறது:

**முதலாவது கட்டம்:** *வாய்மொழி மூல அறிவுப் பாரம்பரியக் கட்டம். சுன்னா இதிலேயே அடங்குகின்றது. இந்தக் கட்டத்தில் எழுத்துருவில் காணப்பட்டது திருக்குர்ஆன் மட்டுமே. குர்ஆனையும் இன்னும் சில அரிதான அம்சங்களையும் தவிர ஏனைய அனைத்தும் வாய்மொழி மூலமாகவே பரிமாற்றம் செய்யப்பட்டன.*

**இரண்டாவது கட்டம்:** *அறிவிப்புகள் தொகுக்கப்பட்ட கால கட்டம், இதில் தஃப்ஸீர், பிக்ஹ் போன்ற எல்லாத் துறைகளுடனும் சம்பந்தப்பட்ட, ஹதீஸ்கள், நபித்தோழர்களின் கூற்றுக்கள், ஃபத்வாக்கள் போன்றவை தொகுக்கப்பட்டன.*

**மூன்றாவது கட்டம்:** *கலைகள் தனித்துத் தோற்றம் பெற்ற கட்டம். ஒவ்வொரு கலையும் ஏனையவற்றைவிட்டு வேறுபடுத்தி நோக்கப்பட்டது. கலைகளின் கோட்பாடுகள் என்ற சொல்லாடல் புழக்கத்துக்கு வந்தது. அதாவது ஒவ்வொரு கலையின் வரையறை, அது பேசும் முதன்மையான பரப்புக்கள் போன்ற விசயங்கள் தொடர்பாக இந்தக் கோட்பாடுகள் பேசின.*

3. உமர் இப்னு அப்துல் அஸீஸ் சுன்னாவை ஒன்று திரட்டிய வரலாற்றுச் சூழமைவை விளங்கிக் கொள்ளுதல்

*முஸ்லிம் உம்மத் தொடர்ச்சியான பிளவுகளுக்கு உட்பட்ட காலகட்டத்தில்தான் உமர் இப்னு அப்துல் அஸீஸ் பதவியேற்றார். வந்தது முதல் முரண்பாடுகளைத் தீர்த்து, ஒற்றுமையை மீளமைப்பதற்கு முயற்சி செய்தார். அவரது சீர்திருத்தப் புணரமைப்பு வேலைத்திட்டத்தில் முதலில் கவாரிஜ்களுடனான உரையாடலைத் தொடங்கி வைத்தார். சில விவகாரங்களில் கவாரிஜ்களின் நிலைப்பாடுகளை சரிகண்டதுடன் மற்றும் சில விவகாரங்களில் அவர்களது தவறை சுட்டிக் காட்டினார். இதனால் பலர் தங்களின் கருத்தை மாற்றிக் கொண்டு திரும்பி வந்துவிட்டனர்.*

*இமாம் அபூ ஸுர்ஆ அத்திமிஷ்கி, அறிவிப்புகளை ஒன்று திரட்டுவதன்மூலம் உமர் இப்னு அப்துல் அஸீஸ் என்ன செய்ய நாடினார் என்பதை இவ்வாறு கூறுகின்றார்: "உமர் இப்னு அப்துல் அஸீஸ் நடைமுறையில் இருந்த சட்டங்களை ஒரே சட்டமாக மாற்ற நினைத்தார். அவர் கூறுகின்றார்: முஸ்லிம்கள் வாழும் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு பிரதேசத்திலும் நபியவர்களின் தோழர்கள் இருந்திருக்கின்றார்கள். அந்த மக்களில் வாழ்ந்த அறிஞர்களும் நீதிபதிகளும் வழங்கிய தீர்ப்புக்களையும் பத்வாக்களையும் நபித்தோழர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். அவற்றை அந்த மக்களும்*

ஏற்றுக் கடைப்பிடித்து வந்திருக்கின்றார்கள். அதே ஒழுங்கிலேயே அவர்கள் இன்னும் இருக்கிறார்கள்''.

உமர் இப்னு அப்துல் அஸீஸ், ஆட்சித் தலைவர் என்ற வகையில் சுன்னாவை ஒன்று திரட்டுவதன் ஊடாக, மக்களுக்கான ஒரு பொதுச் சட்டமாக அதனை அமைக்க நினைத்திருக்கின்றார் என்பதை இந்தக் கூற்றிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது. இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே இமாம் சுஹ்ரியினுடைய தொகுப்பும் அமைந்திருக்கின்றது. அதாவது, அவர் நபியவர்களுடன் சம்பந்தப்பட்ட அறிவிப்புகளை மட்டுமின்றி நபித்தோழர்களின் நடைமுறைகள் மற்றும் பத்வாக்களையும் தொகுப்பில் உள்ளடக்கி யிருந்தார். இதிலிருந்து மற்றொரு விசயத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது. சுன்னா என்பதன் பிரயோக வடிவம் நபித்தோழர்களின் நடைமுறைகளையும் உள்ளடக்கியது என்ற அதன் சரியான பொருளை அவர்கள் புரிந்து வைத்திருக்கின்றனர். இதனை உமர் இப்னு அப்துல் அஸீஸ் தம்முடைய பல உரைகளில் உணர்த்தியிருக்கின்றார்.

உமர் இப்னு அப்துல் அஸீசும் அவரோடு இருந்தவர்களும் சுன்னா தொகுக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியதற்கான முக்கியமான நியாயம், குர்ஆனுக்கான பிரயோக விளக்கமாகவும் குர்ஆனைச் செயல்படுத்தியதற்கான நபியவர்களின் அணுகுமுறையாகவும் அதனடிப்படையில் முஸ்லிம்கள் தங்களின் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் ஒருமைப்பாட்டை சாத்தியப்படுத்துவதற்குமான ஒரு முன்மாதிரியாகவும் அது அமைய வேண்டும் என்பதாகும். ஒவ்வொரு நகரிலுமுள்ள அறிஞர்களுக்கும் கவர்னர்களுக்கும் இதற்கான அறிவுறுத்தல்களை அவர் வழங்கினார். "நபியவர்களுடைய ஹதீஸ்களைத் தேடி ஒன்று திரட்டுங்கள்" என்றார். அபூபக்ர் இப்னு முஹம்மது இப்னு அம்ரு இப்னு ஹஸ்முக்கு அவர் எழுதிய கடிதத்தில் "நபியவர்களது ஹதீஸ்களையும் கடந்த கால சுன்னாக்களையும் தேடி எடுங்கள். அறிவுச் சபைகளில் இந்த அறிவைச் சுமந்தவர்கள் அற்றுப் போய் விடுவார்கள் என்று நான் பயப்படுகின்றேன்" என்றார்.

சுன்னாவைத் தொகுத்தல் தொடர்பாக உமர் இப்னு அப்துல் அஸீசுடைய அணுகுமுறையின் சிறந்த பிரயோக வடிவமாக இமாம் மாலிக்கினுடைய 'முஅத்தா' என்ற நூல் அமைந்திருந்தது. அந்த வகையில் முஅத்தாவில் இமாம் மாலிக்கினுடைய அணுகுமுறை பற்றி நாம் சற்று நோக்குவது பொருத்தமானது.

ஹதீஸையும் பிக்ஹையும் இணைத்துத் திரட்டப்பட்ட ஆதாரப்பூர்வமான முதல் நூலாகவும் இத்துறையில் வெளிவந்த மிகவும் பழைய நூலாகவும் இது கருதப்படுகின்றது. இமாம் ஷாஃபி இது பற்றிக் கூறும்போது, "இமாம் மாலிக்கினுடைய நூலை விட மிகவும் ஸஹீஹான ஒரு நூலை நான் பூமியில் கண்டதில்லை" என்றார். கலீபா அபூ ஜஃபர் அல்மன்சூர் இமாம் மாலிக்கிடம் "மக்களுக்கான ஒரு நூலை நீங்கள் தயார் செய்ய வேண்டும். அதனைப் பின்பற்றுமாறு நான் மக்களுக்கு கட்டளையிடுகிறேன்" என்றார். அவர் தொடர்ந்து கூறும்போது "அப்துல்லாஹ்வின் தந்தையே, இந்த அறிவை ஒன்று திரட்டி நூலுருப்படுத்துங்கள். அதில் அப்துல்லாஹ் இப்னு உமரின் கடினமான ஃபத்வாக்களையும் இப்னு அப்பாஸின் சலுகைகளையும் இப்னு மஸ்ஊதின் வித்தியாசமான கருத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள், நடுநிலையானவற்றையும் நபித்தோழர்கள் மத்தியில் உடன்பாடானவற்றையும் தேர்ந்தெடுங்கள்" என்றார்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் மற்றும் அபூ ஜஃபர் அல்மன்சூர் ஆகிய இருவரது கருத்திலும் மதீன அறிவுப் பாரம்பரியத்தைத் தொகுக்க வேண்டும் என்பதில் உடன்பாடான போக்கு இருப்பதை அவதானிக்கலாம். உமர் இப்னு அப்துல் அஸீஸ் இதற்காக அபூபக்ர் இப்னு ஹஸ்முக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார், அபூ ஜஃபர் மன்சூர் இமாம் மாலிக்குக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். இமாம் மாலிக், சூழ்நிலையின் தேவையைத் தானே உணர்ந்ததன் அடிப்படையில் தானாகவே முன்வந்து இந்தப் பணியைச் செய்தார். ஆனால் அபூபக்ர் இப்னு ஹஸ்ம், சூழ்நிலையின் தேவையை கலிபா உணர்த்தியதன் அடிப்படையில் அதனை மேற்கொண்டார். இவர்களுக்குப் பின்வந்த கலீபாக்களும் இதே தேவையை உணர்ந்திருக்கின்றார்கள். அதனடிப்படையிலேயே கலிபா ஹாரூன் ரஷீதும் நீதிபதிகளுக்கான சட்ட நூலாக முஅத்தாவைக் கொள்ள வேண்டும் என்று கருதினார். இமாம் சுயூத்தி கூறுகிறார்: கலீபா ஹாரூன் ரஷீத் இமாம் மாலிக்கிடம் இந்த விசயத்தை தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருந்ததனால், அவர், நம்பிக்கையாளர்களின் தலைவரே! அறிஞர்களின் கருத்து வேறுபாடுகள் இந்த உம்மத்துக்கு அருளானது என்று பதில் தந்தார்.

உமர் இப்னு அப்துல் அஸீஸின் செயல்பாட்டுக்கும் இமாம் மாலிக் கலிஃபாவின் தூண்டுதலின் அடிப்படையில் மேற்கொண்ட பணிக்கும் இடையே கருத்து ரீதியான ஓர் ஒற்றுமை இருக்கின்றது. அதுதான்,

நாட்டில் வழங்கப்படும் தீர்ப்புக்களை ஒருமுகப்படுத்த வேண்டும், நீதிபதிகள் கவர்னர்களுக்கிடையிலான முரண்பாடுகள் இல்லாமல் ஆக்கப்பட வேண்டும் என்பது. இதனை மற்றொரு வார்த்தையில் கூறினால், நபியவர்கள் மற்றும் நபித்தோழர்களின் சுன்னாக்களை ஒன்று திரட்டுவதன்மூலம் பிக்ஹை ஒருமுகப்படுத்தலாம். அதனூடாக பத்வாவுக்கும் நீதித்துறைக்குமான பொது மூலமாக அது மாற்றப்பட வேண்டும். குறிப்பாக மதீன மக்களிடமிருந்த சுன்னாக்கள் தொகுக்கப்படுவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஏனெனில் அவர்கள் சுன்னா என்பதை நபியவர்களிடத்திலிருந்தும் ஸஹாபாக்களிடத்திருந்தும் அவர்களுக்குக் கிடைத்த செயல்பாட்டு முன்மாதிரி என்பதைச் சரியாக விளங்கி வைத்திருந்தார்கள். இந்த சிந்தனையின் முதல் நோக்கமாக நாட்டின் சட்ட ஒழுங்கு முறைப்படுத்தப்பட வேண்டும் என்பது அமைந்திருந்தது. வெறுமனே அவற்றை ஒன்றுதிரட்டி வைக்க வேண்டும் என்பது அங்கு நோக்கமாக இருக்கவில்லை. மாறாக சுன்னாவின் ஃபிக்ஹை அறிந்து கொள்வதற்கான அழைப்பாகவே அது காணப்பட்டது. இங்கு நம்முடைய கவனத்தை ஈர்க்கும் ஒரு விசயம் இருக்கின்றது. உமர் இப்னு அப்துல் அஸீஸ் மற்றும் இமாம் மாலிக் இருவரும் மதீன சிந்தனை மரபின் மாணவர்கள். மதீன சிந்தனை மரபுதான் சுன்னாவை ஒரு பிரயோக மாதிரியாகப் புரிந்து கொண்டிருக்கின்றது.

நபியவர்களின் சுன்னாக்களை மதீனாவாசிகளிடமிருந்து பெற்று அறிவிப்புச் செய்ததில் இமாம் மாலிக்கினுடைய அறிவிப்புகளே மிகவும் ஆதாரப்பூர்வமானவை. உமரின் (ரழி) சட்டத் தீர்ப்புக்கள், இப்னு உமர், ஆயிஷா (ரழி) ஆகியோரின் பத்வாக்கள், தாபியீன்களில் ஏழு சட்ட அறிஞர்களுடைய பத்வாக்கள் போன்றவை குறித்து மிகுந்த அறிவுடன் அவர் காணப்பட்டிருக்கின்றார்.

முஅத்தா மாலிக் தொடர்பாக இவ்வாறு ஒரு கேள்வி தோன்ற முடியும். இதனை எந்தக் கலையில் சேர்ப்பது? இது ஒரு ஹதீஸ் நூலா அல்லது சட்ட நூலா?

இது தொடர்பாக இரு வேறு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஹதீஸ்களே அதில் அதிகமாக உள்ளன என்றவர்கள் அதனை ஒரு ஹதீஸ் நூல் என்றனர். சட்ட அணுகுமுறையே அதில் மிகைத்திருக்கிறது என்றவர்கள் அதனை ஒரு பிக்ஹ் நூல் என்றனர். ஆனால் அது சுன்னாவின் பிக்ஹ் நூல் என்றே நாம் கருதுகின்றோம். ஏனெனில் அவர் அதில் சட்டக் கேள்விகளுக்கு சுன்னாவிலிருந்து விடையளிக்க முயன்றிருக்கின்றார்.

இமாம் மாலிக் அதில் ஹிஜாஸ் பிரதேசத்தவர்களின் மிகப்பலமான ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுடன் ஸஹாபாக்கள் மற்றும் தாபியீன்களது கூற்றுக்களையும் இணைத்துள்ளார். சுமார் பத்தாயிரம் அறிவிப்புகளை அதில் தொகுத்திருக்கிறார். ஒவ்வொரு வருடமும் அவற்றை மீள்பரிசீலனை செய்து கொண்டே இருந்தார். அவற்றுள் பொருத்தமற்றவற்றை நீக்கினார். இறுதியில் எஞ்சியவையே நம்முடைய கரங்களில் இருக்கின்றன. இமாம் இப்னு அப்துல் பர் இமாம் மாலிக் சொல்வதாகக் குறிப்பிடுகிறார்: இந்த நூலை நான் நாற்பது வருடங்களாகத் தொகுத்திருக்கின்றேன். நீங்கள் அதனை நாற்பது நாட்களில் படித்து விடுகின்றீர்கள். நீங்கள் மிகவும் குறைவாகவே அதனை விளங்கப் போகின்றீர்கள்". இமாம் சுயூத்தி கூறுகிறார்: முஅத்தாவிலுள்ள முர்ஸலான ஹதீஸ்களைப் பலப்படுத்தும் ஒரு ஆதாரமோ பல ஆதாரங்களோ நிச்சயம் இருக்கின்றன.

5. முஅத்தா மாலிக்கும் ஸஹீஹுல் புகாரீயும்

ஸஹீஹுல் புகாரிக்குரிய இமாம் இப்னு ஹஜரின் விரிவுரையின் முன்னுரையில் அவர் கூறுகிறார்: சிலர் முஅத்தா மாலிக்கைவிட ஸஹீஹுல் புஹாரி மிகவும் மிகவும் ஸஹீஹானது என்பார்கள். ஆனால் இருவரும் ஸஹீஹுக்குரிய நிபந்தனைகளை மிகுந்த நுணுக்கத்துடன் பேணியே ஹதீஸ்களைத் தொகுத்திருக்கிறார்கள். இமாம் புகாரீ அதிக ஹதீஸ்களைப் பதிவு செய்திருக்கின்றார் என்பது, அவரது ஹதீஸ்கள் ஸஹீஹ் என்ற விசயத்தில் சிறப்புக் குரியவை என்று சொல்வதற்கில்லை. இரண்டில் எது மிகவும் ஸஹீஹானவை என்ற கேள்விக்கான பதில் என்னவெனில், இது, ஒரு ஹதீஸை ஸஹீஹானதாகக் கருதுவதற்கு இருவரும் கடைப்பிடித்திருக்கின்ற நிபந்தனைகளுடன் சம்பந்தப்பட்ட விசயம். அறிவிப்பாளர் வரிசையில் இடைவெளி ஒன்று இருப்பது ஹதீஸ் ஸஹீஹாக இருப்பதில் பாதிப்புச் செலுத்த மாட்டாது என்பது இமாம் மாலிக்கினுடைய நிலைப்பாடு. அதனால் அவர் முர்ஸலான ஹதீஸ்கள் மற்றும் அறிவிப்பாளர் வரிசை துண்டிக்கப்பட்ட ஹதீஸ்கள், அறியக் கிடைத்தவை என்று குறிப்பிடப்படும் ஹதீஸ்கள் போன்ற பல அறிவிப்புகளை தம்முடைய நூலின் பிரதான பகுதியில் இணைத்திருக்கின்றார்.

அறிவிப்பாளர் வரிசை துண்டிக்கப்படுவது ஸஹீஹ் என்ற தன்மையைப் பாதிக்கக் கூடிய ஒரு குறைபாடு என்று இமாம் புகாரீ கருதினார். அவற்றை அவர் தனது நூலின் பிரதான பகுதியில்

பதிவு செய்ய மாட்டார். அறிவிப்பாளர் வரிசை துண்டிக்கப்பட்ட அறிவிப்புகள் சிலரிடத்தில் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன, அதே சமயம் அறிவிப்பாளர் வரிசை தொடராக இருக்கின்ற அறிவிப்புகள் அவற்றைவிட பலமானவையாகக் கருதப்படுகின்ற ஒரு சந்தர்ப்பம் இருக்கின்றது, இரண்டு அறிவிப்பாளர் வரிசைகளின் அறிவிப்பாளர்கள் நேர்மை மற்றும் மனன சக்தியில் சமதரத்தினராக இருக்கின்றபோது இந்த வித்தியாசம் இருக்கின்றது. இமாம் ஷாஃபி முஅத்தா மாலிக் ஏனையவற்றை விட ஸஹீஹானது என்று சொல்லியிருக்கின்றார். உண்மையில் அவரது காலத்தில் காணப்பட்ட ஹதீஸ் நூல்களுடன் ஒப்பிட்டே அதனைக் கூறியிருக்கின்றார். உதாரணமாக ஜாமிஃ சுப்யானுஸ் ஸௌரி, முஸன்னப் ஹம்மாத் இப்னு ஸலமா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இமாம் ஷாபியினுடைய இந்தத் தரப்படுத்தலில் எந்தத் தவறும் இல்லை. இமாம் தாரகுத்னீ மற்றும் சிலர் முஅத்தாவை அபூபக்ர் இப்னு குஸைமாவின் நூலை விடவும் முற்படுத்தியிருக்கின்றார்கள். இஸ்மாஈலி தம்முடைய 'மத்கல்' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்: "இமாம் புகாரீ தொகுத்திருக்கின்ற நூலை நான் ஆய்வு செய்து பார்த்திருக்கின்றேன். உண்மையில் அதிகமான ஸஹீஹான சுன்னாக்களை அது உள்ளடக்கியிருக்கிறது. அதுபோல் சுன்னாக்களில் இருந்து நுணுக்கமான கருத்துக்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றை அறிவிப்புகள் மற்றும் அறிவிப்பாளர்கள், பிக்ஹ் மற்றும் மொழி போன்ற துறைகளில் மிகுந்த புலமைத்துவம் உள்ள ஒருவரால் அன்றி முன்வைக்க முடியாது". இமாம் புகாரீ தம்முடைய நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஸஹீஹானவற்றையே தொகுத்ததனால் அவரது சட்டத்தேர்வுகளுக்கு மாற்றமான நிலைப்பாடுகள் உள்ள ஹதீஸ்களை அவர் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவற்றை ஆதாரப்பூர்வமற்றது என்று அவர் குறிப்பிடவுமில்லை. அவ்வாறு செய்திருப்பின் அவை அவரது நிலைப்பாடுகளுக்கு மாற்றமான நிலைப்பாட்டில் உள்ளவை என்று நோக்கப்பட்டிருக்க மாட்டாது. மாறாக இருப்பவற்றில் பலமானதைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக இருந்தது.

இமாம் மாலிக் தம்முடைய நூலில் ஹிஜாஸியர்களது அணுகு முறையைப் பின்பற்றியிருந்தார். அடிப்படையான சட்டங்களை, ஸஹீஹ் என்பதில் உடன்பாடான அறிவிப்புகளில் இருந்து மாத்திரமே முன்வைத்தார். சட்டவியல் தலைப்புகளுக்கு அமையவே நூலை ஒழுங்கமைத்திருந்தார். தம்முடைய நூலின் ஒழுங்கமைப்பு மற்றும் தான் பின்பற்றிய அணுகுமுறை குறித்து அவர்

தம்முடைய நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "எனது நூல், நபியவர்களது ஹதீஸையும், நபித்தோழர்களின் கூற்றுக்களையும் தாபியீன்களது கருத்துக்களையும் மதீன மக்களின் உடன்பாடான கருத்துக்களையும் உள்ளடக்கியிருக்கின்றது. இவற்றுக்கு அப்பால் நான் செல்லவில்லை." தொடர்ந்து தம்முடைய ஆதார அணுகுமுறை குறித்துப் பேசுகிறார்: "உடன்பாடானவை எங்களிடத்திலும் எங்களுடைய ஊரிலும் உள்ளவை, அறிஞர்களிடமிருந்து நான் பெற்றுக் கொண்டவை. எங்களிடத்தில் உள்ளவை என்பதன் பொருள், எங்கள் பகுதி மக்கள் செய்து வருபவை, அவையே சட்டங்களாக புழக்கத்தில் இருக்கின்றன, அவற்றைக் கற்றவர்கள், கல்லாதவர்கள் என அனைவரும் அறிவார்கள். எங்கள் ஊரில் உள்ளவை என்பதன் மூலமாக நாடுகின்ற கருத்து இதுவாகும். சில அறிஞர்களிடமிருந்து பெற்றுக் கொண்டவை என்பது, அவர்களுடைய கருத்துக்களில் இருந்து பொருத்தமானவையாக நான் கருதியவையாகும். அறிஞர்களிடமிருந்து தெரிந்து கொள்ளக் கிடைக்காத புதிய விசயங்களில் அவர்களது அணுகுமுறையின் அடிப்படையில் நான் ஆய்வு செய்து பார்ப்பேன். அவற்றுள் மதீன மக்களின் அணுகுமுறைக்கு முரணில்லாத முடிவுகளை ஏற்றுக் கொள்வேன்".

பின்னர் ஹதீஸ் துறையாளர்கள் அறிவிப்பாளர் வரிசைகளில் ஹிஜாஸிய, ஈராக்கிய அணுகுமுறைகள் குறித்துக் கவனம் செலுத்தினர். இமாம் புகாரீயும் தம்முடைய நூலை தலைப்புக்கள் வாரியாகவே தொகுத்தார். அதில் அவர் ஹிஜாஸிய, ஈராக்கிய, ஷாமிய அறிவிப்பாளர் வரிசைகளைப் பயன்படுத்தினார். அவற்றுள் இமாம்கள் மத்தியில் உடன்பாடானவற்றை மட்டுமே தம்முடைய நூலில் உள்ளடக்கினார். தலைப்புக்களின் தன்மைக்கு ஏற்ப ஒரே ஹதீஸ் பல தடவைகள் பதிவு செய்யப்படும் நிலையும் காணப்பட்டது.

அடுத்து இமாம் முஸ்லிம் வந்தார். அவரும் இமாம் புகாரீயின் அணுகுமுறையின்படி உடன்பாடான ஹதீஸ்களையே ஒன்று திரட்டினார். ஆனால் ஒரே ஹதீஸ் பல தலைப்புக்களில் உள்ளடக்கப்படுவதைத் தவிர்த்தார். இருப்பினும் ஒரே ஹதீஸுக்குரிய வேறுபட்ட அறிவிப்பாளர் வரிசைகளைக் கொண்டு வந்தார். அவற்றைத் தலைப்புக்கள் வாரியாகத் தொகுத்துப் பதிவு செய்தார். இமாம் புஹாரி மற்றும் முஸ்லிம் இருவரும் அனைத்து ஸஹீஹான ஹதீஸ்களையும் தங்கள் நூல்களில் உள்ளடக்கவில்லை. இவர்களுக்குப் பின்னர் பலர் இவர்கள் கடைப்பிடித்த நிபந்தனைகளின்

அடிப்படையில் இவர்களால் தவற விடப்பட்ட ஹதீஸ்களைத் தொகுத்தார்கள். தொடர்ந்து இமாம் அபூ தாவூத், இமாம் திர்மிதி, இமாம் நஸாஈ போன்றவர்கள் ஸஹீஹ் என்ற வட்டத்தை விடவும் விசாலமான ஒரு வட்டத்தில் ஹதீஸ்களைத் திரட்டினார்கள். அவர்கள் செயல்பாட்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டிருப்பதையே முக்கியமாகப் பார்த்தனர். அவர்களது ஹதீஸ்கள் குறைந்த எண்ணிக்கையான அறிவிப்பாளர் வரிசைகள் கொண்டனவாக இருந்தன. அநேகமாக அவை ஸஹீஹானவையாகும் அல்லது அதற்கடுத்த ஹஸன் என்ற தரத்தில் இருந்தன. செயல்பாட்டுக்கு வழியமைக்கும் வகையிலேயே அவர்களுடைய தொகுப்புக்கள் காணப்பட்டன. இங்கு முன்வைக்கப்பட்டவையே முஸ்லிம் உம்மத்தினால் ஏற்கத்தக்க அறிவிப்பாளர் வரிசைகளாகும். இவையே சுன்னாவை உள்ளடக்கிய பிரதான நூல்களாகும்.

6. இமாம் புகாரீயின் தலைப்புக்கள் ஊடான சட்டவியல் அணுகுமுறை

இமாம் இப்னு ஹஜர், இமாம் புகாரீயின் தலைப்பிடுதல் அணுகு முறை குறித்து பின்வருமாறு கூறுகிறார்: “அவரது தலைப்பிடுதல் அணுகுமுறைகள் அனைத்தையும் விளங்கப்படுத்தக் கூடிய ஒரு வரையறையை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். அதாவது. ஒவ்வொரு தலைப்பும் அதன் உள்ளடக்கத்தைக் குறித்துக்காட்டக் கூடியதாகவும் அதனுடன் ஒத்திசைந்து செல்லக் கூடியதாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தலைப்பில் என்ன பேசப் படுகின்றது என்பதைத் தெரியப்படுத்துதலே உண்மையில் அதன் நோக்கம். ஆனால் எந்த அளவு தெரிந்து கொள்ள முடியும் என்பதற்கு ஒரு வரையறை கிடையாது. உதாரணமாக, குறித்த சட்டத்துக்குரிய ஆதாரத்தை முன்வைப்பதற்குரிய தலைப்பு என்று அவர் குறிப்பிட்டிருப்பார். சில சமயங்களில் அவரது தலைப்பு அதன் உள்ளடக்கத்தை முழுமையாகப் பிரதிபலிப்பதாக அமையும் அல்லது அதன் ஒரு பகுதியை பிரதிபலிப்பதாக அமையும் அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட ஒரு கருத்தைப் பிரதிபலிப்பதாக அமையும். மற்றும் சில சமயங்களில் அவரது தலைப்புக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களுக்கு இடம்பாடானவையாகவும் இருக்கும். அச்சமயம் அவற்றின் உள்ளடக்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ள ஹதீஸ்களை மையப்படுத்தியே அது எந்தக் கருத்தை வலியுறுத்துகின்றது என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதுபோல் மறுக்கும்விதமாக தலைப்பு வரையறுக்கப்பட்டதாகவும் உள்ளடக்கம் பல கருத்துக்களுக்கு இடம்பாடானவையாகவும் அமைகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அச்சமயம்

உள்ளடக்கத்துக்கான வரையறுத்த விளக்கமாகவே அதனைக் கொள்ள வேண்டும். இது, சட்ட அறிஞர்கள் குறிப்பிடக்கூடிய பின்வரும் நியாயங்களைப் போன்றதாகும். அதாவது, ஒரு ஹதீஸ் பொதுக்கருத்தைப் பேசினாலும் அதனூடாக குறிப்பான ஒரு கருத்து நாடப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன அல்லது குறித்த ஹதீஸ் குறிப்பான கருத்தையே தருகின்றது எனினும் அந்த ஹதீஸ் சொல்லும் சட்டத்திற்கான காரணம் பொதுவானதாகக் காணப்பட முடியும் அல்லது அந்த ஹதீஸ் குறிப்பானதாக இருப்பினும் அதன் கருத்து அதனையும் தாண்டிய பொதுக் கருத்தொன்றை வலியுறுத்துவதாகக் காணப்பட முடியும். இதே வடிவங்களை வரையறைக்கு உட்பட்டவை வரையறைக்கு உட்படாதவை என்ற வகைக்குள்ளேயும் காணலாம். அதே போன்று தெளிவற்றவற்றை விளக்குதல், சுருக்கமானவற்றை விரிவாகக் குறிப்பிடுதல் போன்ற அணுகுமுறைகளையும் இவரது தலைப்புக்களில் காணலாம். இவரது தலைப்புக்களில் புரிந்து கொள்வதற்கு சிரமமான பரப்பாக இதனைக் கொள்ளலாம்''.

இமாம் புகாரீயுடைய பிக்ஹ் அவரது தலைப்புக்களில் இருக்கின்றது என்பது பிரபல்யமான ஒரு கருத்து. இதனை அவர் மிகப் பெரும்பாலும் குறித்த தலைப்பில் அவரது நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒரு ஹதீஸ் காணப்படாத போதே பின்பற்றுகிறார். மற்றும் சில சமயங்களில் மக்களது சிந்தனையைத் தூண்டும் நோக்கிலும் இதனைச் செய்வார். அதாவது குறித்த தலைப்பை விளங்கப்படுத்தும் ஹதீஸை அவர் அதற்கு முன்னால் ஓரிடத்திலோ பின்னால் ஓரிடத்திலோ பதிவு செய்து விட்டு, மறைமுகமாக அதனை இந்தத் தலைப்பின்மூலம் குறித்துக் காட்டுவார். பல இடம்பாடுகளுக்குரிய ஒரு கருத்தில் எதனையும் உறுதியாகக் குறிப்பிட முடியாத சமயம், வினா வடிவில் தலைப்புக்களை இட்டிருப்பார். உதாரணமாக, ''இவ்வாறு இருக்க முடியுமா என்பது பற்றிய தலைப்பு''. இங்கு அவரது நோக்கம் குறித்த சட்டம் இன்னும் உறுதிப்படுத்தப்படவோ மறுக்கப்படவோ இல்லை என்பதை உணர்த்துவதாகும். சில சமயம் அவற்றுள் ஏதேனும் ஒரு கருத்து சற்றுப் பலமானதாகத் தென்பட்டாலும் ஆய்வுக்கான கதவைத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்பதையே அவர் எதிர்பார்ப்பார். காரணம், அங்கு மற்றொரு இடம்பாடு இருக்கின்றது அல்லது தெளிவாகத் தீர்மானித்துக் கொள்ள முடியாத ஒரு பொதுக்கருத்து இருக்கிறது என்பதன் அடிப்படையில் இறுதியான முடிவு சொல்வதைத் தவிர்ப்பார். சில சமயங்களில் அவர் கொண்டு வந்திருக்கும் ஒரு தலைப்பு வெளிப்படையில் பயனற்றது போல்

தோன்றினாலும் ஆழ்ந்து நோக்கும் போது அதன் பயனைப் புரிந்து கொள்ள முடியும். உதாரணமாக "எங்களின் தொழுகை தவறிவிட்டது என்று ஒருவர் சொல்லுதல்" என்ற தலைப்பைக் குறிப்பிடலாம். இந்த வார்த்தையை மொழிவது கூடாது என்று சொல்பவர்களுக்கு மறுப்பாகவே அவர் இந்தத் தலைப்பைக் கொண்டு வந்திருப்பார். அதுபோல் குறிப்பிட்ட சில நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்ட தலைப்புக்களைக் கொண்டு வந்திருப்பார். முதல் தருணத்திலேயே அதனை விளங்கிக் கொள்ள முடியாதிருக்கும். உதாரணமாக, 'மக்களுக்கு முன்னால் தலைவர் பல்துலக்குதல்' என்ற தலைப்பைப் பார்த்தவுடன் பலர் இது பொருத்தமற்ற ஒரு செயல். இதனை மறைவாகச் செய்வதே சிறந்தது என்றுதான் நினைப்பார்கள். ஆனால் தலைப்பில் உள்ள ஹதீஸைப் பார்த்தால் நபியவர்கள் ஒரு தடவை தம்மை சுத்தப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே மக்கள் முன்னால் இவ்வாறு செய்திருக்கிறார்கள். வேறு நோக்கங்களைக் குறிக்கும் வகையில் அந்தத் தலைப்பிடப்படவில்லை. இதனை இமாம் இப்னு தகீக் அல்ஈத் குறிப்பாக தெளிவுபடுத்தி இருக்கிறார்.

அவர் பல சமயங்களில் தம்முடைய நிபந்தனைகளுக்கு உட்படாத ஒரு ஹதீஸை மறைமுகமாகக் குறித்துக் காட்டும் வகையில் தலைப்பை அமைத்திருப்பார் அல்லது வெளிப்படையாக அவ்வாறான ஒரு ஹதீஸையே தலைப்பாகக் கொண்டு வருவார். சில சமயங்களில் தலைப்பின் உள்ளடக்கத்தில் அந்தக் கருத்தை தெளிவாகக் குறிப்பிடக் கூடிய விசயங்களை கொண்டு வந்திருப்பார் அல்லது மறைமுகமாகப் பேசக்கூடிய தகவல்களைக் கொண்டு வந்திருப்பார். உதாரணமாக, 'தலைவர்கள் குறைஷிகளில் இருந்து வர வேண்டும்' என்ற தலைப்பைக் குறிப்பிடலாம். இது அலி (ரழி) ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள ஒரு ஹதீஸாகும். ஆனால் இது இமாம் புகாரீயின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதல்ல. இங்கு அவர் இந்தத் தலைப்பில் தம்முடைய நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஸஹீஹான ஒரு ஹதீஸ்கூட கிடையாது என்பதையே மறைமுகமாக உணர்த்துகிறார். இந்த நோக்கங்களை நாம் கவனத்தில் கொள்ளாதபோது, இந்த நூலை சரியாகப் புரிந்துகொள்ளத் தவறி விடுவோம். பேரறிஞர் நாஸிருத்தீன் அஹ்மத் இப்னுல் முனீர் இவை போன்ற சுமார் நானூறு தலைப்புக்களைத் திரட்டினார். அவற்றை பத்ருத்தீன் இப்னு ஜும்மாஆ சுருக்கித் தந்துள்ளார். தொடர்ந்து மொரோக்கோவைச் சேர்ந்த முஹம்மது இப்னு மன்சூர் இப்னு ஹமாமாவும் இது போன்ற ஒரு தொகுப்பை தொகுத்திருக்கிறார். '*பக்கு அக்ராழில் புகாரீ அல்முப்ஹமா பில்ஜம்இ பைனல் ஹதீஸ் வத்தர்ஜமா*' என்ற அவரது

நூலில் சுமார் நூறு தலைப்புக்கள் குறித்து விளக்கியிருக்கின்றார். ஸைனுத்தீன் இப்னு அலி இப்னுல் முனீரியும் ஸஹீஹுல் புகாரீயிற்கான அவரது விளக்கவுரையில் இந்தத் தலைப்பை சற்று ஆழமாக அணுகியிருக்கின்றார். அபூ அப்துல்லாஹ் இப்னு ரஷீத் அஸ்ஸப்தி என்பவரது *'தர்ஜுமானுத் தராஜிம்'* என்ற நூலின் ஒரு பாகம் மாத்திரம் எனக்குக் கிடைத்தது. அதில் நோன்பு என்ற பாடம் வரை தலைப்புக்கள் தொடர்பாக அவர் ஆராய்ந்திருக்கின்றார். ஆனால் அது முழுமைப்படுத்தப்படவில்லை. அவ்வாறு நடைபெற்றிருந்தால் பயன் மிகுந்த ஒன்றாக அது அமைந்திருக்கும்.

இதிலிருந்து இமாம் மாலிக், இமாம் புகாரீ ஆகிய இருவருடைய சட்டவியல் ஆளுமை அவர்களுடைய நூல்களின் வழியாக தெளிவாக வெளிப்பட்டிருப்பதை நம்மால் அவதானிக்க முடிகிறது. அவர்கள் இருவரும் ஹதீஸ்களையும் ஏனைய கூற்றுக்களையும் தங்களின் சட்டக் கருத்துக்களைப் பலப்படுத்தும் வகையிலேயே தொகுத்திருக்கின்றனர். அதே சமயம் அந்த அறிவிப்புகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் தமது நிபந்தனை களின் அடிப்படையில் அவற்றை உறுதிப்படுத்தியும் இருக்கின்றனர். இது பொதுவாக ஹதீஸ் துறையாளர்கள் பலருடைய அணுகு முறையை விடவும் வித்தியாசமானது. ஹதீஸ்களையும் நபித் தோழர்களின், தாபியீன்களின் கருத்துக்களை ஒன்று திரட்டுதல் என்பது மட்டுமே அவர்களுடைய நோக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் இமாம் மாலிக்கும் இமாம் புகாரீயும் ஹதீஸ்களை பிக்ஹாகவே கையாண்டிருக்கிறார்கள்.

## முடிவுரை: அறிவிப்புகளைத் தொகுக்கும் செயல்பாடு என்ன விளைவுகளைத் தந்தது?

இங்கு ஒரு முக்கியமான கேள்வி கேட்கப்பட வேண்டும். அறிவிப்புகளைத் தொகுத்தல் என்ற இந்த செயல்பாட்டின்மூலம் ஒன்றுதிரட்டப்பட்ட நபியவர்களுடைய ஹதீஸ்கள், ஏனைய கூற்றுக்கள், கருத்துக்கள் அனைத்தும் சுன்னா என்ற எண்ணக் கருவைப் பிரதிபலிக்கின்றனவா? இந்தக் கேள்வி அவற்றின் சட்டவாக்கத் தன்மையைப் பற்றியதல்ல. மாறாக நாம் ஏற்கனவே தெளிவுபடுத்திய சுன்னா என்ற கருத்தை, அதாவது குர்ஆனை நடைமுறைப்படுத்துவதற்கான நபியவர்களுடைய அணுகுமுறை என்ற கருத்தைப் பற்றியதாகும். இமாம்கள் ஒன்று திரட்டிய இந்தத் திரளான அறிவிப்புகள் அந்த எண்ணக்கருவைப் பிரதிபலிக்கின்றனவா என்பதே கேள்வி.

இதற்கான நம்முடைய பதில் — ஏற்கனவே பேசப்பட்ட விசயங்களுடன் — சுன்னாவைத் தொகுக்கும் நடவடிக்கை உண்மையில் ஒரு பெரும் முயற்சி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது ஒரு மனித முயற்சி என்ற வகையில் இதனூடாக அனைத்து ஸஹீஹான அறிவிப்புகளும் திரட்டப்பட்டுள்ளன என்றோ அல்லது அனைத்து பலவீனமான அறிவிப்புகளும் மறுக்கப்பட்டுள்ளன என்றோ நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது. எனவே இவ்வாறான ஒன்றை மார்க்கத்தில் கட்டாயமாகக் கைக்கொள்ள வேண்டும் என்று சொல்ல முடியுமா? ஏனெனில் எந்த அடிப்படையும் அற்ற ஒன்று அல்லது பலவீனமான ஒன்று உள்நுழைந்திருக்க முடியும். இந்த எல்லா இடம்பாடுகளும் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக அறிவிப்புகளைத் தொகுக்கும் பொறிமுறைகள் அனைத்தும் ஹிஜ்ரி 3ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் முழுமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் இது முழு மூச்சான ஒரு பணியாக காணப்படவும் இல்லை.

அறிவிப்புகள் தொகுக்கப்படும் இந்தப் புதிய பிரசவத்தினால் ஏற்பட்ட முக்கிய விளைவு, ஷரீஅத் சட்டங்களின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்தன. இந்த அறிவுப் பாரம்பரியமே முஸ்லிம் ஆளுமையை வடிவமைக்கும் முக்கிய காரணியாக மாறியது.

அதேபோன்று சுன்னா என்பது செயல் வடிவமாகப் பரிமாற்றம் செய்யப்படும் நிலை மாறி, நபியவர்களுடைய வரலாறு என்ற வகையில் வாய் மொழியாகப் பரிமாறப்படும் நிலை ஏற்பட்டது. ஏனெனில் இது, நபியவர்களுடைய வாழ்க்கையைக் கூற்றுக்களாகக் கையாளும் ஒரு பிரிவினரின் கைகளில் சிக்கிக் கொண்டது. இதனை வேறொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், நபியவர்களிடத்திலும் ஸஹாபாக்களிடத்திலும் சுன்னா என்பது, அல்லாஹ் இறக்கியவற்றின் மீதான நபியவர்களுடைய செயல்பாடு என்ற பொருளிலேயே இருந்தது. ஆனால் பின்னர் இந்தக் கருத்து சற்று விரிவடைந்து. நபியவர்களிடமிருந்து வரக்கூடிய ஒவ்வொரு வார்த்தையும் செயலும் அங்கீகாரங்களும் சுன்னா என்று வழங்கப்பட்டது. இது போன்ற ஒவ்வொரு கலைகளுக்கும் உரிய அறிஞர்களால் வழங்கப்பட்ட விளக்கங்களின் காரணமாக திருக்குர்ஆனும் மொழியும் சுன்னாவுக்கு வழங்கிய பொருள் மாற்றமடைந்தது. அதேபோன்று சுன்னாவில் உள்ள கால இட, சூழல் பரிமாணங்களுக்கேற்ப வேறுபட முடியுமான பரப்புக்கள் கவனத்தில் கொள்ளப்படாமல் போகும் நிலை ஏற்பட்டது. அவற்றில் முழு

மனித சமூகத்திற்கும் பொதுவான சட்டமாக அமையக்கூடியவையும் இருக்கின்றன. இன்னும் சில அது பேசப்படுகின்றவர்களுக்கான சட்டமாக மாத்திரம் அமைகின்றன. இன்னும் சில நபியவர்களின் இஜ்திஹாதுகளாக அல்லது குறித்ததொரு தனிமனித நிகழ்வாக மட்டுமே அமைகின்றன.

நபியவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும், மக்களுடனான அன்றாட நிகழ்வுகளின்போது வெளிப்படுகின்றன. அவை எந்தப் பின்புலமும் இன்றி வெறுமையாக வெளிப்படுவதில்லை. எனவே அந்த நிகழ்வுகளின் போக்குடன் தொடர்புடையவையாகவே அவை அமைகின்றன. அந்த வகையில் அந்த நிகழ்வுகளின் சூழல்சார்ந்த விஷேசமான தன்மைகள் கவனத்தில் கொள்ளப்பட்டவையாக இருப்பது தவிர்க்க முடியாதது. குர்ஆனிய புனித வசனங்களையும் சுன்னாவின் வசனங்களையும் வேறுபடுத்துகின்ற ஒரு முக்கிய காரணியாக இதனைக் குறிப்பிட முடியும். திருக்குர்ஆன் அநேகமாக பொது விதிகளை உள்ளடக்கியது. சுன்னா விரிவான நடைமுறைகளை உள்ளடக்கியது.

இந்த ஹதீஸ்களும் அறிவிப்புகளும் சுன்னா என்று கருதப் பட்டமையினால் அவற்றின் சூழல்சார்ந்த பொருள்கோடல்களும் பொதுக்கருத்துக்களாகக் கொள்ளப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த சூழல் சார்ந்த பொருள்கோடல்கள், அவை நிகழ்ந்த பின்புலங்களினால் மட்டுமே தோன்றுபவை அல்ல. மாறாக அவற்றிற்கு நபியவர்களின் மானுடப் பண்பும் காரணமாக இருக்கின்றது. தாம் இந்த மானுடப் பண்பினால் ஆளப்படுகின்றவர் என்பதை அவர் மக்களுக்குத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளார். மக்களிடம் இது இயல்பான ஒரு அறிவாக மாறும் அளவிற்கு அது வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனைத்தான் அப்துல்லாஹ் இப்னு அம்ர் அவர்களுடைய பின்வரும் கூற்று உணர்த்துகிறது: “நபியவர்களிடமிருந்து நான் கேட்கும் அனைத்தையும் அவற்றை மனனமிடும் நோக்கில் எழுதிவந்தேன். குறைஷிகள் (முஹாஜிரீன்கள்) என்னைத் தடுத்தனர், நபியவர்களிடமிருந்து வரும் அனைத்தையும் எழுதுகின்றீர்களா? அவர் ஒரு மனிதர், அவர் கோபத்திலும் பேசுவார், சந்தோசத்திலும் பேசுவார் என்றார்கள்”.

நபியவர்களின் இந்த மானுடப் பண்பு கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்ற வட்டத்திலிருந்து அவர்களின் பல வார்த்தைகளையும் செயல்பாடுகளையும் வெளியேற்றி விடுகிறது. இந்தக் கருத்தை நபியவர்களுடைய ஏராளமான ஹதீஸ்கள்

தெளிவாகக் குறிப்பிடுகின்றன. நபியவர்கள் கூறினார்கள்: “நான் ஒரு மனிதர்தாம். உங்களுடைய மார்க்கம் தொடர்பாக நான் இடும் கட்டளைகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். என் அபிப்பிராயமாக நான் முன்வைக்கும் விசயங்களைப் பொருத்தவரை நான் ஒரு மனிதர்தாம்.” மற்றொரு அறிவிப்பில், “உங்களுடைய உலக விவகாரங்களை நீங்களே நன்கறிந்தவர்கள்.” என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது. இன்னொரு அறிவிப்பில், “இது என்னுடைய கருத்து. இதனைக் குற்றம் காணாதீர்கள். ஆனால் அல்லாஹ்வைக் குறித்து சொல்கின்றவற்றை ஏற்று நடங்கள். நான் அல்லாஹ்வைப் பற்றி பொய்யுரைக்க மாட்டேன்.” என்று கூறியுள்ளார்கள்.

இங்குதான் இந்த மார்க்கத்தின் மகத்துவம் புலப்படுகின்றது. கால, இட பொருத்தப்பாடு வெளிப்படுகிறது. இங்கு நபியவர்களே தங்கள் தூதுத்துவத்திற்கும் மானுடப் பண்பிற்கும், தம்முடைய தனிப்பட்ட அபிப்பிராயத்திற்கும் இறைவேதத்திற்கும், அறிவுக்கும் வஹியிற்கும், மார்க்க விசயத்திற்கும் உலக விசயத்திற்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாக வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார்கள். எனவே அல்லாஹ்வின் வஹி மட்டுமே நாம் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டியது. தவிர, உலக விவகாரங்களை அந்தந்த துறைசார்ந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

இந்த அறிவிப்புகளின் வழிமுறையே ஹதீஸ் கலையிலும் ஏனைய இஸ்லாமியக் கலைகளிலும் செல்வாக்குமிக்கதாக மாறியது. ‘நகர்த்தப்படும் அறிவு’ என்று இதனையே வழங்கினார்கள். இந்தப் பின்புலத்தில் அறிவிப்புகளில் சரியையும் தவறையும் வேறுபடுத்தவும் அவை பற்றிய நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய பிரதான வரையறையாகவும் அறிவிப்பாளர் வரிசையே கருதப்பட்டது. ஆனால் பலர் புரிந்து கொள்ளத் தவறிய ஒரு விசயம் இருக்கிறது. முதவாதிர் வகையைத் தவிர தனியான அறிவிப்பாளர் வரிசை மட்டுமே திட்டவட்டமான ஓர் அணுகுமுறையல்ல. தவிர, ஹதீஸ் உள்ளடக்கங்களைப் பலர் இட்டுக்கட்டியதுபோன்று அறிவிப்பாளர் வரிசைகளையும் இட்டுக் கட்டத் தொடங்கினர். அவர்கள் ஏதேனும் ஒரு கூற்றினால் கவரப்பட்டார்கள் எனில், அதற்கொரு அறிவிப்பாளர் வரிசையை உருவாக்கி விடுவார்கள். உதாரணமாக, ஸஈத் அத்திமிஷ்கி என்பவர் கூறுகிறார்: “அழகான ஒரு கூற்றுக்கு அறிவிப்பாளர் வரிசையொன்றை உருவாக்குவது தவறில்லை”. ஏனெனில் அறிவிப்பாளர் வரிசையொன்று உள்ள போதுதான் அது ஹதீஸாக அங்கீகரிக்கப்படுகிறது என்பது அவர்களுக்குத் தெரியும்.

எனவே அறிவிப்பாளர் வரிசைகளைப் போலியாக உருவாக்க அவர்கள் முற்பட்டார்கள்.

நபியவர்களுடைய ஹதீஸ்களை ஒன்று திரட்டியவர்களின் நோக்கம், அவர்களின் அறிவு முதுசங்களைப் பாதுகாப்பதும், அவற்றை முறையாக கொண்டுசேர்ப்பதும், நபியவர்கள் தோழர்களுடன் வாழ்ந்த வாழ்க்கைக்கு மாற்றீடாக பின்வரக்கூடிய சமூகங்களுக்கு அவை அமைய வேண்டும் என்பதாகவே காணப்பட்டது. இஸ்லாமிய சட்டவியலுக்கான ஒரு மூலாதாரமாக ஹதீஸ்கள் மாறியபோது, சட்டவியலாளர்கள் தாம் கட்டாயமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய பல ஆயிரம் ஹதீஸ்களைக் கண்டனர். அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தி, மூலாதாரப் பொருத்தப்பாட்டைக் கண்டறிவது அவர்களுடைய பணியாக இருந்தது. இப்பணி நிறைவு பெற்றால் குறித்த ஹதீஸைத் தவிர்த்து அவர்கள் செயற்பட முடியாது. எந்த சட்ட அறிஞரேனும் இதனை மறுத்துரைத்தாலோ மாற்றமாக செயல்பட முற்பட்டாலோ அவரது மார்க்கம் கேள்விக்குட்படுத்தப்படும். சில சமயம் அவரைக் காஃபிராகக் கருதுகின்ற இடத்திற்கும் அது எடுத்துச் செல்லும். இவ்வாறுதான் முஸ்லிம் உம்மத்தின் அறிஞர்கள், ஹதீஸ் சார்பு அறிஞர்கள் என்றும் பகுத்தறிவு சார்பு அறிஞர்கள் என்றும் பிரிந்து நின்றார்கள். இதனோடு நபியவர்களுடைய பௌதீகப் பாத்திரத்தை மீளக் கொண்டு வருவதில் அரசியலர்கள், ஆன்மீகவாதிகள், அறிஞர்கள் ஆகிய முத்தரப்பினரது முயற்சிகளும் இணைந்து கொண்டன. ஆனால் திருக்குர்ஆன் அதற்கொரு தெளிவான பிரிகோட்டை வரைந்திருந்தது. உமரும் (ரழி) இன்னும் சிலரும் நபியவர்கள் மரணித்தபோது அதனை ஏற்றுக் கொள்ள முடியாத அதிர்ச்சியில் இருந்தார்கள். அப்போது அவர்களை விழிப்பூட்டி மீளக் கொண்டு வந்தது திருக்குர்ஆன்தான்: "முஹம்மது ஒரு தூதர்தாம். அவருக்கு முன்னரும் பல தூதர்கள் வந்து சென்றிருக்கின்றனர், அவர் இறந்து விட்டாலோ அல்லது கொல்லப்பட்டாலோ நீங்கள் பழைய நிலைக்குத் திரும்பிப் போய்விடுவீர்களா? பழைய நிலைக்குத் திரும்பிச் செல்கின்றவரால் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்கும் இழைத்துவிட முடியாது. நன்றியுடன் நடப்பவர்களுக்கு அல்லாஹ் கூலி வழங்குவான்" (ஆலஇம்ரான்: 144). நபியவர்களுடைய மரணத்தின்போது அபூபக்கருடைய (ரழி) வார்த்தைகளும் இதே பணியைச் செய்தன: "யார் முஹம்மதை வணங்கினாரோ அவர்கள் அறிந்து கொள்ளட்டும், இதோ முஹம்மது இறந்து விட்டார். யார் அல்லாஹ்வை வணங்கினாரோ அவர்கள் அறிந்து கொள்ளட்டும், அல்லாஹ் மரணிக்க மாட்டான் என்றும்

உயிருடன் இருப்பான்.” நபியவர்களின் மரணத்துடன் அதனை அங்கீகரிக்க முடியாத ஒரு மனநிலையில் உமர்(ரழி) இருந்தது, நபியவர்களின் பௌதீகப் பாத்திரத்தை அறிவிப்புகள் ஊடாகத் தொடர்ந்து எடுத்துச் செல்வதற்கான கோட்பாட்டுமூலமாக அவர் கருதினார். சட்ட, இறையியல் மற்றும் ஏனைய அனைத்துத் துறையாளர்களிடமும் சுன்னாவின் அதிகரித்த பிரயோகத்தின் ஊடாக நபியவர்களது பௌதீகப் பாத்திரத்தை மீளக் கொண்டு வரும் வேலை நடைபெற்றது.

இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அறிவிப்புகளைத் தொகுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது முதல், திருக்குர்ஆன் பெரிய அளவில் புறக்கணிக்கப்பட்டது. அது பல்பொருளைத் தரக்கூடியது என்று பெரும்பாலான அறிஞர்கள் கருதினார்கள். அதனால் குர்ஆனுடைய தேவை அவர்களைப் பொறுத்தவரை இருநூற்றி நாற்பது அல்லது மற்றும் சிலரது கருத்துப்படி முன்னூற்றி நாற்பது வசனங்களுடன் சுருங்கிவிட்டது. ஏனைய பகுதிகளைப் பொறுத்தவரை சுன்னாவே மைய ஆதாரமாக செயல்பட்டது. அதிலிருந்தே விதிகள் உருவாக்கப்பட்டன. கிளை விவகாரங்களுக்குத் தீர்வுகள் பெறப்பட்டன. பத்வாக்கள் வழங்கப்பட்டன. அதனோடு மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளும் நிலையே காணப்பட்டது. ஆனால் எந்நிலையிலும் பிறவற்றின் துணை அதற்கு அவசியமாகவே இருந்து.

இதன் விளைவாக குர்ஆனின் பாத்திரம் முஸ்லிம்களின் வாழ்வில் குறைந்து போனது. வெறுமனே அது நன்மைகளுக்காக ஓதவும் அல்லது ஆன்மீகப் படிப்பினைகளுக்காகவுமே பயன்படுத்தப்பட்டது. முஸ்லிம் அறிவாளுமையை வடிவமைக்கும் மூலாதாரமாக சுன்னாவே தொழிற்பட்டது. ஆனால் இந்நிலையிலும் மாற்றம் ஏற்பட்டு, சுன்னாவின் இடத்தை பின்னால் உருவாக்கப்பட்ட சட்டமூலாதாரங்கள் எடுத்துக் கொண்டன. சுமார் நாற்பத்து ஒன்பது மூலாதாரங்களை இமாம்கள் கூறியுள்ளனர்.

பகுதி ஆறு

# ஹதீஸ் அறிவிப்பை ஆதாரமாகக் கொள்ளுதல்

## முன்னுரை: சுன்னாவின் ஆதாரத்தன்மை

சுன்னா, குர்ஆனுக்கான பிரயோக வடிவம் என்ற வகையில் அது கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய தெளிவு படுத்தும் மூலாதாரம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அது நபியவர்களிடமிருந்து வந்திருக்கிறது என்பது உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறுதான் முதல் தலைமுறை யினர் இந்த விசயத்தை புரிந்து வைத்திருந்தனர். இது ஆதாரம் சொல்ல அவசியம் இல்லாத அளவுக்கு மார்க்கத்தில் தெளிவான ஒரு விசயமாகக் கருதப்படுகின்றது. ஆனால் இதில் வாதப்பிரதிவாதம் உள்ள இடம் எதுவெனில் சுன்னாவின் அறிவிப்பை ஆதாரமாகக் கொள்ள முடியுமா? என்பதாகும். மற்றொரு வகையில் கூறினால் சுன்னாவின் அறிவிப்பு அல்லாஹ்வின் சட்டத்துக்கு ஆதாரமாக அமையுமா? அது திட்டவட்டமாக அல்லாஹ்வின் சட்டத்தை எடுத்துக் காட்டுமா?. ஏனெனில் அல்லாஹ்வே சட்டமியற்றும் அதிகாரம் கொண்டவன். அது அவனுடைய இறைமையை வெளிப்படுத்தும் ஒரு காரணி, என்பதில் முழு உம்மத்தும் உடன்பாடான நிலைப்பாட்டில் இருக்கின்றது. நாம் சுன்னா மூலாதாரத் தன்மை கொண்டது என்றும் அதில் எவரும் முரண்படவில்லை என்றும் சொல்கின்றபோது, அதன்மூலம் நாடுகின்ற கருத்து என்னவெனில், சுன்னா, இருக்கின்ற சட்டத்தை எடுத்துக் காட்டுகின்றது, வெளிப்படுத்துகின்றது என்பதுதான். மாறாக அது தன்னில் ஒரு புதிய சட்டத்தை உருவாக்காது. நபியவர்களை சட்டமியற்றும் அதிகாரம் கொண்டவராக அடையாளப்படுத்தாது. அதாவது அவர் தனித்து ஒரு சட்டத்தைச் சொல்பவர் என்று எவரும் சொல்லவில்லை.

*ஆனால் தூதருக்குக் கட்டுப்படுவது எவ்வாறு அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதாக அமைகின்றது?*

*நீங்கள் சொல்லலாம்: அல்லாஹ் தூதருக்குக் கட்டுப்படுவது பற்றி பல இடங்களில் வலியுறுத்தியுள்ளான். உதாரணமாக, "நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள், தூதருக்கும் கட்டுப்படுங்கள்" (நிஸா: 59), (மாஇதா: 92), (முஹம்மது: 33), (தகாபுன்: 12). இது தூதரையும் சட்டமியற்றும் அதிகாரம் கொண்டவராகக் குறிப்பிடு கிறது. எனவே அவரிடமிருந்து வருகின்ற கட்டளைகளும் தனித்த சட்டங்களாகவே இருக்க வேண்டும். அவை அல்லாஹ்விடமிருந்து வருபவை அல்ல. தூதருக்குக் கட்டுப்பட வேண்டும் என்று அல்லாஹ் எங்களுக்குக் கடமையாக்கியிருக்கின்றான் எனில், அவர் இயற்றும் சட்டங்களுக்கு நாங்கள் கட்டுப்பட வேண்டும் என்பதுதானே பொருள். இங்கு இரண்டு கட்டளைகள் இருக்கின்றன. ஒன்று அவருக்குக் கட்டுப்படுமாறு வரும் கட்டளை. இது அல்லாஹ்விடமிருந்து வருகின்றது, மற்றொன்று, குறித்த செயல் பற்றிய கட்டளை. இது தூதரிடமிருந்து வருகின்றது. எனவே தூதரும் சட்டமியற்றும் அதிகாரம் கொண்டவர்.*

இதற்கு நான் அளிக்கும் பதில்: அவ்வாறு அல்ல. தூதருக்குக் கட்டுப்படுமாறு சொன்னதும் நபியவர்களிடமிருந்து வரும் செயலைச் செய்யுமாறு கட்டளையிட்டதும் அல்லாஹ்வே. அந்தச் செயல் நபியவர்களிடமிருந்துதான் ஒரு கட்டளை வடிவில் வருகின்றது. ஆனால் அது அல்லாஹ்வின் கட்டளை. இங்கு நடைபெறும் விசயம் என்னவெனில், அல்லாஹ் கட்டளை பிறப்பிக்கப்படும் வடிவத்தை தூதர் ஊடாக அமைத்திருக்கின்றான். ஆனால் அந்தச் செயல் அல்லாஹ் கடமையாக்கியதாகும். இந்த நுண்ணிய வேறுபாட்டை துறைசார்ந்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்வர். ஆகவே 'தூதருக்குக் கட்டுப்படுங்கள்' என்பதன் பொருள், ஒன்றை செய்யுமாறு அல்லது விடுமாறு தூதரிடமிருந்து உங்களுக்குக் கட்டளை வந்தாலும், அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ்தான் உங்களுக்கு அதனைக் கடமையாக்கினான். அவன்தான் உங்களுக்கு அதனைத் தடை செய்தான். உதாரணமாக, சூரியன் உச்சியில் இருந்து சாய்ந்தால், அல்லாஹ்தான் உங்களுக்கு லுஹர் தொழுகையைக் கடமையாக்குகிறான்.

ஆகவே நபியவர்களுக்குக் கட்டுப்படுமாறு அல்லாஹ் நமக்குக் கட்டளை இடாவிட்டால், தூதருடைய கட்டளைகள் நமக்குக் கடமைகளாக ஆகாது. இதை வெளிப்படையாகப் பார்க்கும்போது

தூதருக்கும் தனித்த சட்டவாக்க அதிகாரம் இருப்பது போல் தோன்றினாலும் உண்மையில் சட்டவாக்க அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கின்றது.

## முதலாவது: நேரடியாகப் பெற்றுக் கொண்ட தலைமுறைக்கும் அறிவிப்பு செய்த தலைமுறைக்கும் மத்தியில் சுன்னாவை ஆதாரமாகக் கொள்ளுதலும் சுன்னாவின் அறிவிப்பை ஆதாரமாகக் கொள்ளுதலும்

நம்பிக்கை அல்லது சட்ட விவகாரம் ஒன்றைப் பேசும் நபியவர்களுடைய ஒரு ஹதீஸை ஆதாரமாகக் கொள்வதற்கு இரு நிபந்தனைகள் அவசியம் என்பது அறிஞர்கள் மத்தியில் உடன்பாடான ஒன்றாகும். முதலாவது, நபியவர்களிடமிருந்து அறிவிக்கப்படும் ஹதீஸ் மூலாதாரமாகக் கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இரண்டாவது, குறித்த ஹதீஸ் நபியவர்களிடமிருந்து வந்த வழி உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவற்றுள் முதல் நிபந்தனையில் அனைத்து தலைமுறைகளும் ஒன்றுபடுகின்றன. ஆனால் இரண்டாவது நிபந்தனை சூழ்நிலைக்கேற்ப மாற்றமடையக் கூடியது. ஏனெனில் இரண்டாவது நிபந்தனை அறிவிப்புச் செய்த தலைமுறையான தாபியீன்கள் மற்றும் அவர்களைத் தொடர்ந்தவர்களுடன் சம்பந்தப்பட்டது. அதேபோன்று நபியவர்களுடைய மரணம் வரை பருவ வயதை அடையாத சிறிய ஸஹாபாக்களுடனும் இது சம்பந்தப்படுகின்றது. ஆனால் பெரிய ஸஹாபாக்களைப் பொறுத்தவரை அவர்களில் பலர் நபியவர்களுடன் பல நிகழ்வுகளில் உடன் இருந்தவர்கள். அவற்றைக் கண்களால் பார்த்து காதுகளால் கேட்டவர்கள். ஆகவே அவர்களைப் பொறுத்தவரை இரண்டாவது நிபந்தனை அவசியமற்றது. ஏனெனில் அவரிடத்தில் அதனை உறுதிப்படுத்துவதற்கு அறிவிப்பை விடவும் பலமான சாதனம் இருந்தது. அதுதான் அவர் அந்த நிகழ்வில் பங்குகொண்டமை. அவர் நபியவர்களுடன் உடன் இல்லாத சமயங்களில் அவற்றில் பங்கு கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டால், அந்த நிகழ்வை, அதனை நேரடியாகக் கண்டவர்கள் ஊடான அறிவிப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளும் தேவை இருந்தது, இந்த விசயத்தில் அவரும் ஒரு தாபியீனைப் போலவே செயல்பட்டார்.

அறிவிப்புகள் பற்றிய இரண்டாவது நிபந்தனையில் இமாம்கள் மத்தியில் பெரிய அளவில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

நபியவர்களிடமிருந்து வரும் ஒரு செய்தியை உறுதிப்படுத்தும் வழி தொடர்பாக அவர்கள் வேறுபட்ட பார்வைகளை முன்வைத்துள்ளனர். சிலர் திட்டவட்டமாகவோ திட்டவட்டமற்ற முறையிலோ அதனை உறுதிப்படுத்தும் எந்த வழியும் கிடையாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். அந்த வகையில் நபியவர்களுடைய எந்த அறிவிப்பையும் ஆதாரமாகக் கொள்வதை அவர்கள் ஏற்பதில்லை. அவர்கள் அவற்றை நபியவர்கள் கூறவில்லை என்றோ அல்லது நபியவர்களிடமிருந்து வருபவை ஆதாரமாகக் கொள்ளத்தக்கவை அல்ல என்றோ சொல்லவில்லை. மாறாக அந்த அறிவிப்புகள் நபியவர்களிடமிருந்துதான் வந்தன என்பதை உறுதிப்படுத்துவதற்குரிய திருப்திகரமான ஆதாரங்கள் இல்லை என்கின்றனர். இங்கு இது தொடர்பான கருத்து வேறுபாடுகள் அனைத்தையும் குறிப்பிட்டு அவற்றில் பொருத்தமானதை அடையாளம் காண்பது இந்த ஆய்வில் நம்முடைய நோக்கமல்ல. இங்கு அவற்றைத் தொட்டுக் காட்டியதன் நோக்கம் வாசகர்கள், இந்தக் கருத்து வேறுபாடுகள் அறிவிப்புகளின் ஆதாரப்பூர்வத் தன்மை பற்றியவை என்று புரிந்து கொள்ளக் கூடாது என்பதனால்தான்.

## இரண்டாவது: சட்டவியலாளர்கள் சுன்னாவை எவ்வாறு கையாண்டார்கள் ?

சட்ட அறிஞர்களில் இமாம்களான அபூஹனீபா, மாலிக், ஷாபிஈ, அஹ்மத் இப்னு ஹன்பல் அதுபோல் ஷீயா மரபிலிருந்து இமாம்களான ஸைத் இப்னு அலி, ஜாஃபர் அஸ்ஸாதிக் ஆகியோரை இதற்காக நான் தெரிவு செய்திருக்கிறேன்.

### 1. இமாம் அபூ ஹனீபா [மரணம் ஹி.150]

இமாம் அபூ ஹனீபா சுன்னாவுக்கு மாற்றமாக நடந்து கொள்கின்றார் என்று குற்றம் சாட்டப்பட்டார். இது பற்றி கலீபா அபூ மன்சூர் அவரிடம், நீங்கள் ஹதீஸைவிட கியாஸை முற்படுத்துகிறீர்களா? என்று வினவிய சமயம், இமாம் அவருக்கு எழுத்துமூலம் பதில் அளித்தார்: “நம்பிக்கையாளர்களின் தலைவரே, விசயம் நீங்கள் கேள்விப்பட்டது போன்றதல்ல. நான் குர்ஆனை ஆதாரமாகக் கொள்கிறேன். அடுத்து சுன்னாவை ஆதாரமாகக் கொள்கிறேன். அடுத்து அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ஆகியோரின் பத்வாக்களை ஆதாரமாகக் கொள்கிறேன். அடுத்து ஏனைய ஸஹாபாக்களின் பத்வாக்களை ஆதாரமாகக் கொள்கின்றேன். அவர்கள் ஒருமித்த

நிலைப்பாட்டில் இல்லாதபோது நான் கியாஸைப் பயன்படுத்து கிறேன். அல்லாஹ்வுக்கும் அவனது படைப்புக்களுக்கும் இடையில் விஷேட உறவுமுறைகள் கிடையாது''.

பிரபல்யத்தன்மையை அடையாத ஒரு ஹதீஸ் ஹனபி மரபில் திட்டவட்டமற்றதாகவே கருதப்படுகின்றது. எனவே இவ்வகையான ஒரு ஹதீஸ் குர்ஆனின் பொதுச் சட்டமொன்றை குறிப்பான சட்டமாக மாற்றியமைக்கும் தகுதியைப் பெறமாட்டாது. அதேபோன்று குர்ஆனில் வரையறையற்றதாக முன்வைக்கப்படும் ஒரு சட்டத்தையும் வரையறை செய்யும் தகுதியையும் அது பெறாது.

ஆஹாதான ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்வதற்கு இமாம் அபூ ஹனீபா பல நிபந்தனைகளை முன்வைக்கின்றார்.

- குர்ஆனின் வெளிப்படையான அல்லது பொதுப்படையான கருத்துக்கு முரண்படக் கூடாது.
- பிரபல்யமான சுன்னாவுக்கு முரண்படக்கூடாது.
- ஹதீஸ் அறிவிப்பாளர் சட்ட அறிவுள்ளவராக இருக்க வேண்டும்.
- ஹதீஸ் அறிவிப்பாளர் தான் அறிவித்ததற்கு மாற்றமாக நடந்து கொள்ளக் கூடாது.
- குறித்த ஹதீஸின் உள்ளடக்கம் அன்றாடம் பலர் முன்னிலையில் நடைபெறும் ஒரு விசயமாக இருத்தல் கூடாது.
- குறித்த ஹதீஸ் வரையறுத்த குற்றவியல் தண்டனைகளையோ குற்றப்பரிகாரங்களையோ பேசுவதாக இருத்தல் கூடாது. ஏனெனில் இவை சிறிய சந்தேகத்தின் அடிப்படையிலும் இரத்துச் செய்யப்படக் கூடியவையாகும். எனவே குறித்த அறிவிப்பாளர், மறதியாகச் சொல்லியிருக்கவோ தவறிழைத்திருக்கவோ பொய்யுரைத்திருக்கவோ வாய்ப்பிருக்கின்றது.
- ஸலபுகளால் குறைகாணப்பட்ட ஒன்றாகவோ அல்லது குறித்த விசயம் தொடர்பாக ஸஹாபாக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இருக்கின்றது என்ற அடிப்படையில் அவர்கள் அதனை ஆதாரமாகக் கொள்ளாதிருக்கவோ கூடாது. அவ்வாறு ஆதாரமாகக் கொள்ளப்படாத போது முந்தைய ஹனபி மரபினர் சிலரிடத்திலும் பிந்தையவர்களில் பெரும்பான்மையினரிடத்திலும் இது ஏற்கப்படுவதில்லை.

2. இமாம் மாலிக் [மரணம் ஹி.179]

இமாம் மாலிக் சுன்னாவைவிட குர்ஆனின் வெளிப்படையான கருத்தை முற்படுத்துவார். இந்த விசயத்தில் அவர் இமாம் அபூ ஹனீபாவுடன் உடன்படுகின்றார். ஆனால் வெளிக்காரணி ஒன்றின்மூலம் சுன்னா பலப்படுத்தப்படும் எனில் அது ஏற்கப்படுவதுடன் குர்ஆனின் பொதுச் சட்டத்தை குறிப்பான ஒரு பகுதியுடன் வரையறுக்கின்ற தகைமையையும் அது பெறுகின்றது என்கிறார். உதாரணமாக, மதீன மக்களின் செயல்பாடு சுன்னாவைப் பலப்படுத்துகின்றபோது, அந்த சுன்னா குர்ஆனின் பொதுச் சட்டத்தைக் குறிப்பான ஒரு பகுதியுடன் வரையறுக்கும் தகைமையைப் பெறுகின்றது. பற்கள், நகங்களினால் வேட்டையாடும் காட்டு மிருகங்கள், சாப்பிட உகந்ததல்ல என்ற ஹதீஸ் இவ்வகையானதாகும்.

இமாம் மாலிக் ஆஹாதான ஹதீஸைத் தவிர்த்து பொது விதிகளின் அல்லது பொது நலனின் அடிப்படையில் தீர்வுகளைப் பெற்றுக் கொண்ட விவகாரங்கள் குறித்து இமாம் ஷாதிபி தம்முடைய முவாபகாத்தில் குறிப்பிடுகின்றார். ஏனெனில் அவர் ஆதாரமாகக் கொண்ட விதிகள் திட்டவட்டமானவை அல்லது திட்டவட்டமான ஒரு அடிப்படையின் மீது எழுந்தவை என்று அவர் கருதியுள்ளார். இமாம் மாலிக் அறிவிப்புகளை ஏற்றுக் கொள்வதில் கடுமையான நிபந்தனைகளைக் கடைபிடித்தவர் என்றிருப்பினும் முர்ஸலான மற்றும் அறிவிப்பாளர் வரிசை துண்டிக்கப்பட்ட அறிவிப்புகளையும் பல சமயங்களில் ஆதாரமாகப் பயன்படுத்தியிருக்கின்றார். ஏனெனில் அவர் தம்மிடத்தில் நம்பத்தகுந்த, தாம் தேர்வு செய்தவர்களிடமிருந்து மட்டுமே மேற்குறித்தவகை ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வார். நம்பத்தகுந்த ஒவ்வொருவரையும் தம்முடைய தனித்துவமான நிபந்தனைகளின் அடிப்படையில் கடினமான பரிசோதனைக்கு உட்படுத்தி திருப்தி கண்டதன் பின்னரே, அவர் முர்ஸலான ஹதீஸ்களையும் ஏற்றுக் கொள்வார். இங்கு கடினமான தேர்வின் காரணமாகவே அவர்களின் விசயத்தில் திருப்தி பெறப்படுகின்றது. இது ஒரு தனிப்பட்ட அணுகுமுறையன்றி கோட்பாட்டு ரீதியான ஒன்று என்று சொல்வதற்கில்லை.

இமாம் மாலிக் ஆஹாதான ஒரு ஹதீஸை மறுப்பதற்கு திட்ட வட்டமான ஒரு விதி இருக்க வேண்டும் என்று மாத்திரம் சொல்லவில்லை. மாறாக குறித்த ஹதீஸ் மற்றொரு திட்டவட்டமான விதியின் மூலம் பலப்படுத்தப்பட்டிருக்கவும் கூடாது என்பார். அவ்வாறு பலப்படுத்தப்பட்டிருந்தால், அந்த ஹதீஸ் மறுக்கப்பட

மாட்டாது. திட்டவட்டமான ஒன்றுடன் திட்டவட்டமற்ற ஒன்று முரண்படுகின்ற சமயம், திட்டவட்டமற்றது மறுக்கப்படும். ஆனால் முரண்படுகின்ற இரண்டும் திட்டவட்டமானவையாக உள்ளபோது, அதிலும் அவற்றில் ஒன்று ஆஹாதான ஹதீஸைப் பலப்படுத்துகின்றது எனில், அந்த ஹதீஸ் மறுக்கப்பட மாட்டாது. இமாம் மாலிக்கைப் பொருத்தவரை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விசயம் இருக்கின்றது. அதாவது நபித்தோழர்களின் பிரயோகத்தில் உள்ளவற்றையே அவர் சுன்னா என்று கருதுகின்றார். உமர் இப்னு அப்துல் அஸீஸ் சுன்னாவை ஒன்றுதிரட்ட நாடிய போது, நபித்தோழர்களின் பத்வாக்களையும் நடைமுறைகளையும் ஒன்றுதிரட்டுமாறு கட்டளையிட்டிருந்தார்.

இமாம் மாலிக் தம்முடைய முஅத்தாவில் பயன்படுத்தியுள்ள வார்த்தைகளின் வகை வேறுபாடு

இமாம் மாலிக் தம்முடைய முஅத்தாவில் சுன்னா என்ற பதத்தை, வாழ்வு முறை என்ற அதனது மொழிக்கருத்துக்கு நெருக்கமான கருத்திலேயே பயன்படுத்தியிருக்கின்றார். அதாவது அறிஞர்களின் வாழ்வுமுறை என்ற கருத்திலேயே அவர் அதிகம் பயன்படுத்தியிருக்கின்றார். நபியவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒன்றைக் குறிப்பதற்கு சுன்னா என்ற பதத்தைக் கையாளுகின்ற போது அதனோடு அக்கருத்தைப் பலப்படுத்தும் வகையில் சில வார்த்தைப் பிரயோகங்களை அவர் பயன்படுத்தியிருக்கின்றார். ஆனால் சட்டத்துறைக் கலைச் சொற்களில் காலவோட்டத்தில் அவை மறைந்து போய்விட்டன. இமாம் மாலிக் சொல்வார், இந்த விசயத்தில் நான் செவியுற்ற மிகச் சிறந்த கருத்து அலி (ரழி) உடையது அல்லது இப்னு அப்பாஸ் (ரழி) உடையது அல்லது திருக்குர்ஆன் வசனமொன்றுக்கான விளக்கத்தைப் பற்றிப் பேசும்போது, இந்த வசனம் பற்றி நான் செவியுற்ற மிகச் சிறந்த விளக்கம் அல்லது நான் செவியுற்ற வியப்புக்குரிய விளக்கம் என்று குறிப்பிடுவார். மிகவும் அழகான விளக்கம், மிகவும் விருப்பத்துக்குரிய விளக்கம், ஆச்சரியத்துக்குரிய விளக்கம் போன்ற பிரயோகங்கள் சட்டவியலாளர்கள் மத்தியில் காலவோட்டத்தில் அழிந்து விட்டன.

இதிலிருந்து இமாம் மாலிக் சுன்னா என்பதை ஒரு கலைச் சொல்லாகப் பயன்படுத்தவில்லை என்பது புரிகின்றது. அத்துடன் அவர் ஒரு கருத்தைப் பலப்படுத்தும்போதும் அழகானவை, வியப்புக்குரியவை என்ற சொற்களையே கையாண்டுள்ளார். அவை பிற்பட்ட

கால சட்டவியல் வாழ்வில் பரவலாகக் கையாளப்படவில்லை. இப்பிரயோகங்கள், சட்டங்களைக் குறிப்பிடும்போது அவர் பயன்படுத்திய ‘இது பொருத்தமற்றது’, ‘இது பயனற்றது’ போன்ற பிரயோகங்கள் போன்றவையாகும். இவை, குறித்த கால இயல்பையும் தரத்தையும் பிரதிபலிக்கும் அடையாளங்கள். கலைச் சொல்லின் வரலாற்று வளர்ச்சியை ஆய்வதற்குரிய ஒரு குறிப்பு இது. அவரது நூலில் இருந்து கிடைக்கும் சாட்சியங்கள் இதனைத்தான் குறிக்கின்றன. ஆனால் முற்பட்ட கால இமாம்கள் சிலர், அவர் குர்ஆனை ஆதாரமாகக் கொண்ட வடிவிலேயே சுன்னாவையும் ஆதாரமாகக் கொண்டுள்ளார் என்றனர். இது பற்றி காழி இயாழ் குறிப்பிடும்போது, “முதவாதிர், மஷ்ஹூர், ஆஹாத் என்ற நிரல்படுத்தலின் அடிப்படையிலேயே அவர் சுன்னாவை ஆதாரமாகக் கொள்வார். அதேபோன்று சுன்னாவின் உள்ளடக்க வசனங்களைப் பொருத்தவரை அவற்றுள் திட்டவட்டமான கருத்தைத் தரக்கூடியதை முதல் நிலையிலும், இரு கருத்துக்களில் பலமானதை இரண்டாவது நிலையிலும், மொழியப்படும் கருத்தை விடவும் புரிந்து கொள்ளப்படும் கருத்தை மூன்றாவது நிலையிலும் ஆதாரமாகக் கொள்வார்” என்கிறார். ஆனால் இந்தக் கருத்து அன்றைய வாழ்வொழுங்கில் நடைபெற்றிருப்பதற்கான இடம்பாடு குறைவாக இருப்பதாகவே நாம் உணருகின்றோம். அந்த ஆரம்ப வாழ்வொழுங்கின் சமூக, அறிவியல் நடத்தைகள் எவ்வாறு இருந்தன என்பதை நாம் அறிவோம். இவை போன்ற கலைச்சொற்களின் வளர்ச்சி பிற்பட்ட கால அறிவு வளர்ச்சியின் பின்னர் நடைபெற்ற ஒன்றாகவே காணமுடிகின்றது.

இஜ்மா என்ற பதம் இமாம் மாலிக்கிடத்தில் ‘ஒருமித்த கருத்துள்ள விசயம்’ ‘கருத்து வேறுபாடற்ற விசயம்’ போன்ற வார்த்தைகளாலேயே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இஜ்மா என்ற சொல்லை அவர் நேரடியாக ‘மதீனவாசிகளின் இஜ்மா’வைக் குறிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தியுள்ளார். மதீனவாசிகளின் இஜ்மா என்பது இமாம் மாலிக்கிடம் ஒரு சட்டமூலாதாரமாகவே கருதப்பட்டதன்றி பிற்பட்டகால கலைச்சொல் குறிக்கும் இஜ்மாவை அவர் அதன்மூலம் நாடவில்லை. தவிர, ஒருமித்த கருத்துள்ள விடயம், கருத்து வேறுபாடற்ற விசயம் போன்ற பிரயோகங்கள் மூலமாகவும் அவர் அந்தக் கலைச்சொல்லை நாடவில்லை. மாறாக குர்ஆனை ஆதாரமாகக் கொள்கின்ற போதே அவர் இவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

இமாம் மாலிக்கிடம் இஜ்மா என்பது மதீனவாசிகளின் ஒருமித்த நிலைப்பாடாகும். ஏனெனில் அவர்களே நபியவர்களின் சுன்னாவை நேரடியாகப் பெற்றவர்கள். அதனை அடுத்த பரம்பரைக்கு நகர்த்தியவர்கள். அதன் சட்டங்களையும் அவற்றின் பின்புலங்களையும் நன்கறிந்தவர்கள். இதனாலேயே அவர் தம்முடைய முஅத்தாவில் மதீனவாசிகளால் நகர்த்தப்பட்ட சுன்னாக்களையும் மதீனாவில் வாழ்ந்த ஸஹாபாக்களின் பத்வாக்களையும் ஒன்று திரட்டுவதில் அதிக கரிசனை எடுத்தார்.

3. இமாம் ஷாபி [மரணம் ஹி.204]

இமாம் ஷாஃபி தம்முடைய *'ரிஸாலா'* என்னும் நூலில் விளக்கக் கோட்பாட்டை தனியான ஒரு தலைப்பில் தெளிவுபடுத்துகின்றார். அதில் தெளிவுபடுத்தும் பணி என்றால் என்ன? அதன் படித்தரங்கள் என்னென்ன? போன்ற பல விசயங்களைத் தெளிவுபடுத்துகிறார். விளக்கக் கோட்பாட்டை அவர் ஐந்து படித்தரங்களில் அமைத்துள்ளார். அவற்றுள் முதலாவது மற்றும் இரண்டாவது படித்தரமாக, குர்ஆனை குர்ஆனின் மூலமே தெளிவுபடுத்துதலைக் குறிப்பிடுகின்றார். மூன்றாவது, குர்ஆனில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட ஒரு விடயத்தை நபியவர்கள் விரிவாக தெளிவுபடுத்தியதைக் குறிப்பிடுகின்றார். நான்காவது படித்தரம் சுன்னாவின் விளக்கங்கள், அதாவது அல்லாஹ் நபியவர்களிடம் தெளிவுபடுத்துமாறு பொறுப்பளித்த விசயங்களைக் குறிக்கின்றன. இவ்வகை விளக்கங்களைப் பொருத்தவரை, இமாம் ஷாஃபி பல இடங்களில் வலியுறுத்தியுள்ளதுபோன்று, கண்டிப்பாக இவை குர்ஆனில் ஓர் அடிப்படையைக் கொண்டவையாகும். ஏனெனில், அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பின்பற்றுகின்றவர்களின் வாழ்வில் நிகழும் எந்த நிகழ்வுக்கும் வழிகாட்டும் ஓர் ஆதாரம் குர்ஆனில் இருக்கின்றது. அதில் நேரடியாகக் குறிப்பிடப்படாதபோது, அது நிச்சயம் குர்ஆனின் பொதுச் சிந்தனைக்கு உட்பட்டதாகவே காணப்படும். இறுதியாக இமாம் ஷாஃபி ஐந்தாவது படித்தரமாக மொழி மற்றும் பௌதீகக் காரணிகளின் அடிப்படையில் தெளிவுபடுத்துதல் என்பதைக் குறிப்பிட்டு அதனை விரிவாகப் பேசியுள்ளார்.

ஆஹாதான ஹதீஸை ஏற்பதற்கு இமாம் ஷாபி அதன் அறிவிப் பாளருக்கான சில நுணுக்கமான நிபந்தனைகளை முன்வைக்கின்றார்:

- மார்க்க விசயத்தில் நம்பத்தகுந்தவராகவும் ஹதீஸ்களை அறிவிப்பதில் உண்மையாக நடந்து கொள்பவராகவும் இருத்தல்.

- தாம் அறிவிப்பவற்றை நன்கு விளங்கிச் செய்பவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு சொல்லையும் அதன் கருத்துடன் நகர்த்த வேண்டும். இதனை மற்றொரு வகையில் கூறினால், அவர் ஹதீஸின் கருத்தையன்றி அதன் வார்த்தைகளை அறிவிப்புச் செய்கின்றவராக இருத்தல் வேண்டும்.
- தமது ஹதீஸ்களை அச்சொட்டாக அறிவிப்புச் செய்பவராக இருத்தல் வேண்டும். தமது எழுத்துப் பிரதியிலிருந்து அறிவித்தாலும் கூட அவற்றை அவர் மனனம் செய்திருக்கவும் வேண்டும்.
- தாம் யாரிடமிருந்து ஹதீஸை அறிவிக்கின்றாரோ அவரிடம் நேரடியாக ஹதீஸைக் கற்றிருக்க வேண்டும். இல்லாத போது இருட்டடிப்புச் செய்தவராகக் கருதப்படுவார்.
- ஹதீஸ் துறையாளர்களின் அறிவிப்புகளுக்கு அவரது ஹதீஸ் முரண்படக் கூடாது.

மேற்குறித்த நிபந்தனைகள் ஒவ்வொரு காலப்பகுதிக்குரிய அறிவிப்பாளர்களிலும் காணப்பட வேண்டும் என்பதுடன் அறிவிப்பாளர் வரிசை இறுதிவரை தொடராக அமையவும் வேண்டும் என்பார்.

இமாம் ஷாபியின் காலத்தில் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களை இந்த இடத்தில் நாம் கவனத்தில் கொள்வது அவசியம். குறிப்பாக ஹதீஸ் சார்பு சிந்தனைவாதிகள், பகுத்தறிவு சார்பு சிந்தனைவாதிகள் என்ற இரு தரப்புக்கள் மத்தியில் நிகழ்ந்த வாதங்கள், அவை ஏற்படுத்திய சிந்தனைச் சிக்கல்கள், எண்ணக்கருக்களின் முரண்பாடுகள் என்பன கவனத்தில் கொள்ளத்தக்கவை, பகுத்தறிவு சார்பு சிந்தனையாளர்கள், மஷ்ஹூரான ஹதீஸ்கள் அல்லது அனைவரிடத்திலும் உடன்பாடான ஹதீஸ்கள் அல்லது மதீனவாசிகளின் செயல்பாட்டுடன் உடன்பாடான ஹதீஸ்கள் போன்றவற்றையே ஏற்றுக் கொள்வதை இமாம் ஷாபி அவதானித்தார். ஆஹாதான ஹதீஸ்கள் மேற்குறித்த நிபந்தனைகளுக்கு உட்படாதபோது அல்லது குர்ஆனின் வெளிப்படையான கருத்துக்கு முரண்படுகின்றபோது அவர்கள் அவற்றை ஏற்பதில்லை. ஆனால் இமாம் ஷாபி ஹதீஸ் சார்பு சிந்தனையாளர்களின் பக்கம் நின்றார். ஆஹாதான ஹதீஸின் அறிவிப்பாளர் நம்பத்தகுந்தவர் எனில் அந்த ஹதீஸ் சட்டங்களுக்கான ஆதாரமாகக் கொள்ளத்தக்கது என்பதை நிறுவினார். தமது *'ரிஸாலா'* என்னும் நூலில் இதனை ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளார். அதே சமயம் தனது *'அல்உம்'*

என்னும் நூலில் இவை பற்றிய வாதப்பிரதிவாதங்களை அவர் பதிவு செய்துள்ளதைக் காணலாம்.

இமாம் ஷாபிக்கும் ஏனையவர்களுக்கும் இடையில் நிகழ்ந்த இந்த சிந்தனைச் சமரின் விளைவாகவே சுன்னா என்பது அதன் அடிப்படைக் கருத்திலிருந்து நிபந்தனைகளுக்கேற்ப ஹதீஸ் துறையாளர்கள் அறிவிப்புச் செய்யும் செய்திகளாக மாற்றமடைந்தன. இந்தச் சமரில் இமாம் ஷாபிக்கே வெற்றி கிடைத்தது. அதனாலேயே அவர் 'சுன்னாவை வெற்றி பெறச் செய்தவர்' என்றழைக்கப்படுகின்றார்.

### 4. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் [மரணம் ஹி.241]

இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், மூலாதாரம் என்ற வகையில் குர்ஆனின் ஒரு பகுதியாகவே சுன்னாவைக் கருதியதாக இமாம் இப்னுல் கையிம் குறிப்பிடுகின்றார். அனைத்துப் புனித வசனங்களும் ஒரே மூலாதாரம் என்றார். ஏனெனில் சுன்னா என்பது குர்ஆனுக்குரிய விளக்கம், அதனை முழுமைப்படுத்தக் கூடியது, ஒருபோதும் ஒன்றுக்கொன்று முரண்பட மாட்டாது. இமாம் அஹ்மதினுடைய பல கூற்றுக்களில் வருவது போன்று மார்க்கத்தைக் கற்றுக் கொள்வது சுன்னாவின் வழியாகவே நடைபெறவேண்டும்.

இமாம் அஹ்மத் ஒரு ஹதீஸ் துறையாளராக, தமது முஸ்னத் என்னும் நூலை வடிவமைப்பதில் கூடுதல் கவனம் செலுத்தினார். ஏனெனில் அது மக்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் என நினைத்தார். ஆனால் ஒரு சட்டவியலாளராக இமாம் சட்டவியல் பற்றிய ஒரு நூலை எழுதவில்லை. தம்முடைய மாணவர்களுக்கும் அவர் சட்டங்களைத் தொகுத்து வழங்கவில்லை. ஆரம்பத்தில் தம் பெயரில் சட்டங்கள் வெளிச் செல்வதை அவர் விரும்பவில்லை. பின்னர் அவரது மாணவர்கள் அவரிடம் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டனர். இறுதியில் அவரது சட்டங்கள் பிறருக்கு நகர்த்தப்படுவதே அதன் உண்மைத்தன்மைக்குச் சான்றாக மாறியது.

ஆஹாதான ஹதீஸ்களை நடைமுறை சார்ந்த விவகாரங்களில் ஆதாரமாகக் கொள்ளலாம். ஆனால் நம்பிக்கை சார்ந்த விவகாரங்களில் கொள்ள முடியாது என்பதே பெரும்பாலான அறிஞர்களின் நிலைப்பாடாக இருந்தது. இமாம் அஹ்மத் நம்பிக்கை சார்ந்த விவகாரங்களிலும் அவற்றை அங்கீகரித்தார். ஹதீஸ் அறிவிப்பாளர்களைப் பொறுத்தவரை இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் மாலிக் போன்றவர்கள் இட்ட நிபந்தனைகளைப் போன்று அவர் இடவில்லை. வாய் மொழி மூலமோ எழுத்து வடிவிலோ

அறிவிக்கும் அனைத்தையும் அவர் ஏற்றுக் கொண்டார். அறிவிப்பாளர் வரிசைகள் குறித்து அவரிடம் கடுமையான நிபந்தனைகள் இருந்தன. சில சமயங்களில் தளர்வான போக்கும் கடைபிடிக்கப்பட்டது. அவர் சொல்கின்றார்: "செயல்களின் சிறப்புக்கள், நன்மைகள் பற்றி வரக்கூடிய ஹதீஸ்களின் அறிவிப்பாளர் வரிசைகளில் நாம் தளர்வான போக்கையே கடைபிடிக்கின்றோம். ஆனால் குற்றவியல், குற்றப்பரிகாரங்கள், கடமைகள் பற்றி வந்துள்ள ஹதீஸ்களில் நாம் கடினமான போக்கையே கடைபிடிக்கின்றோம்".

இமாம் அஹ்மத் தம்முடைய நூலில் பொய்யர்களிடமிருந்து ஹதீஸ்களைப் பதிவு செய்யவில்லை. மாறாக தம்மிடத்தில் நேர்மையான, தக்வாவுள்ள நம்பத்தகுந்தவர்கள் ஊடாகவே பதிவு செய்துள்ளார். ஹதீஸின் உள்ளடக்க வசனங்கள் குறித்த விமர்சனங்களின் அடிப்படையில் அவர் ஹதீஸ்களை மறுப்பதில்லை. ஆனால் அவை ஏனையவற்றுடன் முரண்படுகின்றபோது மட்டுமே மறுத்திருக்கிறார். ஹதீஸ்களை ஏற்பதற்கு அவற்றை குர்ஆனுடன் ஒப்புநோக்க வேண்டும் என்றதொரு நிபந்தனையை அவர் முன்வைப்பதில்லை. மாறாக சுன்னா குர்ஆனுக்கான விளக்கம் என்றும் இதுவே சுன்னாவிற்கான அந்தஸ்து என்றும் கருதுகின்றார். அவர் முஸத்தத் இப்னு முஸர்ஹத் அல்பஸரி என்பவருக்கு எழுதிய கடிதம் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றது. "நம்முடைய கருத்துப்படி சுன்னா என்பது நபியவர்களுடைய சுவடுகள். அவை குர்ஆனுக்கான விளக்கமாகும். சுன்னாவில் ஒப்புநோக்கல் அணுகுமுறை இல்லை. அது அறிவைக் கொண்டோ இச்சைகளைக் கொண்டோ அறியப்படுவதற்கு உரியது அல்ல. மாறாக சுன்னா என்பது பின்பற்றலும் மன இச்சைகளைத் தவிர்ப்பதுமாகும் என்று கூறினார்.

அவரது காலத்தில் ஹதீஸ்கள் பிரதானமாக ஸஹீஹ் என்றும் லயீப் (பலவீனமானது) என்றும் பாகுபடுத்தப்பட்டது. பலவீனமான ஒரு ஹதீஸ் பல அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாக அறிவிக்கப்படும் எனில், அதனை ஹஸன் என்ற தரத்தில் நோக்கினார்கள். இமாம் இப்னு தைமியா குறிப்பிடுவது போல், ஹதீஸ்களை ஸஹீஹ், லஈப், ஹஸன் என்ற மூன்று தரங்களில் முதலில் வகுத்தவர் இமாம் திர்மிதியாவார். இவற்றின் கருத்தை அவர் விளக்கும்போது, ஹஸன் என்பது பல அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அதன் அறிவிப்பாளர்களில் பொய் சொல்வதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இருக்கக்

கூடாது. அத்துடன் அந்த ஹதீஸ் அதனை விடவும் தரத்தில் கூடிய ஒரு ஹதீஸுடன் முரண்படவும் கூடாது. இது ஸஹீஹை விடவும் தரத்தில் குறைந்தது என்றார். ஸஹீஹ் என்பது அதன் அறிவிப்பாளர்கள் நேர்மையானவர்களாகவும் ஹதீஸ்களை உன்னத வடிவில் பாதுகாப்பவர்களாகவும் இருப்பார்கள். லயீஃப் என்பது அதன் அறிவிப்பாளர்கள் பொய் சொல்பவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டிருப்பார்கள், அவர்களின் மனனசக்தி மிகவும் பலவீனமாக இருக்கும். அதன் அறிவிப்பாளர்களில் அறியப்படாத ஒருவர் இருப்பின் அவர் பொய்யராக அல்லது மோசமான மனன சக்தி கொண்ட ஒருவராக இருப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அச்சமயம் அவரது அறிவிப்புகள் பிறரது அறிவிப்புகளுடன் உடன்பாடாக அமைந்தாலும், அவரது பொய்ம்மையை அது இல்லாமல் செய்ய மாட்டாது என்கிறார்.

இமாம் அஹ்மதுடைய முஸ்னத் என்னும் கிரகந்தத்தில் பலவீனமான ஹதீஸ்களும் இருப்பதாக துறைசார் நிபுணர்கள் அடையாளப் படுத்தியுள்ளனர். ஏனெனில் அவர் தம் காலத்தில் வாழ்ந்த அனைவரிடமும் இருந்த ஹதீஸ்களைத் திரட்ட எண்ணினார். முரண்பாடான ஒரு ஹதீஸைத் தவிர வேறு எதனையும் அவர் மறுப்பதில்லை என அவரது மகன் அப்துல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.

இமாம் அஹ்மத் சட்டவாக்கத்தில் ஹதீஸை விடவும் கியாஸை என்றும் முற்படுத்துவதில்லை. பலவீனமானதொரு ஹதீஸை விடவும் அது இட்டுக் கட்டப்பட்டது என்று உறுதிப்படுத்தப்படாத வரை அவரிடத்தில் கியாஸ் முற்படுத்தப்பட மாட்டாது. ஹதீஸ் இருக்கும் போது பகுத்தறிவு பிரயோகிக்கப்பட மாட்டாது என்ற அவரது ஆசிரியரான இமாம் ஷாபியின் கருத்துடன் அவர் உடன்படுகின்றார். சில விசயங்களில் இவர் தமது ஆசிரியரையும்விட ஒரு படி மேலே சென்றுள்ளார். ஏனெனில் இமாம் ஷாஃபி பலவீனமான ஒரு ஹதீஸை எந்நிலையிலும் ஆதாரமாகக் கொள்வதில்லை. அதனை விடவும் பகுத்தறிவுப் பிரயோகத்தை முற்படுத்துவார். ஆனால் இவர் அவ்வாறல்ல. இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் மாலிக் ஆகிய இருவரும் ஆஹாதான ஹதீஸ்களை விடவும் பல சமயங்களில் பகுத்தறிவுப் பிரயோகத்தை முற்படுத்துவார்கள். அவர்களுடைய அணுகுமுறை இமாம் அஹ்மத் மற்றும் அவரது ஆசிரியரது அணுகுமுறையை விடவும் வித்தியாசமானதாகும்.

இமாம்கள் மத்தியிலான கருத்துவேறுபாட்டிற்கு மற்றொரு உதாரணம் முர்ஸலான ஹதீஸை ஆதாரமாகக் கொள்வதாகும். முர்ஸலான ஹதீஸ்

தொடர்பில் இரு வகையான வரைவிலக்கணங்கள் நிலவுகின்றன. முதலாவது: ஹதீஸ் துறையாளர்களுடையது. அவர்கள், அறிவிப்பாளர் வரிசை தாபியீ வரை தொடராகக் காணப்படும். அவர், அதற்குப் பின்னால் வரக்கூடிய ஸஹாபியைத் தவிர்த்து விட்டு நேரடியாக நபியவர்களுடன் தொடர்பு படுத்தி ஹதீஸை முன்வைப்பார் என்கிறார்கள். இரண்டாவது: சட்டத்துறையார்களுடையது. நபியவர்கள் வரை அறிவிப்பாளர் வரிசை தொடரற்றுக் காணப்படுதல். தொடர் அறுபடும் நிலை ஸஹாபியிடத்தில் அல்லது வேறு எந்த இடத்திலும் காணப்படலாம் என்கிறார்கள். இவ்வகை ஹதீஸை ஆதாரமாகக் கொள்வதில் இமாம்களிடம் வேறுபட்ட பார்வைகள் இருக்கின்றன. நான்கு சட்டவியல் அறிஞர்களும் அதனை ஏற்றுக் கொள்கின்றனர். அவர்களில் சிலர் எந்த வரையறையும் இன்றி அதனை ஏற்கின்றனர். அவர்கள் தொடர் அறுபடாத ஹதீஸையும் இதனையும் சமதரத்தில் நோக்கினர். இன்னும் சிலர் இதனை ஏற்றாலும் தொடர் அறுபடாத ஹதீஸுக்கு அடுத்த தரத்தில் இதனை நோக்கினர். வேறு சிலர் இதனை தொடர் அறுபடாதவற்றுக்கு இரண்டாம் நிலையில் வைத்ததுடன் இதனை ஏற்பதற்கு சில நிபந்தனைகளை விதித்தனர்.

## 5. இமாம் ஸைத் இப்னு அலி [மரணம் ஹி.122]

### 1. ஸைதி மத்ஹபும் ஆஹாதான சுன்னாவும்

ஆஹாதான ஹதீஸ்களை ஸைதீக்கள் திட்டவட்டமற்றவை என்றே கருதுகின்றனர். அதனால் அவற்றை நம்பிக்கை சார்ந்த விசயங்களைத் தவிர்த்து, செயல்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களிலேயே ஆதாரமாகக் கொள்கின்றனர். திருக்குர்ஆன் மற்றும் முதவாதிரான சுன்னாக்களுக்கு அடுத்த படித்தரத்திலேயே அவர்கள் ஆஹாதான சுன்னாக்களை நோக்கினார்கள். திருக்குர்ஆன் கூறும் பொதுச் சட்டமொன்றை ஆஹாதான சுன்னாவின் மூலம் குறிப்பானதொரு சட்டமாக மாற்ற முடியும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் குறிப்பாக்கல் செயல்பாடு என்பது குர்ஆனிய வசனத்தை சட்டத்தன்மை அற்றதாக மாற்றாது. மாறாக அதனை பொதுப்பரப்பில் சட்டத்தன்மை உள்ளதாகவே வைத்திருக்கின்றது. இந்தச் செயல்முறை ஒருவகையில் ஒரு சட்டத்தைத் தெளிவுபடுத்துவதற்காக குர்ஆனும் சுன்னாவும் பரஸ்பரம் ஒத்துழைக்கும் ஒரு தொழிற்பாடாகும் என்கிறார்கள். இந்த விசயத்தில் அவர்கள் ஷாபி மத்ஹபினருடன் உடன்படுகின்றனர். ‘காஷிப்’ என்ற அவர்களுடைய நூலில் “அடிப்படைகளுடன் சம்பந்தப்பட்ட

*விவகாரங்களில் ஆஹாதான ஹதீஸ்கள் ஆதாரமாகக் கொள்ளப்பட மாட்டாது. ஏனெனில் அடிப்படைகளுக்குத் திட்டவட்டமான ஆதாரங்கள் அவசியப்படுகின்றன. ஆனால் ஆஹாதான ஹதீஸ்கள் திட்டவட்டமானவையல்ல" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

2. ஸைதீக்களிடத்தில் ஆஹாதான ஹதீஸ் அறிவிப்பாளர்களுக்கான நிபந்தனைகள்

*அறிவிப்பாளர்கள் நேர்மையும் நம்பகத்தன்மையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் ஸைதீக்களாகவோ அஹ்லுல் பைத்தினராகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.*

*பொதுவாக அனைவருக்கும் உரிய ஒரு கடமையைச் சொல்லும் குறித்தொரு ஹதீஸினை ஒரு தனிநபரோ குறிப்பிட்ட சிலரோ அறிவிப்பதாக இருத்தல் கூடாது. அதாவது, மக்களனைவரும் நிறைவேற்ற வேண்டும் என பகிரங்கமாக காணப்படக் கூடிய ஒரு விவகாரம் முதவாதிராகவே அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆஹாதாக அறிவிக்கப்பட முடியாது.*

*அவர்கள் ஸைதீக்களது அறிவிப்புகளை முற்படுத்துவதில்லை என்றிருந்தாலும் அலியின் (ரழி) அறிவிப்புகளை ஏனைய ஸஹாபாக்களை விடவும் முற்படுத்துவார்கள்.*

*தாபியீ நம்பந்தகுந்தவராக இருக்கும் பட்சத்தில் அவர்கள் முர்ஸலான ஹதீஸை ஏற்றுக் கொள்வார்கள். அத்துடன் தாபியீக்களில் சட்ட விவகாரங்களில் சுயமாகச் செயல்பட முடியாதவர்களை விடவும் சுயமாகச் செயல்படுபவர்கள் முற்படுத்தப்படுவார்கள். இதே கருத்தை இமாம் அபூ ஹனீபா மற்றும் இமாம் மாலிக் ஆகியோரும் குறிப்பிட்டுள்ளார்கள். இமாம் ஷாபிஈ இரண்டு நிபந்தனைகளுடன் இவ்வகையை அங்கீகரிப்பார்கள். இமாம் அஹ்மத் இதனைப் பலவீனமானது என்று கருதுவார்.*

*அறிவிப்பாளருடைய சட்ட அறிவுக்கு முன்னுரிமை வழங்குவார்கள். சட்ட அறிவுள்ள ஒருவர் சட்ட அறிவற்ற ஒருவரை விடவும் முற்படுத்தப்படுவார்.*

## 6. இமாம் ஸாதிக் [மரணம் ஹி.148]

*இமாம் பாகிர் கூறுகின்றார்: அபூபக்ர் (ரழி) உமர் (ரழி) ஆகியோருடைய சிறப்பை அறியாதவர்கள் சுன்னாவை அறியமாட்டார்கள்.*

இமாமிய்ய ஷீஆக்களிடம் ஆரம்பத்தில் சட்டக் கோட்பாட்டியல் பொதுவாக அனைவராலும் கடைபிடிக்கப்பட்ட அணுகுமுறை யாகவே இருந்துள்ளது. விரிவான சில கிளைப்பகுதிகளிலேயே வித்தியாசங்கள் காணப்பட்டிருக்கின்றன. சட்டவாக்கத்தின் மொழியியல் விதிகள், அறிவிப்பாளர்களின் நேர்மையாக்கமும் குற்றப்படுத்தலும் போன்ற பல விதிகளை அவர்களும் பேசியுள்ளனர். அறிவிப்பாளர்கள் பற்றிய பார்வையில் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் பார்வையை விடவும் சற்று வித்தியாசப்படுகின்றனர். அவர்கள் ஷீஆ அல்லாத ஒருவரின் அறிவிப்பை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுவர். அதுபோல் அஹ்லுஸ் ஸுன்னாக்களும் ஷீஆ ஒருவரது அறிவிப்பை ஏற்பதில் தயக்கம் காட்டுவர். ஆனால் பொதுவில் அறிவிப்பாளரின் நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டே ஏற்பும் மறுப்பும் இடம்பெறுகின்றது. அவர் எந்தப் பிரிவைச் சார்ந்திருக்கின்றார் என்பதன் அடிப்படையில் அல்ல. சட்டக் கோட்பாட்டியலில் இவர்கள் ஷாபி மத்ஹபினரது கோட்பாடு களுடன் அநேகமாக உடன்பட்டு வருகின்றனர்.

இமாம் ஸாதிக் கூறுகின்றார்: அல்லாஹ் அனைத்தையும் தெளிவு படுத்தக் கூடியதாகவே குர்ஆனை இறக்கியுள்ளான். மனிதனுக்குத் தேவையான எதனையும் அவன் விட்டுவைக்கவில்லை. இந்த விசயம் குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருந்தால் நன்றாக இருக்குமே என்று எவரும் சொல்வதற்கான வாய்ப்பில்லை.

'அல்காபி' என்ற நூலில், அபூ அப்துல்லாஹ் அஸ்ஸாதிக் கூறுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது: "உங்களுக்குக் கிடைக்கும் ஒரு ஹதீஸுக்கான சான்றினை நீங்கள் குர்ஆனிலோ அல்லது நபியவர்களுடைய மற்றொரு கூற்றிலோ கண்டு கொண்டால் அதனை ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லாதபோது குர்ஆனே சிறந்தது." இமாமீயாக்கள் நபியவர்களது பின்வரும் ஹதீஸை ஏற்றுக் கொள்வார்கள்: "என்னைப் பற்றி உங்களுக்குக் கிடைக்கும் ஒரு விசயத்தை நீங்கள் குர்ஆனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அது குர்ஆனுடன் உடன்பாடானது எனில், அது நான் கூறியதாகவே இருக்கும். குர்ஆனுடன் உடன்படவில்லை எனில், அதனை நான் கூறவில்லை. எனக்கு வழிகாட்டும் குர்ஆனுடன் நான் எவ்வாறு முரண்பட முடியும்?". இந்தக் கருத்து குலைனியுடைய அல்காபியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இமாம் ஸாதிக் நபியவர்களுடைய சுன்னாக்களை அறிவிப்புச் செய்வார். பின்னர் அவற்றை ஏற்பதாக பிரகடனப்படுத்துவதுடன் குர்ஆனில் அதற்கான சான்றையும்

முன்வைப்பார். "நான் உங்களுக்கு ஒரு சுன்னாவை அறிவிப்புச் செய்தால், குர்ஆனில் அதற்கான அடிப்படை என்னவென்பதை என்னிடம் கேளுங்கள்" என தம் தோழர்களுக்குச் சொல்வார்.

இவ்வாறுதான் இமாம் ஸாதிக் அனைத்துக்கும் குர்ஆனே அடிப் படையானது என்பதையும் சுன்னா அதற்கான விளக்கவுரை என்பதையும் கருதியிருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

ஆஹாதான ஹதீஸ்களை ஏற்பதில் இமாமீயாக்கள் இரு நிலைப் பாடுகளில் உள்ளனர். முதலாவது, முந்தையவர்களின் அபிப்பிராயம், நபியவர்களுடன் அல்லது அவர்களுடைய இமாமுடனான அதன் தொடர்பு ஏதேனும் ஒரு காரணியூடாக நிறுவப்படுகின்ற போது மாத்திரமே அதனை ஏற்றுக் கொள்வார்கள். இரண்டாவது, பெரும்பான்மையான இமாம்கள் ஆஹாதான ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வார்கள். சிலர் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அறிவித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையைச் சொல்வார்கள். இது அலீயுடைய (ரழி) அணுகுமுறையாகும். அவர் தனியொருவருடைய அறிவிப்பை ஏற்பதில்லை. இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை அவசியம் என்பார்.

ஆஹாதான ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்வதற்கு இமாமீயாக்கள் இரண்டு நிபந்தனைகளை முன்வைப்பார்கள்.

1. அறிவிப்பாளர் இமாமீ ஒருவராக இருக்க வேண்டும்.
2. அவர் இமாமீ ஒருவரிடமிருந்தே அறிவிக்கவும் வேண்டும். அவர்களுடைய இமாம்கள் வழியாக அன்றி ஒருவர் ஆஹாதான ஒரு ஹதீஸை அறிவித்தால், அது ஏற்கப்பட மாட்டாது. இதிலிருந்து இமாமீயாக்கள் அஹ்லுல் பைத்தினர் ஊடாகவன்றி ஹதீஸ்களை ஏற்பதில்லை என்ற கருத்து உறுதிப்படுகின்றது.

## மூன்றாவது: அறிவிப்பு மற்றும் திறனாய்வு என்ற அடிப்படையில் ஹதீஸ் கலைகள்

ஹதீஸ் துறையில் இரண்டு கலைகள் இருக்கின்றன. அவ்விரண்டு கலைகளுக்கும் கீழ் ஏனைய அனைத்துக் கலைகளும் ஒன்றிணை கின்றன. அவை, அறிவிப்புக் கலை மற்றும் திறனாய்வுக் கலை.

1. கலை என்பதன் பொருள் என்ன?

*கலை என்ற எண்ணக்கரு நான்கு அடிப்படைகளைக் கொண்டது. அவை:*

1. *நிலையான அணுகுமுறை*
2. *கருப்பொருள்*
3. *மாற்றங்களை உள்ளீர்க்கும் ஆற்றல்*
4. *சுய புத்தாக்கத்தன்மை*

*எந்தவொரு கலையும் தனது விதிகள், கோட்பாடுகளை சுய விசாரணை செய்து கொள்ள வேண்டும். அதன் விளைவுகளை அளந்து பார்க்க வேண்டும். விளைவுகள் இடம்பாடானவை எனில் கோட்பாடுகளில் குறையிருக்க வாய்ப்பிருக்கிறது. அறிவியல் கோட்பாடுகள் என்பது எமது அறிவுப் புலத்தின் தவறுகளை அடையாளம் காட்டுவதாகவே இருக்க வேண்டும். அறிவின் உயிரோட்டம் என்பது பிறழ்வுகளை எதிர்த்துக் கொண்டேயிருக்கும். சுயவிமர்சனமும் மீளாய்வும் இன்றி அறிவுக்கு வளர்ச்சியில்லை. அதற்கு ஓர் உத்தரவாதத் தளமும் இருக்க மாட்டாது.*

*கலை என்பது அறபு மொழியில் 'இல்ம்' என்று வழங்கப்படுகின்றது. மொழியில் இது அறிவு, விளங்குதல் போன்ற கருத்துக்களைத் தருகின்றது. உறுதி என்ற கருத்துடன் இணையும் போதே அது இல்ம் என்ற பொருளைத் தருவதாக சிலர் கூறுவர். அறிவியலாளர்கள், "இல்ம் என்பது குறித்தவொரு விசயத்தின் புலக்காட்சியை சிந்தனையில் பெற்றுக் கொள்வது" என்பர். இது ஒன்றை அறியும் பொறிமுறையின் ஒரு படித்தரம். இதற்கு அடுத்த படியிலேயே சந்தேகம் வருகின்றது. அறியாமை இதன் எதிர்ப்பதம்.*

*இது தொடர்பான அதிகமான வரையறைகள், அவற்றில் காணப்படும் கருத்து வேறுபாடுகள் என்பதையும் தாண்டி சாராம்சமான கருத்து என்னவெனில் இல்ம் என்பது நடைமுறையுடன் ஒத்திசைந்த உறுதியான ஒரு புரிதல் எனலாம். சிலர் இல்ம் என்பதை வரையறுக்கப்பட்ட சில அறிவியல் சித்தாந்தங்களைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர். இன்னும் சிலர், பொருட்கள், விவகாரங்களைப் புரிந்து கொள்ளுதல், அவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மற்றும் தேவையின் போது அவற்றை மீளழைக்கும் ஆற்றல் இவற்றை இல்ம் என்றழைத்தனர். சுருக்கமாகக் கூறினால் 'இல்ம்' என்பதை*

அவர்கள், அறிதல் அல்லது அறியப்பட்ட விவகாரங்கள் அல்லது அறியும் ஆற்றல் போன்ற கருத்துக்களில் பயன்படுத்தியுள்ளனர்.

அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களுள் ஹதீஸ் கலையை அதன் வகைப்பாடுகளுடன் முதலில் தொகுத்தவர் ஹஸன் இப்னு அப்துல் ரஹ்மான் அர்ராமஹுர்முஸி (மரணம் ஹி.360), தமது 'அல்பஹ்ஸ் அல்பாஸில் பைனர் ராவி வல்வாஇ' என்ற நூலில் இந்தப் பணியைச் செய்தார். இவருக்கு முன்னர் சில அறிஞர்கள் இக்கலையுடன் சம்பந்தப்பட்ட சில பகுதிகளைத் தொகுத்திருந்தாலும் இதுவே முழுமையான முதல் முயற்சியாகும்.

அடுத்து, இமாம் அல்ஹாகிம் அந்நைஸாபூரி (மரணம் ஹி.405) அவர்கள் தனது 'மஃரிபது உலூமில் ஹதீஸ்' என்ற நூலைத் தொகுத்தார்கள், அதில் இக்கலையில் ஐம்பது வகைகள் குறித்துப் பேசினார்கள், ஆனால் நூல் முறையாக ஒழுங்கமைக்கப்படவில்லை.

அபூ நஈம் அஹ்மத் இப்னு அப்துல்லாஹ் அல்இஸ்பஹானி (மரணம் ஹி.430) இமாம் ஹாகிம் உடைய நூலுடன் இன்னும் சில விசயங்களையும் இணைத்தார். ஆனால் தேவையான எல்லாப் பகுதிகளையும் அது உள்ளடக்கவில்லை.

அடுத்து இமாம் அல்கதீப் அல் பக்தாதி (மரணம் ஹி.463) அறிவிப்பு விதிகளைப் பேசும் 'அல்கிபாயா' என்ற நூலையும் அறிவிப்பு ஒழுக்கங்களைப் பேசும் 'அல்ஜாமிஃ லிஆதாபிர் ராவி வஸ்ஸாமிஃ' என்ற நூலையும் எழுதினார். ஹதீஸுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கிளைக் கலை குறித்தும் தனியாக நூல்களை வெளியிட்டார். அவருக்குப் பின்வந்த அனைவரும் அவரது நூல்களைத் தழுவியே தம் நூல்களைத் தொகுத்தனர். உதாரணமாக அல்காழி இயாழினுடைய 'அல்இல்மாஃ', அல்மியான்ஜியுடைய 'மா லாயஸஉல் முஹத்திஸ் ஜஹ்லுஹு' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து, இமாம் அபூ அம்ர் உஸ்மான் இப்னுஸ் ஸலாஹ் அஷ்ஷஹ்ரஸூரி (மரணம் ஹி.643) தமது 'உலூமுல் ஹதீஸ்' என்ற நூலில் முந்தையவர்கள் பல்வேறு இடங்களில் தொகுத்திருந்தவற்றை ஒரே இடத்தில் தொகுத்தார். 'முகத்திமது இப்னுஸ் ஸலாஹ்' என்ற பெயரில் இந்த நூல் பிரபலமாகியது. தொடர்ந்து இதற்கு விரிவுரை எழுதுதல், சுருக்கவுரை எழுதுதல், விமர்சனம் எழுதுதல், விமர்சனத்துக்கு மறுப்புரை எழுதுதல் என அறிஞர்கள் இதனைச் சுற்றிச் சுழலத் தொடங்கினர். இவருக்குப் பின்வந்தவர்கள் இக்கலையின் தமக்கான ஆணிவேராக இவரது நூல்களையே

கருதினர். உதாரணமாக இமாம் ஸர்கஷி (மரணம் ஹி.794), இமாம் ஸைன் அல்இராகி (மரணம் ஹி.806), இப்னு ஹஜர் (மரணம் ஹி.852) ஆகியோரைக் குறிப்பிடலாம். இமாம் நவவி (மரணம் ஹி.676) இர்ஸாத், தக்ரீப் ஆகிய பெயர்களிலும் இமாம் இப்னு ஜமாஆ பில் மன்ஹழிர் ராவி என்ற பெயரிலும் இமாம் இப்னு கஸீர் அல்பாஇஸுல் ஹஸீஸ் என்ற பெயரிலும் இமாம் பல்கீனி (மரணம் ஹி.805) மஹாஸினுல் இஸ்திலாஹ் என்ற பெயரிலும் இதற்கான சுருக்கவுரைகளை எழுதியுள்ளனர்.

இமாம் ஸர்கஷி (மரணம் ஹி.794), ஹதீஸ் உள்ளடக்க வசனங்கள் குறித்த மிக முக்கியமான ஒரு நூலான *'இஸ்தித்ராகாது ஆயிஷா அலஸ் ஸஹாபா'* என்ற நூலை வெளியிட்டார்.

இந்தக் கலை தொடர்பாக சில முக்கியமான சுருக்கவுரைகள் வெளிவந்துள்ளன, இமாம் தகிய்யுத்தீன் இப்னு தகீக் அல்ஈத் உடைய 'அல்இக்திராஹ்' இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானியுடைய 'நுக்பதுல் பிக்ர்' பின்னர் அவரே அதனை இன்னும் சற்று விளக்கமாக 'நுஸ்ஹதுன் நழர்' என்ற பெயரில் எழுதினார்.

## இமாமிய ஷீஆக்களிடத்தில் ஹதீஸ் கலை

அவர்களுடைய பார்வையிலும் இந்தக் கலையை முதலில் தொகுத்தவர் ராமஹுர்முஸியும் அடுத்து அபூ அப்துல்லாஹ் அல்ஹாகிம் அந்நைஸாபுரியும் ஆவர். பின்னர் அஹ்மத் இப்னு தாவுஸ் (மரணம் ஹி.673) இவர் இமாமீய சிந்தனைப்படி ஹதீஸ்களுக்கான ஸஹீஹ், முவஸ்ஸக், ழயீப் என்ற புதிய கலைச் சொற்களை முன்வைத்தவர் ஆவார்.

அடுத்து, அலி இப்னு அப்துல் ஹமீத் அல்ஹஸனியின் *'ஷரஹு உஸுலி திராயதில் ஹதீஸ்'* என்ற நூல் முக்கியமானது. இது *'அத்தாயா பீ இல்மித் திராயா'* என்று அறிமுகமாகியிருக்கின்றது.

அடுத்து, அபூ மன்சூர் பஹாஉத்தீன் அல்ஆமிலி *'அல்வஜீஸ் பீ இல்மி திராயதில் ஹதீஸ்'* என்ற நூலை எழுதினார். ஹஸனுஸ் ஸத்ர் 'நிஹாயதுத் திராயா' என்ற பெயரிலும் முஹம்மதுபாகிர் அத்தாமாத் 'அர்ரவாஷிஹ்' என்ற பெயரிலும் இதற்கு விளக்கவுரை எழுதினர். இந்தக் கலை பற்றிய இவர்களுடைய அதிகமான ஆக்கங்களை உஸுலுல் பிக்ஹ் கலையினுள் ஒரு பகுதியாக அல்லது சட்டவியல் நூல்களின் முன்னுரைகளிலுமே காணலாம்.

ஸைதீக்களிடம் ஹதீஸ் கலை

*இவர்கள் அதிகமாக அஹ்லுஸ் ஸுன்னாக்களின் கலைச் சொற்களிலேயே தங்கியிருக்கின்றனர். சில விசயங்களில்தான் வேறுபாடுகள் இருக்கின்றன.*

*இப்னுல் வஸீர் அஸ்ஸைதி (மரணம் ஹி.840) 'தன்கீஹுல் அன்ழார் பீ உலூமில் ஆஸார்' என்ற பெயரில் சிறந்த ஒரு நூலைத் தந்துள்ளார். இதற்கு இப்னுல் அமீர் ஸன்ஆனி 'தௌழீஹுல் அப்கார்' என்ற பெயரில் விளக்கவுரை எழுதியுள்ளார்.*

*இப்னுல் வஸீருடைய மற்றொரு நூல் 'அல்அவாஸிம் வல்கவாஸிம் பித்துப் அன் சுன்னதி அபில் காஸிம்' என்ற பெயரில் உள்ளது. அவரே அதனை 'அர்ரௌழுல் பாஸிம்' என்ற பெயரில் சுருக்கியுள்ளார். அதில் ஸைதீக்களின் பார்வையில் ஹதீஸ் கலைச்சொற்களை அவர் ஆராய்ந்திருக்கின்றார். அது போல் 'கஸ்புஸ் ஸுக்கர் நழ்மு புஹுஸி நுக்பதில் பிக்ர் லிஇப்னி ஹஜர்' என்ற மற்றொரு நூலும் இவரது பெயரில் காணப்படுகின்றது. இமாம் இப்னுல் அமீர் ஸன்ஆனி 'ஸமராதுந் நழர்' என்ற பெயரில் ஒரு நூலை எழுதியுள்ளார், அதில் அறிவிப்புகளை ஏற்பதில் நேர்மை என்ற பண்பு குறித்துப் பேசியுள்ளார்.*

2. ஹதீஸ் அறிவிப்புக் கலை

*இதனை முந்தையவர்கள் வரையறுக்கும்போது, அறிவிப்பாளர்களின் நேர்மை, தகவல்களைத் தவறின்றிப் பாதுகாக்கும் ஆற்றல் போன்றவற்றையும் அறிவிப்பாளர் வரிசைகளின் தொடர் மற்றும் தொடரின்மைகளையும் ஆராய்வதன் ஊடாக ஹதீஸ்கள் நபியவர்களுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதை ஆராயும் கலை என்றார்கள். இதனை உஸூலுல் ஹதீஸ் என்று அழைத்தார்கள். பிந்தையவர்கள் அதிலும் குறிப்பாக அல்கதீப் அல்பக்தாதிக்குப் பின்னர் இதனை வரையறை செய்யும்போது, நபியவர்களுடன் தொடர்பான சொல், செயல், அங்கீகாரம், பண்பு, விழிப்பிலும் கனவிலும் அவரது அசைவுகளும் அசைவின்மைகளும் அனைத்தையும் உள்ளடக்கிய கலை என்றார்கள். பிந்தைய ஷீஆக்கள் இதனை வரையறுக்கும்போது, நபி என்ற சொல்லுக்குப் பகரமாக மஃஸூம் (பாவம் செய்யாதவர்) என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள்.*

*இரண்டு வரையறைகளிடையே காணப்படும் வித்தியாசம் தெளிவானது. முந்தையவர்கள் இந்தக் கலையுடன் சம்பந்தப்பட்ட*

ஆய்வுப் பரப்புக்களான அறிவிப்பாளர்களைச் சரிகாணுதல் மற்றும் குறைகாணுதல் போன்றன பற்றிப் பேசினார்கள். அதாவது, அறிவிப்பாளர்களின் நிலைகள் குறித்தே இவர்கள் பேசினார்கள் அன்றி அவர்களுடைய அறிவிப்புகள் பற்றிப் பேசவில்லை. சில சமயங்களில் ஒருவருடைய அறிவிப்பின் ஊடாக அவரைப் பற்றிய தீர்மானம் ஒன்றிற்கு வரமுடிகின்றது என்ற நிலையில் மட்டுமே அதனையும் பேசினார்கள். ஆனால் பிந்தையவர்கள் நபியவர்களுடன் சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் குறித்தே பேசினார்கள். எனவே முந்தையவர்களின் பார்வையில் இந்தக் கலையின் உள்ளடக்கம் அறிவிப்பாளர்களின் நிலைமைகள், பிந்தையவர்களின் பார்வையில் நபியவர்களுடைய நிலைமைகள்.

அறிவிப்புகள் கலையின் நிறுவனராக இமாம் ஸுஹ்ரி கருதப் படுகின்றார். அவர் அறிவிப்பாளர்களின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதிலும் அவர்களுடைய அறிவிப்புகளை ஏற்பது மறுப்பது செயல்பாட்டுக்குத் துணைசெய்யக்கூடிய அனைத்துத் துறைகளையும் பயன்படுத்திக் கொண்டார். இந்தக் கலையைக் கற்றுக் கொள்வதன் சட்ட நிலைப்பாட்டைப் பேசுகையில் இந்த ஆற்றலுள்ள பலர் காணப்படும் நிலையில் அது பர்ளு கிபாயாவாக இருக்கும் என்பதுடன் ஆற்றலுள்ள ஒருவர் மட்டுமே இருக்கின்றார் எனில் அவருக்கு இது பர்ளு ஐனாக இருக்கும். இந்தக் கலையின் பல்வேறு பயன்பாடுகள் குறித்து இமாம்கள் பேசியுள்ளார்கள்.

### 3. ஹதீஸ் திறனாய்வுக் கலை

ஹதீஸ் திறனாய்வுக் கலையை முந்தையவர்கள் பின்வருமாறு வரையறுத்தார்கள்: 'அறபு மொழியின் விதிகளுக்கேற்ப, நபியவர்களின் பாத்திரங்களுக்கேற்ப, ஹதீஸின் கருத்தை அறிந்து கொள்வதற்கான ஆய்வு.' இந்தக் கலையின் உள்ளடக்கம்: நபியவர்களின் வேறுபட்ட பாத்திரங்களைப் பிரதிபலிக்கும் ஹதீஸ்களின் கருத்தை அறிதல். இந்தக் கலையின் மூலாதாரங்கள்: அறபு மொழி, நம்பிக்கைக் கோட்பாடுக் கலை, சட்டக் கோட்பாட்டுக் கலை, சட்டவியல் போன்றவையாகும். இந்தக் கலையின் நிறுவனர்: ஸஹாபாக்களே இந்தப் பணியின் மூலகர்த்தாக்கள். அவர்கள் நபியவர்களின் பாத்திரங்களை வேறுபடுத்தினார்கள். அவரது சொல், செயல், பண்புகளை அவதானித்தார்கள். குர்ஆனுக்கான விளக்கமாக அவற்றை அடுத்த பரம்பரைக்கு நகர்த்தினார்கள். தங்கள் காலத்தின் சாதனங்களைப் பயன்படுத்தி அறிவிப்புகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தினார்கள். அவற்றின் உள்ளடக்கங்களை விமர்சனக்

கண்கொண்டு பார்ப்பதற்கான விதிகளை வகுத்தார்கள். இந்தக் கலையின் பயன்கள்: ஹதீஸை முழுமையாக ஏற்பதா அல்லது முழுமையாக மறுப்பதா அல்லது நிபந்தனைகளுடன் ஏற்பதா? போன்ற வினாக்களுக்கு விடையைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், அவற்றின் தராதரம் பற்றிய புரிதலுக்கும் வரமுடிகின்றது.

பிந்தையவர்கள் இதனைப் பின்வருமாறு வரையறுத்தார்கள்: 'ஏற்பது, மறுப்பது என்ற அடிப்படையில் அறிவிப்பாளர்கள் மற்றும் அறிவிப்புகளின் நிலைமைகளை அறியும் கலை.' முந்தையவர்களின் வரையறையில் ஹதீஸ்களின் உள்ளடக்க வசனங்களை பகுப்பாய்வு செய்வதற்கும் விமர்சிப்பதற்குமான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவை குர்ஆனுக்கும் ஆதாரப்பூர்வமான மற்றொரு சுன்னாவுக்கும் முரண்படுகின்றதா அல்லது புலனுணர்வுகள், அனுபவங்களுடன் இவை முரண்படுகின்றதா? போன்ற விசயங்களையும் ஆராய்வதை முந்தையவர்களின் வரையறை திறனாய்வு என்ற வட்டத்தினுள் உள்ளடக்கியுள்ளதைக் காணலாம். ஆனால் பிந்தையவர்களன் வரையறையைப் பொருத்தவரை, அது அறிவிப்பாளரையும் அறிவிப்பையும் வேறுபடுத்தவில்லை, அறிவிப்புகள் கலையும் திறனாய்வுக் கலையும் ஒரே விசயம் என்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டைத் தருகின்றது. இதனாலோ என்னவோ அறிவிப்பாளர் மற்றும் அறிவிப்பாளர் வரிசை இவற்றுக்கு வழங்கப் பட்ட முக்கியத்துவம் ஹதீஸின் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு வழங்கப்படவில்லை. அறிவிப்பாளர் வரிசை அங்கீகரிக்கத்தக்கது எனில், அதன் உள்ளடக்கம் மிக அரிதான சமயங்களில் தவிர, உரிய கவனத்தைப் பெறவில்லை. ஏற்பதும் மறுப்பதும் அறிவிப்பாளர் வரிசையை மட்டுமே வைத்து நடைபெற்றது. ஆனால் உள்ளடக்கப் பகுப்பாய்வு, அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வை விடவும் எந்த வகையிலும் குறைந்த முக்கியத்துவத்திற்கு உரியது அல்ல. அதிலும் குறிப்பாக அதிகமான ஹதீஸ்கள் நேரடி வசனங்கள் அன்றி அதன் கருத்து அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உள்ளடக்கப் பகுப்பாய்வு மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

இருப்பினும் இரு தரப்பினரும் ஹதீஸின் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கான சில அளவுகோல்களையும் விதிகளையும் முன்வைத்துள்ளார்கள். அவர்களுடைய நூல்களில் சிதறிக் காணப் படும் இந்த விதிகளை யாரேனும் ஒரு மாணவன் முயற்சி செய்தால் ஓரிடத்தில் ஒன்று திரட்ட முடியும். அதன்மூலம் அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வு மற்றும் உள்ளடக்கப் பகுப்பாய்வு ஆகிய இரு பகுதிகளுக்குமான விதிகளும் அளவுகோல்களும் உள்ளடங்கிய

கோட்பாடு முழுமைப்படுத்தப்பட முடியும். அப்போது ஒன்று மற்றையதைப் பலப்படுத்தும் வகையில் அமைய முடியும். ஹதீஸ்களில் உள்ள நுண்ணிய குறைபாடுகள், அறிவிப்பாளர்கள் வரிசைகளிலேயே அதிகம் காணப்படுகின்றன என்றிருந்த போதிலும் அது அறிவிப்பாளர் வரிசையை மட்டுமின்றி உள்ளடக்க வசனத்தையும் பாதிக்கின்றது. ஹதீஸின் உள்ளடக்க வசனத்தில் ஒரு குறைபாடு உள்ள போதும் அது நிச்சயம் அறிவிப்பாளர் வரிசையையும் பாதிக்கும். ஹதீஸ் உள்ளடக்கம் ஒன்றில் ஒரு குறைபாட்டை அறிஞர் ஒருவர் கண்டு கொள்கிறார் எனில், அவர் அந்த ஹதீஸை அறிவிப்புச் செய்த ஏனைய அறிவிப்பாளர்கள் அனைவரையும் மீளாய்வு செய்ய வேண்டும். முழுமையானதொரு பகுப்பாய்வை அவர் செய்கின்றபோது மட்டுமே அந்த ஹதீஸ் குறித்த தெளிவானதொரு முடிவை வழங்க இயலும். ஹதீஸ் உள்ளடக்கப் பகுப்பாய்வு சம்பந்தமாக தனியானதொரு தலைப்பில் பின்னர் பேசப்படவுள்ளது.

இந்த இடத்தில், இவ்வாறு ஒரு வினா எழுப்பப்பட முடியும், அறிவிப்புக் கலையையும் திறனாய்வுக் கலையையும் ஒரே கலையாகக் கருத முடியுமா?

மேலே பேசப்பட்ட விசயங்களை மையப்படுத்தி நோக்குகின்ற போது, முந்தையவர்கள் இரண்டையும் தனித்தனிக் கலைகளாகவே நோக்கியிருக்கிறார்கள். ஏனெனில் இரண்டும் வெவ்வேறு பணிகள் ஊடாக ஹதீஸை ஏற்றல் அல்லது மறுத்தல் என்ற விளைவை அடைந்து கொள்கின்றன என்றார்கள். ஆனால் பிந்தையவர்கள் இரண்டு கலைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை இல்லாமல் செய்யாமல், இரண்டையும் இணைத்து நோக்கினார்கள். இரண்டு கலைகளினதும் விளைவுகளுக்கு இடையே தொடர்பு இருப்பதுபோன்று பொறிமுறைகளும் ஒன்றை ஒன்று முழுமைப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதால் இந்த இணைவு அவசியம் என்று கருதினர். ஆனால் முந்தையவர்கள் கருதுவதுபோன்று இரண்டு கலைகளையும் தனித்தனியாக நோக்குவதே பொருத்தம் என்று நாம் கருதுகின்றோம். ஏனெனில் இரண்டையும் மிகச் சரியாக இயக்குவதற்கு இந்த அணுகுமுறையே பொருத்தமானது. அதிகமான இணைந்த செயல்பாடுகளில் ஒன்று மற்றொன்றை மிகைத்து விடுகின்ற நிலையை நாம் காண்கின்றோம். இதிலேயும் அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாடு, ஹதீஸ் உள்ளடக்கப் பகுப்பாய்வை மிகைத்து விட்டதை நாம் கண்டோம்.

4. ஹதீஸை முதவாதிர், ஆஹாத் என வகைப்படுத்துதல்

பிந்தையவர்களிடத்தில் ஹதீஸ், கபர், அஸர், சுன்னா அனைத்தும் ஓரே கருத்தைத் தரக்கூடிய சொற்களாகும். நபியவர்களுடைய அல்லது ஸஹாபியுடைய அல்லது தாபிஈயுடைய சொல், செயல், அங்கீகாரங்களையே இந்த சொற்கள் குறிக்கின்றன என்பர். அந்த வகையில் மர்பூஃ என்னும் நேரடியாக நபியவர்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட்டவையும் மௌகூப் என்னும் ஸஹாபாக்களுடன் மாத்திரம் சம்பந்தப்பட்டவையும் மக்தூஃ என்னும் தாபிஈன்கள் மற்றும் அதற்குப் பிற்பட்டவர்களுடன் சம்பந்தப்பட்டவையும் இதில் அடங்குகின்றன. சிலர் ஹதீஸ் என்பது நபியவர்களுடன் சம்பந்தப்பட்டவற்றை மட்டுமே குறிக்கும். அதில் ஸஹாபாக்கள் மற்றும் தாபிஈன்கள் சம்பந்தப்பட்டவை அடங்காது என்றார்கள். வேறு சிலர், அசர் என்பது ஸஹாபாக்களுடன் சம்பந்தப்பட்டவற்றை மட்டுமே குறிக்கிறது என்றனர். இன்னும் சிலர் ஹதீஸ் என்பது நபியவர்களுடைய சொல், செயல்களுடன் சம்பந்தப்பட்டது. சுன்னா என்பது சொல், செயல், அங்கீகாரம், பண்புகளுடன் சம்பந்தப்பட்டது என்றனர்.

ஷீஆக்கள் ஹதீஸ் என்பதை மஃசூமுடைய வார்த்தைகள் அல்லது அங்கீகாரங்களைக் குறிக்கின்றது என்றார்கள். மஃசூம் என்பது அவர்களிடத்தில் நபியையும் அவர்களுடைய பன்னிரண்டு இமாம்களையும் குறிக்கின்றது. ஹதீஸ் என்பது மஃசூமுடைய வார்த்தைகளுக்கும் ஸஹாபி மற்றும் தாபிஈயுடைய வார்த்தைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஸஹாபி என்பது அவர்களுடைய இமாமுடன் இருந்தவர்களையும் அவர்களை அடுத்து வந்தவர்களை தாபிஈ என்றும் வழங்கினார்கள். இங்கு வார்த்தைகள் என்பதன் பொருள், நபியுடைய சொல் மற்றும் அங்கீகாரங்களையும் இமாமுடைய செயலையும் குறிக்கின்றது.

அவர்களில் அநேகமானவர்கள் கபர், அஸர் ஆகிய சொற்களை ஒரே கருத்திலேயே பயன்படுத்தியுள்ளனர். அதாவது மஃசூம் மற்றும் ஏனையவர்களுடன் சம்பந்தப்பட்டவற்றையே இதன்மூலம் நாடினர். சிலர் ஹதீஸ் என்பதை வார்த்தைகளைக் குறிக்கவும் சுன்னா என்பதை செயலையும் அங்கீகாரத்தையும் குறிக்கவும் பயன்படுத்தியுள்ளனர். அதுபோல் கபர் என்பதை மஃசூம் அல்லாத ஒருவருடன் சம்பந்தப்பட்டவைகளைக் குறிக்கவும் அஸர் என்பதை இமாமுடனும் ஸஹாபியுடனும் சம்பந்தப்பட்டவைகளைக் குறிக்கவும் சிலர் பயன்படுத்தியுள்ளனர்.

1. முதவாதிர்

முதவாதிரை வரையறுப்பதில் ஹதீஸ் துறையாளர்களிடத்தில் வேறுபாடுகள் இருக்கின்றன. சிலர், அது எண்ணிக்கை, வழக்காற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது என்றனர். இமாம் இப்னு ஹஜர் கூறும்போது, ஒரு ஹதீஸ் கீழ்வரும் நான்கு நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் அது முதவாதிர் எனப்படும் என்கிறார்:

1. பொய்யொன்றை இட்டுக்கட்ட முடியாத வடிவில் பெரும் தொகையானவர்கள் காணப்படுதல்.
2. ஆரம்பம் முதல் இறுதி வரை அதே போன்ற பெரும் தொகையினர் அதனை நகர்த்துதல்.
3. ஒவ்வொரு தலைமுறையும் முந்திய தமைுறையினரிடமிருந்து கண்களால் பார்த்து, காதுகளால் கேட்டு நேரடியாகப் பெற்றுக் கொண்டிருத்தல்.
4. இதனோடு அந்தச் செய்தியைக் கேட்பவரிடம் மிக உறுதியான நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதாக அது அமைந்திருத்தல்.

இமாம் கதீப் அல் பக்தாதி, குறித்ததொரு தொகையினர் அறிவிக்கின்ற ஹதீஸ், அந்தத் தொகையினரைப் பார்க்கும் போது அவர்கள் அனைவரும் இணைந்து ஒரு பொய் சொல்வதற்கான வாய்ப்பு சாதாரண வழக்கில் சாத்தியமில்லை என்கிறார்.

இங்கு ஏற்படக்கூடிய முக்கிய கேள்வி, குறிப்பிட்டதொரு எண்ணிக்கையை வைத்து, அதிலும் அந்த எண்ணிக்கையின் வரையறை குறித்து உடன்பாடான எந்த ஒரு நிலைப்பாடும் இல்லாத நிலையில், உறுதியான நம்பகத் தன்மை ஒன்று எவ்வாறு தோன்ற முடியும்? இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண வழக்கு என்பது என்ன? அதே சமயம் இது பற்றிய அனைத்து வரையறைகளும் பொய் நிகழ்வது சாத்தியமற்றது என்பது பற்றி மட்டுமே பேசுகின்றன. தவறுகள், சந்தேகங்கள், மறதிகள் நிகழ்வது பற்றிப் பேசவில்லை. இவை மிகவும் நம்பத்தகுந்தவர்களிடம்கூட நிகழ வாய்ப்புள்ளவையாகும். அடுத்து, முதவாதிருக்குரிய எண்ணிக்கையில் நிலையான ஒரு கருத்து இல்லை. அது மூன்று முதல் ஆயிரத்து ஐநூறு வரை செல்கின்றது. இந்த ஒவ்வொரு எண்ணிக்கையும் ஏதேனும் ஒரு வகையில் ஆதாரப்படுத்தப்பட்டும் இருக்கின்றது. அல்லக்னவி, முதவாதிருடைய எண்ணிக்கை குறித்த கருத்துக்களைத் தொகுத்து விட்டு, “இந்த அனைத்து எண்ணிக்கைகளும் அர்த்தமற்றவை. இதில் பொருத்தமான நிலைப்பாடு என்னவெனில், ஹதீஸ்

துறையாளர்களில் பலரும் கருதுவது போன்று, முதவாதிருக்கு குறித்ததொரு எண்ணிக்கை நிபந்தனையல்ல. திட்டவட்டமான நம்பகத்தன்மை ஏற்படுதல் என்பதே இங்கு முக்கியமானது" என்கிறார். இவர்கள் முதவாதிர் என்பதை அறிவுரீதியான மற்றும் உளரீதியான திருப்தியுடன் சம்பந்தப்படுத்திப் பார்த்தார்கள். பக்ருத்தீன் அர்ராஸி முதவாதிரினுடைய எண்ணிக்கை தொடர்பான கருத்துக்களைக் குறிப்பிட்டு விட்டு "அறிந்து கொள்ளுங்கள் இந்த எண்ணிக்கை வரையறைகள் எதுவும் இந்த விவகாரத்துடன் சம்பந்தம் இல்லாதது. திட்டவட்டத் தன்மையைக் குறிப்பதற்கு, குறிப்பிட்டதொரு எண்ணிக்கையை வரையறுக்காவிட்டால், உங்கள் தரப்பு நியாயம் இழக்கப்பட்டு விடும் என்று நீங்கள் சில சமயம் கருதலாம். ஆனால் நான் கூறுகிறேன், முதவாதிரினுடாக திட்டவட்டத்தன்மை நிகழ வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில்லை. மாறாக உளத்திருப்தி என்பதே இங்கு முக்கியமானது."

முதவாதிர் நிகழ்வதற்குரிய சாத்தியப்பாடு

முதவாதிர் நிகழ்வதற்குரிய சாத்தியப்பாடு குறித்து ஹதீஸ் துறை யாளர்களிடம் வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

முதவாதிர் மிகவும் அரிதாகவே நிகழ முடியும். இமாம் இப்னுஸ் ஸலாஹ் போன்றவர்கள் முதவாதிர் மிகவும் அரிதாக நிகழக் கூடிய ஒன்று என்று கருதுகின்றனர். அவர் தமது 'முகத்திமா' என்ற நூலில் "முதவாதிருக்கான ஓர் உதாரணத்தைக் குறிப்பிடுமாறு யாரேனும் கேட்டால், அவ்வாறான ஒன்றை கண்டு கொள்வது மிகவும் சிரமமானது" என்று கூறியுள்ளார். இமாம் பல்கீனி "திட்டவட்டமான விவகாரங்களில் முதவாதிர் என்ற கருத்து சாத்தியமாகலாம். ஆனால் அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாக அது மிகவும் சிரமமானது" என்கிறார். இமாம் இப்னு ஹஜர் ஏற்கனவே, குறிப்பிடப்பட்ட இப்னுஸ் ஸலாஹ் அவர்களுடைய கருத்தைக் குறிப்பிட்டதற்குப் பிறகு "முதவாதிர்கள் மிகவும் அரிதானவை என்றோ, இல்லை என்றோ கூற முடியாது. இவை போன்ற கருத்துக்களுக்கான காரணம், ஹதீஸ்களுக்குரிய பல்வேறு அறிவிப்பாளர் வரிசைகளைத் தேடுவதும் அவற்றின் அறிவிப்பாளர்களின் பண்புகள் குறித்து ஆராய்வதும் மிகவும் குறைவாக நடைபெறுவதனால் அங்கு பொய் நிகழவில்லை என்பதையோ அவர்கள் மத்தியிலான உடன்பாடுகளையோ உறுதிப்படுத்த முடியவில்லை" என்கிறார். இவ்வாறு கூறிய இமாம் இப்னு ஹஜர் தம்முடைய 'நுஸ்ஹதுன் நழர்'

என்ற நூலில் மேற்சொன்ன கருத்தைச் சொல்வதற்குச் சற்று முன்னர் பின்வருமாறும் கூறியிருக்கிறார்: "நுக்பதுல் பிக்ரில் முதவாதிருக்கான நிபந்தனைகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் முதவாதிருக்குச் சொல்லப்படும் இந்த வடிவிலான ஆய்வு உண்மையில் அறிவிப்பாளர் வரிசையுடன் சம்பந்தப்பட்ட ஆய்வல்ல. ஏனெனில் அதில், அறிவிப்பாளர்களின் பண்புகள், அவர்கள் அறிவிப்புகளை மேற்கொண்ட விதம் போன்றவை பற்றிய ஆய்வுகள்மூலம் ஹதீஸின் நம்பகத்தன்மையைக் கண்டறியும் வேலையே நடைபெறுகின்றது, ஆனால் முதவாதிரில் அறிவிப்பாளர்களை ஆராயும் வேலை நடைபெறுவதில்லை, ஆய்வின்றி செயற்படுத்துவதே அங்கு நடைபெறுகின்றது."

முதவாதிர் நிகழ்வது சாத்தியமில்லை. இமாம் இப்னு ஹிப்பான் தமது கிரந்தத்தின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகின்றார்: "ஹதீஸ்களைப் பொருத்தவரை அனைத்தும் ஆஹாதானவையே. ஏனெனில் நபியவர்களுடைய அறிவிப்புகளில் நேர்மையான இருவர் அறிவிப்புச் செய்த ஒரு ஹதீஸை நாம் காண முடியாது. அவர்களில் ஒருவர் நேர்மையான இன்னும் இருவரிடமிருந்தும் அவர்கள் இருவரும் இன்னும் இரண்டு நேர்மையானவர்களிடமிருந்தும் தொடர்ந்து நபியவர்கள் வரையில் இதே வடிவிலான ஒழுங்கை நாம் காண முடியாது. இது சாத்தியமில்லை எனில், முதவாதிர் சாத்தியமற்றது, அனைத்து ஹதீஸ்களும் ஆஹாதானவையே."

2. ஆஹாத்

ஆஹாத் அதனுடைய நிபந்தனைகளுக்கேற்ப, ஏற்றுக் கொள்ளப் பட்டவை, மறுக்கப்பட்டவை என இரண்டாக வகைப்படுத்தப் படுகின்றது. அவற்றுள் ஏற்றுக் கொள்ளப்பட்டவை, திட்ட வட்டமற்ற ஆதாரமாகவே கொள்ளப்படுகின்றன. அஹ்லுஸ் ஸுன்னாக்களிடம் அவற்றை ஆதாரமாகக் கொள்வது, அவற்றைப் பலப்படுத்தக்கூடிய வெளிக் காரணிகள் காணப்படாத போதும் கட்டாயமானதாகக் கருதப்படுகின்றது.

இமாமீய ஷீஆக்களில் பிந்தையவர்களிடமும் ஸைதீக்களிடமும் ஆஹாதானவை, அஹ்லுஸ் ஸுன்னாக்ளைப் போன்றே மேலதிக வெளிக்காரணிகள் இல்லாதபோதும் ஆதாரமாகக் கொள்ளத்தக்கவை என்ற கருத்தே நிலவுகின்றது. ஆகவே மார்க்கத்தில் அடிப்படை யானவை என்று அறியப்பட்ட அநேகமானவை திட்டவட்டமற்ற ஆதாரத்தின் வழியாகவே நிறுவப்பட்டுள்ளன. திட்டவட்டமற்ற ஒன்றை ஆதாரமாகக் கொள்ள முடியாது என்ற கருத்தை அவர்களில்

எந்த அறிஞரும் கூறவில்லை. அவர்களில் ஹதீஸ் துறையாளர்களாக இருப்பினும் சட்டவியலாளர்களாக இருப்பினும் அநேகர் இதே நிலைப்பாட்டிலேயே இருந்துள்ளனர். குலைனியுடைய ஸஹீஹிலும் தூஸியுடைய இஸ்திப்ஸாரிலும் இந்தக் கருத்தே வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் முந்தையவர்களில் அதிகமானோர் மேலதிக வெளிக் காரணிகள் அதனைப் பலப்படுத்தாதபோது அதனை ஆதாரமாகக் கருதமாட்டார்கள். அதனை ஆதாரமாகக் கொள்ள முடியாது என்பதை முர்தழா இஜ்மாவான நிலைப்பாடாகவே முன்வைத்துள்ளார். ஆனால் இது அவர்களுடைய மத்ஹபில் ஏற்கத்தக்க கருத்தாக இல்லை. இருப்பினும் இதனை ஆதாரமாகக் கொண்டவர்களும் நிபந்தனைகளுடனேயே அதனைச் செய்தார்கள். உதாரணமாக, ஷீஆக்களிடத்தில் அங்கீகரிக்கத்தக்க நூல்களில் இது காணப்பட வேண்டும் என்பதுடன் பலமான எதிர்க்கருத்துக்களின்றி பலரால் செயல்படுத்தப்படும் ஒன்றாகவும் இருக்க வேண்டும் என்றனர். அறிவிப்பாளரின் நேர்மையில் குறைபாடு இருப்பினும் குறித்த ஹதீஸ் பலவீனமாகவோ குறைபாடுகள் கொண்டதாகவோ இருந்தாலும் அவர்களுடைய அறிஞர்களிடத்தில் அவற்றுக்குப் பொது ஏற்பு நிலை இருந்தால் அதனையும் ஆதாரமாகக் கொண்டார்கள். முந்தையவர்கள் பொதுவாக மேற்சொன்ன காரணிகளை வைத்து எவரேனும் அறிவிப்புகளைப் பலப்படுத்துகின்றனர் எனில் அவற்றை ஸஹீஹாகக் கருதினார்கள்.

ஆஹாதான ஹதீஸ் திட்டவட்டமற்ற ஆதாரமாகவே அமைகின்றது.

இமாம் அல்கதீப் அல் பக்தாதி தம்முடைய அல்கிபாயாவில், ஆஹாதான ஹதீஸ் திட்டவட்டமான ஆதாரமாக அமைகின்றது என்ற சந்தேகமும் அதற்கான பதிலும் என்றொரு தலைப்பிட்டிருக்கின்றார். இங்கு அது திட்டவட்ட ஆதாரம் என்பது ஒரு சந்தேகம் மட்டுமே என்கின்றார். அவர் தொடர்ந்து கூறுகையில், மார்க்கத்தில் திட்டவட்டமான ஆதாரம் அவசியப்படுகின்ற விவகாரங்களில் ஆஹாதான ஹதீஸ்கள் ஏற்கப்பட மாட்டாது. திட்டவட்ட ஆதாரம் அவசியப்படாதவற்றில் மட்டுமே ஏற்கப்படுகின்றன என்கிறார். இமாம் அல்மனாவி கூறுகின்றார்: இமாம்களான கஸ்ஸாலி, ஆமிதி, இப்னுல் ஹாஜிப், பைழாவி போன்றவர்கள் ஆஹாதான ஹதீஸ்கள் மேலதிகக் காரணி ஒன்றுடனன்றி திட்டவட்ட ஆதாரமாக அமைய மாட்டாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். இந்தக் கருத்துடன் பெரும்பான்மை அறிஞர்கள் உடன்படவில்லை.

அவர்கள், அவை எந்த வகையிலும் திட்டவட்டமான ஆதாரமாக அமைய மாட்டாது என்றனர்.

சட்டக் கோட்பாட்டாளரான ஷின்கீதி, ஆஹாதான ஹதீஸின் அறிவிப்பாளர்கள் அனைவரும் நேர்மையானவர்களாக இருந்தாலும், அதற்கு மேலதிகப் பலப்படுத்தல் காரணிகள் காணப்பட்டாலும் அவை திட்டவட்டமான ஆதாரமாக அமைய மாட்டாது என்பதே பெரும்பான்மை அறிஞர்களின் கருத்தாகும், ஆனால் திட்டவட்ட ஆதாரமாக அமையும் என்று சொன்னவர்களும் இருக்கின்றனர் என்றார். இமாம் ஷாதிபி, ஆஹாதான ஹதீஸாக இருப்பின் அவை திட்டவட்டமான ஆதாரமாக அமையாது என்பது மிகவும் தெளிவானதாகும் என்கிறார்.

இமாம் பக்ருத்தீன் அர்ராஸி, ஆஹாதான ஹதீஸ்கள் அடிப்படையான விசயங்களைப் பேசக்கூடியனவாக இருப்பின் அவற்றை ஏற்க முடியாது, ஏனெனில் அடிப்படை விவகாரங்களுக்கு திட்டவட்ட ஆதாரமே அவசியப்படுகின்றது. ஆஹாதானவை திட்டவட்ட ஆதாரங்கள் அல்ல என்கிறார். இமாம் பாகில்லானி, சட்ட வியலாளர்களும் இறையியலாளர்களும் திட்டவட்டக் கருத்தைத் தராத ஹதீஸை, அது தனியொருவரால் அறிவிக்கப்பட்டிருந்தாலும் பலரால் அறிவிக்கப்பட்டிருந்தாலும் ஆஹாதானவை என்றுரைப்பதில் உடன்பாடான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்கிறார். இமாம் தஹபி தம்முடைய தத்கிராவில் இது பற்றிக் கூறும்போது, ஹதீஸின் திட்டவட்டத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் எனில், அது அறிவிக்கப்பட்ட பல வழிகளை கண்டறிய வேண்டும் என்ற தூண்டுதல் இங்கு வழங்கப்படுகின்றது. ஏனெனில் தனியொருவரிடம் மறதி, சந்தேகங்கள் என்பன தவிர்க்க முடியாதவை, என்கிறார். இமாம் நவவி தமது தக்ரீபில் இது பற்றிக் கூறும்போது, ஒரு ஹதீஸை நாம் ஸஹீஹானது என்று சொன்னால் அதன் பொருள் அது திட்டவட்ட ஆதாரம் என்பதல்ல என்கிறார். அவர் தொடர்ந்து கூறும்போது, இமாம் இப்னுஸ் ஸலாஹ் புகாரீ, முஸ்லிம் இருவரும் அல்லது இருவரில் ஒருவர் பதிவு செய்துள்ளவை அனைத்தும் ஸஹீஹானவை என்றும் அவை திட்டவட்ட ஆதாரங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளதை பெரும்பாலான அறிஞர்கள் மறுத்துள்ளனர். முதவாதிராக அமையாதவை திட்டவட்டமற்றவை என்பதே அவர்களுடைய நிலைப்பாடாகும் என்கிறார். ஸஹீஹ் முஸ்லிமுக்கான விளக்கவுரையின் முன்னுரையில் இமாம் இப்னுஸ் ஸலாஹின் மேற்குறித்த கருத்தை பதிவு செய்து விட்டு, அவர் குறிப்பிடும் இந்தக்

கருத்து பெரும்பாலானவர்களின் கருத்துக்கு மாற்றமானதாகும். அவர்கள் புகாரீ, முஸ்லிமில் பதிவான ஹதீஸ்கள் முதவாதிராக இல்லாதபோது அவை திட்டவட்ட ஆதாரங்கள் அல்ல என்றே குறிப்பிட்டுள்ளனர். அவையிரண்டும் முஸ்லிம் உம்மத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நூல்கள் என்பது அவையிரண்டிலும் உள்ள அனைத்தும் நபியவர்களால் சொல்லப்பட்டவைதான் என்பதைக் குறிக்காது என்று இமாம் நவவி குறிப்பிடுகிறார். இமாம் பஸ்தவி, ஆஹாதான ஹதீஸ்கள் திட்டவட்டமானவை என்ற வாதம் சந்தேகமின்றி அபத்தமானது. ஏனெனில் ஆஹாதானவை இடம்பாட்டுக்குரியவையாகும். இடம்பாட்டுக்குரியவை ஒருபோதும் திட்டவட்டத் தன்மையைப் பெற மாட்டாது. இதனை மறுப்பவர் தம்மைத் தாமே முட்டாளாக்கிக் கொள்வது போலாகும் என்கிறார். இமாம் கஸ்ஸாலி, ஆஹாதானவை திட்டவட்டமானவை அல்ல என்பது தெள்ளத் தெளிவான உண்மை. நாம் கேள்விப்படும் அனைத்தையும் நம்புவதில்லை, அதுதான் எமது நடைமுறை எனில் இரண்டு செய்திகள் முரண்பட்டால் இரண்டையும் நம்ப வேண்டிய நிலை ஏற்படும்" என்கிறார்.

இங்கு நாம் பதிவு செய்துள்ள கருத்துக்கள் அனைத்தும் ஆஹாதானவை திட்டவட்ட ஆதாரமாக அமைய முடியாது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

## 5. ஹதீஸ் துறையாளர்களில் முந்தையவர்களின், பிந்தையவர்களின் கோட்பாட்டு வேறுபாடு

ஹதீஸ் கலைகளை ஆராய்கின்றவர்கள் அவற்றின் முறையியல் தொடர்பில் முந்தையவர்களுக்கும் பிந்தையவர்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை அவதானிப்பர். இமாம் கதீப் அல்பக்தாதிக்கு முந்தியவர்களை முந்தையவர்கள் என்றும் அவருக்குப் பிந்திய இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி மற்றும் அவரது சமகாலத்தவர்களைப் பிந்தையவர்கள் என்றும் கூறலாம். அதாவது ஹதீஸ் கலைகளை இருபெரும் பிரிவினர் கையாண்டுள்ளனர். இரு தரப்பினரும் மற்ற தரப்பினரை விட்டும் கோட்பாடு, முறையியல், அறிவு மரபுகள் போன்ற பல அம்சங்களில் வேறுபட்டவர்கள். இவர்களில் ஒரு தரப்பினர் பிரயோக அணுகுமுறையைக் கையாண்டவர்கள் மற்றவர்கள் கோட்பாட்டு அணுகுமுறையைக் கையாண்டவர்கள்.

ஹதீஸ் கலைகளில் பிரயோக அணுகுமுறையைக் கையாண்டவர்கள் முந்தைய தலைமுறையினர் ஆவர். அவர்கள் ஹதீஸ்களைப் பகுப்பாய்வு செய்து நூல்களைத் தொகுத்தளித்த பெரும் ஜாம்பவான்களாவர். அவர்களின் நூல்கள் அன்றைய ஹதீஸ் கலைகளின் முறையியலை நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டப் போதுமானவையாகும். இவர்களில் முதன்மையானவர்கள் இமாம் புகாரீ, முஸ்லிம் ஆகியோர். ஹதீஸ்களையும் அறிவிப்புகளையும் இவர்கள் நேரடி வாய்வழி மூலமாகவே பெற்றுக் கொண்டார்கள். இவர்களுடைய காலம் ஹிஜ்ரீ முதலாம் நூற்றாண்டு முதல் ஹிஜ்ரீ ஐந்தாம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை நீண்டு செல்கின்றது.

இரண்டாம் தரப்பினர், இந்தக் கலைகளைக் கோட்பாட்டு ரீதியாக அணுகினார்கள். கலைச் சொற்களையும் வரையறைகளையும் வடிவமைத்தார்கள். முந்தையவர்களுடைய பிரயோகங்களின் மீது நின்று கோட்பாடுகளையும் விதிகளையும் வகுத்தார்கள். இவர்களையே நாம் பிந்தையவர்கள் என்கின்றோம். முந்தையவர்களை விட்டும் இவர்களை வேறுபடுத்திய முக்கிய காரணி, அவர்கள் அறிவிப்புகளை நூல்களை மையப்படுத்தியே நகர்த்தினார்கள். வாய்வழி அணுகுமுறை அவர்களிடம் இருக்கவில்லை. அதனோடு இஸ்லாமியக் கலைகளினுள் நுழைந்திருந்த தர்க்கவியல் அணுகுமுறைகளினால் வரையறை செய்தல் மரபும் அவர்களை முந்தையவர்களை விட்டும் வேறுபடுத்தியது.

முந்தையவர்களுக்கும் பிந்தையவர்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் ஹதீஸ் கலையின் அனைத்துப் பரப்புக்களையும் தழுவியது. அது அறிவிப்புகலை, திறனாய்வுக்கலை இரண்டுடனும் சம்பந்தப்படுகின்றது. ஹதீஸ் கலையை வரையறை செய்வது முதல் அதனுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கிளைக் கலைகளின் வரையறைகளிலும் அதனையொட்டிய சட்டங்களிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த வேறுபாடுகளின் விளைவாக, ஹதீஸ் கலைகளின் முறையியலில் அதில் ஈடுபடுவோர் மத்தியில் தெளிவானதொரு குழப்பநிலை இருக்கின்றது. அந்தக் குழப்பநிலை பிந்தையவர்கள் உருவாக்கிய விதிகள், கோட்பாடுகள் வரை நீண்டு சென்றிருக்கின்றது.

அறிவிப்புகளையும் அறிவிப்பாளர்களையும் பகுப்பாய்வு செய்வதில் முந்தையவர்கள் கடைப்பிடித்த அணுகுமுறையினை பின்னர் எவரும் பின்பற்றவில்லை. அவர்களுடைய சான்றுகள் கண்களால் பார்த்து காதுகளால் கேட்டு வழங்கும் சான்றுகளாகும். அவர்கள்

அறிவிப்பாளர்களுடன் கலந்து அவர்களுடைய நிலையினை அறிந்து கொள்வார்கள். ஏனையவர்களுக்குக் கிடைக்காத புரிதலும் தெளிவும் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அறிவிப்பாளர்கள் பற்றிய தீர்ப்புக்களில் எல்லோருக்கும் பொதுவான ஒரே வகையான விதிகளை அவர்கள் பின்பற்றியதில்லை. அதில் அவர்களிடம் வித்தியாசமான பார்வைகள் இருந்தன. அவை அநேகமாக பிந்தையவர்களின் விதிகளுடன் உடன்பட்டு வராதவை. சூழலின் துணைக் காரணிகள் மற்றும் நிலைமைகளின் மீதே அவர்களுடைய தீர்ப்புக்கள் அமைந்திருந்தன. ஓர் அறிவிப்பாளருக்கு எல்லா நிலையிலும் நற்சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது. அதேபோன்று மற்றொருவர் எல்லா நிலையிலும் பலவீனப்படுத்தப்பட மாட்டார். அறிவிப்பாளர் வரிசை தொடரானதா? தொடரற்றதா? என்ற முரண்பாட்டிலும் சரி, அறிவிப்பு நபியவர்களுடன் சம்பந்தப்பட்டதா? ஸஹாபாக்களுடன் சம்பந்தப்பட்டதா? என்ற முரண்பாட்டிலும் சரி, அறிவிப்புகளில் நம்பிக்கையான ஒருவரின் மேலதிக வார்த்தையொன்று காணப் பட்டாலும் அல்லது இல்லாதிருந்தாலும் சரி, அது ஒரே நபரிடமிருந்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தாலும் அல்லது வெவ்வேறு நபர்கள் ஊடாக நிகழ்ந்தாலும் சரி, எந்த நிலையிலும் அவற்றைக் கையாள்வதற்குப் பொது விதியொன்றை அவர்கள் பேணவில்லை. மாறாக சூழ்நிலைகளுக்கேற்பவே அவர்கள் அவற்றைத் தீர்மானித்தார்கள். சில சமயங்களில் நம்பிக்கையான ஒருவரின் மேலதிக வார்த்தையொன்றை, அது ஏனையவர்களின் அறிவிப்புகளுடன் முரண்படாத போதும் மறுத்திருக்கிறார்கள். அதேபோன்று சில சமயங்களில் அறிவிப்பாளர் வரிசை, பலவீனமான ஒருவரால் தொடரற்றதாக்கப்பட்டிருப்பினும் குறித்த சூழலில் அவரது செயலில் நியாயமிருக்கின்றது எனில் அதனை ஏற்றிருக்கிறார்கள்.

இதனால் அவர்களிடத்தில் தேர்வு அணுகுமுறை அதிகம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. இதனை இமாம் இப்னு ரஜப் ஹம்பலி தமது *'ஸரஹு இலலித் திர்மிதி'* என்னும் நூலில் தெளிவுபடுத்தியுள்ளார். அந்த வகையில் அறிவிப்பாளர்கள் பற்றிய முந்தையவர்களது தீர்ப்புக்கள் சூழலுடன் சம்பந்தப்பட்டவையாகவே இருந்தன. பொதுச்சட்டமாகக் காணப்படவில்லை. உதாரணமாக, இமாம் சுஃபாவோ அல்லது வேறு ஒருவரோ குறித்த ஓர் அறிவிப்பாளர் பற்றி இவர் நம்பகமானவர் அல்லது பலவீனமானவர் என்று தீர்ப்பளித்தால், அது நிச்சயம் ஒரு பொதுத் தீர்ப்பு அல்ல. அந்த வகையில் அவரது எல்லா அறிவிப்புகளும் ஏற்கப்படவோ

மறுக்கப்படவோ மாட்டாது. மாறாக அது குறித்ததொரு சந்தர்ப்பத்துக்குரியதாக அல்லது குறித்ததொரு ஆசிரியருடன் சம்பந்தப்பட்டதாக அல்லது குறித்ததொரு அறிவிப்புடன் தொடர்பானதாகவே காணப்படும். ஒருவர் நம்பகரமானவராக இருந்தாலும் அவர் தவறு செய்திருப்பதாக உறுதிப்படுத்தப்படும் ஹதீஸ் மறுக்கப்படும். அதுபோல் பலவீனமான ஒருவருடைய ஹதீஸ் குறித்த அறிவிப்பில் அவர் தவறு செய்யவில்லை என்றிருப்பின் அது ஏற்கப்படும். அவரது ஏனைய ஹதீஸ்களும் பகுப்பாய்வின் அடிப்படையில்தான் ஏற்கவும் மறுக்கவும் படும். இதிலிருந்து, இமாம் யஹ்யா இப்னு முஈன் போன்று ஒரே இமாமிடம் இருந்து அறிவிப்பாளர்கள் குறித்த சரிகாணலும் குறைகாணலும் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்தமைக்கான நியாயம் என்னவென்று புரிந்து கொள்ள முடிகின்றது. அவரது 'அத்தாரீக்' என்னும் நூலில் இதற்கான உதாரணங்களை நிறையவே காணலாம். உண்மையில் இங்கு முரண்பாடு இருப்பதாகக் கருதுவதற்கான காரணம், குறித்த அறிவிப்பாளர்களுக்கு வழங்கப் பட்ட தீர்ப்புக்களுக்கான காரணங்கள் மற்றும் நியாயங்கள் குறித்துத் தெளிவாகக் குறிப்பிடப்படாமையாகும். இதனால் பிந்தையவர்களுக்கு அறிவிப்பாளர்களது நிலைமைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டவில்லை. அதிலும் குறிப்பாக அவர்கள் நூல்களை மையப்படுத்தி தமது பகுப்பாய்வை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டதன் பின்னர் நுண்ணிய குறைபாடுகளை அவர்களால் கண்டு கொள்ள முடியவில்லை. அவை மிகப் பெரும்பாலும் களத்தில் நின்று அறியப்பட வேண்டியவையும் நீண்ட அனுபவத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியவையுமாகும். இந்த விசயங்கள் சுமார் ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டு அளவில் நிறைவுக்கு வந்தன.

மேற்கூறப்பட்ட உண்மைகளின் அடிப்படையில், ஹதீஸ் கலைகள் குறித்து பிந்தையவர்கள் வழங்கிய வரைவிலக்கணங்கள், விதிகள், கலைச்சொற்கள். வரையறைகள் போன்றவற்றின் அறிவியல்பூர்வத்தன்மை குறித்துக் கேள்வி எழுப்பப்பட முடியும். அவர்கள் இவற்றை முழுமையாக தமது இஜ்திஹாதாகவே முன்வைத்திருக்கிறார்கள். இதன் மூலம் முந்தையவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற அறிவிப்புகள் மற்றும் அறிவிப்பாளர்கள் பற்றிய கூற்றுக்களை முறைமைப்படுத்தவே அவர்கள் முனைந்தார்கள் என்பது உண்மை. ஆனால் அந்தக் கூற்றுக்களின் சூழமைவைச் சரியாகப் பின்வந்தவர்களால் அறிந்து கொள்ள முடியாமை என்பதுதான் முக்கியமான பிரச்சினை.

இதனால் முந்தையவர்களின் கூற்றுக்களைப் புரிந்து கொள்வதிலும் புரிய வைப்பதிலும் அதனையொட்டி விதிகளைப் பரிந்துரைப்பதிலும் அவர்கள் மத்தியில் வேறுபட்ட பார்வைகள் ஏற்படுவது இயல்பானது. இங்கிருந்துதான் பெருமாற்றம் ஆரம்பிக்கின்றது. முந்தையவர்களது சூழல் பின்னணி கொண்ட கூற்றுக்களை மையப்படுத்தி இவர்கள் வரையறுக்கப்பட்ட விதிகளையும் கோட்பாடுகளையும் வடிவமைத்தார்கள். பின்னர் அந்தக் கோட்பாடுகளை மையப்படுத்தி முந்தையவர்களது கூற்றுக்களை விசாரணை செய்தார்கள். அந்த வகையில் அந்தக் கூற்றுக்களை சரிகாண்பதும் பிழை காண்பதும் அந்த அறிவிப்புகளை ஏற்பதும் மறுப்பதும் அனைத்தும் அந்த விதிகளுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்புடைமையாக இருத்தல் என்பதை மையப்படுத்தியே நடைபெற்றன.

## நான்காவது: பிந்தைய ஹதீஸ் துறையாளர்களிடம் சட்டக் கோட்பாட்டு அணுகுமுறையின் தாக்கம்

இமாம் ஷாஃபியின் *'ரிஸாலா'* என்ற நூல் சட்டக் கோட்பாட்டியலில் எழுதப்பட்ட முதல் நூல் எனலாம். அது சட்டக் கோட்பாட்டியலில் இமாம் ஷாபியுடைய முதன்மை வகிபாகத்தை எடுத்துக் காட்டுவது போல், ஹதீஸ் கலைகளிலும் அவரது முதன்மையான வகிபாகத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இமாம் ஷாஃபி தர்க்கவியலைக் கடுமையான கண்டனத்திற்கு உட்படுத்தியிருந்த போதும், அவருக்குப் பின்னர் அவரது மாணவர்கள் அவரது அணுகுமுறைக்கு முற்றிலும் மாற்றமான தர்க்கவியல் அணுகுமுறையில் சட்டக் கோட்பாட்டியலை தொகுக்கத் தொடங்கினர். பிற்பட்ட நாட்களில் இந்த அணுகுமுறை தர்க்கவியல் அணுகுமுறை என்றே அழைக்கப்பட்டது. ஷாஃபி மத்ஹபினரே இந்த அணுகுமுறையைப் பிரபலமாகக் கைக்கொண்டவர்களாகக் கருதப்படுகின்றனர். சட்ட மரபுகளைக் கோட்பாட்டு ரீதியாக அணுகியவர்களில் ஷாஃபி மத்ஹபினர் முன்னிலை வகிக்கின்றனர். அதனாலோ என்னவோ சட்டக் கோட்பாட்டியலில் தர்க்கவியல் அணுகுமுறைக்கான மற்றொரு பெயராகவே ஷாஃபி மரபின் அணுகுமுறை என்பது வழங்கப்படுகின்றது. ஆனால் மாலிக் மற்றும் ஹன்பலி மத்ஹபினரும் இதே அணுகுமுறையை சட்டக் கோட்பாட்டியலில் பின்பற்றியிருக்கிறார்கள். இருப்பினும் ஷாஃபி மத்ஹபினரே இந்த அணுகு முறையின் கீழ் சட்டக் கோட்பாட்டியல் தொகுக்கப்படுவதற்கான வாயிலைத் திறந்து விட்டவர்கள். இந்த

அணுகுமுறையைப் பின்பற்றி பல்வேறு நூல்களை எழுதினர். பின்னர் ஏனைய மத்ஹபினரும் இதே அணுகுமுறையைப் பின்பற்றி சட்டக் கோட்பாட்டைத் தொகுக்கத் தொடங்கினர். இது கிரேக்கத் தர்க்கவியலை அடிப்படையாகக் கொண்டது என்பதை நாம் அறிவோம்.

சட்டக் கோட்பாட்டியல் சுன்னா பற்றிய கலைகளை சட்டவாக்கத்துக்கான இரண்டாவது சட்ட மூலாதாரம் என்ற வகையிலேயே ஆராய்கின்றது. தர்க்கவியல் அணுகுமுறையின் அடிப்படையில் சுன்னா பற்றிய கலைகள் அணுகப்பட்ட போது சட்டக் கோட்பாட்டியலில் நடைபெற்றது போல் இங்கேயும் வரைவிலக்கணங்களும் விதிகளும் தோற்றம் பெற்றன. இது ஹதீஸ் கலைகளுக்கும் பிரயோகத்திற்கும் இடையில் ஓர் இடைவெளியை ஏற்படுத்தி விட்டது. இதே நிலையை நாம் சட்டக் கோட்பாட்டியலுக்கும் சட்டவியலுக்கும் இடையிலும் காணலாம்.

பொதுவாக இஸ்லாமியக் கலைகள் அனைத்தும் தத்துவம் மற்றும் தர்க்கவியலின் பாதிப்பால் சுமையான கலைகளாக மாறிவிட்டன. ஹதீஸ் கலைகளைப் பொருத்தவரை இதன் பாதிப்பு சட்டக் கோட்பாட்டியல் ஊடாகவே நடைபெற்றுள்ளது.

முந்தையவர்ளின் அணுகுமுறைக்கும் பிந்தையவர்களின் அணுகு முறைக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிக்கும் உதாரணங்கள்:

இமாம் அல்புகாஈ கூறுகின்றார்: "இமாம் இப்னுஸ் ஸலாஹ் சட்டக் கோட்பாட்டாளர்கள் மற்றும் ஹதீஸ் துறையாளர்கள் இரு தரப்பினரது அணுகுமுறைகளையும் கலந்து விட்டார். ஹதீஸ் துறையாளர்களிடம் சட்டக் கோட்பாட்டாளர்களைப் போல், அறிவிப்பாளர்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த பொது விதிகள் காணப்படவில்லை."

மலபாரி, இமாம் ஹாகிமின் 'குறைபாடு' வகையைப் பற்றிப் பேசும்போது கூறுகின்றார்: அறிவிப்பாளர்களின் மனனம், புரிதல் போன்றவற்றையே நாம் ஆதாரமாகக் கொள்வோம், வேறு விசயங்களை அல்ல. மலபாரி தொடர்ந்து கூறும்போது, "சட்டக்கோட்பாட்டியல் அணுகுமுறை மற்றும் ஹதீஸ் துறை யாளர்களின் அணுகுமுறை இரண்டையும் கலந்து விட்டதனால் இந்தக் கலை மிகவும் சிக்கலான ஒன்றாக மாறியது. இந்தக் கலவையான அணுகுமுறையை முதலில் கடைப்பிடித்த நூலாக நாம் இமாம் கதீப் அல்பக்தாதியின் *'அல்கிபாயா பீ உலுமிர் ரிவாயா'* என்ற

நூலைக் குறிப்பிடலாம். இவருக்குப் பின்வந்தவர்களிடம் இந்த அணுகுமுறையே நிலையாக மாறியது. அவர்கள் தமது நூல்களில் சட்டக் கோட்பாட்டியல் மற்றும் தர்க்கவியலாளர்களின் கூற்றுக்களை, அவற்றுக்கான நியாயங்களுடன் தாராளமாகப் பயன்படுத்தினார்கள். இதனால் ஹதீஸ் துறையாளர்களின் கருத்துக்களை விடவும் அவர்களது கருத்துக்கள் மிகைத்து விட்டன'' என்கிறார்.

இமாம் இப்னு ரஜப் அல்ஹன்பலி கூறுகின்றார்: இமாம் அபூபக்ர் அல் பக்தாதி இந்தத் தலைப்பில் 'தம்யீஸுல் மஸீத் பீ முத்தஸிலில் அஸானீத்' என்ற பெயரில் அழகான ஒரு நூலைத் தொகுத்திருக்கின்றார். அதனைப் பிரதானமாக இரண்டு பகுதிகளாக வகுத்திருக்கிறார். ஒன்று, அறிவிப்பாளர் வரிசைகளில் மேலதிக வார்த்தைகளைக் குறிப்பிடுவதும் விடுவதும் அனுமதிக்கப்பட்ட பகுதிகள். மற்றது, மேலதிக வார்த்தைகள் மறுக்கப்படும் பகுதிகள். அவர் தொடர்ந்து கூறும்போது, ``இமாம் கதீபிடம் ஒரு முரண்பாடு இருக்கிறது. அவர் தமது 'கிஃபாயா' என்ற நூலில், அறிவிப்பாளர்களின் தொடரான மற்றும் தொடரற்ற அறிவிப்புகள் குறித்து மக்களிடம் வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. முந்தையவர்களிடம் வேறுபட்ட பார்வைகளைக் காண முடியாது. மாறாக தர்க்கவியலாளர்களின் நூல்களில்தாம் இவற்றைக் காண முடியும் என்று கூறிவிட்டு, நம்பிக்கையான ஒருவரது மேலதிக வார்த்தைகளை நிபந்தனையின்றி ஏற்க முடியும் என்ற கருத்தைத் தேர்வு செய்துள்ளார். இவரது இந்தக் கருத்தை பல சட்டவியலாளர்கள் வரவேற்றுள்ளனர். ஆனால் அவர் 'தம்யீஸ்' என்ற நூலில் பேசிய கருத்துடன் இது முரண்படுகின்றது. சில சட்டவியலாளர்கள் தம்யீஸில் அவர் பேசிய கருத்தை மறுத்துள்ளனர். கிஃபாயாவின் கருத்துடனேயே தமது உடன்பாட்டைத் தெரிவித்துள்ளனர்''.

இமாம் அல்அலாஇ கூறுகின்றார்: ``இமாம் இப்னுஸ் ஸலாஹ் சட்டக் கோட்பாட்டாளர்கள் மற்றும் ஹதீஸ் துறையாளர்கள் இடையே நடுநிலை வகித்திருக்கின்றார். அவர் நம்பகமானவர்களின் மேலதிக வார்த்தைகளை மூன்றாக வகுத்து நோக்கியுள்ளார். ஆனால் இந்த விவகாரத்தைப் பொருத்தவரை முந்தையவர்களது கருத்துக்களில் நாம் தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. காரணம், இது அவர்களுடைய சிறப்புத் துறையுடன் சம்பந்தப்பட்டது. நம்பகமானவரின் மேலதிக வார்த்தைகளில் அவர்களது அணுகுமுறையைக் கடைபிடிப்பதினூடாகவே அவற்றை ஏற்பதா மறுப்பதா என்ற சரியான முடிவை நோக்கிச் செல்ல

முடியும். ஏனெனில் அவர்கள் ஹதீஸின் பின்புலங்கள், சூழல் போன்ற அனைத்தையும் கவனத்தில் கொண்டே அதற்கான முடிவைப் பெறுவார்கள்.” அவர் தொடர்ந்து கூறுகின்றார்: “இவற்றுக்கிடையில் பலமானதைத் தேர்வு செய்வதற்கு எமது இமாம்கள் பல வழிகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதில் எல்லா ஹதீஸ்களுக்குமான ஒரு பொது விதி கிடையாது. ஒவ்வொரு ஹதீஸுக்கும் பிரத்தியேகமான பலப்படுத்தல் வழி இருக்கின்றது. இதனைப் பல்வேறு அறிவிப்பாளர் வரிசைகளை ஆய்வு செய்யும் ஒருவராலேயே கண்டுகொள்ள முடியும். இதனாலேயே முந்தையவர்கள் இந்த விவகாரத்தில் எல்லாவற்றுக்கும் பொதுவான விதியொன்றைக் குறிப்பிடவில்லை. மாறாக ஒவ்வொரு ஹதீஸைப் பொருத்தும் அவர்களது பார்வை வித்தியாசப்பட்டே அமைந்தது.”

மலபாரி கூறுகிறார்: நம்பகமானவரின் மேலதிக வார்த்தைகளை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ளுதல், சட்டவியல் மற்றும் சட்டக் கோட்பாட்டியல் அறிஞர்கள் பலரதும் கருத்தாக இருக்கின்றது. ஷெய்க் முஹியத்தீன் அந்நவவியும் தம் நூல்களில் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். இது விமர்சனத்துக்குரிய ஒரு நிலைப்பாடாகும். ஏனெனில், உதாரணமாக, ஒரே மூலத்திலிருந்து ஒரு ஹதீஸ் கிடைக்கப் பெறுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அதனை நம்பகமான சிலர் ஒரு வடிவில் அறிவிப்புச் செய்ய, அவர்களைவிட நேர்த்தியும் மனன சக்தியும் குறைந்த நம்பகமான மற்றொருவர், மேலதிக வார்த்தையுடன் அதனை அறிவிப்புச் செய்கின்றார். அது ஏனையவர்களது அறிவிப்புடன், அதன் அறிவிப்பாளர் வரிசையிலோ அல்லது உள்ளடக்கத்திலோ முரண்படுகின்றது எனில், அவரது அறிவிப்பை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? ஏனெனில் மனன சக்தியில் அல்லது எண்ணிக்கையில் அதிகமானவர்களே இவருடன் முரண்பட்டுள்ளனர். அதிலும் அவர்களுடைய ஆசிரியரின் அறிவிப்புகள் புறக்கணிக்கப்பட முடியாதளவு, இமாம் ஸுஹ்ரி போல் முக்கியமானவராக இருந்தால், அவரிடமிருந்து அவரது மாணவர்கள் ஹதீஸ்களைக் கற்றால் அவற்றைக் கண்டிப்பாக அதே வடிவில் அறிவிப்புச் செய்வார்கள். அவற்றை ஒருபோதும் தவிர்க்க மாட்டார்கள். இதுபோன்ற ஒரு நிலையில் மேலதிக வார்த்தையை அறிவித்தவர் தவறிழைத்திருப்பதற்கான வாய்ப்பே அதிகமாக இருக்கின்றது.

இமாம் ஷாபி தமது ‘அல்உம்’ என்ற நூலில் இமாம் மாலிக் மற்றும் அவரது மாணவர்கள் ஊடாக மேலதிகமாக அறிவிப்புச் செய்யப்பட்ட

‘விடுதலை செய்யப்பட வேண்டிய அளவை விடுதலை செய்து கொள்வான்’ என்ற வார்த்தை குறித்துக் கருத்துக் கூறும்போது, ஒருவர் தமது மனன ஆற்றலைவிட அதிகமான ஆற்றல் கொண்ட ஒருவரது அறிவிப்புகு மாற்றமாக அறிவித்தாலோ அல்லது ஹதீஸை மனனமிடாத ஒருவருடன் இணைந்து ஹதீஸை அறிவித்தாலோ அதிலும் இவர் தனியொருவராகவும் ஏனையோர் பலராகவும் உள்ள போது இவர் தவறு செய்திருப்பதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது. மேலதிக வார்த்தைகள் பலருடைய அறிவிப்புகளுடன் அல்லது ஆற்றல் அதிகமானவர்களது அறிவிப்புகளுடன் முரண்படுகின்ற போது அவை ஏற்கப்பட மாட்டாது என்கிறார்.

மேலதிக வார்த்தைகளை ஏற்றல் என்பது, அதனைச் சூழவுள்ள காரணிகளிலேயே தங்கியிருக்கின்றது என்று இமாம் இப்னுஸ் ஸலாஹ் கருதுகின்றார். இமாம் மலபாரி கூறுகின்றார்: சூழவுள்ள காரணிகள் ஒவ்வொரு ஹதீஸுக்கும் வேறுபட்டமைகின்றன. எல்லா ஹதீஸ்களையும் அளப்பதற்குரிய பொது விதியொன்று கிடையாது. மிகவும் நம்பகமானவருடன் முரண்படுதல் அல்லது அதிக எண்ணிக்கையினருடன் முரண்படுதல் என்ற வரையறைகளுடன் மட்டுமே அந்தக் காரணிகள் சுருங்கி விடுவதுமில்லை. அந்தக் காரணிகளின் வகைமை மற்றும் பரிமாணங்களை நுண்ணிய ஹதீஸ் பகுப்பாய்வாளர்கள் தவிர வேறு எவரும் புரிந்து கொள்ள முடியாது. இதனை இமாம் இப்னுஸ் ஸலாஹ் “காரணிகளுடன் அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டவரும் அவசியம்” என்று குறிப்பிட்டார். இங்கு அறிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டவர் என்பவர் ஹதீஸைப் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் கொண்டவரைக் குறிக்கின்றது.

நம்பகமானவரது மேலதிக வார்த்தைகள் என்ற விவகாரம், ஹதீஸ் வகைகளுள் ஷாத், முன்கர் என்ற இரண்டு வகைகளின் மீதே அடிப்படையில் எழுகின்றது. இமாம் இப்னுஸ் ஸலாஹிடத்தில் ஷாத் என்பது, பிறருடன் முரண்படக் கூடிய தனியொருவரது ஹதீஸ் என்றும் பிறருடன் முரண்படாத பலவீனமான தனியொருவது ஹதீஸ் என்றும் வகைப்படுத்தப்பட்டு நோக்கப்படுகின்றது. முதல் வகையினுள் தன்னை விடவும் மனன ஆற்றல் அதிகமுள்ள ஒருவரது அறிவிப்புடன் முரண்படுதல் என்ற விசயமும் உள்ளடங்குகின்றது. இங்கு முரண்பாடு என்பதற்குப் பல வடிவங்கள் காணப்பட முடியும். உதாரணமாக, அறிவிப்பாளர் வரிசையில் அல்லது ஹதீஸ் உள்ளடக்க வசனத்தில் அல்லது இரண்டிலும் ஏதேனும் ஒரு

வார்த்தை அதிகமாக அல்லது குறைவாகக் காணப்படுதலைக் குறிப்பிடலாம். ஒருவர் தன்னை விடவும் மனன ஆற்றலில் தரம் கூடிய ஒருவர், அவரது அறிவிப்பில் தவிர்த்த ஒரு வார்த்தையை தனது அறிவிப்பில் சேர்த்திருக்கின்றார் எனில், இவரது அறிவிப்பு ஷாத் என்ற வகைக்குள் அடங்குகின்றது. மேலதிக வார்த்தையை அறிவிப்புச் செய்பவரே மற்றவரை விட மனன ஆற்றல் அதிகம் கொண்டவர் எனில் அவரது ஹதீஸ் ஸஹீஹானதாகக் கருதப்படும். அது ஷாத் என்ற வகையினுள் அடங்காது. இதிலிருந்து நம்பகமானவரது மேலதிக வார்த்தைகளை ஏற்றல் என்பது, அவரது மனன ஆற்றல் அதிகம் என்பதை உறுதிப்படுத்தும் சூழல் காரணிகள் மீதே தங்கியிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இதனால் தான் இமாம் இப்னு ஹஜர் நம்பகமானவரது மேலதிக வார்த்தைகள் என்ற விவகாரத்துக்கும் ஷாத் என்ற வகைக்கும் இடையிலான சம்பந்தத்தை உறுதி செய்யும் வகையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: “இங்கு ஒரு விசயம் குறிப்பாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஸஹீஹுக்கான நிபந்தனையில் அது ஷாத்தாக இருக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஷாத் என்பதை விளங்கப்படுத்தும்போது, நம்பகமான ஒருவரது அறிவிப்புடன் அவரை விட மனன ஆற்றல் — அது எழுத்து வடிவிலும் இருக்கலாம் — அதிகம்கொண்ட ஒருவரது அறிவிப்பு அல்லது அதிக எண்ணிக்கையினரின் அறிவிப்பு முரண்படுகின்றது எனில், அவரது அறிவிப்பை ஏற்றுக் கொள்வதா இல்லையா? அல்லது அதனை ஷாத் என்று அழைப்பதா இல்லையா? என்பதே இங்கு தீர்மானிக்கப்பட வேண்டியது. இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு துல்லியமாக அடையாளப்படுத்தப்பட வேண்டும் அல்லது முரண்பாடு ஏற்கப்பட வேண்டும்.”

மேற்கூறப்பட்டவற்றை வைத்துப் பார்க்கின்ற போது, நம்பக மான அறிவிப்பாளர்கள் மத்தியில் ஒருவர் ஊடாக ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை அல்லது உள்ளடக்க வசனத்தில் மேலதிக மாகக் குறிப்பிடப்படும் ஒரு விசயத்தின் காரணமாக ஏற்படும் கருத்து வேறுபாட்டில், அந்த மேலதிக வார்த்தை தவறுதலாகவோ அல்லது மறதியினாலோ சொல்லப்பட்டிருப்பின் அதனையே ஷாத் என்று அழைப்பர். அதனை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இமாம் இப்னு ஹஜர் இது பற்றிக் கூறும்போது, ஸஹீஹை ஏற்பதற்கு அது ஷாத்தாக இருக்கக் கூடாது என்று நிபந்தனை விதித்தவர்கள் ஹதீஸ் துறையாளர்கள். நம்பகமானவரது மேலதிக வார்த்தைகளை — சில சமயம் அது

ஹதீஸ் துறையாளர்களிடத்தில் ஷாத்தாகக் கருதப்படக் கூடியதாகவும் இருக்கும் — சட்டவியல் மற்றும் சட்டக் கோட்பாட்டியலாளர்கள் ஏற்றார்கள் என்கிறார். இமாம் இப்னு ஹஜர் சொல்வதிலிருந்து இந்த இரண்டு ஆய்வுகளிலும் ஏற்றல் மறுத்தலில் ஏற்றத்தாழ்வு இருப்பதாக அவர் கருதுகின்றார். அதற்குக் காரணம், இமாம் இப்னுஸ் ஸலாஹ் தமது குறைபாடுகள் பற்றிய ஆய்வில் இவ்விவகாரம் பற்றிய ஹதீஸ் துறையாளர்களது கருத்துக்களைப் பதிவு செய்தாலும் அது குறித்த தனது நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை, சில சமயம் அவர் ஷாத் குறித்த தலைப்பில் சட்டவியல் மற்றும் சட்டக் கோட்பாட்டியல் அறிஞர்களது நிலைப்பாட்டை ஆதரித்திருக்கலாம்.

## ஐந்தாவது: புறநிலைக்கும் தன்னிலைக்கும் மத்தியில் ஹதீஸ் அறிவிப்பாளர்கள் கலை

### 1. வரைவிலக்கணமும் பேசுபொருளும்

ஹதீஸ் அறிவிப்பாளர்களை ஏற்றல் மறுத்தல் நோக்கில் அவர்களது நிலைமைகளை ஆராயும் கலை என்று இது வரையறுக்கப்படுகிறது. கலை என்பது, அதன் விதிகள், அது உள்ளடக்கும் பரப்புக்கள் மற்றும் அறிவிப்பாளர்களது ஏற்பையும் மறுப்பையும் அறிந்து கொள்ளத் துணையாகும் அவர்களது நிலைமைகளையும் குறிக்கக் கூடிய ஒரு பிரயோகமாகும். இவற்றுள் ஏதேனும் ஒரு பகுதி தனித்து ஆய்வு செய்யப்படுவதன்மூலம் அது தனித்ததொரு கலையாக மாறவும் முடியும். உதாரணமாக, அறிவிப்பாளர்களின் பிறப்பும் இறப்பும், அவர்களது பெயர்களும் புனைப் பெயர்களும் வம்சமும், அவர்களது தாயகங்களும் பயணங்களும், ஆசிரியர்களும் மாணவர்களும், அவர்களைச் சரிகாணலும் குறைகாணலும், பெயர்களில் ஒத்த தன்மையையும் வேறுபாடுகளையும் அறிதல், நம்பகமானவர்களையும் பலவீனர்களையும் அறிதல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

ஹதீஸ் அறிவிப்பாளர்கள் கலையின் பேசுபொருள்: அறிவிப்பாளரே பிரதானமாக இதன் பேசுபொருள். அவரது அறிவிப்புகளை ஏற்பதா மறுப்பதா என்ற அடிப்படையில் அவர் பற்றிய ஆய்வு இங்கு நடைபெறும். அறிவிப்பாளர் என்ற பிரயோகம் ஆண் பெண் இருவரையும் உள்ளடக்கியது. ஆனால் இங்கு இல்முர் ரிஜால் என்ற பிரயோகம் எந்தப் பக்கம் மிகையானது என்ற அடிப்படையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இது

தனித்த ஒரு கலையல்ல. இது குறிப்பிட்ட ஒரு சாராரின் வரலாற்றைப் பேசுவதனால் வரலாற்றியல் கலையின் ஒரு பகுதியாகவே இது கருதப்படுகின்றது. *'மிப்தாஹுஸ் ஸஆதா'* என்ற நூலில் ''இந்தக் கலை ஒரு கண்ணோட்டத்தில் வரலாற்றியலின் ஒரு பகுதி. மற்றொரு கண்ணோட்டத்தில் ஹதீஸ் கலையின் ஒரு பகுதி'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, வரலாற்றியல் கலை என்பது பிறப்பு இறப்பு நிலைகள் தெளிவாக வரையறுக்கப்படக் கூடிய வகையில் காலங்களை அறிந்து கொள்வதாகும். இதில் அதற்கு இணையான நிகழ்வுகளும் சம்பவங்களும் உள்ளடங்கும். வரலாற்றியல் கலையின் பேசுபொருள் மனிதனும் காலமும் ஆகும். அறிவிப்பாளர்கள் கலையின் பேசுபொருள் அறிவிப்பாளர் மட்டுமேயாகும். அதாவது, அவரது பண்புகள், அவர் வாழ்ந்த காலம், அவரது மரணம், அவரது பயணங்கள் போன்ற பல விசயங்கள் அவரைப் பற்றி ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அறிவிப்பாளர்கள் என்போர் வரலாற்றியலினுள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மனிதர்களுள் ஒரு பகுதியினராவர். அந்த வகையில் பொதுக் கண்ணோட்டத்தில் இவ்விரு கலைகளும் ஒற்றுமைப்படுகின்றன. எனவே இமாம் புகாரீயின் தாரீகுல் புகாரீ போன்ற முந்தையவர்களால் வரலாறு என்ற பெயரில் தொகுக்கப்பட்ட நூல்கள் உண்மையில் அறிவிப்பாளர்களின் வரலாற்றைப் பேசியனவாகும். இது, அறிவிப்பாளர் கலையானது வரலாற்றியல் கலைக்குப் புறம்பான தனித்ததொரு கலை என்பதை மறுக்க மாட்டாது.

## 2. ஸஹாபி என்பவர் யார்?

சரிகாணல் மற்றும் குறைகாணல் துறை அறிஞர்கள், நிலைமைகள் பகுப்பாய்வு செய்யப்படும் ஏனைய அறிவிப்பாளர்கள் பட்டியலில் ஸஹாபாக்களைச் சேர்க்கவில்லை. காரணம், அவர்கள் ஸஹாபாக்கள் அனைவரும் நேர்மையானவர்கள் என்ற பொது விதியினுள் அவர்களை உள்ளடக்கினர். இதில் எந்த ஸஹாபியும் விதிவிலக்கில்லை. ஹதீஸ் துறையாளர்கள் ஸஹாபி என்பதை 'ஈமானுடன் நபியவர்களைச் சந்தித்து, முஸ்லிமாகவே மரணித்தவர்' என்று வரைவிலக்கணப்படுத்தினர். அவர்கள் சந்திப்பு என்பதற்கு நீண்ட வரையறைகள் சொல்லவில்லை. அது ஒரு நொடிப் பொழுதாக இருப்பினும் பரவாயில்லை என்றனர். நீண்ட காலம் உடனிருத்தல் அல்லது ஒரு வருடத்திற்கு மேல் உடனிருத்தல் அல்லது அவருடன் போராட்டங்களில் கலந்து கொண்டிருத்தல் போன்ற நிபந்தனைகளைச் சொல்லவில்லை. ஆனால் ஆஸிமுல் அஹ்வல்

அவர்கள் இதற்கு மாற்றமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். வழக்காறில் தோழமை என்று சொல்வதற்குரிய உறவு இருந்திருக்க வேண்டும் என்றார். சட்டக் கோட்பாட்டாளர்களும் இதே நிபந்தனையைக் குறிப்பிட்டுள்ளனர். ஸஹாபி என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றை இங்கு குறிப்பிடுவது அவசியமற்றது.

சட்டக் கோட்பாட்டாளர்களிடத்திலும் ஸஹாபியை வரையறுப்பதில் வேறுபட்ட பார்வைகள் இருக்கின்றன, சிலர், நபியவர்களை நேரில் கண்டு, தோழமைக்குரிய பண்புகளைப் பெற்ற நீண்ட கால உறவாக அது இருக்க வேண்டும், அவரிடமிருந்து அறிவிப்புகளைச் செய்திருக்க வேண்டியதில்லை என்றனர். மற்றும் சிலர் நபியவர்களை நேரில் கண்டிருந்தால் போதுமானது, தோழமைக்குரிய பண்புகளைப் பெற்ற நீண்ட கால உறவாகவோ அல்லது அவரிடமிருந்து ஹதீஸ்களை அறிவித்திருக்கவோ அவசியமில்லை என்றனர். இன்னும் சிலர் ஸஹாபி என்ற பெயர், நீண்ட தோழமையும் அவரிடமிருந்து ஹதீஸ்களைப் பெற்று அறிவித்தும் இருந்தாலே வழங்கப்படுகின்றது என்றனர்.

ஸஹாபி என்ற பெயரைப் பெறுவதற்குரிய மற்றொரு நிபந்தனை, அவர் முஸ்லிமாகவே மரணித்திருக்க வேண்டும் என்பது, நபியவர்களை ஈமானுடன் சந்தித்த பின்னர் நிராகரிப்புடன் மரணித்தால் அவர் ஸஹாபி என்றழைக்கப்பட மாட்டார். பேசுவதைப் புரிந்து பதில் தரக்கூடிய பருவத்தில் இருக்கும் சிறுவர்களும் ஸஹாபி என்ற பெயரைப் பெறுவர் என இமாம் நவவி மற்றும் அல்இராகி போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி) மஹ்மூத் இப்னுர் ரபீஃ போன்றவர்களை இந்த வகையினுள் அடக்க முடியும். மேற்குறித்த பண்பை அடையாத சிறுவர்கள் ஸஹாபி என்ற சிறப்பைப் பெற்றுக் கொண்டாலும் அவர்களது அறிவிப்புகள் தொடரற்றவையாகவே கருதப்படும்.

இமாம் புஹாரியுடைய வரையறையில், நபியவர்களை நேரில் கண்டு அவருடன் இருந்த அனைத்து முஸ்லிம்களையும் ஸஹாபி என்றழைக்கலாம் என்றார். பல சட்டவியல் அறிஞர்கள் இந்த வரையறையை மறுத்துள்ளனர். கீழ்வரும் திருக்குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்பட்டவர்களை ஸஹாபி என்று கருத முடியாது என்றனர்: "முனாபிக்குகள் உங்களிடம் வந்து நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நாங்கள் சாட்சி கூறுகின்றோம் என்கின்றார்கள். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை அல்லாஹ்

நன்கறிவான். முனாபிக்குகள் பொய்யுரைக்கிறார்கள் என்பதற்கு அல்லாஹ் சாட்சியாக இருக்கின்றான்" (முனாபிகூன்: 1,2). இந்த நயவஞ்சகர்கள் மதீனாவில் வாழ்ந்தவர்கள். அவர்கள் நபியவர்களை நேரில் கண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களை ஸஹாபி என்று சொல்வதில்லை. அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக மறைமுகமாகப் போர்தொடுத்தவர்கள். முஸ்லிம்களுக்கு எதிராக இரகசியமாகச் சதி செய்தவர்கள். திருக்குர்ஆன் அவர்களை எச்சரித்ததுடன் நபியவர்களுக்கு அருகாமையில் இருப்பதையும் தடைசெய்தது. "முனாபிக்குகளும் தமதுள்ளத்தில் நோய் உள்ளவர்களும் மதீனாவில் பொய்ப் பிரச்சாரம் செய்வோரும் அவற்றை நிறுத்திக் கொள்ளவில்லை எனில், அவர்களுக்கெதிராக உம்மை நடவடிக்கை எடுக்க வைப்போம். பின்னர் அவர்கள் உமக்கு அருகாமையில் நீண்ட காலம் வாழ மாட்டார்கள்" (அஹ்ஸாப்: 60).

### 1. ஒருவர் ஸஹாபி என்பதை உறுதிப்படுத்துவது எவ்வாறு?

கீழ்வரும் ஐந்து வழிகள் ஊடாக இது உறுதிப்படுத்தப்படும்:

1. குறித்த செய்தி முதவாதிராக இருத்தல். உதாரணமாக சுவனத்திற்கு நற்செய்தி சொல்லப்பட்ட ஸஹாபாக்கள் போல்.
2. குறித்த செய்தி முதவாதிராக இல்லாவிட்டாலும் பிரபல்யமான வடிவில் இருத்தல். உதாரணமாக, உக்காஷா இப்னு முஹ்ஸின் என்பவர் ஸஹாபி என்பது உறுதிப்படுத்தப்பட்டது போல்.
3. ஸஹாபி என்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட ஒருவர் மூலம் அறிமுகம் செய்யப்படுதல்
4. நம்பகமான தாபிஈ ஒருவரது கூற்று, தனிநபரது கூற்று இவ்விசயத்தில் ஏற்புடையதாகும்.
5. குறித்த காலத்தில் வாழ்ந்த நேர்மையான ஒருவர் தம்மை ஸஹாபி என்று அறிமுகம் செய்தல். ஏனெனில் அவரது நேர்மை, பொய் சொல்வதைத் தடுத்துவிடும்.

### 2. நபித்தோழர்களின் நேர்மை

அஹ்லுஸ் ஸுன்னாக்களும் ஸைதீக்கள் சிலரும் மற்றும் முஃதஸிலாக்கள் சிலரும் ஸஹாபாக்கள் அனைவரும் நேர்மையானவர்கள் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். அதிலும் குறிப்பாக அவர்களில் குழப்பத்தில் பங்கேற்றவர்களாக இருப்பினும் இல்லாதிருப்பினும் அவர்களில் பாவங்களில் இருந்து பாதுகாப்பாக

இருந்தவர்களும் சரி, சில பாவங்களில் ஈடுபட்டவர்களும் சரி அனைவரும் நேர்மையானவர்கள் என்ற வட்டத்துள் அடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளனர். சிலர் சொல்வார்கள்: "அவர்கள் நேர்மையானவர்கள் என்று தீர்ப்பளிப்பது, அவர்களுக்குப் பின்வருபவர்களது நேர்மையை அவர்களது அறிவிப்புகளின் போது ஆராய்வது அவசியம் என்பதைச் சொல்கின்றது". இன்னும் சிலர் கூறுகிறார்கள்: குழப்பம் நிகழும் வரை அவர்கள் நேர்மையானவர்கள். குழப்பத்திற்குப் பின்னர் அவர்களது நேர்மை ஆராயப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டும். சிலர், அனைவரது அறிவிப்புகளும் மறுக்கப்பட வேண்டும் என்றனர். காரணம் இரு குழுக்களில் ஏதேனும் ஒன்று பாவம் செய்திருக்கின்றது. ஆனால் அது எந்தக் குழு என்பது உறுதியாகத் தெரியாது. எனவே இருதரப்பும் மறுக்கப்படும் என்றனர். சிலர், அவர்கள் தனித்து சொல்லும் செய்திகள் ஏற்கப்படும் என்றனர். காரணம், அடிப்படையில் அவர்கள் நேர்மையானவர்கள். ஆனால் அவர் பாவம் செய்திருக்கிறார் என்று நாம் சந்தேகித்தால், எதிர்தரப்பினரின் கருத்தில் நின்று அதனைத் தீர்மானிக்க முடியாது. ஏனெனில் இருவரில் ஒருவர் நிச்சயம் பாவம் செய்திருக்கின்றார், என்றனர்.

3. ஸஹாபாக்களின் அறிவு

ஸஹாபாக்கள் அனைவரும் நபியவர்களுடைய சுன்னாவை அறிந்து வைத்திருப்பதில் சமதரத்தினராக இருக்கவில்லை. இமாம் மஸ்ரூக் கூறுகின்றார்: "நான் ஸஹாபாக்களுடன் அமர்ந்திருக்கின்றேன். அவர்கள் நீர் நிலைகளைப் போன்றவர்கள். சிலர் ஒருவருக்கு நீர் வழங்குவதற்குரியவர்கள், மற்றும் சிலர் இருவருக்கு நீர் வழங்குவதற்குரியவர்கள். இன்னும் சிலர் நூறு பேருக்கு நீர் வழங்குவதற்குரியவர்கள், வேறு சிலர் உலகிலுள்ள அனைவரும் வந்தாலும் நீர் வழங்க முடியுமானவர்கள்." ஸஹாபாக்கள் ஹதீஸ்களை மறப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது என்பதை இமாம் இப்னு குஸைமா குறிப்பிடுகின்றார்: "ஸஹாபாக்கள் நபியவர்களது ஹதீஸ்களை அறிவிக்கும் போது சில சமயங்களில் அவற்றைச் சுருக்கமாக அறிவிப்பர். சில சமயங்களில் அவற்றை முழுமையாக அறிவிப்பர். சில சமயம் அறிவித்ததன் பின்னர் அதனைச் சுருக்கிச் சொல்லியிருப்பார். சில சமயம் அதனைக் கேட்டவர் முழுமையாக மனனமிடாமல் சில பகுதிகளை மட்டுமே மனனமிட்டிருப்பார். சில சமயம் மனனமிட்ட சில பகுதிகளை மறந்திருப்பார்." இதுதான் நபித்தோழர்களின் நிலை எனில், ஏனையவர்களது நிலை பற்றி நாம் பேசத் தேவையில்லை.

இமாம் இப்னு ஹஸ்ம், ஸஹாபாக்களுடைய அறிவை நாம் அறிந்து கொள்வதற்கான வழி என்ன என்பது பற்றிக் கூறும் போது, "அவர்களது அறிவை இரு வழிகளில் அறியலாம். ஒன்று அவர்களது அதிகமான அறிவிப்புகளும் பத்வாக்களும். இரண்டு, நபியவர்கள் அவர்களை பல்வேறு பொறுப்புக்களுக்குப் பயன்படுத்தியமை. அறிவில்லாத ஒருவரை நபியவர்கள் இவ்வாறு பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். அவரது அறிவுத் தரத்தைக் குறிப்பதற்குரிய மிகச் சிறந்த சான்று இது எனலாம்" என்கிறார்.

## ஆறாவது: அறிவிப்பாளர்கள் கலையின் கலைச் சொற்கள்

அறிவிப்பாளர்கள் கலையின் கலைச் சொற்களும் முந்தையவர்களுக்கும் பிந்தையவர்களுக்கும் இடையில் வேறுபடுத்தி நோக்கலும்: அறிவிப்பாளர் கலையின் பல்வகைக் கலைச் சொற் பிரயோகங்களை வேறுபடுத்தி நோக்குவது, அறிவிப்பாளர்களைச் சரிகாணல் மற்றும் குறைகாணல் தீர்ப்புகளுக்கு அறிவியல்பூர்வமான ஓர் அணுகுமுறையை வடிவமைப்பதில் தாக்கம் செலுத்துமா? கலைச் சொற்களில் உள்ள கருத்து வேறுபாடுகள், அறிவிப்பாளர் கலையிலும் அறிவிப்பாளர்களைச் சரிகாணல் மற்றும் குறைகாணல் கலையிலும் எந்த வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? முந்தையவர்களிடத்திலும் பிந்தையவர்களிடத்திலும் அறிவிப்பாளர்களைக் குறைகாணல் மற்றும் சரிகாணல் செயல்பாட்டில் வரையறுத்த ஒரு பொறிமுறை காணப்படுகின்றதா? இதன் உண்மை நிலையை நாம் அறிந்து கொண்டோம் என்பதற்கான அறிவு ரீதியான குறிகாட்டிகள் எவை?

### 1. கோட்பாட்டு ஆக்கத்திற்கும் தனிப்பட்ட இஜ்திஹாதுக்கும் மத்தியில் அறிவிப்பாளர்கள் கலையும் அவர்களைக் குறைகாணல், சரிகாணல் கலையும்

பெரும் ஹதீஸ் பகுப்பாய்வாளர்கள், பெரும்பாலும் ஒரே அறிவிப்பாளர் குறித்து வேறுபட்ட தீர்ப்புக்கள் வழங்கியிருப்பது அவதானத்துக்குரியது. இதனால் பிந்தையவர்கள் அவர்களது பல கலைச் சொற்களை உரிய பொருள் அல்லாத வேறு பொருளில் வழங்கும் நிலை தோன்றியது. காரணம், குறித்ததொரு அறிவிப்பாளர் தொடர்பாக அவர்களுடைய வார்த்தை முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக அவ்வாறு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் அவர்கள் ஒரே அறிவிப்பாளர் குறித்து வெவ்வேறு தீர்ப்புக்கள் வழங்கியமைக்கு உண்மையில் பல நியாயங்கள் இருக்கின்றன. அவற்றை அறிந்து கொண்டவர்கள் அவர்களது போக்கைப் புரிந்து கொள்வர். அவ்வாறான சில முக்கிய நியாயங்களை அடுத்து நோக்குவோம்:

ஓர் அறிவிப்பாளர் குறித்த தீர்ப்பை வழங்குவதற்கு சற்று முன்னர் அவர் அறிவித்ததாகக் கிடைத்த ஒரு ஹதீஸை மையப்படுத்தியதாக அவரது தீர்ப்பு அமையலாம். அல்முஅல்லிமி தமது 'தன்கீல்' என்னும் நூலில் கூறுகின்றார்: ஹதீஸ் துறையாளர் ஒருவரிடம் ஓர் அறிவிப்பாளர் குறித்துக் கேட்கப்பட்டால், அவரைப் பற்றிய பொது அறிமுகத்தை வைத்து அவர் ஒரு தீர்ப்புச் சொல்வார். பின்னர் அந்த அறிவிப்பாளரது வேறு ஒரு ஹதீஸ் அவருக்குக் கிடைக்கப் பெறுகின்ற போது, அந்த ஹதீஸ் தொடர்பான நிலையை மையமாக வைத்து மற்றொரு தீர்ப்பு வழங்கியிருப்பார். இந்த நிலையில் அவரது தீர்ப்புக்கள் முரண்பாடானவை போன்று தோன்றலாம். இமாம் தாரகுத்னியிடத்தில் இதனைத் தெளிவாகக் காணலாம். "ஒருவர் பற்றிய அவரது இரண்டாவது அல்லது மூன்றாவது தீர்ப்பை எல்லா சமயங்களுக்குமான பொதுத் தீர்ப்பாக சிலர் எடுத்துக் கொள்கின்றனர்."

தமது 'தன்கீல்' என்னும் நூலில் அவர் தொடர்ந்து சொல்கின்றார்: அறிந்து கொள்ளுங்கள், ஓர் அறிவிப்பாளர் குறித்து ஹதீஸ் துறையாளரின் கருத்து இரு வடிவங்களில் அமைகின்றது. ஒன்று, அறிவிப்பாளருடைய நிலைமைகள், அறிவிப்புகள் குறித்த ஆழ்ந்த தேடலின் பின்னர் அவையனைத்தினதும் சாராம்சமாக ஒரு தீர்ப்பை அவர் சொல்வார். இரண்டு, ஓர் அறிவிப்பாளர் குறித்த முந்தைய தீர்ப்பை மனதில் இருத்திக் கொண்டு, அவரது குறிப்பிட்டதொரு அறிவிப்பு தொடர்பில் மற்றொரு அபிப்பிராயம் தெரிவிக்கப்படும். இங்கு முதல் தீர்ப்பே பொதுவானது. அவர் குறித்த இஜ்திஹாத் மாற்றமடையாத வரை மற்றொரு தீர்ப்புடன் இது முரண்பட மாட்டாது. இரண்டாவது தீர்ப்பைப் பொருத்தவரை அது அநேகமாக குறித்த ஹதீஸில் அந்த அறிவிப்பாளரது நிலை குறித்தே பேசுகின்றது.

உதாரணமாக அறிவிப்பாளர் குறித்த பொதுத் தீர்ப்பில் அவர் 'உண்மையானவர் ஆனால் அதிகமான சந்தேகங்கள் உடையவர்' என்று சொல்லப்பட்டிருக்கும். பின்னர் குறித்ததொரு ஹதீஸில் அவர் விமர்சனத்துக்குட்பட்டிருப்பார். இதுதான் பெரும்பாலும் தீர்ப்பு முரண்பாடு இருப்பதாகத் தோன்றும் இடங்கள். இமாம் முஅல்லிமி

இதற்கான சில உதாரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதர் குறித்த தெளிவான நிலைப்பாடு இல்லாதபோது அங்கு ஹதீஸ் பகுப்பாய்வாளரது அவர் குறித்த இஜ்திஹாத் வேறுபட்டிருக்க முடியும் அல்லது அவர் குறித்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேறுபட்ட முடிவுகள் சொல்லப்பட்டிருக்க முடியும். இமாம் தஹபி, இமாம் இப்னு மஈனுக்கு முன்னர் இருந்த பல்வேறு ஹதீஸ் பகுப்பாய்வாளர்கள் குறித்து பேசிவிட்டுச் சொல்கின்றார். அறிவிப்பாளர்களைக் குறைகாணுதல், சரிகாணுதல் துறை அறிஞர்களில் நாம் இமாம் யஹ்யா இப்னு மஈனிடத்தில் வந்தால், அவரிடத்தில் அப்பாஸ் அத்தூரி அல்லது உஸ்மான் அத்தாரமி அல்லது அபூ ஹாதிம் போன்றவர்கள் பற்றிக் கேட்கப்பட்டால், அவரது இஜ்திஹாதின் அடிப்படையில் ஒவ்வொருவர் பற்றியும் அவர் முடிவு சொல்வார், சட்ட அறிஞர்களது இஜ்திஹாதுகள் வேறுபட்டது போல், சில அறிவிப்பாளர்கள் குறித்து அவரது இஜ்திஹாதுகளும் வேறுபட்டிருக்கின்றன. அறிவிப்பாளர்களது நிலைமைகள் குறித்து அதிகம் இஜ்திஹாதில் ஈடுபடுகின்றவர்களிடத்திலேயே ஒரே அறிவிப்பாளர் குறித்து வேறுபட்ட அபிப்பிராயங்கள் தோன்றியிருக்கின்றன அல்லது அறிவிப்பாளர்கள் குறித்து அதிகம் கேள்விகள் கேட்கப்படுகின்றவர்களிடம் இந்நிலை அவதானிக்கப்படுகின்றது. இவ்வகையானவர்களில் இமாம் இப்னு மஈன் மற்றும் தாரகுத்னி இருவரும் முக்கியமானவர்கள்.

சில சமயங்களில் ஹதீஸ் பகுப்பாய்வாளருடைய இரண்டு தீர்ப்புக்களில் ஒன்று அந்த குறித்த ஹதீஸுக்கு வெளியில் தாக்கமற்றதாக இருக்க முடியும். அதேசமயம் மற்றொரு தீர்ப்பு கேள்வி கேட்டவரைப் பொருத்து அல்லது குறித்த சபையைப் பொருத்து மிகவும் தாக்கமுள்ளதாக அமைய முடியும். உதாரணமாக, கேள்வி கேட்பவர் சற்று கடின போக்குடையவராக இருந்தால் அவருக்கு அளிக்கப்படும் பதிலில் இந்தத் தாக்கம் புலப்படும். இமாம் திர்மிதி இப்னு ரஜப் உடைய 'இலல்' என்ற நூலுக்கான விளக்கவுரையில் அலி இப்னு மதீனி பற்றிக் கூறுகிறார்: முஹம்மது இப்னு அம்ர் இப்னு அல்கமா ஊடாக யஹ்யா இப்னு ஸஈதின் அறிவிப்புகள் பற்றி நான் அவரிடம் வினவியபோது, நீ மென்மையை விரும்புகிறாயா அல்லது கடுமையை விரும்புகிறாயா என்று கேட்டார். நான் கடுமையை விரும்புகின்றேன் என்று பதில் தந்தேன். அதற்கவர் நீ விரும்புகின்ற வகை ஆளாக இவர் இல்லை என்றார். அபூ ஸலமாவும் யஹ்யா இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு ஹாதிபும் எமது ஆசிரியர்கள் என்று அவர் அடிக்கடி சொல்வார்.

இமாம் அல்கதீப் தமது கிஃபாயாவில் "அறிவிப்பாளர்கள் பற்றிய ஹதீஸ் பகுப்பாய்வாளர்களின் நிலைப்பாடுகள் இலகுவில் புலப்படாத மிக நுணுக்கமானவையாகும். சில சமயம் ஓர் அறிவிப்பாளர் குறித்து ஆய்வாளர்கள் கேள்விப்படுகின்ற ஒரு தகவல், அவரது ஹதீஸை மறுப்பதற்கு ஏதுவாக இல்லாத போதும், அவரது நேர்மையைப் பாதிக்காத போதும் அவரது ஹதீஸை ஆதாரமாகக் கொள்வதைத் தவிர்ப்பார்கள். அவர்களிடமிருந்து இதனைப் பெற்றுக் கொள்கின்றவர்களும் அவர்களது இந்த செயலை நியாயம் காண்பார்கள். குறித்த அறிவிப்பாளர் உயிருடன் இருந்தால், அவரது அவ்வகைக் குறைபாடுகளில் இருந்து கவனமாக இருப்பதுடன் அவர் மரணித்த ஒருவராக இருப்பின் அவர் மூலமாக ஹதீஸ்களை அறிவித்தவர்கள் குறித்தும் அதே கவனத்துடன் செயல்படவும் அவர்களை குறைபாடற்றவர்கள் பட்டியலில் இணைக்காமல் இருக்கவும் அது உதவுகின்றது. அறிவிப்பாளர் ஒருவர் குறித்து தவறான ஒரு செய்தி காணப்படுகின்றபோது, அதனையொத்த இன்னும் பல செய்திகள் இருக்கின்றனவா என்று பார்ப்பது அவசியமாகும், அதுவே மார்க்கத்துக்குப் பாதுகாப்பாகவும் அமையும். ஏனெனில் சில மனிதர்கள் தமது நன்னடத்தைகளை மட்டுமே வெளிப்படுத்தி விட்டு தீய செயல்களை மறைத்துக் கொள்வார்கள். அவரிடமிருந்து ஒரு தீய செயல் வெளிப்பட்டால் அதனையொத்த இன்னும் பல தீய செயல்கள் இருக்க முடியும் என்ற வகையில் அவர் குறைபாடற்றவராகக் கருதப்பட மாட்டார். இதனைத்தான் உமர் (ரழி) பின்வருமாறு கூறினார்: யார் தமது நன்னடத்தைகளை வெளிப்படுத்துகின்றாரோ நாம் அவரைக் குறை காண மாட்டோம். எமக்கு அருகாமையில் அவரை வைத்துக் கொள்வோம். அவரது உள்ளம் என்னவென்று எமக்குத் தெரியாது. யாருடைய தீய செயல் வெளிப்படுகிறதோ அவர் தன்னுடைய மனது சுத்தமானது என்று சொன்னாலும் நாம் அவரை நம்ப மாட்டோம், என்றார்.

இமாம் அல்பாஜி தமது 'அத்தஃதீல் வல்ஜரஹ்' என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்: "அறிந்து கொள்ளுங்கள், அறிவிப்பாளர் ஒருவரை பகுப்பாய்வு செய்யும் ஒருவர் சில சமயம், "இவர் நம்பகமானவர்" என்று சொல்வார். ஆனால் அவரது ஹதீஸை ஆதாரமாகக் கொள்ளலாம் என்பதை இதன்மூலம் அவர் நாட மாட்டார். அதுபோல் மற்றொருவரை "இவர் பரவாயில்லை" என்பார். ஆனால் அவரது ஹதீஸை ஆதாரமாகக் கொள்ள முடியும் என்பதையே இதன்மூலம் குறிப்பிடுவார். எனவே இந்த

வார்த்தைகளின் பொருள் பகுப்பாய்வாளரையும் அவரிடம் கேட்கப் படும் கேள்விகளையும் பொருத்தே அமைகின்றது. சில சமயம் நல்ல மனிதரொருவருடன் பலவீனமான ஒருவரை இணைத்து, இவர்கள் இருவரையும் பற்றிக் கூறுங்கள் என்று கேட்கப்பட்டால், இவர் நம்பகமானவர் என்று பதில் தருவார். அதன் பொருள் அவர் மற்றவருடன் ஒப்பிடும்போது சிறந்தவர் என்பதாகும். அவரைப் பற்றி தனித்து வினவப்படும் போது பதில் வேறுவிதமாக அமையும்.'' தொடர்ந்து இமாம் அல்பாஜி இவற்றுக்கான உதாரணங்களை, ஆதாரங்களை விரிவாக முன்வைத்து விட்டு ''இவற்றை வைத்துப் பார்க்கும்போது அவர்களுடைய இந்த வார்த்தைகள் அவர்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஏற்பவே அமைந்துள்ளன. அவற்றுக்கேற்பவே வேறுபட்டிருக்கின்றன. ஒருவர் யாருடன் இணைத்துக் கேட்கப்படுகின்றார் என்பதிலும் தங்கியிருக்கின்றது'' என்று கூறுகின்றார். சில சமயம் ஒருவர் குறைகாணப்பட்டிருப்பார். ஆனால் பிறிதோர் சமயம் அவரது அறிவின், சிறப்பின், பிரபல்யத்தின் அடிப்படையில் குறைகாணப்படாமல் இருந்திருப்பார். எனவே ஒவ்வொருவரின் தீர்ப்பிலும் இந்த இடம்பாட்டை நாம் காணலாம். இமாம் அல்பாஜி இந்த ஆய்வை நிறைவு செய்யும்போது ''எனவே அறிவிப்பாளர்கள் பற்றிய அவர்களது வார்த்தைகளின் நோக்கங்களைப் புரிந்து, அவை சரிகாணுவதற்குரியவையா அல்லது குறைகாணுவதற்குரியவையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இந்தத் துறையில் புலமைத்துவமும் அனுபவமும் உள்ளவர்களால் மட்டுமே அது சாத்தியமானது. இந்தப் பின்புலமின்றி நேரடியாக அவர்களது வார்த்தைகளை மட்டுமே பார்ப்பவர்களால் அவற்றைச் சரியாகப் பிரயோகிக்க முடியாது.

ஷெய்க் ஹஸ்ஸான் அப்துல் மன்னான் கூறுகின்றார்: நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய விசயம் என்னவெனில், ஹதீஸைப் பலவீனப்படுத்துவதும் பலப்படுத்துவதும் இஜ்திஹாத் சார்ந்த ஒரு விசயம். மிகப் பெரும்பாலும் அறிவிப்பாளர் வரிசைகளையும் ஒரு அறிவிப்பாளரால் சொல்லப்பட்ட ஹதீஸ்களையும் பகுப்பாய்வு செய்வதன்மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அனுமானத்திலேயே இது தீர்மானிக்கப்படுகின்றது. ஒருவர் இமாம் அஹ்மத் மற்றும் இமாம் அபூஹாதிமிடம் குறையுடையவராக அடையாளம் காணப்படும் அதே வேளை இமாம் புகாரீயும் யஹ்யா இப்னு மஈனும் அதில் உடன்பட மாட்டார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் ஏதேனும் பகுப்பாய்வுப் பொறிமுறையுடனே அதனைச் செய்திருப்பார்கள். இருப்பினும் அவர்களது அளவுகோல்கள் வேறாக இருக்கும். விதிகள்

சில சமயம் முறைப்படுத்தப்படாமல் இருக்கும். இவற்றுக்குப் புறம்பாக அவர்கள் திருப்திகொள்ளும் ஒரு தீர்ப்புக்குத் தெளிவான ஆதாரம் முன்வைக்கப்படாமலும் இருக்கும். இவற்றுக்கு நிறைவே உதாரணங்கள் இருக்கின்றன.

2. குறைகாணல், சரிகாணல் கலை குறித்த அவதானங்கள்

ஓர் அறிவிப்பாளரின் நேர்மை குறித்து தீர்ப்பு வழங்கப்படுகின்றது எனில், அறிவிப்புகள் ஆரம்பமான காலம் முதல் அறிவிப்பாளர்கள் பற்றி குறித்த பகுப்பாய்வாளர் தெளிவுடன் இருந்திருக்கின்றார் என்றுதான் பொருள் கொள்ளப்படும். ஆனால் அறிவிப்பாளர்கள் பற்றிய விசயங்கள் ஹிஜ்ரி 160க்குப் பின்னரே ஆரம்பமானது. இமாம் முஸ்லிம் தமது ஸஹீஹில் இமாம் இப்னு ஸீரீன் ஊடாக ஒரு கருத்தைப் பதிவு செய்துள்ளார். அதில் "ஆரம்பத்தில் அறிவிப்பாளர் வரிசை பற்றி யாரும் கேட்கவில்லை. குழப்பம் நிகழ்ந்த பின்னர், உங்கள் அறிவிப்பாளர்கள் யார் என்று சொல்லுங்கள் என்று கேட்கப்பட்டது. அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்தவர்கள் எனில் அவர்களுடைய ஹதீஸ்கள் ஏற்கப்பட்டன. நூதன சிந்தனை கொண்டோர் எனில் அவர்களது ஹதீஸ்கள் மறுக்கப்பட்டன" என்கிறார். ஸாலிஹ் இப்னு முஹம்மதுஅல்பக்தாதி கூறுகின்றார்: "அறிவிப்பாளர்கள் குறித்து முதலில் பேசியவர் ஃஷுஃபா இப்னு ஹஜ்ஜாஜ் ஆவார். தொடர்ந்து யஹ்யா இப்னு ஸஈத் அல்கத்தானும் அடுத்து அஹ்மத் இப்னு ஹன்பலும் அடுத்து யஹ்யா இப்னு மஈனும் பேசினர்". இமாம் ஃஷுஃபா மரணித்தது ஹி. 160ல் ஆகும். பின்னர் அறிவிப்பாளர்கள் பற்றிய ஆய்வு, இமாமுக்கு இமாம் வேறுபட்டது. யஃகூப் இப்னு ஷைபா யஹ்யா இப்னு மஈனிடம், இமாம் இப்னு ஸீரின் அறிவிப்பாளர்களில் தேர்வு செய்வது போல் தாபியீன்களில் எவரேனும் செய்திருக்கின்றனரா? என்று வினவியபோது, இல்லை என்று தலையை ஆட்டினார்கள்.

## ஏழாவது: அறிவிப்பாளர்கள் கலையின் கோட்பாட்டுத் தடைகள்

1. குறைமறைப்பும் குறையை மறைப்பவர்களும்

தத்லீஸ் என்பது மொழியில் ஏமாற்றுதல், குறையை மறைத்தல் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. வழக்கத்தில், அறிவிப்பாளர் ஒருவர் தமது அறிவிப்பில் இருக்கும் ஒரு குறையை மறைத்து, கேட்பவரை ஏமாற்றி, அதனை அறிவிப்புச் செய்வதைக் குறிக்கும். இது ஒரு

வகையில் தந்திரமான பொய்யாகும். இது கண்டிக்கத்தக்க ஒரு செயல் என்பதை பல இமாம்களும் அறிஞர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

அறிவிப்பாளர்கள் மத்தியில் அதிலும் குறிப்பாக ஈராக்கியர்களிடம் இந்தக் குறைமறைப்பு பரவலாகக் காணப்பட்ட போதிலும், அறிவிப்பாளர்கள் பற்றிய அனைத்து நூல்களிலும் தொகுக்கப்பட்ட குறைமறைப்பாளர்களின் எண்ணிக்கை நூறு பேரைத் தாண்ட வில்லை. நூல்களில் பதிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை சுமார் இருநூற்றி முப்பது பேர். அவர்களில் முதலாம், இரண்டாம் தலைமுறையினரின் குறை மறைப்புச் செயற்பாடுகள் இடம்பாட்டுக்குரியவை என்ற வகையில் அவற்றை நீக்கி விட்டுப் பார்த்தால் சுமார் நூற்றி இருபது பேர் எஞ்சுகின்றனர். இவர்களில் ஐந்தாம் தலைமுறையினரையும் அவர்களுடைய பலவீனம், குறைமறைப்பு என்பதைவிட வேறுகாரணங்கள் என்று அடையாளம் காணப்பட்டமையால் அவர்களையும் நீக்கி விட்டுப் பார்த்தால், சுமார் எழுபத்தி ஐந்து அறிவிப்பாளர்களே எஞ்சுகின்றனர். இவர்களுடைய அறிவிப்புகளை மட்டுமே அவர்கள் தமக்கு முன்னால் உள்ளவரிடமிருந்து நேரடியாகக் கேட்டதைத் தெளிவாகக் குறிப்பிடாதவரை அவற்றை ஏற்பதில்லை என இமாம்கள் கருதுகின்றனர். உண்மையில் இந்த எண்ணிக்கை, குறைமறைப்பில் ஈடுபட்ட அனைவரையும் உள்ளடக்கியிருக்கின்றதா எனில் நிச்சயம் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

இமாம் இப்னு அப்தில் பர் தமது ‘அத்தம்ஹீத்’ என்னும் நூலில் “கூபா ஹதீஸ் அறிவிப்பாளர்களிடம் குறைமறைப்பு மிகவும் அதிகம்” என்கிறார். இமாம் சுஃபா கூறுகின்றார்: “அம்ர் இப்னு முர்ரா, இப்னு அவ்ன் ஆகிய இருவரையும் தவிர குறைமறைப்புச் செய்யாத யாரையும் நான் கண்டதில்லை.” என்கிறார். இதனாலேயே இமாம் மாலிக் ஈராக்கை அச்சடிக்கும் தேசம் என்றழைத்தார். காரணம், போலிப்பணம் அச்சடிக்கப்படுவது போல் அங்கு போலியான ஹதீஸ்கள் அச்சடிக்கப்பட்டு புழக்கத்துக்கு விடப்பட்டன. அதுபோல் இமாம்களிடமிருந்தும் அவர்களிடமிருந்து ஹதீஸ்களை அறிவிப்பவர்களிடமிருந்தும் இந்தக் குறைமறைப்பு நடைபெற்றன. இமாம் இப்னுல் முபாரக் கூறுகின்றார்: பெயர்களைப் புனைப் பெயர்களாகவும் புனைப் பெயர்களைப் பெயர்களாகவும் மாற்றிச் சொல்லாத வரை பகிய்யா என்பவர் நல்ல மனிதர்தாம். அவர் சில காலம் அபூ ஸயீத் அல்வஹாலி என்பவர் ஊடாக அறிவிப்புச் செய்து கொண்டிருந்தார். பின்னர் அவர் அப்துல் குத்தூஸ் என்பது

*தெரிய வந்தது. அவர் பொய் சொல்வதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் என்பது இமாம்களிடம் உடன்பாடான நிலைப்பாடு. சமகாலத்தவர்களால் கூட கண்டுபிடிக்க சிரமமான குறைமறைப்பு உதாரணங்கள் நிறையவே இருக்கின்றன.*

2. பொய்

*பொய்யர்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர். அதனடியாக போலியான அறிவிப்புகளும் அதிகரிக்கின்றன. இமாம் சுஃபா இப்னு ஹஜ்ஜாஜ் கூறுகின்றார்: "நான் ஹதீஸ்களைப் பகுப்பாய்வு செய்தது போல் வேறு எவரும் செய்ததை நான் பார்த்ததில்லை. அவற்றில் நான்கில் மூன்று பகுதி போலியானவையாக இருந்தன." இந்தப் போலி ஹதீஸ்களை ஆய்வு செய்து பார்க்கின்ற போது, ஹதீஸ் துறையாளர்கள் உறுதி செய்வதுபோல், இது ஸஹாபாக்கள் காலம் முதலே இருந்து வந்துள்ளது. உஸ்மான் இப்னு அப்பான் (ரழி) கூறுகின்றார்: "நபியவர்கள் சொல்வதாக மக்கள் சில ஹதீஸ்களைச் சொல்கின்றனர். அவை என்னவென்றே எனக்குத் தெரியாது." முஆவியா இப்னு அபீ சுப்யான் (ரழி) கூறுகின்றார்: "உங்களில் சிலர் குர்ஆனில் இல்லாத நபியவர்களிடமிருந்து கிடைக்கப் பெறாத ஹதீஸ்களைக் கூறுவதாக எனக்குத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது, அவர்கள் உங்களில் உள்ள அறவீனர்களாவர்."*

*இமாம் புகாரீ பதிவு செய்துள்ளார்: ஹமீத் இப்னு அப்துல் ரஹ்மான் கூறுகின்றார்: முஆவியா (ரழி) கஃபுல் அக்பார் பற்றி மதீனாவில் சில குறைஷிகளிடம் பேசிக் கொண்டிருந்ததை நான் செவியுற்றேன். வேதம் வழங்கப்பட்டவர்கள் பற்றிய அறிவிப்பாளர்களில் மிகவும் நம்பகமானவர் இவர்தான் எனினும் அவரது ஹதீஸ்களிலும் பொய்கள் இருக்கின்றன.*

3. அறிவிப்பாளர்களைத் தெரியாமலிருத்தல்

*ஒரு ஹதீஸ் பலவீனமானதாகக் கருதப்படுவதற்கான காரணங்களில் ஒன்று, அதன் அறிவிப்பாளர்கள் தெரியாமல் இருத்தலாகும். தெரியாமல் இருத்தலுக்கான அளவீடுகள் காலத்துக்குக் காலம், இடத்திற்கு இடம் வேறுபட்டிருக்கின்றன. இதனால் ஒரே ஹதீஸ் பலமான நிலையிலிருந்து பலவீனமான நிலைக்கும் பலவீனமான நிலையிலிருந்து பலமான நிலைக்கும் மாற்றமடைந்திருக்கின்றது. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் கூறுகின்றார்: "அறிவிப்பாளர் ஒருவர் தெரியாமல் இருத்தல், இமாம்களில் ஒருவர் அவரது*

*ஹதீஸை அறிவிப்புச் செய்வதனால் நீங்கி விடுகின்றது. இமாம்களில் ஒருவர் ஒரு அறிவிப்பாளரிடமிருந்து அறிவித்துள்ளார். ஆனால் அவர் நம்பகமானவர் இல்லை.'' இதனால் இமாம் இப்னு ரஜப், ''இவை போன்ற அறிவிப்புகளுக்குப் பின்குறிப்பாக ''நம்பகமான ஒருவர் மற்றொருவரிடமிருந்து ஒரு ஹதீஸை அறிவித்தால் அது இரண்டாமவரின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த மாட்டாது. இமாம் சுப்யானுஸ் ஸௌரி, சுஃபா போன்ற பல நம்பகமானவர்கள் பலவீனர்களிடமிருந்து ஹதீஸ்களை அறிவிப்புச் செய்துள்ளனர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.*

4. பிரதேசவாதம்

*இது தவறானதொரு மனோபாவம். அறிவிப்பாளர் பற்றிய முடிவுகளில் தாக்கம் செலுத்தும் ஒரு காரணி. ஒருவரை குறைகாணுதல் அல்லது பலவீனப்படுத்தல் அல்லது பலப்படுத்தல் போன்ற தீர்ப்புக்கள் பிரதேசத்தை மையப்படுத்தி நடைபெற்றுள்ளன. வகீஃ இப்னுல் ஜர்ராஹ் கூறுகின்றார்: ''எமது ஊர்க்காரரர்களில் எவரையும் நாம் சரிகாண்பதில்லை.'' சுப்யான் இப்னு உயைனா கூறுகின்றார்: ''யாருக்கு உள்ளம் திருப்திப்படக் கூடிய ஹதீஸும் அறிவிப்பாளர் வரிசையும் தேவையோ அவர் மதீனவாசிகளை நாடட்டும்.'' இமாம் ஸுஹ்ரி கூறுகின்றார்: ''மக்காவாசிகளைப் போல் இஸ்லாத்தின் பிணைப்புக்களை அறுத்தெறிந்த ஒரு சமூகத்தை நான் காணவில்லை.'' இமாம் அப்துர் ரஹ்மான் இப்னு மஹ்தியிடம் ஷாம் பிரதேசத்தவர்களின் ஹதீஸ்கள் பற்றி வினவப்பட்ட போது, அவர் தனது கைகளைத் தட்டிவிட்டு அவற்றின் பொருத்தமற்ற தன்மையை உணர்த்தினார். இமாம் ஜுஸ்ஜானி கூபாவாசிகளின் ஷீஆ ஈடுபாட்டினால் அவர்களை எப்போதும் குறைத்து மதிப்பிடுவார்.*

5. உணர்ச்சிகளுக்குக் கட்டுப்படல்

*அறிவுச் செயல்பாட்டில் உணர்ச்சிகளுக்கு இடமில்லை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் துரதிஷ்டவசமாக அறிவிப்பாளர்கள் பற்றிய தீர்ப்பிலும் அதனடியாக அறிவிப்புகள் பற்றிய முடிவிலும் உணர்ச்சிகளின் பாதிப்புகள் உள்ளன. உதாரணமாக, இமாம் மாலிக், அய்யூப் அஸ்ஸிக்தியானி என்பவரை நேசித்ததன் காரணமாக அவரை நம்பகமான ஒருவராகக் கருதியிருக்கின்றார். அவரைப் பற்றிக் கூறும்போது, நபியவர்கள் நினைவுபடுத்தப்பட்டால் அவர் அழுதுவிடுவார். அதனால் எனக்கு அவர் மீது அன்பு இருக்கிறது. நபியவர்கள் மீதான அவரது கண்ணியத்தைப் பார்த்த*

பிறகு அவரிடமிருந்து ஹதீஸ்களை நான் பதிவு செய்தேன் என்கிறார். இமாம் நஸாயீ இமாம் அஹ்மத் இப்னு ஸாலிஹ் தமக்கு ஹதீஸ்களை அறிவிக்க மறுத்ததன் அடிப்படையில் அவரது அறிவிப்புகளை மறுத்துரைத்தார். பெரும் இமாம்களிடமும் உணர்ச்சிகள் தீர்ப்புக்களை எந்தளவு பாதித்துள்ளன என்பதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. அவற்றைப் பேசுவதற்கான அவகாசமின்மையால் அவற்றைத் தவிர்க்கின்றேன்.

6. தக்லீத்

சில ஹதீஸ் பகுப்பாய்வாளர்கள் தாம் அறியாத அறிவிப்பாளர்கள் பற்றிய முடிவில் தமது சமகாலத்தவர்களைத் தக்லீத் செய்திருக்கிறார்கள். தக்லீதின் அடிப்படையில் அவர்களால் விமர்சிக்கப்பட்டவர்கள் குறித்து பின்னர் அவர்களுக்குத் தகவல்கள் கிடைக்கின்றபோது தமது கருத்துக்களை திரும்ப பெற்றிருக்கின்றனர். இமாம் யஹ்யா இப்னு ஸயீத், ரூஹ் இப்னு உபாதா என்பவரை, பிறரைப் பின்பற்றி விமர்சனம் செய்திருந்தார். ஆனால் உண்மையில் அவர் இவரிடத்தில் வேறு பெயரில் நம்பகமானவராக கருதப்பட்டிருந்தார். ஒருவர் இவரிடத்தில் இருவராகக் கருதப்பட்டிருந்ததை அவதானியுங்கள்.

7. சட்டவியல் மற்றும் இறையியல் மத்ஹப்வாதம்

சட்டக் கருத்து வேறுபாடுகள் அறிவிப்புகளை ஏற்றல், மறுத்தலோடு தொடர்பு அற்றது. அதிலும் குறிப்பாக மறுக்கப்படும் அறிவிப்புகள் அவர்களது மத்ஹபுகளை நோக்கிய அழைப்பாகவும் இல்லாதபோது இதற்கான வாய்ப்பு இல்லை. ஆனால் நடந்தது என்னவெனில், கருத்து வேறுபாடுகள் அறிவிப்பாளர் பற்றிய தீர்ப்பில் தாக்கம் செலுத்தியது. இமாம் அபூ ஹனீபா இமாம் அதா முத்ஆவை அனுமதித்தார் என்ற அடிப்படையில் அவரது அறிவிப்பை ஏற்பதில்லை. இமாம் ஜரீர் இப்னு அப்துல் ஹமீத், ஸிமாக் இப்னு ஹர்பினுடைய அறிவிப்புகளை, அவர் நின்ற நிலையில் சிறுநீர் கழித்தார் என்பதனால் ஏற்பதில்லை. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல், இமாம் அலி இப்னு மதீனி மற்றும் பலர் குர்ஆன் படைக்கப்பட்டது என்ற விவகாரத்தில் அவருக்குச் சார்பாக இருக்கவில்லை என்பதனால் அவர்களது அறிவிப்புகளை ஏற்பதில்லை. இவை போன்று இன்னும் பல உதாரணங்கள் இருக்கின்றன.

இவை போன்ற குறைபாடுகளின் காரணமாக சில இமாம்கள் தமது கடந்த காலத்துக்காக வருந்தியிருக்கிறார்கள். ஹதீஸ் அறிவிப்புகளில் தாம் எல்லை மீறி நடந்து கொண்டோம் என்று கைசேதப்பட்டுள்ளனர். இதோ இமாம் சுப்யானுஸ் ஸௌரி கூறுகின்றார்: "எனக்கு சார்பாகவோ எதிராகவோ இது போன்ற விசயங்களில் நான் ஈடுபட்டிருக்கக் கூடாது என்று நினைக்கின்றேன்."

8. குறைகாணல், சரிகாணல் கலையைத் தவறாகக் கையாளுதல்

ஒருவரைக் குறைகாணல் அல்லது சரிகாணல் என்பது சுய சார்பு இன்றி அமானிதமாக நடைபெற வேண்டிய ஒரு பணி. அது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப நடைபெறுவதல்ல. ஆனால் வரலாற்றில் இதற்கு மாற்றமாகவும் நடைபெற்றுள்ளது. ஸுப்யானுஸ் ஸௌரி, சுஃபாவிடம் கூறியதாக இமாம் ஷாபி பதிவு செய்துள்ளார்: "ஜாபிர் அல்ஜுஃபி அர்ராபிழி பற்றி நீங்கள் விமர்சித்தால் நான் உங்களை விமர்சிப்பேன்." இமாம் சுஃபாவினுடைய இந்தக் கூற்றுக்கு பின்வரும் சம்பவம் காரணமாக இருக்கலாம்: "நம்பகமானவர்கள் பற்றி மட்டுமே நான் உங்களுக்குச் சொல்லியிருந்தாலும் சிலரைப் பற்றி நான் எதுவும் சொல்ல மாட்டேன்." இமாம் கத்தான் கூறுகிறார்: "எனக்குத் திருப்தியானவர்களிடமிருந்து மாத்திரமே நான் அறிவிப்புச் செய்வதாக இருப்பின் ஐந்து பேரிடமிருந்துதான் நான் அறிவித்திருக்க வேண்டும்." யஹ்யா இப்னு ஸஈத் கூறுகின்றார்: "நான் அறிவிப்பவர்களை எல்லாம் பரீட்சித்துப் பார்த்திருப்பின் சிலரிடமிருந்து மட்டுமே நான் அறிவித்திருக்க முடியும்."

## எட்டாவது: ஹதீஸைப் பாதுகாக்கும் திறன் அறிவிப்பாளர்களிடத்தில்

ஹதீஸைப் பாதுகாக்கும் திறனை ஹதீஸ் துறையாளர்கள் இரண்டாக வகைப்படுத்தி நோக்குகின்றனர். ஒன்று: மனனத்தில் பாதுகாத்தல், இரண்டு: எழுத்தில் பாதுகாத்தல். மனிதன் எவ்வளவு மனன ஆற்றல் கொண்டவனாக இருந்தாலும் அது தவறு, மறதி, சந்தேகம், குழப்பம் போன்ற பல பலவீனங்களுக்கு உட்பட முடியும். நபியவர்களும் திருக்குர்ஆன் இறங்கும்போது அது தனக்கு மறந்து விடுமோ என்ற அச்சத்திலேயே அதனை விரைவாக மீட்டுவதற்கு முயன்றிருக்கின்றார்கள் "அதனை அவசரமாக மீட்டுவதற்காக உங்கள் நாவுகளை அசைக்க வேண்டாம். அதனைத் தொகுப்பதும் ஓதிக் காண்பிப்பதும் எமது பொறுப்பாகும்" (கியாமா: 16,17).

## 1. மனனத்தில் பாதுகாத்தல்

ஹதீஸ் துறையாளர்கள் தமது அறிவிப்புகளில் தவறுகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். யஹ்யா இப்னு மயீன் "தவறு செய்யாதவன் பொய்யன்" என்றார். சுப்யானுஸ் ஸௌரி, "ஒருவரும் தவறுகளில் இருந்து தப்பவில்லை" என்றார். பிறிதோர் சமயம் "நாம் கேட்டது போன்றே உங்களுக்கு ஹதீஸை அறிவிக்க நாடியிருந்தால் ஒரு ஹதீஸையும் அறிவித்திருக்க மாட்டோம்" என்றார்.

மறதி இரண்டு வடிவங்களில் நிகழ முடியும். ஒன்று அவதானத்துக்கே வராத மறதிகள். இரண்டு குறிப்பிட்ட ஒரு அறிவிப்பில் அறிவிப்பாளர் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதன் அடிப்படையில் அவதானத்துக்கு வந்த மறதி. ஆனால் பின்னர் அதனை மறந்திருந்திருப்பார். அதனை நினைவில் வைத்திருந்தவர்கள் மீள நினைவுபடுத்தினாலும் அவருக்கு அது நினைவில் வர மாட்டாது. மறதிக்குப் பின்னர் இவரது அறிவிப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. சிலர் ஏற்றுக் கொண்டாலும் ஹனபி மரபினர் இதனை மறுத்தனர். இந்த அடிப்படையிலேயே ஹனபீக்கள் "ஒரு பெண் அவளது வலியின் அனுமதியின்றி திருமணம் செய்தால் அவளது திருமணம் செல்லுபடியற்றது" என்ற ஹதீஸையும் சாட்சி மற்றும் சத்தியத்துடன் தீர்ப்பு வழங்கலாம் என்ற அபூஹுரைராவின் ஹதீஸையும் ஆதாரமாகக் கொள்ளவில்லை.

இறுதி விளைவு என்னவெனில், அறிவிப்புகளில் விடப்படும் தவறுகள், ஹதீஸின் உள்ளடக்க வசனங்களில் முரண்பாடுகளைக் கொண்டு வந்திருக்கின்றது. அவற்றுள் இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியுமான முரண்பாடுகளும் இருக்கின்றன. மிகுந்த சிரமத்தின் பின்னரே அடையாளம் காண முடியுமானவையும் இருக்கின்றன. இந்தத் தலைப்புக்கு ஹதீஸ்களின் கருத்தை அறிவிப்புச் செய்தல் என்ற விவகாரத்துடன் ஒரு சம்பந்தம் இருக்கின்றது.

## 2. கருத்தை அறிவிப்புச் செய்தல்

கருத்தை அறிவிப்புச் செய்தல் என்பது அறிவிப்பின் வார்த்தைகளுக்குப் பகரமாக ஒத்த கருத்திலான வேறு சொல்லைப் பயன்படுத்துவதாகும். இந்தச் செயல்பாடு அனுமதிக்கப்பட்டதா என்பதில் கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன. மாலிக் மத்ஹபினர், நபியவர்களுடன் சம்பந்தப்பட்ட அறிவிப்புகளில் இதனைத் தடைசெய்தனர். ஏனெனில் நபியவர்கள் மீது பொய்யுரைப்பது பற்றிய எச்சரிக்கையில் இதுவும் உள்ளடங்கலாம் என்று அவர்கள் அச்சப்பட்டனர். அபூபக்ர்

இப்னுல் அரபி ஸஹாபாக்களுக்கு மட்டுமே இதனை அனுமதித்தார். அநேகமானவர்கள் கருத்துத் தெளிவான ஒரு ஹதீஸில் அறபு மொழியை அறிந்த ஒருவர், அறபை தாய் மொழியாகக் கொள்ளாத ஒருவருக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் பயன்படுத்துவதை அனுமதித்தனர். இங்கு அறபு மொழிக்குப் பகரமாக வேறு மொழி பயன்படுத்தப்படுகின்றது. அறபு மொழியிலேயே வேறு சொல்லைப் பயன்படுத்துவது, அதன் சரியான பிரயோகத்தைக் கையாள்பவருக்கு அனுமதிக்கப்படுகின்றது. பல்பொருள் தரக்கூடிய சொற்கள் அல்லது பொருள் மயக்கம் உள்ள சொற்கள் அல்லது இருவேறு விளக்கம் உள்ள சொற்கள் அல்லது நபியவர்களின் சொற் சுருக்க பொருட் செறிவான வசனப் பிரயோகங்களில் இது அனுமதிக்கப்படவில்லை.

பெரும்பாலான ஹதீஸ்களின் கருத்தே அறிவிப்புச் செய்யப் பட்டிருக்கின்றது என்பது ஹதீஸ் துறையாளர்களின் உடன்பாடான நிலைப்பாடாகும். இதனாலேயே உமர் (ரழி) ஹதீஸ்களின் மிகச் சரியான கருத்தை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஏனெனில் அறிவிப்பாளர் ஒத்த கருத்து என நினைத்து, அது சரியான கருத்தைத் தரும் என அவர் கருதியதன் அடிப்படையிலேயே ஒரு சொல்லைப் பயன்படுத்தியிருப்பார். இமாம் இப்னு ஸீரீன், "நான் ஒரே ஹதீஸைப் பத்துப் பேரிடம் கேட்டிருக்கின்றேன். ஒவ்வொருவரும் ஒரே கருத்தைத் தரக்கூடிய வெவ்வேறு சொல்லைப் பயன்படுத்தியிருக்கின்றனர்" என்றார். அவர் தொடர்ந்து சொல்கின்றார்: "அனஸ் (ரழி) குறைவாகவே ஹதீஸ்களை அறிவிப்புச் செய்வார்கள். அவர் அறிவிக்கின்ற போது, அல்லது நபியவர்கள் குறிப்பிட்டது போல் என்ற ஒரு வார்த்தையையும் சேர்த்துக் கொள்வார்" என்றார். ஸுராரத் இப்னு அபீ அவ்பா ஊடாக கதாதா அறிவிக்கின்றார்: "நான் பல ஸஹாபாக்களைச் சந்தித்திருக்கின்றேன். அவர்கள் வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்தினாலும் ஒரே கருத்தையே அவற்றிற்கு வழங்கியிருந்தனர்."

தமது அறிவிப்பின் பொருளைப் புரிந்து கொள்ளாதவர், ஹதீஸின் கருத்தை அறிவிப்புச் செய்வது கூடாது என்பது இமாம்களின் இஜ்மாவான முடிவாகும். கருத்தை அறிவிப்புச் செய்தலை அனுமதித்தவர்களும் நிபந்தனைகளுடனேயே அதனை அனுமதித்தனர். இமாம் மாவர்த்தி கூறுகின்றார்: "ஒருவர் ஹதீஸின் சொல்லை மறந்து விட்டால், அவர் கருத்தை அறிவிப்புச் செய்யலாம். ஏனெனில் அவர் சொல்லையும் கருத்தையும் இணைத்தே பெற்றுக் கொண்டிருக்கின்றார். எனவே ஒன்றை வழங்குவதற்கு இயலாது போகின்றபோது, மற்றையதைக் கட்டாயம் வழங்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக அவர் அதனைச் செய்யாமல் இருப்பது சட்டத்தை மறைப்பதுபோன்று இருக்கும் எனில், அது மிகவும் முக்கியமானது. ஹதீஸின் சொல்லை மறக்கவில்லை எனில், கருத்தை அறிவிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. ஏனெனில் நபியவர்கள் பயன்படுத்தும் வார்த்தையில் இருக்கும் தெளிவு வேறு வார்த்தைகளில் இருக்க மாட்டாது.''

இமாம் ஷாபி அறிவிப்பாளரின் பண்புகளைக் குறிப்பிடும்போது கூறுகிறார்: ''ஹதீஸைப் பெறுகின்றவர் மார்க்கத்தில் நம்பகமானவராக இருத்தல் வேண்டும். ஹதீஸ்களை அறிவிப்பதில் அவர் உண்மை யானவர் என்பது அறிந்துகொள்ளப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். தான் அறிவிப்பவற்றை நன்குகறிந்தவராக அவர் இருக்க வேண்டும். ஹதீஸின் வார்த்தைகள் குறிக்கும் பொருளைப் புரிந்தவராக அவர் இருக்க வேண்டும். ஹதீஸை தான் கேட்டது போல் அதே வார்த்தையில் அவர் அறிவிக்க வேண்டும். அதன் கருத்தை மட்டும் அறிவிப்புச் செய்யக் கூடாது. ஏனெனில் அவர் ஹதீஸின் வார்த்தைகள் குறிக்கும் கருத்தை அறிந்து கொள்ளாமல், அதன் கருத்தை அறிவிப்புச் செய்கின்ற போது, அவரையறியாமல் ஹலாலை ஹராமாக மாற்றிவிடுவார். அதே வார்த்தைகளை அறிவிப்புச் செய்தால், ஹதீஸ் வேறு கருத்தில் பயன்படுத்தப்படும் என்ற அச்சம் இருக்காது.''

இங்கு இமாம் ஷாபி, ஹதீஸ் வார்த்தைகள் குறிக்கும் கருத்தை அறிகின்ற போது மட்டுமே அதன் கருத்தை அறிவிப்புச் செய்யலாம் என நிபந்தனை விதித்துள்ளார். இல்லாதபோது அவர் நேரடி வார்த்தைகளையே அறிவிக்க வேண்டும் என்கிறார்.

### 3. எழுத்தில் பாதுகாத்தல்

முன்னர் நாம் மனனத்தில் பாதுகாத்தலைப் பற்றிப் பேசினோம். ஆனால் திரிபுகளுக்கும் கூட்டல் குறைத்தல்களுக்கும் உட்படுவதிலிருந்து நூல்களும் தப்பவில்லை. அறிவுத் துறையில் ஈடுபடுகின்றவர்களே தம்மையறியாமல் நூல்களில் அதிகம் தவறுவிடுகின்றனர். இவ்வாறு தவறுவிடப்பட்ட இமாம்களின் நூல்கள் பல இருக்கின்றன. உதாரணமாக, அலி இப்னு ஆஸிம் இப்னு ஸுஹைபினுடைய நூல்கள், (இவர் ஈராக்கின் ஹதீஸ் துறையாளர்களது பேராசானாகக் காணப்பட்டார்.) சுப்யான் இப்னு வகீஹுடைய நூல்கள், (இவர் கூபாவின் அறிஞராக இருந்தார்) சுப்யானுஸ் ஸௌரியுடைய நூல்கள், அபூ முகாதில் அஸ்ஸமர்கந்தியுடைய நூல்கள், இப்னு

அபீ மர்யமுடைய நூல்கள், அப்துல்லாஹ் இப்னு ஸாலிஹுடைய நூல்கள், ஃபாவினுடைய நூல்கள் என பல அறிஞர்களது நூல்கள் இந்தப் பாதிப்புக்கு உட்பட்டுள்ளன.

அடுத்து நூல்களில் நடைபெறும் பெரும்பாலான தவறுகளை அடையாளம் கண்டு கொள்வது சிரமம். உதாரணமாக, ஒரு புள்ளி அதிகமாகவோ குறைவாகவோ குறிக்கப்படுதல் அல்லது ஹம்ஸா இடப்படாமல் இருத்தல் போன்ற தவறுகளால் கருத்து முழுமையாக மாறிவிட முடியும்.

## ஒன்பதாவது: அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வுக்கும் ஹதீஸின் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கும் இடையில்

ஹதீஸ் துறையாளர்களின் அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வுகள் உண்மையில் அறிவிப்பாளர் வரிசையை நோக்கிய பகுப்பாய்வுகள் அல்ல. மாறாக அதன் உள்ளடக்க வசனங்களுக்குப் பயனளிக்க வேண்டும் என்பதே அதன் நோக்கம். இமாம் இப்னுல் கையிம் (மரணம் ஹி.751) தமது 'புரூஸிய்யா' என்ற நூலில் கூறுகிறார்: "அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹாக இருக்க வேண்டும் என்பது ஒரு ஹதீஸ் ஸஹீஹாக இருப்பதற்கான நிபந்தனை என்பது அறியப்பட்ட விசயம். எனினும் அது ஸஹீஹாக இருப்பதால் மாத்திரம் ஹதீஸ் ஸஹீஹாக அமைய மாட்டாது. மாறாக இன்னும் பல அம்சங்கள் இணைந்தே ஒரு ஹதீஸ் ஸஹீஹாக அமைகின்றது. அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹாக இருத்தல், நுணுக்கமான குறைகள் அற்றிருத்தல், நம்பகமானமானவர்களது அறிவிப்புகளுக்கு முரணற்றிருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்."

### 1. அறிவியல்பூர்வ உரைகல்லின் மீது அறிவிப்பாளர் வரிசை

மேலே பேசப்பட்ட பல்வேறு உண்மைகளுக்குப் பிறகு ஒரு கேள்வி தோன்றுகின்றது. அறிவிப்பாளர் வரிசையின் நம்பகத்தன்மை எந்தளவு அறிவியல்பூர்வமாக இருக்கின்றது? அதுபோல் அந்த நம்பகத்தன்மையில் தாக்கம் செலுத்தும் காரணிகளான, குறைகாணல் சரிகாணல் கலை, பிறப்பு இறப்புக் கலை, ஹதீஸின் குறைபாடுகள் கலை, ஹதீஸ்களின் துணைவழிகள் பற்றிய தேடல் போன்ற அனைத்தினதும் நம்பகத்தன்மை எந்தளவு உள்ளது?

ஒரு ஹதீஸினுடைய உண்மைத் தன்மை அல்லது அதனை நபியவர்களுடன் தொடர்புபடுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கான

முறைமையாக அறிவிப்பாளர் வரிசை மற்றும் அறிவிப்பாளர்கள் என்ற சிந்தனையில் மாத்திரம் தங்கியிருக்கின்றமையை அவதானிக்கின்ற ஒருவர், முஸ்லிம் சிந்தனையில் ஒரு பெரும் நெருக்கடி இருப்பதை அறிந்து கொள்வார். அதாவது ஹதீஸ் உள்ளடக்கத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அதனால் இயலவில்லை. குர்ஆனுடன் அதனை ஒப்புநோக்குவதன் ஊடாக அது நடைபெற்றிருக்க வேண்டும். ஏனெனில் அந்த வார்த்தைகள் மட்டுமே எந்த அசத்தியமும் கலக்காதது. ஸஹாபாக்களிடம் இந்த நடைமுறையே இருந்திருக்கின்றது.

இங்கு எழுகின்ற முக்கியமான கேள்வி, அறிவிப்பாளர் வரிசை மற்றும் அறிவிப்பாளர்கள் என்னும் சிரமமான வழியை ஹதீஸ் துறையாளர்கள் ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? அந்த வழியின் ஊடாக அறிவிப்பாளர்கள் மற்றும் அறிவிப்புகள் பற்றி அதிகபட்சமாக திட்டவட்டமற்ற முடிவுகளையே பெற்றுக் கொள்ள முடிகின்றது. ஹதீஸ்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக திருக்குர்ஆன் இருப்பது அவர்களுக்குப் போதாதா? அது முந்தைய வேதங்கள் அனைத்தையும் உண்மைப்படுத்திக் கட்டுப்படுத்தக் கூடியதாகவே இறக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் நபியவர்களது நேர்மையையும் பாதுகாப்பாற்றலையும் நம்பகத்தன்மையையும் பகுப்பாய்வு செய்ததன் பின்னர்தான், குர்ஆனை ஈமான் கொண்டு அதன் போதனைகளைப் பின்பற்றுகின்றனரா? அல்லது நபியவர்களின் நம்பகத்தன்மைக்கு மிகப்பெரிய அத்தாட்சியாக குர்ஆன்தான் இருக்கின்றதா?.

ஹதீஸ்களையும் அறிவிப்புகளையும் குர்ஆனுடன் ஒப்புநோக்குவதில் காட்டுகின்ற தயக்கம், உண்மையில் முஸ்லிம் சிந்தனையின் இயலாமையின் வெளிப்பாடுகளில் ஒன்று அன்றி வேறில்லை. பல நூற்றாண்டுகளாக முஸ்லிம் சிந்தனை, அறிவிப்பாளர் வரிசைக்கு அடகு வைக்கப்பட்டிருக்கிறது. அதே சமயம் அறிவிப்புகளை முறையாகப் பகுப்பாய்வு செய்யவும் அதனால் இயலவில்லை என்பதும் ஏற்கத்தக்கது. ஏனெனில் குர்ஆனின் ஆளுகையை அங்கு கொண்டுவர அதனால் முடியவில்லை.

அபூபக்ர், உமர், ஆயிஷா போன்ற பெரும் ஸஹாபாக்கள், அறிவிப்பாளர் பற்றிய அறிவு, ஹதீஸை ஏற்கவும் மறுக்கவும் உரிய அளவுகோல் அல்ல என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தனர். அவர்களிடமுள்ள குர்ஆனும் ஆதாரப்பூர்வமான சுன்னாவுமே அதற்கான வழி என்பதை உறுதியாக அறிந்திருந்தனர். ஆனால்

இந்தப் பொறிமுறை அறிவிப்பாளர் வரிசையை ஆய்வு செய்வதனால் நடைபெற மாட்டாது. மாறாக ஹதீஸ் உள்ளடக்கத்தில் கவனத்தைக் குவித்து அதனை குர்ஆனுடன் ஒப்பு நோக்குவதிலேயே சுன்னாவின் இயல்பான பாதுகாப்பு இருக்கின்றது. இதுதான் குர்ஆனிய அணுகுமுறையாகும். "நம்பிக்கையாளர்களே! உங்களிடத்தில் பாவியொருவர் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்" (ஹுஜராத்: 6), இங்கு ஆளை உறுதிப்படுத்தச் சொல்லவில்லை. செய்தியையே உறுதிப்படுத்தச் சொன்னது. மார்க்கத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு செய்தியை குர்ஆனின் ஒளியிலேயே உறுதிப்படுத்த வேண்டும் என்பது தெளிவானது. தவிர, சுன்னா என்பது குர்ஆனுக்கான பிரயோகம். குர்ஆனின் மேலாண்மை ஊடாகவே சுன்னா உறுதிப்படுத்தப்படுகிறது.

அறிவிப்பாளர் வரிசைகளை முழுமையாக நிராகரிக்க வேண்டும் என்பது இதன் பொருளல்ல. ஹதீஸ்களைப் பகுப்பாய்வு செய்வதன் முதல் எட்டாக அறிவிப்பாளர் வரிசைகள் இருந்திருக்க வேண்டும். அடுத்து, இரண்டாவது எட்டாக, முதல் எட்டின் முடிவுகள் குர்ஆனுடன் ஒப்புநோக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர் அங்கு உடன்பாடானவை ஏற்கப்படவும் முரண்பாடானவை மறுக்கப்படவும் முடியும். ஆனால் முதல் எட்டு விரிவடைந்து சென்று ஹதீஸ்களை ஒன்று திரட்டிப் பகுப்பாய்வு செய்வதன் முழுமொத்த முயற்சியும் அதனுடன் மாத்திரம் சுருங்கி விட்டது. சுன்னா அறிவிப்பாளர்கள் கலையின் கைதியாக மாறிவிட்டது.

சிலர் கருதுவது போல் இந்தப் பரிந்துரையில் தற்போது எமது கைவசம் உள்ள அனைத்து ஹதீஸ் தொகுப்புகளையும் புறக்கணிக்கக் கோரவில்லை. அது நிச்சயமாக குர்ஆனின் கண்ணோட்டத்திலும் சரி, அறிவு ரீதியாகவும் சரி ஏற்கத்தக்க ஒரு கோரிக்கையல்ல. மாறாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள இரு அளவுகோல்களின் அடிப்படையில், அனைத்து நூல்களும் ஒரே தரத்திலானவையாகக் கருதப்படும். அதாவது மிகவும் ஸஹீஹான நூல்கள், ஸஹீஹான நூல்கள் என்ற தரப்படுத்தல் ஒழுங்கில் அவை கருதப்பட மாட்டாது. அனைத்து நூல்களும் ஸஹீஹானவற்றையும் அல்லாதவற்றையும் உள்ளடக்கியவை என்றே நோக்கப்படும்.

இந்த மிகவும் ஸஹீஹானது என்ற சிந்தனை முஸ்லிம் அறிவுப் புலத்தில் ஆபத்தானதொரு புனிதத்தன்மையைப் பெற்றுக் கொண்டுள்ளது. இது இஜ்திஹாதுக்குத் தடையான ஒரு சிந்தனை. குர்ஆனுக்கு அடுத்தபடியாக மிகவும் ஸஹீஹான ஒரு நூல்

இருக்கிறது என்று சொல்வது எமது கோட்பாட்டு நெருக்கடி ஒன்றை எடுத்துக் காட்டுகிறது. அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாட்டின் செல்வாக்கின் காரணமாக முஸ்லிம் சிந்தனையைப் பாதித்த ஒரு விசயம் இது. குர்ஆன், சில அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாக நகர்த்தப்பட்டதால், தனது நம்பகத்தன்மையைப் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக அல்லாஹ் அதனை இறக்கி வைத்து, அதனைப் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றதனாலேயே அதனைப் பெற்றுக் கொண்டுள்ளது. "இதனை நாமே இறக்கிவைத்தோம். நாமே இதனைப் பாதுகாப்போம்" (ஹிஜ்ர்: 9). குர்ஆனுக்கு அடுத்தபடியானது என்று ஒரு நூல் ஒப்பீடு செய்யப்படுகின்றது எனில் குர்ஆனின் நம்பகத்தன்மை மற்றும் அறிவிப்புகளின் நம்பகத் தன்மைக்கிடையிலான வேறுபாடு புரிந்து கொள்ளப்படவில்லை என்பதையே காட்டுகின்றது. குர்ஆன் தனது நம்பகத்தன்மையை தன்னிலிருந்தே பெற்றுக் கொள்கின்றது. அதனை அறிவிப்புச் செய்கின்றவர்கள் ஊடாகவல்ல. அறிவிப்புகளின் நம்பகத்தன்மை திருக்குர்ஆன் அவற்றை அத்தாட்சிப் படுத்துவதிலேயே தங்கி யிருக்கின்றது.

ஹதீஸ் கிரந்தங்களைத் தொகுத்தவர்கள் எவரும் தாம் உள்ளடக்க வசனங்களையும் பகுப்பாய்வு செய்துள்ளோம் என்று சொல்லிக் கொண்டதில்லை. அதபோல் எந்தக் கிரந்தத்தின் ஆசிரியரும் தனது ஒவ்வொரு ஹதீஸையும் குர்ஆனுடன் ஒப்புநோக்கி சரிபார்த்துள்ளதாக குறிப்பிட்டது கிடையாது. அவர்களது பணி, அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாக குறித்த அறிவிப்புகளை ஒன்று திரட்டுவதுடன் மட்டுப்பட்டிருந்தது. சிலர் தமது நூல்கள் ஸஹீஹ் என்று பெயரிட்டதும் அவற்றை ஒன்று திரட்டுவதில் அவர்கள் பின்பற்றிய அளவுகோல்களுக்கேற்ப வழங்கப்பட்டதாகும். மாறாக எல்லா நிலையிலும் அவை ஸஹீஹானவை என்றிருப்பின், ஒருவரிடம் அது ஸஹீஹாகவும் மற்றொருவரிடம் ழயீஃபாகவும் இருப்பது எவ்வாறு சாத்தியமாகும்? இரண்டுமே ஸஹீஹான நூல்கள்தாம். எனவே இந்த நூல்களில் உள்ள ஹதீஸ்கள் அறிவிப்பாளர் வரிசை மற்றும் உள்ளடக்க வசனம் ஆகிய இரு பகுப்பாய்வுகளுக்கும் உட்பட்டுள்ளன என்று சொல்ல முடியாது. அவற்றில் சற்று அந்நியமான ஹதீஸ்களும் காணப்படுகின்றமை இதற்குச் சான்றாகும். அவற்றை குர்ஆனுடன் ஒப்புநோக்கினால் அவற்றில் பல முரண்பாடுகளை நாம் கண்டு கொள்ளலாம். குர்ஆனின் வெளிப்படையான கருத்துடனும் அவை முரண்படுவதைக் காணலாம். எந்த நூலும் இந்த நிலையில் இருந்து தப்பவில்லை.

## 2. உள்ளடக்க வசனப் பகுப்பாய்வு

*உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கான பொறிமுறைகளை வகுப்பதும் செயல்படுத்துவதும் மிகவும் அவசரமான ஒரு தேவையாகும். அதனைத் தவிர்த்து, அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வுடன் மட்டும் ஒருபோதும் போதுமாக்கிக் கொள்ள முடியாது. குறித்த அறிவிப்பாளர் வரிசை எண்ணிக்கையில் கூடியதாக இருப்பினும் குறைவானதாக இருப்பினும் ஸஹீஹாக இருப்பினும் ஹஸனாக இருப்பினும் மஷ்ஹூராக இருப்பினும் அல்லது இவற்றை விடவும் தரத்தில் குறைந்தனவாக இருப்பினும் எதுவாக இருப்பினும் இந்தப் பகுப்பாய்வு மட்டுமே போதாது. உள்ளடக்கப் பகுப்பாய்வின் அவசியத்தை வலியுறுத்தப் பல காரணங்கள் இருக்கின்றன.*

1. *இமாம் ஷாபி தமது அர்ரிஸாலாவில் கூறுகின்றார்: "குர்ஆனுடன் உள்ள நபியவர்களது நடைமுறைகள் ஒவ்வொன்றும், குர்ஆனுடன் உடன்பாடாக அமையும்போது, அதனைப் போன்று தெளிவான ஆதாரமாகவும் குர்ஆனில் சுருக்கமாக சொல்லப்பட்டதற்கான விளக்கமாகவும் அமைகின்றன." தொடர்ந்து கூறும்போது, நபியவர்கள் அறபியை தாய் மொழியாகக் கொண்டவர். எனவே அவரது ஒரு வார்த்தையின்மூலம் பொதுச் சட்டம் ஒன்றை நாடவும் முடியும். குறிப்பானதொரு சட்டத்தை நாடவும் முடியும். பொதுவான ஒரு வார்த்தைமூலம் பொதுவாக ஒன்று ஹலாலாக்கப்படும் அல்லது ஹராமாக்கப்படும். பிறிதொரு சமயம், பொதுச் சட்டமாகவன்றி குறிப்பாக சொல்லப்படவும் முடியும், அந்த வகையில் ஹராமாக்கப்பட்டதில் ஹலால் இருக்க மாட்டாது. அதுபோல் ஹலாலாக்கப்பட்டதில் ஹராம் இருக்க மாட்டாது என்கிறார். இமாம் ஷாபியுடைய இந்த வார்த்தைகளில், அவர் விளங்கப்படுத்தும் இந்த ஹதீஸ் வகைகளின் பொருளைப் புரிந்து கொள்வதற்கு, அவற்றின் உள்ளடக்க வசனங்களை நுணுக்கமாக பகுப்பாய்வு செய்யாமல் சாத்தியப்பட மாட்டாது.*
2. *இமாம் ஷாபி குறிப்பிட்டுள்ள விசயங்களின் அடிப்படையில், அதிகமான ஹதீஸ்கள் நேரடி வார்த்தைகளன்றி அவற்றின் கருத்தே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றுள் அதிகமானவை அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வைக் கடந்து வந்துள்ளன. அதனூடாக அவை தடுக்கப்படவோ நிறுத்தி வைக்கப்படவோ முடியவில்லை.*

3. உள்ளடக்கப் பகுப்பாய்வு, அறிவிப்பாளர் வரிசையில் இருக்கக் கூடிய நுணுக்கமான குறைபாடுகளையும் வெளிப்படுத்தக்கூடியது. அறிவிப்பாளர் வரிசையை பலப்படுத்தல் அல்லது பலவீனப் படுத்தலில் தனிப்பட்ட அபிப்பிராயங்களின் விகிதாசாரத்தை பெருமளவில் குறைத்து விட முடியும். பல அறிஞர்கள் தமது தனிப்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் அறிவிப்புகளையும் அறிவிப்பாளர்களையும் மதிப்பிட்டுள்ளமையைக் காணலாம். இதனைக் குறிக்கும் வகையிலேயே இமாம் ஷாபிஈ போன்றவர்களின் கீழ்வரும் வார்த்தைப் பிரயோகங்கள் அமைந்துள்ளன: "நம்பகமான ஒருவர் எனக்குச் சொன்னார்", "நான் குற்றம் காணாத ஒருவர் எனக்குச் சொன்னார்." இவற்றை விடயதானப் பகுப்பாய்வின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களாக கருதுவது சிரமமானது. அறிவிப்பு மற்றும் திறனாய்வுக் கலைகளின் ஆய்வாளர்கள் மத்தியில் அனைவரும் அறிந்த ஒரு உண்மை இருக்கின்றது. அதாவது, ஹதீஸ் அறிவிப்பாளர்களது வரலாற்றைத் தொகுத்தவர்கள் குறிப்பாக மக்கா, மதீனா அறிவிப்பாளர்களுடைய வரலாற்றை முறையாகப் பகுப்பாய்வு செய்யவில்லை. அதனால் அவர்கள் பற்றிய குறிப்புக்கள் அதிகமாக ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கும். ஆனால் அவர்கள் ஈராக் மற்றும் ஷாம் பிரதேசத்தவர்களின் வரலாற்றை சிறப்பாகப் பகுப்பாய்வு செய்துள்ளனர். இதனை ஷெய்க் அஹ்மத் ஷாகிர் பதிவு செய்துள்ளார். எனவே அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வையும் உள்ளடக்கப் பகுப்பாய்வையும் இணைத்து மேற்கொள்வது, குறித்த ஹதீஸ் பற்றிய பெரும்பாலும் சரியான முடிவை நோக்கிச் செல்வதற்குத் துணை செய்யும்.

### 3. உள்ளடக்கப் பகுப்பாய்வுக்குரிய அளவுகோல்கள் எவை?

உள்ளடக்கப் பகுப்பாய்வுக்குரிய அளவுகோள்கள் ஹதீஸ் துறை யாளர்களது கவனத்தை பெற்றது போல் அவர்களை விடவும் அதிகமாக சட்டவியல் மற்றும் சட்டக் கோட்பாட்டியல் அறிஞர்களது கவனத்தைப் பெற்றிருந்தது. ஹதீஸ் துறையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹதீஸ்களை இவர்கள் மறுத்திருக்கிறார்கள். அதுபோல் இவர்களில் ஒருசாரார் ஏற்ற ஹதீஸை மற்றொரு சாரார் மறுத்திருக்கின்றனர். இதனை மையப்படுத்தி இவர்களது சட்டக் கருத்து வேறுபாடுகளும் வளர்ந்து சென்றிருக்கின்றன. இவற்றுக்கு இவர்கள் குறிப்பிடும் காரணங்களைப் பார்க்கும்

போது, அவை உள்ளடக்க வசனத்துடன் சம்பந்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன. இதற்கு நிறையவே உதாரணங்கள் இருக்கின்றன.

அவர்களால் முன்வைக்கப்பட்ட அளவுகோல்கள் மற்றும் வரையறைகளைத் தொகுத்து நோக்கினால் சுமார் பத்தொன்பது அளவுகோல்களைக் காணலாம். அவற்றினூடாக ஹதீஸ்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன.

1. குர்ஆனின் தெளிவான, வெளிப்படையான கருத்துடனோ அல்லது தெளிவான சுன்னாவுடனோ அல்லது மார்க்கத்தில் தெள்ளத் தெளிவான உண்மைகளுடனோ முரண்படக் கூடாது.

2. புலனறிவுடன் முரண்படக் கூடாது.

3. படைப்பினங்கள், பிரபஞ்சம் தொடர்பான பௌதீக விதிகளில் நிறுவப்பட்ட உண்மைகளுடன் முரண்படக் கூடாது.

4. தெளிவான பகுத்தறிவு உண்மைகளுடன் அல்லது திட்ட வட்டமான ஆதாரங்களுடன் அல்லது நிறுவப்பட்ட அனுபவங் களுடன் முரண்படக் கூடாது.

5. மருத்துவம், வானியல் போன்ற அறிவியற் கலைகளில் நிறுவப்பட்ட உண்மைகளுடன் முரண்படக் கூடாது.

6. நபியவர்களுடைய செம்மொழித் தரத்துடன் உடன்படாத தாழ்ந்த மொழிப் பிரயோகங்களாக அல்லது அவரது காலத்தில் புழக்கத்தில் இல்லாத சொற்களை உள்ளடக்கியதாகக் காணப்படக் கூடாது.

7. ஷரீஆவுடன் முரண்படக்கூடிய ஓர் இழிசெயலை அங்கீகரிப்பதாக அல்லது அதனை நோக்கிய அழைப்பாக இருக்கக் கூடாது.

8. சீரிய சிந்தனை அங்கீகரிக்காத முட்டாள்தனங்கள் அல்லது தாழ்ந்த செயல்களை உள்ளடக்கியதாக இருக்கக் கூடாது.

9. ஒரு மத்ஹபையோ ஒரு குழுவினரையோ ஒரு கோத்திரத்தையோ ஆதரிப்பதாகவோ அல்லது அதனை நோக்கிய அழைப்பாகவோ இருக்கக் கூடாது.

10. முதவாதிரான வழி மூலம் அல்லது துறை சார்ந்தவர்கள் அங்கீகரித்துள்ள வெளிப்படையான தடயங்கள்மூலம் நிறுவப் பட்ட வரலாற்று நிகழ்வுகளுடன் முரண்படக் கூடாது.

11. எல்லோராலும் காண்பதற்குரிய பெரியதொரு நிகழ்வை ஒருவரோ இருவரோ அறிவிப்புச் செய்யாதிருத்தல்.

12. நம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப்படைகளுடன் சம்பந்தப்பட்ட அல்லாஹ்வின் பண்புகள், அல்லாஹ்வுக்கு இருக்க வேண்டிய பண்புகள், அவனுக்குத் தகுதியில்லாத பண்புகள் அல்லது தூதர்களுக்கு கட்டாயம் இருக்க வேண்டியவை, இருக்க முடியுமானவை, இருக்க இயலாதவை போன்ற விவகாரங்களில் தெளிவான பகுத்தறிவுடன் முரண்படாதிருத்தல்.

13. சிறியதொரு செயலுக்கு பெரிய நன்மைகள் வாக்களிக்கப் பட்டதாகவோ அல்லது சிறிய செயலொன்றுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவோ காணப்படக் கூடாது.

14. அறிவிப்பாளருக்கு குறித்த அறிவிப்பைச் செய்வதன் மூலம் தனிப்பட்ட நலன்கள் அல்லது நோக்கங்கள் காணப்படக் கூடாது.

15. புராதன நாகரீகங்கள் அல்லது மதங்களின் தத்துவங்கள் அல்லது நம்பிக்கைகளை நோக்கிய அழைப்பாக இருக்கக் கூடாது.

16. உள்ளடக்கத்தில் பாதிப்புச் செலுத்தக் கூடிய குறைபாடுகள் அல்லது நம்பகமான பிறருடனான முரண்பாடு என்பன காணப்படக் கூடாது.

17. ஸஹாபாக்களால் புறக்கணிக்கப்பட்டதாக இருக்கக் கூடாது. அதாவது குறித்ததொரு நிகழ்வில் அவர்கள் தமது இஜ்திஹாதின் அடிப்படையில் வேறுபட்ட அபிப்பிராயங்களை முன்வைத்தல், குறித்த ஹதீஸை அவர்களில் யாரும் ஆதாரமாகக் கொள்ளாதிருத்தல் அவர்களிடத்தில் அந்த ஹதீஸ் ஆதாரபூர்வமற்றது என்பதற்கான சான்றாகும். அவர்களது காலத்தில் ஆதாரமாகக் கொள்ளப்படாத ஒன்று பிற்காலத்தில் ஆதாரத்தன்மையை ஒருபோதும் பெற்றுக் கொள்ளாது.

18. ஹதீஸை அறிவிப்புச் செய்தவர் சிறிது காலத்தின் பின்னர் இதனை நான் அறிவிப்புச் செய்யவில்லை என்று மறுக்கக் கூடாது.

19. எவ்வித கூடுதல் குறைத்தல்களுமின்றி தான் செவியேற்றது போலவே அவர் அறிவித்திருக்க வேண்டும்.

இவை சில பகுப்பாய்வு அளவுகோல்கள். இவற்றுள் சில அறிவிப் பாளருடன் சம்பந்தப்பட்டவை என்றிருப்பினும் பெரும்பாலானவை

உள்ளடக்க வசனத்துடன் சம்பந்தப்பட்டவை. இந்தத் தலைப்புடன் சம்பந்தப்பட்ட கிளைப்பகுதிகளை ஆய்வு செய்வதன்மூலம் இவை அடையாளம் காணப்படுகின்றன. இந்த வாயில் என்றைக்கும் அடைக்கப்பட மாட்டாது. யார் வேண்டுமானாலும் இதில் தனது ஆய்வின் பிரகாரம் புதிய விசயங்களை இணைக்க முடியும். சற்று ஆழ்ந்து நோக்குகின்றபோது இவை ஒரு முறைமையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பதைக் கண்டுகொள்ளலாம். நான் இவற்றை பல்வேறு அணுகுமுறைகளின் அடிப்படையில் ஒன்றுதிரட்டியுள்ளேன். வரலாற்று அணுகுமுறை, சட்டவியல் அணுகுமுறை, மொழியணுகுமுறை, அறிவியல் அணுகுமுறை, பகுப்பாய்வு அணுகுமுறை இவற்றுடன் மதச் சமூகவியல் அணுகுமுறை போன்ற இன்னும் சில அறிதல் முறைகளையும் பயன்படுத்தியுள்ளேன். காரணம் ஹதீஸ்கள் இந்த எல்லாப் பரப்புக்களுடனும் சம்பந்தப்படுகின்றன. அந்த வகையில் ஆக்கப் பூர்வமான பகுப்பாய்வு அணுகுமுறை என்றைக்கும் தனது கதவுகளை மூடிக் கொள்ள மாட்டாது. குறிப்பிட்ட சில ஆய்வாளர்களுடன் மாத்திரம் ஒருபோதும் இந்தப் பணி சுருங்கி விடவும் மாட்டாது.

இந்தப் பொறிமுறை பலவீனமான ஹதீஸ்களை எதிர்கொள்வதற்காக மாத்திரம் முன்வைக்கப்படவில்லை. மாறாக அறிவிப்பாளர் வரிசைப் பகுப்பாய்வு மற்றும் உள்ளடக்கப் பகுப்பாய்வு இரண்டு அணுகுமுறைகளினூடாகவும் பலப்படுத்தப்பட முடியாத, ஸஹீஹானவை என்று கருதப்பட்ட ஹதீஸ்களை அடையாளம் கண்டுகொள்வதே இதன் முக்கிய நோக்கமாகும். இவ்வகை ஹதீஸ்கள் ஸஹீஹான பல கிரந்தங்களில் காணப்படுகின்றன.

இந்தப் பொறிமுறையை முன்னெடுத்து வளர்த்துச் செல்வது ஹதீஸ் துறையில் சிறப்புத் தேர்ச்சியுடன் இருப்பவர்கள் மீது முதன்மைக் கடமையாகும். இதனால் சுன்னாவுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடும் என்று அவர்கள் பயப்பட வேண்டிய எந்த அவசியமும் இல்லை. அவர்கள் துணிந்து முன்வந்து இதனைச் செய்ய வேண்டும். மாறாக நவீன மேற்குலக விமர்சன முறைமையின் அடியாட்களுக்கு சுன்னாவை விமர்சிப்பதற்கான களத்தை விட்டுவைக்கக் கூடாது. நவீன மேற்குலக விமர்சன முறைமை, அனைத்தையும் கலைத்துப் போட்டு விடுகின்றது. எதனையும் விட்டுவைப்பதில்லை. எதற்கும் எந்தப் பெறுமானத்தையும் வழங்குவதில்லை. இந்த மோசமான அலை முஸ்லிம் அறிவுப் புலத்தை பெரிய அளவில் பாதித்துள்ளது. எனவே எமது பகுப்பாய்வு அணுகுமுறையை, வேறு எந்தக் காலத்தையும்விட, நாம் கடைபிடிப்பதற்குரிய மிகவும் அவசியமான

ஒரு காலத்தில் இருக்கின்றோம். நாம் கடைபிடிப்பதற்குரிய முதன்மையான நூல் குர்ஆன், அடுத்து அதற்கு விளக்கமாக அமையும் சுன்னா, அதுவே வெற்றி, அதுவே விமோசனப் பாதை.

இந்தத் துறை சார்ந்த சகோதரர்களுக்கும் மாணவர்களுக்கும் நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம். இந்தப் பொறிமுறையைக் கைக்கொள்ளுங்கள். இதனை வளர்த்தெடுங்கள். இதனைக் கற்று பிறருக்கும் கற்பியுங்கள். அப்போதுதான் எங்களால் குர்ஆனியவாதிகள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களுக்கான வாயிலைச் சரியாக அடைத்து விடமுடியும். உண்மையில் அவர்கள் குர்ஆனியவாதிகள் அல்ல. முந்தைய வேதவசனங்களை விமர்சிப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட தத்துவங்களால் தாக்கமடைந்தவர்கள். இத்தகு விமர்சன அணுகுமுறையொன்று முஸ்லிம் உம்மத்தில் இல்லை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் முஸ்லிம் உம்மத் இவற்றைத் தாண்டிய பல்வேறு விசயங்களைத் தன்னில் பரீட்சித்திருக்கின்றது. அறிவிப்பாளர் வரிசைக் கோட்பாடு, அறிவிப்பாளர் பகுப்பாய்வு போன்ற தனக்கேயுரிய தனித்துவமான விமர்சன அணுகுமுறைகளைக் கடைப்பிடித்திருக்கின்றது. மேற்கின் இந்தக் கட்டுடைப்பு விமர்சன அணுகுமுறையை எதிர்கொள்வதற்கு எந்தத் தயார்நிலையும் இல்லாத நிலையில், எத்தனையோ சிந்தனைச் சிக்கல்கள் அவர்களை ஆக்கிரமித்திருக்கின்ற நிலையிலேயே, அது முஸ்லிம் அறிவுப் புலத்தை அடைந்து ஒரு பெரும் தாக்கத்தை விளைவித்திருக்கின்றது. முஸ்லிம் அறிவுப்புலத்தை ஆக்கிரமித்திருக்கும் சிந்தனைச் சிக்கலில் பிரதானமானது, தற்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பிரச்சினையாகும். அதாவது, பிந்தைய ஹதீஸ் துறையாளர்கள், ஹதீஸ் கலைகளுக்கும் ஏனைய இஸ்லாமிய கலைகளுக்கும் இடையில் ஒரு தடை அல்லது ஒவ்வாமையை உணர்ந்த போது, அதனைத் தீர்ப்பதற்குப் பதிலாக தமது காதுகளை இறுக மூடிக் கொண்டனர், விசாலமாகத் திறந்து கொடுக்க வேண்டிய ஒரு வாயிலை ஒடுக்கமாக அமைத்து விட்டார்கள்.

அதுபோல் பிந்தைய சட்டவியலாளர்களும், ஹதீஸ்கள் பற்றிய தமது குறையறிவோ அல்லது முறையான பகுப்பாய்வின்மையோ தமது சட்டவியல் திறமையைப் பாதிக்க மாட்டாது என நினைத்து விட்டனர். உண்மையில் இந்த விடயத்தில் அவர்கள் தவறிழைத்துள்ளனர். சட்டவியலில் விவாதிக்கப்பட்ட எத்தனையோ விவகாரங்களைப் பார்க்கும்போது, ஹதீஸ் துறையில் அவர்கள் போதிய புலமையுடன்

இருந்திருந்தால் இவை விவாதிக்கப்பட்டிருக்கவே அவசியமில்லை என்று தோன்றுகின்றது. அதுபோல் பல ஹதீஸ் கிரந்தங்களைப் பார்க்கின்ற போது, ஹதீஸ் துறையாளர்களிடம் சட்டவியல் பற்றிய போதிய புலமை இருந்திருந்தால் அவற்றிலுள்ள பல ஹதீஸ்கள் இந்தத் தரத்தில் நோக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது என்று தோன்றுகின்றது.

## பத்தாவது: முந்தைய மதங்கள் எதிர்கொண்டவற்றிலிருந்து ஒரு பாடம்

மதச் சமூகவியலை ஆராய்கின்றபோது, பல சமயங்களில், மதங்களைப் பின்பற்றுகின்றவர்களிடம் சில பொதுப் பண்புகளை அவதானிக்க முடிகின்றது. இஸ்லாமியப் புலத்தில் குறிப்பிடத்தக்க அடையாளமாக, உள்ளகக் கருத்துப் பள்ளிகளைக் குறிப்பிடலாம். அவர்களில் ஒரு பிரிவினர் வஹியின் நேரடி வார்த்தைகளையும் அவற்றுக்கு ஸலபுகளின் விளக்கங்களையும் நடைமுறைகளையும் மட்டுமே கடைப்பிடித்தவர்கள். இவர்களைத்தான் ஸலபிகள் என்றழைப்பார்கள் அல்லது அஹ்லுல் ஹதீஸ் அதாவது ஹதீஸ் சார் பிரிவினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஷீஆக்கள் இவர்களை அக்பாரிய்யுன் என்பர். இரண்டாவது பிரிவினர், வஹியின் நேரடி வார்த்தைகள் மாத்திரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை மறுக்கவில்லை. ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள், வஹியிற்கான ஒரே விளக்கவுரை என்ற வகையில் நபியவர்களது நடைமுறைகளும் அதனுடன் இணைக்கப்பட வேண்டும் என்பர். நபியவர்களது நடைமுறைகள் தவிர ஏனையவை மக்களுக்குக் கட்டாயமானவையல்ல. அவற்றில் அவர்களுக்குத் தெரிவுச் சுதந்திரம் இருக்கின்றது என்றனர். முதல் பிரிவினர் வஹியுடன் நபியவர்களது விளக்கவுரை மற்றும் முதல் மூன்று நூற்றாண்டுகளின் ஸலபுகளது நடைமுறைகள் போன்றவற்றை உள்ளடக்கிய மூலாதாரச் சட்டகம் ஒன்றை உருவாக்கிக் கொண்டனர். அடுத்ததாக அவர்களது பார்வையில் மக்கள் இந்த அறிவிப்புகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு அவற்றை அமுல்படுத்துவது மட்டுமே போதுமானது. அதுவே அவர்களை வழிபிறழ்வுகளில் இருந்து காக்கவல்லது என்பதுடன் நூதனமான புரிதல்களுக்கான வாயிலையும் தடுப்பதாகக் கருதினர். பின்னர் இந்த அறிவிப்புகளின் தொகுப்பே அவர்களது சிந்தனைச் சட்டகமாக செயல்படுகின்றது.

இந்த சிந்தனைப் பாங்கு, பிறவற்றிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும் அணுகுமுறையை தனது முதன்மை அம்சமாகக் கொண்டிருந்தது. அதனால் குறித்த அறிவிப்புகளை விளங்குவதிலும் அல்லது அறிவிப்பாளர்களைச் சரிகாணுதல், குறைகாணுதல், அறிவிப்புகளை பலப்படுத்துதல், பலவீனப்படுத்துதல் போன்ற வற்றிலும் முந்தைய அறிவிப்பாளர்களை சுய ஆய்வின்றிப் பின்பற்றும் இடத்திற்கு அவர்களை இது எடுத்துச் சென்றது. விளைவாக புதிய அறிவுச் சேர்க்கை தடைப்பட்டு, மாறா மனோபாங்கு நிலைகொண்டது. எனவே, ஹதீஸ் கலைகளின் சிந்தனை மற்றும் கோட்பாட்டியல் சட்டகத்தை அவசரமாக மீள்பரிசீலனைக்குட்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது. அதனைப் புனரமைப்பதற்குரிய விதிகளும் அடிப்படைகளும் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றது. தேக்க நிலையில் இருந்து வெளியில் வந்து என்றும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் ஒரு கலையாக இது மாற்றம் பெறவேண்டும். அப்போதே, வேத வசனங்களைக் கேள்விக்குட்படுத்தும் நவீன விமர்சன சிந்தனைகளை எதிர்கொள்ளும் தகைமையை அது பெற்றுக்கொள்ள முடியும்.

இரண்டாம் பிரிவினரைப் பொருத்தவரை வரலாற்றில் இவர்கள் அஹ்லுர் ரஃயி அதாவது சிந்தனை சார்பு பிரிவினர் என்று அடையாளம் காணப்பட்டனர். இருப்பினும் இவர்களும் சுன்னாவைக் கடைபிடித்தவர்கள்தாம். மறுத்தவர்கள் அல்ல.

இந்தக் குர்ஆனியவாதிகள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் புதிதாக முளைத்த பிரிவினர்க்கான ஒரு மூலத்தை நாம் வரலாற்றில் கண்டுகொள்ள முடியவில்லை. நபியவர்களது சுன்னாவின் சட்ட மூலாதாரத்தன்மையை அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்ட எவரும் மறுக்கவில்லை. இவர்கள் வரலாற்றில் முஃதஸிலாக்கள், கவாரிஜ்கள் போன்ற சிந்தனைப் பிரிவுகளுக்கும் பெரும்பாலான முஸ்லிம்களுக்கும் இடையில் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. அன்று நடந்த முழு வாதமும், சுன்னா பற்றிய அறிவிப்புகள் குறித்ததாகவே இருந்தன. அதாவது, சுன்னாவை அடைந்து கொள்ளும் வழிகள் என்ற வகையில் அவை ஆதாரமாகக் கொள்ளத்தக்கவையா இல்லையா என்பதே நடைபெற்ற விவாதம். அன்றி சுன்னாவை ஆதாரமாகக் கொள்ளலாமா இல்லையா என்பதல்ல. பின்னர் சுன்னா பற்றிய அறிவிப்புகளிலேயே இன்று நாம் காணும் வகைப்படுத்தல்களும் நிரல்படுத்தல்களும் நடைபெற்றுள்ளன.

குர்ஆனியவாதிகள் என்ற இந்தப் புதிய செடிக்குரிய மூலம் என்னவென்று தேடிப்பார்த்தால், தவறான புரிதல், அவசர ஆய்வு, பிறரது மரபுகளை எமது மூலங்களில் பிரயோகித்தமை என்பதைத் தவிர வேறு எதனையும் காண முடியாது. உண்மையில் இவர்களது வாதங்கள், யூத கிறிஸ்தவ வேத வசனங்களை ஆய்வு செய்வதற்குரிய நிறுவனங்களின் கண்டடைவுகளிலேயே தங்கியிருக்கின்றன. அவர்கள் வேத வார்த்தைகளை விமர்சிப்பதற்குரிய முழுமையானதொரு கோட்பாட்டை (Biblical Criticism) உருவாக்கியிருக்கின்றனர். இந்தக் கோட்பாட்டினை முழுமையாக குர்ஆனிலும் சுன்னாவிலும் இவர்கள் பிரயோகிக்க முற்பட்டனர். ஏற்கனவே அவர்களிடமிருந்த சுன்னாவின் சட்டமூலாதாரத் தன்மை முஸ்லிம்கள் மத்தியில் கருத்து வேற்றுமைக்குரிய ஒரு விசயம் என்ற தவறான புரிதல் இதற்கு பெரும் துணையாக அமைந்தது.

எனவே, மேற்கூறப்பட்டவற்றின் அடியாக, ஹதீஸ் கலைகளின் சிந்தனை மற்றும் கோட்பாட்டியல் சட்டகத்தை அவசரமாக மீள்பரிசீலணைக்குட்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது. அதனைப் புனரமைப்பதற்குரிய விதிகளும் அடிப்படைகளும் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றது. தேக்க நிலையில் இருந்து வெளியில் வந்து என்றும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் ஒரு கலையாக இது மாற்றம் பெறவேண்டும். அப்போதே, வேத வசனங்களைக் கேள்விக்குட்படுத்தும் நவீன விமர்சன சிந்தனைகளை எதிர்கொள்ளும் தகைமையை அது பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!

கெய்ரோவின் அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் சூட்டிக்கொண்ட **தாஹா ஜாபிர் அல்-அல்வானி** (1935 -2016), ஐக்கிய அமெரிக்காவின் *Graduate School of Islamic and Social Sciences (GSISS), Fiqh Council of North America* ஆகியவற்றின் தலைவர். *The International Institute of Islamic Thought*இன் ஸ்தாபக உறுப்பினர், முன்னாள் தலைவர். *OIC, Islamic Fiqh Academy* உறுப்பினர். அறபு மொழியில் வெளிவந்துள்ள அல்வானியின் ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் ஏராளம்.

ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள ஆக்கங்களில் குறிப்பிடத்தக்கவை: *Source Methodology of Islamic Jurisprudence; Towards a Fiqh for Minorities; The Ethics of Disagreement in Islam; Ijtihad; The Quran and the Sunnah: Time & Space Factor; Issues in Contemporary Islamic Thought; Islamic Thought: An Approach to Reform.*

தமிழ் மொழியில் வெளிவந்த கலாநிதி அல்வானி அவர்களது நூல்கள்: குர்ஆனும் சுன்னாவும்: கால, இட பரிமாணங்கள்; இஸ்லாமிய சட்டவியலில் பெண்களின் சாட்சியம்; முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்; இஸ்லாத்தில் மதம் மாறுதல்; இஸ்லாத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்; முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டு தவிர்ப்பை நோக்கி...





அஷ்ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத், இலங்கை மண்ணில் உதித்த தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவர். ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடத்தின் பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய நாகரீகத் துறையில் முதுமாணிக் கற்கையை நிறைவு செய்தவர். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர். இஸ்லாமிய சட்டவியல், மகாஸிதுஷ் ஷரீஆ, குடும்பவியல், கல்வியியல், ஆன்மீகம் போன்ற துறைகளில் சிறந்த புலமைத்துவமும் ஈடுபாடும் கொண்டவர். பத்துக்கும் மேற்பட்ட நூல்கள், மொழிபெயர்ப்புகள் மற்றும் நூற்றுக்கணக்கான ஆக்கங்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகளுக்கும் சொந்தக்காரர். மகாஸிதுஷ் ஷரீஆ அறிமுகக் கைவேடு என்னும் மொழிபெயர்ப்பு நூல், சுவனிய அமர்வுகள் என்னும் ஆன்மீக நூல் போன்றன இவற்றுள் முக்கியமானவை.

**Fuzin Texts**
*23/3, Market Road,*
*Dharga Town 12090*
*Sri Lanka*

ISBN 978-624-5832-07-1